44

# மருத்துவர் மகள்

★

கழக வெளியீடு

கழக வெளியீடு, க0௯0

# மருத்துவர் மகள்

## (SURGEON'S DAUGHTER)

MADRAS

மூலம் :

சர் வால்டர் ஸ்காட்

தமிழாக்கம் :

மு. சதாசிவம், எம். ஏ.

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி-6 சென்னை-1.
1962

முருகேச முதலியார் சதாசிவம் (1936)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 March 1962 .

O111,3L50,S
N62

O11,13L71,25
31K2

110770

# MARUTTUVAR MAGAL

(SURGEON'S DAUGHTER)

Appar Achakam, Madras-1.

## பதிப்புரை

வரலாற்றுப் புதினங்களின் மன்னராக விளங்கும் ஸ்காட்லாந்துக் கவிஞர் பெருமான் வால்டர் ஸ்காட்டின் அரும்படைப்புக்களுள் Surgeon's Daughter (மருத்துவர் மகள்) என்பதும் ஒன்று. அவர் தம் நண்பர் ஒருவரிடம் கேட்ட கதை நிகழ்ச்சிகளைக் கற்பவர் மனம் களிகொள்ளுமாறு தம் கற்பனைத் திறத்தால் விரிவுபடுத்திப் பெரும் புதினமாக ஆக்கி உலகுக்கு அளித்துள்ளார்.

வாணிகம் செய்வதற்காக இந்தியா போந்து படிப்படியே இந்தியாவின் பல பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் நடந்த கதையாக இப்புதினம் மிளிர்கிறது. எனினும் இதை வரலாற்றுப் பின்னணியில் எழுந்த புதினம் என்று கூறிவிட முடியாது. எனவேதான் வரலாற்றின் அறிவு பெறாதோர்க்கும், எக்காலத்தவர்க்கும் சுவை நனி பயக்கும் புதினமாக இது விளங்குகிறது.

கிறித்துவ மதத்தைச் சார்ந்த தந்தைக்கும், யூத மதத்தைச் சார்ந்த தாய்க்கும் களவியற் காதலின் முதல் பரிசாக ஸ்காட்லாந்தில் பிறந்தவன் ரிச்சர்டு என்பவன். மிடில்மசு என்ற ஊரில் பிறந்ததால் மிடில்மசு என்றும் ரிச்சர்டு மிடில்மசு என்றும் அழைக்கப்பட்டான். தாயன்பைப் பெறாது வளர்ந்த அவன் உள்ளத்தில் அன்புணர்ச்சி தழைத்தோங்கவில்லை. அதனால்தான் தனக்காக உயிர் விட்ட அன்னையின் அன்புக்காக அவன் ஒரு துளிக் கண்ணீரும் சிந்தவில்லை.

தன்னை உயிராகக் காதலித்துத் தன்னை நம்பித் தாயகத்தை விட்டு இந்தியாவுக்குத் தனியே புறப்பட்டு வந்த மருத்துவர் மகளான மெனிகிரேவைத் திப்புசுல்தானின் காமத்துக் கிரையாக்கித் தான்செய்த கொலைக்குற்றத்திலின்று மன்னிப்புப் பெறுவதற்குத் திப்புவின் பெங்களூரை ஆங்கிலேயருக்குக் காட்டிக்கொடுக்கத் திட்டமிடுகிறான்.

ரிச்சர்டைத் தளபதியாக ஏற்றுக்கொண்டிருந்த பேகம் மாந்தர்வில்லி மெனிகிரேவின் வருகையால் பொறாமை கொண்டு ரிச்சர்டின் சூழ்ச்சியை அம்பலப்படுத்திவிடுகிறாள். நாட்டைக் காட்டிக்கொடுக்க எண்ணியவனே ஹைதருக்குக் காட்டிக் கொடுக்கப்படுகிறான். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதே இப்புதினத்தின் நீதிமொழியாகும்.

இப்புதினத்தின் பாதிக்கதை நிகழ்ச்சிகள் தென்னிந்தியாவில் நடைபெற்றவை. வால்டர் ஸ்காட் நாம் வியக்கத் தக்க வகையில் இந்தியாவைப் பற்றி எவ்வாறு நுண்ணிதின் உணர்ந்து வைத்திருந்தார் என்பதை இப்புதினம் படிப்போர் அறிந்து இன்புறாமல் இரார். நம் தென்னகத்தின் பின்னணியில் பின்னப்பட்ட இப்புதினம் தமிழர் எல்லோர்க்கும் சுவை பயப்பது உறுதி எனவறிந்தே இப்புதினம் நல்ல தமிழில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

இப்புதினத்தை மொழிபெயர்த்தவர் கழகப் பதிப்பாசிரியர் குழுவில் பணியாற்றுபவரும், ஆங்கில அறிவு நன்கு கைவரப்பெற்றவருமான திரு. மு. சதாசிவம், எம். ஏ. அவர்கள் ஆவர். ஸ்காட்டின் சிறிய புதினங்களுள் ஒன்றான இதனை மூலச்சுவை குன்றாது அப்படியே முழுதும் தமிழில் வடித்துத் தந்துள்ளார். கழகப் புலவர் திரு. சங்குப் புலவர் அவர்கள் இந்நூலின் நடை நன்கு செப்பம் எய்துதற்கு உதவினார்.

பிறமொழிப் பேரிலக்கியங்களைத் தமிழில் ஆக்கியளிக்கும் கழகப் பணியை ஊக்குவிக்கும் தமிழ்ப்பெருமக்கள் சுவையார்ந்த இப்புதினத்தையும் வாங்கிப் படித்து இன்புறுவார்கள் என நம்புகிறோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# முன்னுரை

வரலாற்றுச் செய்திகளைப் பிணைத்து எழுதப்படும் புதினங்களைச் சுவைத்துப் பயன்பெறுதற்கு அவ்வரலாற்றின் அறிவு இன்றியமையாதது. வால்டர் ஸ்காட்டின் பல வரலாற்றுப் புதினங்களைப் பிறநாட்டார் எளிதில் படித்தின்புறுதற்கு அந்நாட்டின் வரலாறு, சமுதாய அமைப்பு, மக்கள் நம்பிக்கைகள், கொள்கைகள் முதலியவற்றின் அறிவு பெறாமை ஒரு பெருந்தடைக்கல்லாக இருக்கிறது. 'மருத்துவர் மகள்' என்ற இப்புதினத்தைப் படிப்பவர்க்கு ஸ்காட்லாந்து நாட்டின் வரலாற்றறிவோ, இந்தியநாட்டு வரலாற்றறிவோ இன்றியமையாது வேண்டப்படுவதில்லை.

பெண்ணின் பெருமையை எடுத்துக்காட்டும் புதினமே 'மருத்துவர் மகள்'ஆகும். களவுக்காலத்திற் பிறந்த மகனுக்குச் சொத்துரிமை இல்லை என்ற ஆங்கில அரசுச் சட்டத்தை இகழ்ந்து பேசுகிறான், சட்டம் பயின்ற வால்டர் ஸ்காட் படைத்த ரிச்சர்டு என்பவன். மருத்துவர் மகளைக் காதலிக்கும் பேறு பெற்றவன் அவனே. ஆனால் காதலின் பெருமையும் நுட்பமும் அறியாத அவன் இந்தியாவுக்குச் சென்று கிழக்கிந்தியக் கம்பெனி வேலையில் சேர்ந்து பொருள் குவிக்கலாம் எனப் புறப்பட்டுக் காதலியைக் கைவிட்டு ஏகுகின்றான். வழியில் அவனைப்பெற்ற அன்னை அவனைப் பல்லாண்டுகள் கழித்துக் கண்டு கற்றாவின் மனம்போல நெக்குயிர்த்துத் தாய்மைப் பாசம் வழிந்து பெருக, மீட்டும் அவனைக் காணமுடியாதே என்று அறிவிக்கப்பட்டதால் அவனைப் பிரிய ஆற்றாது உயிர்பிரிகிறாள்.

தம்மிடம் பயின்ற ஆடம், ரிச்சர்டு என்ற இரு மாணவரும் பிரிந்து சென்றபின் தனிமை வருத்த முற்றுத் தம் உடலை நன்கு பேணாது தம் ஒரே மகளைத் தவிக்கவிட்டு இவ்வுலக வாழ்வை நீத்தகல்கிறார் மருத்துவர்.

சென்னை செண்ட் ஜியார்ஜ் கோட்டையில் தங்கியிருந்த ரிச்சர்டு தன் தந்தையின் பெயரையும் சேர்த்துத் திரேசாம்

ரிச்சர்டு என்று எல்லோரும் தன்னை அழைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறான். இதற்கு மறுப்புத் தெரிவித்த கப்பல் அதிகாரியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு ஆங்கிலேயராட்சிக்குட்படாத மைசூர் நாட்டை யடைந்து கரந்துறைகிறான்.

பின்பு, பாண்டிச்சேரியில் சிறுபடையுடன் ஹைதருக்கு அடங்கி வாழ்ந்து வந்த மாந்தர் வில்லி என்பவனுடன் நட்புக்கொண்டு ஹைதர்-திப்புவுக்கு எதிராகச் சதித் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறான். தன்னிடம் தூய்மையான காதல் கொண்டிருந்த மெனியை ஸ்காட்லாந்திலிருந்து வரவழைத்துத் திப்புவிடம் அவளைக் கொடுத்துப் பெங்களூரை வஞ்சகமாகக் கைப்பற்றத் தீர்மானிக்கிறான். ஆனால் அவன் சூழ்ச்சி வெளிப்படுகிறது. பெங்களூரின் ஆட்சிப் பதவியை ஏற்ற அப்பொழுதே பட்டத்து யானை அவனை விண்ணுலகுக்கு அனுப்பிவைக்கிறது. தன் காதலனுக்காக நேர்ந்த கதியைக் கண்டு உளம் நைந்து மெலிந்த மருத்துவர் மகள் தன்னைக் காப்பாற்றிய ஆடமின் காதலையும் மறுத்துவிடுகிறாள்.

இதுதான் கதை. இக்கதையை அழகுற விரித்துச் சுவை யூட்டும் திறம் வால்டர் ஸ்காட்டுக்கே உரியது. இப்புதினத்தைப் படிக்கும்போது பாத்திரங்கள் எல்லாம் நம் முன்னே வந்து நடமாடுவது போன்றும் நம் முன்பு பேசிக் கொண்டிருப்பது போன்றும் உணர்ச்சி ஏற்படுகிறது.

பல்வகை மெய்ப்பாடுகளையும் சுவையையும் தோற்றுவிக்கும் இப்புதினத்தை முழுமையாக மொழி பெயர்த்தளிக்குமாறு அன்புப் பணியிட்டு இடையறாமல் ஊக்கமளித்தவரும், தமிழாக்கமே தமது ஒரே ஊக்கமாகவும் நோக்கமாகவும் கொண்டிருப்பவரும், கழக ஆட்சியாளருமாகிய தலைவர் உயர்திரு.வ.சுப்பையா பிள்ளை அவர்களுக்கு யான் என்றென்றும் கடப்பாடுடையேன்.

—மு. சதாசிவம்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | களவியல் விளைத்த கடுந்துன்பம் | 1 |
| 2. | ரிச்சர்டின் வளர்ப்பும் துடிப்பும் | 40 |
| 3. | ஒன்றாய்ப் பயின்ற ஒன்றா இளைஞர்கள் | 71 |
| 4. | காதல் போட்டியும் எதிர்காலத் திட்டமும் | 79 |
| 5. | பொருள்வயிற் பிரிவும் நன்றியுணர்வும் | 100 |
| 6. | கப்பல் வாழ்வளித்த கடுந்துன்பங்கள் | 120 |
| 7. | ஆடமின் கைவண்ணமும் ரிச்சர்டின் முன்னேற்றமும் | 134 |
| 8. | கற்றாவின் மனம்போலக் கசிந்துருகும் தாய் | 162 |
| 9. | தாயின் சொத்து மகனுக்கு இல்லை | 179 |
| 10. | இந்தியாவில் ஆடமும் மருத்துவர் மகளும் | 204 |
| 11. | மருத்துவர் மகளைச் சந்திக்கும் ஆடம் | 226 |
| 12. | காதலியைக் கைவிட்ட காதலனின் சூழ்ச்சிகள் | 240 |
| 13. | மெனியைத் தப்புவிக்க ஆடமின் முயற்சிகள் | 253 |
| 14. | கெடுவான் கேடு நினைப்பான் | 271 |

# மருத்துவர் மகள்

## 1. களவியல் விளைத்த கடுந்துன்பம்

ஸ்காட்லாந்தில் பல சிற்றூர்களில் மருத்துவர்கள் வாழ்ந்து மக்களுக்கு நன்மைகள் புரிந்துவந்தனர். சிற்றூர்களில் தம்மிடம் வரும் நோயாளிகளைக் கவனிப்பதுடன், சரியான வழிகள் இல்லாததும், மலைகள், ஆறுகள், ஏரிகள் நிரம்பியதுமான நாற்பது மைல் சுற்றளவிலுள்ள எல்லா ஊர்களுக்கும் இரவென்றும் பகலென்றும் பாராது சென்று, இன்முகத்தோடு நோயாளிகளுக்கு மருந்து அளிப்பர். நள்ளிரவாயினும் இடையூறுகளைப் பொருட்படுத்தாது அடைதற்கரிய ஊர்களையும் கடந்து, வழிநடந்து, தம் உடல் நலக் கேட்டையும் மதியாது மருத்துவர் செய்யும் அரிய பணிகளுக்குப் பதிலாகச் சிறிய, மிக்க் குறைவான தொகையே அவர்களுக்குக் கிடைக்கும். சிலபோது பணம் ஒன்றும் கிட்டாமற்போவதும் உண்டு.

இங்கிலாந்தில் உள்ள நகரங்களில் வாழும் மருத்துவர்கள் பெறும் மதிப்பும் ஊதியமும் ஸ்காட்லாந்துச் சிற்றூர்களில் வாழும் மருத்துவர்களுக்குக் கிடைப்பதில்லை. செல்வமும் சோம்பலும் மலிந்த நகரங்களில் வயிறு புடைக்கத் தின்பதால் மக்களுக்கு உண்டாகும்

வயிற்றுவலி, வயிற்றுக் கடுப்பு முதலிய பலவித நோய்கள் செல்வம் திருவிளையாடல் புரியாத சிற்றூர்களில் வருவதில்லை. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் தேர்தல் காலத்தில் கிடைக்கும் பெருவிருந்தின் போது வயிறுவீங்கத் தின்றாலும் அவர்கள் நோயினின்று தப்பித்துவிடுகின்றனர். தேர்தலில் போட்டியிடும் ஒரு சிலரும் தமக்குள் ஒப்பந்தம் செய்துகொள்வதால் தேர்தல் சண்டைகளில் காயம் படுவோரும் இலராயினர்.

சிற்றூர்த் தாய்மார்கள் ஆண்டுதோறும் மருத்துவரின் மருந்துகளை வாங்கித் தம் செல்வக் குழந்தைகளின் வயிற்றில் கொட்டிவருவதைப் பழக்கமாகக் கொள்ளுவதில்லை. ஒவ்வொரு பாட்டியும் எந்த நோய்க்கும் ஓர் உப்பு மருந்து கூறிவிடுவாள்; காயத்திற்குக் கட்டுக்கட்டிவிடுவாள். காய்ச்சலோ கடுஞ்சன்னியோ கண்டபோதுதான் நிலைமை மோசமாவதையறிந்து மருத்துவர்க்கு ஆள் அனுப்புவர்.

ஆனால் அறிவுள்ள மருத்துவர் போதிய தொழிற்பாடு இல்லாமைக்கோ, நோயாளிகள் வாராமைக்கோ சிறிதும் வருந்துதல் செய்யார். வீட்டைத்தேடி நோயாளிகள் வராவிடில் வெளியே சென்று அவர்களைத் தேடிப்பிடிப்பர். நள்ளிரவில் குதிரையூர்ந்து, பகலிலும் கடத்தற்கரியனவான வழிகளைக் கடக்க முற்படுவர். வாய்க்கால்கள் வழியே செல்லும்போது சிறிது வழுக்கினாலும் சேற்று நிலத்தில் தாழ்ந்து விழ வேண்டியதாயிருக்கும். சிலபோது மலைப் பிளவுகளின் வழியே அறியாது செல்லும் குதிரை மருத்துவரைக் கீழே வீழ்த்துவதும் உண்டு. கடைசியில் தம்முதவியை



ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இடத்தை அடைந்தபின் அவலம் மிகுந்த காட்சியைக் கண்ணால் காண்பர். கண்டதும் நோயாளியின் போன உயிரைத் திரும்ப இவ்வுலகிற்குக் கொண்டுவருவது அல்லது இவ்வுலகிலிருந்து போகும் உயிரைத் தடுத்து நிறுத்துவது தங்கள் கடமை என உணர்வர். உயிர் தத்தளிக்கும் நோயாளியைக் கண்டபின் அவன் துன்பப்பட்டுத் தேடி வைத்திருக்கும் பணத்தை நன்றியறிவுடன் அளித்தாலும் வாங்குவதற்கு மனம் வராது. தம் மருந்துகளையும், குணப்படுத்தலையும் இலவசமாகவே அளிக்க நேரிடும்.

ஊர்ப்பயணம் செல்வதில் புகழ்பெற்ற மங்கோ பார்க் என்னும் மருத்துவர் தம் வாழ்க்கையில் இருவகைப் போக்கினையும் அனுபவித்து உணர்ந்தவர். அவர் சிற்றூர் மருத்துவராய் இரவு பகலாய்க் காடுமேடு எல்லாம் சுற்றுவதிலும், ஆப்பிரிக்க நாட்டில் நுழைந்து ஊர்களைக் கண்டுபிடிக்கும் வாழ்வே சிறந்தது என்று கூறுகிறார். மருத்துவராயிருக்கும்போது ஒருமுறை நாற்பது மைல்கள் பயணம் செய்து இரவு முழுதும் விழித்துக் காத்திருந்து, ஒரு பெண்ணின் முன்னைப் பழவினையா லேற்பட்ட நோயினை நீக்கியதற்குக் கைம்மாறாகச் சிறிது உருளைக்கிழங்கு வறுவலும், ஒரு குவளை மோருமே கிடைத்தன என்று அவரே கூறியிருக்கிறார். ஆனால் தக்க ஊதியம் இல்லாது போயினும் மனிதத் துன்பத்தைப் போக்கும் முயற்சியை மருத்துவர் உள்ளம் என்றும் வெறுப்பதில்லை. சுருங்கக் கூறின், ஸ்காட்லாந்திலேயே அதிகமாக உழைத்து மிகக் குறைவான பலன்பெறும் ஓர் உயிர் நாட்டு மருத்துவரைத் தவிர அல்லது அவர் குதிரையைத்

தவிர வேறு இல்லை என்லாம். குதிரையின் தலைவிதிப் படி அது துன்பத்தைப் பொருட்படுத்தாது உழைப்பும் ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்டிருப்பது இயல்பே. அதைப்போலவே குதிரையின் தலைவராகிய மருத்து வரும் முற்போக்கு வாய்ப்பும், பெருமைச் சிறப்பும் இல்லாது போயினும், தொழில் ஆற்றலும், ஊக்கமும், அறிவும், இரக்கமும், தைரியமும், ஆராய்ச்சியும் பெற்றிருந்தார்.

கிடியன்கிரே என்பவர் ஸ்காட்லாந்தின் நடு நாட்டுப் புறத்திலமைந்த மிடில்மசு என்னும் சிற்றூரின் மருத்துவர் ஆவர். மேலே விளக்கிக் கூறியபடியே இவரும் கடிய, ஊக்கம் நிறைந்த, குறையூதிய வாழ்வை நடத்திக் கொண்டிருந்தார். அவருக்கு வயது நாற்பதி லிருந்து ஐம்பதிற்குள் இருக்கும்; மருத்துவத் தொழி லுக்காகவே தம்மை ஆளாக்கிக் கொண்டார். மருத்துவ வுலகில் அவர் புகழ் எங்கும் பரவியது. அதனல் மிடில்மசையும், அதனை யடுத்த சுற்றுப்புறத்துச் சிற்றூர்களையும் விட்டுவிட்டுப் பெரிய நகரங்களுக்குக் கூடப் போகலாம் அல்லது எடின்பரோவுக்குக்கூடப் போகலாம் என்று பலரும் அவருக்கு அறிவுரை கூறினர். இவ் வறிவுரையை அவர் எப்போதும் செவி யில் போட்டுக்கொள்ளமாட்டார். அவர் ஒளிவு மறை வில்லாத நேரிய மனிதர். சமுதாயத்தின் மேன்மக்கள் எதிர்பார்க்கும் முறைகளுக்கு ஏற்ப எப்போதும் நடந்து கொள்வதை விரும்பாமலிருந்தார். அவர்களுக் காகவே தம் நடைமுறையிலும், பழக்கத்திலும் சிறு மாறுதல்களை மேற்கொண்டார்; எனினும் சிறு குற்றங் கண்டாலும் தூற்றுவோரையும் மதித்து, மருத்துவம் வல்லாரைப் போலத் தம்மைத் தோற்றுவித்துத்



தம்புகழைப் பரப்பிக்கொள்ள முடியும் என்பதை அவராக அறிந்துகொள்ளவில்லை. அவர் நண்பர்கள் யாரும் இதைக் குறிப்பாகக்கூட அவரிடம் கூறவில்லை..

அவரை டாக்டர் கிரே என்றே ஊரினர் எல்லாரும் அழைத்தனர். அவருக்குத் தேவைகள் என்று ஒரு சிலவே இருந்தன. இச்சில தேவைகளும் ஆண்டொன் றுக்கு அவர் ஈட்டும் இருநூறு பவுனல் எளிதில் நிறைவேறிவிடும். இப்பணத்திற்காக அவர் பன்னி ரண்டு மாதங்களில் ஏறக்குறைய ஐயாயிரம் மைல் குதிரைமேல் ஏறிச் செல்வார். இப் பணத்தைக் கொண்டே இவர் தம்மையும், அம்மி, குழவி என்று பெய ரிட்டழைத்து ஒன்றை மாற்றி ஒன்ருகப் பயன்படுத்திக் கொண்டுவந்த இரு மட்டக் குதிரைகளையும் காப்பாற்றி வந்தார். மேலும் அப்பணத்தைப் பகிர்ந்துகொள்ள ஜீன்வாட்சன் என்ற மனைவியும் இருந்தாள். அப்பெண் ஒருழவப் பெருமகனரின் திருமகள். அவள் மாதுளம் பழம் போன்ற கன்னங்களைப் பெற்றிருந்தாள். ஆண்டு தோறும் எண்பது பவுன்கள் ஊதியந் தேடும் தன் தந்தையின் பன்னிரு குழந்தைகளுள் ஒருத்தி. தன் தந்தையைக் காட்டிலும் இரு மடங்குக்குமேல் பொரு ளீட்டும் மருத்துவரிடத்திலும் வறுமை இருக்கும் என்று அவள் ஒரு சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. ஆயினும் வயது முதிர்ந்த மருத்துவர் என்று இளைஞர் கூறும் கிரேவுக்கு வாழ்க்கைப்பட்டது மிக நல்லது என்றே கருதினள். பல ஆண்டுகளாக அவர்களுக்குக் குழந்தை கள் ஒன்றும் பிறக்கவில்லை. நோயாளிகளைக் கவனிக் கும்போது பலமுறை அவர்கள் நலமுறவேண்டும் என்று லூசினுத் தேவதையை வேண்டினுரேயன்றித் தமக்காகக் குழந்தை வரம்பெற அத்தேவதையைக் கிரே

வேண்டிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் பின்னர் அவர் இல்லம் குழந்தை தளர்நடையிட்டு விளையாடு மாறு தேவதையின் அருள் பெற்றது.

குளிர்காலத்தில் ஒருநாள் மாலையில் மிடில்மசு ஊரில் மூன்று கிழவிகள் தளர்நடையிட்டு வலிமையை வரவழைத்துக் கொண்டு தனிவீதி வழியே கிடியன் கிரேயின் வீடுநோக்கி ஓடி வந்துகொண் டிருந்தனர். அவர் வீட்டின் முன்புறம் பொதுவழியினின்று பிரிக்கப் பட்டு வேலியிடப்பட்டிருந்தது. முற்றத்தின் ஒரு பகுதி செழிப்பாகவும், மற்றொரு பகுதி வறட்சி நிரம்பியதா கவும் இருந்தன. வீட்டின் கதவிலேயே கிடியன் கிரே எம். ஏ. மருத்துவர்......முதலிய எழுத்துக்கள் பெரிய வாகப் பொறிக்கப்பட்டிருந்தன. அத்தெருவின் கோடி வரை உலாவித் திரிய விரும்பி வந்த சில சோம்பேறி இளைஞர்கள் அவ்வீட்டிற்கு முன்பு ஓரிரு மணித்துளி கள் நின்றிருந்தனர். வழக்கத்திற்கு மாறாகக் கிளர்ச்சி கொண்டிருந்த கிழவிகளின் நடையைக் கண்டு உரக் கச் சிரிப்பொலிகளை எழுப்பினர். அவர்கள் பந்தயத் திற் கலந்து கொண்டு ஓடிவருபவர்களைப் போலக் காணப்பட்டதால், இளைஞர்கள் அவர்களைப் பெயர் சொல்லி உற்சாகப்படுத்துபவர்களைப் போல ஒலிகளை எழுப்பினர். ‘லக்கி சிம்சனுக்கே பந்தயத்தில் வெற்றி!’ —‘பெக் தாம்சன்! முன்னுக்கு ஓடிவா!’—‘அலிசன் ஜாப்! காற்றாய்ப் பற!’ என்ற ஒலிகள் விண்ணைப் பிளந்தன. மருத்துவரின் மனையை யார் முதலில் அடைவது என்பதிலேயே கருத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் முந்தி ஓடிக்கொண்டு வந்ததால் அக்கிழவி களின் காதுகளில் இளைஞர்களின் இடியொலிகள் பட வில்லை.



நல்லெண்ணமுடைய அப்பாவியான மருத்து வரின் மனைவி கணவரைப் பார்த்து, “டாக்டர்! என்ன வெளியே இப்படிச் சத்தம் கேட்கிறது? பெக் தாம்சன், ஜீன் சிம்சன், அலிசன் ஜாப், இவர்கள் நம் தெருப் பக்கம் ஓடிவருகிறார்களே!” என்று கூறினாள்.

தூரப்பயணம் செய்துவிட்டு அப்போதுதான் திரும்பி வந்திருந்த கிரே ஈரமான தமது பெரிய கோட் டைக் கழற்றித் தீயடுப்பின்முன்பு தொங்கவிட்டுக்கொண் டிருந்தார். வெளியே கேட்ட சத்தத்தைக்கொண்டு தம்மை நோக்கிப் புதிய நோயாளிகள்தாம் வருகின்ற னர் என்று நினைத்துக்கொண்டு படிகளில் விரைவாக இறங்கிவந்தார். அங்கு வருபவர்களைப் பார்த்ததும் உள்ளூர்க்காரர்கள்தாம் என்று உறுதி செய்து கொண் டார்.

கிரே கதவருகே வந்து நிற்பதற்கும், லக்கி சிம் சன் அங்கே வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது. ஆனால் ஓடிவந்த களைப்பினால் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கப் பேசமுடியாமல் அப்படியே நின்றாள், சிம்சன். பேசுவதற்காக எவ்வளவோ முயற்சி செய்தும் அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளியே வர வில்லை. அதற்குள் அங்கே வந்த பெக் தாம்சன், “ஐயா, இந்தப் பெண் இந்தப் பெண்....!”—என்றாள்.

ஆனால் அலிசன் ஜாப், ‘உடனே உதவி, உடனே உதவி!’ என்று கத்தினாள். விரைவில் வெற்றி யடைந்து முன்வந்து கண்ட லக்கி சிம்சனுக்கு இதற் குள் பேசுதற்கு வார்த்தைகள் வந்துவிட்டன. மருத்து வரைப் பார்த்து, “ஆயாவாக என்னை அமர்த்துவீர்கள் என்று நம்புகிறேன், ஐயா. இந்த இரு சோம்பேறிக்

கிழவிகளுக்கும் முன்பாக முதன்முதலில் நான்தான் இச் செய்தியைக் கொண்டுவந்தேன்'' என்ருள். மற்ற இருவரும் எழுப்பிய மறுப்புக் குரல்கள் பெரியவாய்க் கேட்டன. தூரத்தில் வேடிக்கை பார்த்து நின்ற இளைஞர்களின் நகைப்பொலியும் பெரிதாய்க் கேட்டது. ''சண்டை போட்டுக்கொள்ளும் கிழவிகளே, வாயை மூடுங்கள்! போக்கிரிப் பயல்களே, நான் அங்கே வந்தேனே....'' என்று சொல்லிக்கொண்டே மிக்க பலம் கொண்டு தம் சவுக்கை எடுத்து நொடித்தார் மருத்துவர்; ''சரி, எங்கேயிருக்கிருள்? யார் அந்தப் பெண்?'' என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்கே சிறிதும் இடமில்லாதபடி அங்கே மருத்துவரின் வீட்டுக்கு முன்பாக நான்கு குதிரைகள் பூட்டிய ஒரு மொட்டைவண்டி வந்து நின்றது. அதிலிருந்த பெண்ணின் தகுதிக்கு அவ் வூரின் அன்னச் சத்திரம் தகுதியில்லை என்றும், அதனல் டாக்டரின் 'மேற்கு அறை'யின் சிறப்பை நாடி இங்கே தங்களுடைய அறிவுரையின்மேல் வந்திருக்கிருள் என்றும் அவர் புரிந்துகொள்ளும்படி அக் கிழவிகள் செய்தனர். மருத்துவர் தமது நேரிய மேற்பார்வையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வைத்துக்கொள்ள விரும்பும் நோயாளிகளுக்காகக் கட்டப்பட்டதே அந்த 'மேற்கு அறை'யாகும்.

வண்டியில் இருவர்மட்டுமே இருந்தனர். மருத்துவரின் வீட்டில் அந்தப் பெண்ணுக்குப் போதிய இடமிருப்பதை அவர் மூலமாக உறுதியாகக் கேட்டறிந்த பின்னரே, வண்டியிலிருந்த, குதிரையூரும் உடையுடுத்திருந்த ஓர் ஆடவர் தம் துணைவியை வண்டியிலிருந்து



இறங்குவதற்குக் கைகொடுத்து உதவினர். மீண்டும் ''நன்ருகக் கவனிப்போம்'' என்று உறுதி கூறிய மருத்துவரும் அவர் மனைவியும் தம் காதலியை நன்ருகக் கவனித்துக் கொள்வர் என்று மனமகிழ்ந்த அவர், அப் பெண்ணிற்கு ஏற்ற படுக்கையறை அவ் வீட்டில் இருந்ததைக் கண்டு மனநிறைவு கொண்டார்.

அவர்களுடைய வாக்குறுதியை வலிமையுடையதாக ஆக்குவதற்காகப் புதிதாக வந்தவர் இருபது பவுன்கள் கொண்ட பணப்பையை மருத்துவரின் கையில் வைத்தார். இன்னும் தாராளமாகக் கொடுக்கப்போகும் வெகுமதியின் முன்பணமே இது என்று அப் பணத்தையளித்து, மருத்துவரைப் பார்த்து, அந்தப் பெண்ணுக்கும், அதற்கு விரைவில் பிறக்கப்போகும் உயிருக்கும் என்னவெல்லாம் தேவையோ அவற்றையெல்லாம் பொருட் செலவை நோக்காது தப்பாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பிறகு தாம் அன்னச் சத்திரத்திற்குத் திரும்பிச் செல்வதாகவும், அப் பெண்ணிற்குக் குழந்தை பிறந்ததும் உடனே தெரியப்படுத்துமாறும் கூறினர்.

''அவள் உயர்ந்த நிலையினள். அயல் நாட்டைச் சேர்ந்தவள்; அதனல் எந்தச் செலவும் செய்யாமல் விடுத்தல் கூடாது. நாங்கள் எடின்பரோ நகரத்திற்கே போவதாகத் திட்டமிட்டிருந்தோம். ஆனல் தற்செயலாக வழிமாறி இங்கே வரவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது'' என்று கூறினர் புதியவர். மீண்டும் அவர், ''எந்தச் செலவையும் செய்யாமல் விட்டுவிட வேண்டாம். விரைவாக அவள் பயணம் செய்யும் தகுதியை அடையும்படி செய்யுங்கள்'' என்ருர்.

"அது என்னுல் முடியாததொன்று. இயற்கையை விரைவு படுத்த முடியாது. விரைவுபடுத்திஞல் இயற்கை பழிவாங்காமல் விடாது" என்றுர் மருத்துவர்.

"ஆனுல் கலையால் எதையும் செய்யலாம்" என்று கூறிக் கொண்டே புதியவர் முதல் பணப்பையைப் போலவே கனமான மற்ருெரு பையை அவரிடம் அளித்தார்.

"கலைக்குக் கைம்மாறு செய்யலாம்; ஆனுல் அதை விலைக்கு வாங்கமுடியாது. உங்கள் மனைவியை மிகுந்த கவனத்துடன் பார்த்துக் கொள்வதற்கு நீங்கள் முன்பு கொடுத்த பணமே போதுமானது. இன்னும் நான் அதிகமாகப் பணம் வாங்கினுல் அது நான் என்னுல் செய்யமுடியாததைச் செய்வதாகக் கூறி ஏற்றுக் கொண்டது போலாகும். உங்கள் மனைவிக்காக எல்லாக் கவனங்களையும் மேற்கொள்வேன். விரைவாகப் பயணம் செய்யும் தகுதி பெறுதற்கான முயற்சிகளையும் செய்வேன். சரி, நீங்கள் சத்திரத்திற்குப் போங்கள், எனக்கு இங்கே வேலையிருக்கிறது. அப் பெண்ணிற்குப் பணியாளோ, குழந்தைக்குத் தாதியோ இன்னும் நியமிக்கவில்லை. அவ்விரண்டையும் இப்போதே செய்வேன்" என்றுர் மருத்துவர்.

"ஒரு மணித்துளி, டாக்டர் — உங்களுக்கு என்னென்ன மொழிகள் தெரியும்?"

"இலத்தீனும் பிரெஞ்சும் நன்ருகப் புரிந்து கொள்ளும்படி எளிதாகப் பேசுவேன்; சிறிது இத்தாலியனும் படித்துப் புரிந்து கொள்வேன்."

"போர்த்துக்கீசோ, இசுபானியமோ தெரியாது?" என்று கேட்டார் புதியவர்.



"தெரியாது, ஐயா"

"அது ஒரு குறைபாடே. ஆனுல் பிரெஞ்சுமூலம் அவளிடம் நீங்கள் பேசலாம். எதிலும் அவள் வேண்டுகோளை, விருப்பத்தை நிறைவேற்ற முயலுங்கள். அதற்குப் பணம் வேண்டுமானுல் என்னிடம் சொல்லுங்கள்."

"இந்தப் பெண்ணை என்ன பெயரில் அழைப்பது என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"அது இப்போது தேவையேயில்லை; பிறகு மெதுவாகத் தெரிந்து கொள்ளலாம்" என்று இடைமறித்துக் கூறிஞர் புதியவர்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே தம் கனமான மேலங்கியைப் போட்டுக்கொண்டு சிறிய அச்சத்திரத்தை நோக்கித் திரும்பிச் சென்றுர். சத்திரத்தை அடைந்ததும், குதிரை வண்டிக்காரனுக்குப் பணத்தைக் கொடுத்து அவனைப் போகச் சொல்லிவிட்டு ஓர் அறைக்குள் நுழைந்தார். மருத்துவரிடமிருந்து ஆள் வரும்வரை யாரும் தம்மைப் பார்க்க உள்ளே விடக் கூடாது என்று கட்டளையிட்டுவிட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டார்.

நோயாளியின் அறையில் மருத்துவர் தம் மனைவியைக் கண்டு வியப்புற்றுர். மற்ற மகளிரைப் போலவே தம் மனைவியும் பயமும் கவலையும் கலவாமலிருக்கவில்லை என்பதை உணர்ந்தார்.

"கிறித்துவப் பெண்ணைப்போல அவள் ஒரு வார்த்தை பேச முடியவில்லை" என்றுர் மருத்துவர் மனைவி.

" எனக்குத் தெரியும் " என்ருர் மருத்துவர்.

" ஆனல் நாம் எடுத்துவிடச் சொல்லும் கறுப்பு மேலாடையைப் போட்டுக்கொண்டிருக்கவே வேண்டும் என்று விரும்புகிருள்."

"சரி, போட்டுக் கொண்டிருக்கட்டுமே - அதனல் என்ன தீங்கு வந்துவிடப் போகிறது?

" தீங்கா, டாக்டர்! எப்போதாயினும் எந்தப் பெண்ணாவது கறுப்பு மேலாடையுடன் படுக்கையில் படுத்திருக்கும்படி செய்திருக்கிருேமா ? " என்று கேட்டார் மருத்துவர் மனைவி.

" இல்லைதான். ஆனல், அன்பே! நேர்மையில்லாதவர்களும், நேர்மையுடையவர்களைப் போலக் கவனிக்கப்படுதற்கு உரியவர்களே. அவளுடைய விருப்பத்திற்கு மாருகச் செய்து இரங்கத்தக்க அவளுயிரை ஆபத்துக்குள்ளாக்கிவிடக் கூடாது."

அவள் நோயாளிப் பெண்ணின் படுக்கையை நெருங்கியபோது, பெரிய நாடகத்தில் அணியப்படும் மெல்லிய பட்டுத் திரைச்சீலையை முகத்தில் அணிந்திருந்ததைக் கண்டார். செல்வ மகளிர் வெளியே பயணஞ் செய்யும்போது அணிந்துகொள்ளும் இதை இப்படிப் பட்ட நிலையில் அணிந்து கொள்ளவேமாட்டார்கள். மருத்துவர் அருகில் வந்தபோது அவள் தன் முகத்தைக் கையால் புதைத்துக்கொண்டாள். தான் அணிந்திருந்த அம் மெல்லாடையை அகற்றிவிடச் சொல்லிவிடுவாரோ என அஞ்சியது போன்று இருந்தது அச்செயல். அதனல் அவர் விரைவாக—புரியும் பிரெஞ்சு மொழியில், அவள் விரும்பியதெல்லாம் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதைப் போலக் கவனிக்கப்படும் என்றும், அவள் முகத்திரையைத் தானே அகற்ற விரும்பும்வரை அதை அணிந்துகொள்ளலாம் என்றும் கூறினர். அவர் கூறியன அவளுக்குப் புரிந்துவிட்டன. ஏனெனில் அதே பேச்சு முறையில், தன் திரையை அகற்ருமல் வைத்துக்கொள்ள அனுமதி அளித்ததற்காகத் தன் நன்றியைத் தெரிவித்தாள். மருத்துவர் மேலே செய்ய வேண்டிய ஏற்பாடுகளில் ஈடுபட்டார். ஓட்டப்பந்தயத்தில் முன்னல் வந்த லக்கிசிம்சன் அப்பெண்ணுக்குத் துணையாக இருப்பதற்காக ஒரு செவிலியாக நியமிக்கப்படும் பரிசை அடைந்தாள். பெக் தாம்சன், தன் சொந்த மகள் அப்பெண்ணுக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்குப் பாலூட்டும் தாயாக இருக்கும் வாய்ப்பைப் பெறச் செய்தாள். லக்கி ஜாடின் ஒரு பேர்த்தி அவ் வீட்டு வேலைகளைச் செய்யும் சிற்ருளாக அமர்த்தப்பட்டாள். இவ்வாறு ஓர் அனுபவமுள்ள அமைச்சரைப் போல மருத்துவரும் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் எல்லாரும் பகிர்ந்து செய்யும்படி ஏற்பாடு செய்தார்.



மறுநாள் காலை ஒரு மணிக்கு மருத்துவர் சத்திரத்துக்கு வந்து வண்டியில் வந்திறங்கிய புதியவரை எழுப்பி அவர் ஓரழகான ஆண்குழந்தைக்குத் தந்தையாகிய மகிழ்ச்சிச் செய்தியைக் கூறினர். தாயும் எதிர்பார்க்கக் கூடிய அளவுக்கு மிகுதியாகவே நலமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அப்புதியவர் இச் செய்தியைக் கேட்டதும் மகிழ்ச்சியடைந்தவர் போலக் காணப்பட்டார். " குழந்தைக்கு இப்போதே பெயர் வைத்துவிட வேண்டும், டாக்டர்; இன்றைக்கே பெயர் வைத்துவிட வேண்டும் " என்று கூறினர்.

"அதற்கு ஒன்றும் அவசரம் இல்லை" என்றார் டாக்டர். அவருடைய பேச்சை இடைநிறுத்திப் புதியவர், "அப்படியன்று. நாங்கள் நினைப்பது வேறு. டாக்டர், நான் ஒரு கத்தோலிக்கு. என் மனைவி ஊருக்குப் புறப்படுமளவுக்கு உடல் சீர்ப்படு முன்பு நான் புறப்பட நேரிடும். அதற்குள் குழந்தையை மாதா கோவிலுக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். இந்தப் பட்டிக்காட்டில் மதகுரு ஒருவர் இருக்கிறாரா ?" என்று கேட்டார்.

"குட்ரிச் என்ற கத்தோலிக்க மதகுரு இவ்வூரில் உள்ளார்."

இதைக் கேட்ட அப் புதியவர், "இதை முன் கூட்டியே அறிந்து வைத்தமைக்காக உங்களைப் பாராட்டுகிறேன், டாக்டர். எதையும் உறுதியாய் நம்பிக் கொண்டிருத்தல் தவறு. நாளைக்கு அந்தக் குட்ரிச்சை உங்கள் வீட்டிற்கு அழைத்து வருகிறேன்" என்றார்.

கிரே ஒரு கணம் தயங்கினார். பிறகு அவர் புதியவரைப் பார்த்து, "நான் ஒரு புரோட்டஸ்டன்டு. நான்கு ஆண்டுகள் அரசரால் நியமிக்கப்பட்ட ஒரு போர்ப்படை மருத்துவருக்குத் துணையாயிருந்து அரசரின் சம்பளத்தைப் பெற்றவன். கத்தோலிக்கரின் சடங்குகளை எல்லாம் நான் வெறுப்பவனாயினும், உங்கள் மன விருப்பத்திற்குக் குறுக்கே நிற்க விரும்பவில்லை. நீங்கள் விரும்பினால் குட்ரிச்சை இங்கே என் வீட்டிற்கு அழைத்து வரலாம். குழந்தைக்குத் தந்தை நீங்கள்; உங்கள் விருப்பப்படிதானே எதுவும் நடக்கமுடியும். போப்பின் சடங்கிற்கு எதிராக நடக்கக்கூடியவன் என்று மட்டும் என்னை யாரும் நினைக்கக் கூடாது என்பதுதான் என் விருப்பம்" என்றார்.



"போதும், ஐயா. நாம் ஒருவர்க்கொருவர் புரிந்து கொண்டு விட்டோம்" என்றார் புதியவர் எரிச்சலாக.

மறுநாள் புதியவர் மதகுரு குட்ரிச்சுடன் மருத்துவர்வீட்டிற்கு வந்தார். மதகுருவுடன் வேறு இருவர் வந்திருந்தனர். மூவரும் குழந்தையை எடுத்துக் கொண்டு ஒரு தனியறைக்குள் புகுந்தனர். அங்கே புதிதாக உலகில் கொண்டுவரப்பட்ட, தன்னுணர்வு வாராத அக் குழந்தைக்குப் பேர்வைக்கும் சடங்கு நிறைவேறியது. மதகுருவும் சான்றாளரும் சென்ற பிறகு அப் புதியவர் கிரேயிடம் தம் மனைவி இன்னும் பல நாட்கள்வரை பயணஞ் செய்யக்கூடாது என்று கூறுவதால் தாம் மட்டும் இப்போது புறப்படப் போவதாகவும், பத்து நாட்களுக்குள் மீண்டும் அங்கே வந்துவிடுவதாகவும், அதற்குள் அவளும் புறப்படுவதற்குத் தயாராய் விடுவாள் என நம்புவதாகவும் கூறினார்.

"சரி, என்ன பெயரால் குழந்தையையும் அம்மாவையும் அழைப்பது ?"

"குழந்தையின் பெயர் ரிச்சர்டு."

"ஆனால் அதற்குமேற்பெயரும் இருக்கவேண்டும். அம்மையாருக்கும் அப்பெயர் வேண்டும். என் வீட்டில் அம்மையார் தங்கியிருந்தும் பெயரில்லாமல் இருக்கக் கூடாது."

"மிடில்மசு என்ற இந்நகரின் பெயரைப் பின் வைத்தே அழைக்கலாமே."

"சரி. அப்படியே."

"நல்லது. தாயின் பெயர், மிசஸ் மிடில்மசு: குழந்தையின் பெயர் ரிச்சர்டு மிடில்மசு; என் பெயர்

மாத்யூ மிடில்மசு. இப்பெயர், அவளுக்கு ஏதாவது ஊறு நேர்ந்தபோதும், அவள் ஏதாவது வேண்டியபோதும் உதவிபெற உதவியாயிருக்கும்." இவ்வாறு கூறிக் கொண்டே புதியவர் நூறு பவுனைக் கிரேயின் கையில் வைத்தார். அவர் தயங்கிக் கொண்டே அதை வாங்கிக் கொண்டு புதியவரைப் பார்த்து, "உங்கள் பணத்தை உங்கள் மனைவியாரே வைத்துக் கொள்ளட்டுமே" என்றார்.

"நான் உறுதியாகச் சொல்லுகிறேன் டாக்டர், அப்படிக் கொடுப்பது மிகவும் ஆபத்தானது. அந்தப் பணத்தாளை முறித்தால் எத்தனை கினி சில்லறையாகக் கிடைக்கும் என்றுகூட அவளுக்குத் தெரியாது. உலக அனுபவமே அவளுக்கு இல்லை. அதனால் தயவுசெய்து நீங்களே அவள் பணத்தின் பாதுகாவலராயும், செல வழிக்கும் உரிமையுடையவராயும் இருக்க வேண்டு கிறேன். தன்னுடைய காரியங்களையே கவனித்துக் கொள்ள முடியாத நோயாளியைப்போல அவளைக் கருதி ஆதரவாயிருக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்" என்றார்.

இப்பேச்சு என்னவோ வெறும் வாய்ப்பேச்சாக வும், நலம் கலவாததாகவுமே கிரேவுக்குப் பட்டது. சொற்களில் பொருள் ஒன்றும் இருந்ததாகத் தோன்ற வில்லை. புதியவர் மற்ற நேரங்களில் நடந்துகொண்ட விதத்திலிருந்து ஊகித்துக்கொள்ளப்படுவது போன்றே இப்போதும் அவர் உண்மையை மறைப்பதாகவே மருத்துவருக்குத் தோன்றியது. 'யாராலும் என்னை ஒன்றும் கேட்கமுடியாது. எதிர்ப்பேச்சின்றி நான் சொல்வது அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். எவ்வளவு தூரம் அஃது உனக்குப் புரிகிறது என்பதில்



எனக்கு அக்கறையில்லை' என்று அவர் கருதியது போலவே கிரேவுக்குத் தோன்றியது. மிக உயர்நிலையி லுள்ள இவ்விருவரும் களவுத் திருமணம் செய்து கொண்டவர்களாக இருக்கவேண்டும்; அல்லது இவளை அவர் கூட்டிக்கொண்டு ஓடிவந்திருக்க வேண்டும் என்று அவர் ஐயங்கொண்டதை இது உறுதிப் படுத் தியது. இவ்விருவருடைய முழுநடக்கையும் அவ ருடைய ஐயத்தை வலுப்படுத்தியது. ஆனால் இதைப் பற்றி ஆராய்ந்தறிவதோ, சங்கடப்படுவதோ அவருக்கு இயல்பன்று. எனினும் திருமணத்தின் அடையாள மோதிரம் எதுவும் அவள் கையில் இல்லாததைக் கவனித்தார். அவளுடைய ஆழ்ந்த துயரம், இடையறு நடுக்கம் இவை துன்ப உருவினளாகவே அவளை எடுத்துக் காட்டின. நேரிய வழியில் கைப்பிடிக்கும் கணவனின் கண்காணிப்பையும், பெற்றோர்களின் பாது காப்பையும் இழந்திருந்தாள். சிறிது நீண்டநேரம் அந்தப் பெண்ணுடன் புதியவர் தனியே உரையாடி விட்டுப் பிரிந்து சென்றது அவருடைய ஆவலைத் தூண்டிவிட்டது. எந்தக் கருவுயிர்த்த பெண்ணையும் அனுப்புவதற்குக் குறைந்த எல்லையாகக் கிரே குறிப் பிட்டு வைத்திருக்கும் பத்து நாளில் வருவதாகப் புதியவர் கூறிச் சென்றார்.

"அவர் திரும்பிவருவார் என்றே கடவுளை நம்பு கிறேன்" என்று தமக்குள் கூறிக் கொண்டார் கிரே; "ஆனால் இதில் எல்லாம் ஏதோ பெரிய இரகசியம் இருக்கிறது. ஏனெனில் எல்லாம் வெளிப்படையாகப் புரிந்து கொள்ளும்படி இருக்கிறது. மற்ற ஏழைப் பெண்களைப்போல இப் பெண்ணையும் நடத்துவதா யிருந்தால் அவர் கைவிட்டுப்போக அவளுக்குப் புகலிட

மாக என்வீடு அமைந்திருக்காது. பணத்தை விட்டு விட்டுப் போனதிலும் ஏதோ இரகசியம் பொதிந்திருக் கிறது. அது அப் புதியவர் தம் மனச்சாட்சியுடன் சமாதானம் செய்து கொண்டதைப் போலத் தோன்று கிறது. சரி, நல்லதே நடக்கும் என்றுதான் நான் எதிர்பார்க்க வேண்டும். இதற்கிடையே நான் செய்ய வேண்டியது இப் பெண்ணின் நலத்திற்கு என்ன வெல்லாம் செய்யவேண்டுமோ அவற்றைக் கவனிப் பதுதான்.'' புதியவர் சென்றதும் கிரே விரைவில் நோயாளிப் பெண்ணைப் பார்க்கச் சென்றார். அவளோ பெருந் துன்பத்தில் ஆழ்ந்து துடித்துக் கொண் டிருந்தாள் கிரேயின் அனுபவம் உள்ளமைதியையும், துன்பவிடுதலையையும் அவளுக்குத் தரத்தக்க சிறந்த வழியொன்றைக் கண்டுபிடித்தது. அவர் அவளுடைய குழந்தையை அவளிடம் கொண்டுவரச் செய்தார். வெகுநேரம் அதைப் பார்த்து அவள் அழுதாள். அமைதியற்ற அவள் மனக்குழப்பம் தாயன்பில் கனிந்து தணிந்து வந்தது. கட்டிளமை கனிந்தொழுகும் அவள் தோற்றம் முதன்முறையாகத் தாயன்பைக் காட்டும் வாய்ப்பை இப்போதுதான் பெற்றாள் என்று எண் ணும்படி இருந்தது.

இந்தத் திடீர்த் துன்பத் தாக்குதலுக்குப் பிறகு அவள் காலம் மெதுவாய்க் கடந்து செல்வதைக் கணக் கெடுத்துக் கொண்டிருப்பதைக் கூரறிவுள்ள மருத்துவர் கவனித்தார். தன் கணவரின் (அவர் கணவரா யிருந் தால்) வருகையை நம்பிக்கையுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். நாட்களைக் காட்டும் பஞ்சாங்கங் களைப் பார்த்தாள்; கணவர் சென்ற தூரத்தைப் பற்றி விசாரித்தாள். ஆனால் கணவர் சென்ற வழியைப் பற்றிப் பிறர் அறிந்துகொள்ளக் கூடாது என்று மிகவும் கவனமாகவே இருந்தாள். அடிக்கடி தன் கடிகா ரத்துடன் பிறர் கடிகாரங்களை ஒப்பிட்டு நேரத்தைச் சரி பார்த்துக் கொண்டாள். தன் எதிர்கால முன்னேற் றத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் மனிதன் இடையேயுள்ள காலம் எவ்வளவு விரைவாய்க் கழிய வேண்டு மென்று கருதிப் பார்ப்பானோ, அக்கணித முறைகளையெல்லாம் அவள் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிற நேரங்களில் குழந்தையைப் பார்த்து விம்மிவிம்மி யழுவாள். குழந்தை அழகின் வடிவமாகவே காணப்பட்டது. உணர்வு அறியாத அக் குழந்தையிடம் அவள் அடிக்கடி சொற்களை முணு முணுத்துக் கூறியதை மருத்துவரே கவனித்தார். அச் சொற்களின் பொருள் புரியாமல் போனதுடன், அவற்றை அவள் உச்சரிக்கும் முறைகூட அவருக்குப் புதியதாகவே இருந்தது. அவள் போர்த்துக்கீசில் பேசு கிறாள் என்பதைக் கூட மருத்துவர் அறிந்து கொள்ள வில்லை.

கத்தோலிக்க மதகுரு குட்ரிச் ஒரு முறை அவளைப் பார்க்க விரும்பினார். முதலில் அவள் அவர் வருகையை விரும்பவில்லை. ஆனால் பிறகு அவர் மூலம் மிடில் மசைப் பற்றிய செய்தி ஏதேனும் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அவரைப் பார்க்க மனம் இசைந்தாள். அவர்கள் சந்திப்பு மிகக் குறுகிய நேரத்தில் முடிந்து விட்டது. மதகுரு அவள் அறையைவிட்டு வெளி வரும்போது மன நிறைவு இல்லாதவராகக் காணப் பட்டார். அறிவு மிக்க மதகுருவும் அவ்வுணர்ச்சியை மருத்துவர் அறியாமல் மறைத்துவைக்க முடியவில்லை. அவள் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்தவளா யிருந்

திருப்பின் அவர் அக்கறையுடன் தம் கண்காணிப்பையும், ஆறுதல்களையும் அளித்திருப்பார். ஆனல் இதற்குப் பிறகு அவர் அங்கே திரும்பி வரவேயில்லை.

நாளடைவில் நம் மருத்துவர் அவள் யூத வகுப்பைச் சார்ந்தவளாகத்தான் இருக்கவேண்டும் என்று ஐயுறலானர். தன் உடலையும் உள்ளத்தையும் வேறு மதத்தைச் சார்ந்த ஒருவனுக்கு அளித்துவிட்டாள் என்றும் கருதினர். அழகு நடமிடும் அவள் திருமுகத்தில் படர்ந்திருந்த தனிச்சாயல் இக் கருத்தை வலியுறுத்துவதாகவே மருத்துவருக்குப் பட்டது. இந்தச் சூழ்நிலை கிரேவுக்கு எந்த மாறுபாட்டையும் செய்யவில்லை. எனினும் அவளுடைய அவலத்தையும் கலக்கத்தையுமே கண்டு வந்த அவர் அவ்விரண்டிற்கும் தீர்வு காணவேண்டும் என்று முனைந்து நின்ருர். இது தம் மனைவிக்கும் அவளைச் சூழ்ந்திருப்போர்க்கும் கூடத் தெரியலாகாது எனக் கருதி மறைத்துவைக்க விரும்பினர். அதனல் அவளது உணவுமுறையை ஒழுங்குபடுத்தினர். யூதத் தலைவர் மோசசு விலக்குக என விதித்தவற்றில் எதுவும் இவளுக்குக் கொடுக்கப்படாதவாறு கவனித்தார். அவள் ஐயமோ, மனக் கசப்போ அடையாவண்ணம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். அவளுடைய உடல் நலம் அல்லது வசதி இவற்றைத் தவிர வேறு எதைப் பற்றியும் அவர் அவளிடம் பேசுவதில்லை.

திரும்பி வருகிறேன் என்று அவளிடம் சொல்லிப் போனவர் குறித்த நாளுக்குள் வருவார் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்து ஏமாற்றமடைந்தாள். உடல் தேறிக்கொண்டு வரும் அவளுக்கு



இப்போது அவர் திரும்பிவராத ஏமாற்றமே அமைதியின்மையைத் தந்தது. ஏமாற்றத்தைக் கண்டு அவள் முதலில் கடிந்துகொள்ளும் மனப்பான்மை யுடைய வளாகவே இருந்தாள்; பிறகு அவளை அச்சமும் ஐயமும் ஆட்கொண்டன. பத்து நாளுக்கு மேல் மூன்று நான்கு நாட்கள் ஆகியும் செய்தியோ, கடிதமோ வராதது கண்டு கிரேவுக்குக் கவலை ஏற்பட்டது; அவர் எளிய அப் பெண்ணிற்காகவும் கவலை கொள்ளலானர். பாதுகாப்பில்லாதவளும் துன்பம் கொண்டவளுமான இப் பெண்ணை இங்கேயே கைவிட்டுப் போகலாமென்று திட்டமிட்டே அப் புதியவர் விட்டுச் சென்றிருப்பரோ என்ற ஐயம் அவருக்கு வலுத்துவந்தது. அவரைப்பற்றி எப்படி விசாரித்துப் பார்ப்பது அல்லது மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப்பற்றி ஆலோசிப்பதற்காக அப் பெண்ணிடம் சிறிது பேசலாம் என்று அவர் விரும்பினர். ஆனல் அவள் தன் கருத்தைத் தெளிவாகத் தெரியப்படுத்து மளவுக்குப் பிரெஞ்சு மொழியறிவு பெருமல் இருந்ததாலும், தன் நிலையைப்பற்றி அவள் எதுவும் வெளிப்படுத்தத் தயாராயில்லாததாலும் கிரேயின் முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின. கிரே எதைப்பற்றியாவது விளக்கம் கேட்பதற்காக அவளைப் பார்த்துக் கேள்விகள் கேட்கும் போதெல்லாம் அவர் பேசுவது தனக்குப் புரியவில்லை என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டுவாள். சில சமயங்களில் பேசாமல் நிற்பாள் அல்லது கண்ணீர் விடுவாள்; அல்லது 'அவர்' என்று மட்டும் சொல்லி நின்றுவிடுவாள்.

'அவரு'டைய வருகையை எதிர்பார்த்துக் கிரே பொறுமையை இழந்தார். மனத்தடுமாற்றத்தைத்தரும்

இரகசியத்தை வெளிப்படுத்தப் பொறுமையின்மையே வழி என நினைந்தவர் போலக் காணப்பட்டார். மருத்துவருக்குத் தெரிந்த ஊரிலுள்ள பலரும் அவளைப் பற்றி அம்பலும் அலரும் தூற்றத் தலைப்பட்டு விட்டனர். ஒழுக்கத்தைப் பற்றி மிகவும் ஐயுறத் தக்க வேற்று நாட்டு நாடோடிகளை அவர் வீட்டிற்குள் வைத்துக் கொண்டது குறித்துச் சிலர் கிரேவைப் பழித்துக் கூறினர். மற்றவர்கள் செல்வச் சீமானின் பயணப் பணமுடிப்பைச் செலவழிக்கும் 'கைராசிக்காரர்' என்று கூறிப் பொருமைப் பட்டனர். நேர்மையான மருத்துவர் இப்போது சிறிய ஆடம்பரப் பொருள்களையும் சாதாரண எல்லையை மீறி மிகு விலை கொடுத்து வாங்கும் செயலை மேற்கொண்டதால், ஊரிலுள்ள மக்களிடமிருந்து இப் பணத்தைப் பற்றிய செய்தியை மறைத்துவைக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

நாணயமான மருத்துவரின் நெஞ்சறிந்த நேர்மை ஊர்மக்களின் பிசு பிசுப் பேச்சைப் பொருட்படுத்த வில்லை; எனினும் எல்லோரும் மனம்போன போக்கில் தம்மைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் உண்மையை அறிந்து அவர் மனம் வேதனைப்படாமல் இருக்கமுடிய வில்லை. வழக்கம்போலவே விடாமுயற்சியுடன் எல்லா இடங்களுக்கும் போய்வந்தார். இப்பெண்ணைப் பற்றிய வரலாற்றினை வருங்காலம் கூறும் எனக்கருதிப் பொறுமையைக் கடைப்பிடித்து வந்தார். குழந்தைப் பேற்றிற்குப் பிறகு ஏறக்குறைய ஒரு மாதம் ஆகிவிட்டது. அவள் உடல் மிக நன்றாகத் தேறிவிட்டது எனலாம்.

ஒரு நாள் பத்து மைல் தூரத்திலுள்ள ஓரிடத்திற்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த கிரே



நான்கு குதிரைகள் பூட்டிய வில்வண்டி ஒன்று தம் வீட்டருகே நிற்பதைக் கண்டார். 'அந்த மனிதர் வந்துவிட்டார்; நாம் அதற்குள் அவரைப் பற்றி ஐயப்பட்டதெல்லாம் சரியல்ல' என்று மனத்துக்குள் கூறிக்கொண்டே அவர் குதிரையைத் தட்டிவிட்டார்; நம்பிக்கைக்குரிய அக்குதிரையும் அவர் கருத்தை இதனால் அறிந்துகொண்டு கீழ்ப்படிந்தது. இலாயத்தை நோக்கி விரைந்தோடியது. ஆனால் மருத்துவர் கீழிறங்கித் தம் வீட்டிற்குள் விரைந்தபோது இந்த அவலப் பெண்ணின் வருகையைப் போலவே அவள் புறப்பாடும் அமைதி குடிகொண்டிருந்த தம் வீட்டில் குழப்பம் உண்டு பண்ணுவதாக இருந்ததைக் கண்டார். அவர் வீட்டைச் சுற்றிப் பல சோம்பேறிகள் சூழ்ந்து நின்றனர். உள்ளேயிருந்து கேட்கும் வாய்ப் பேச்சுச் சண்டையைக் கூர்ந்து கேட்பதற்காக ஒரு சிலர் துணிந்து முன்னேறிச் சென்று வழியை அடைத்துக் கொண்டு நின்றிருந்தனர்.

மருத்துவர் முன்னோக்கி ஓடி வந்தார். இவர் வருகையை அறிந்து சந்து செய்விப்போரில் முக்கியமான ஒருவர் குழப்பத்துடன் பின்னடைந்தார். மருத்துவர் தம் மனைவியின் உச்ச நிலையடைந்த குரல் ஒலியைக் கேட்டார். தம்மனுபவத்தால் அக் குரல் ஒலி நல்லதுக்காக எழுப்பப்பட்டதன்று என்பதை உணர்ந்தார். ஏனெனில் அவர் மனைவி எப்போதும் சிரித்த முகமும் கனிந்த உள்ளமும் கொண்டவர். ஆனால் திருமணத்தைப் பற்றி எழும் சண்டைகளில் சில சமயம் அவர் முக்கியப் பங்கை ஏற்றுக்கொள்வதுண்டு. தம் மனைவியின் அறிவுடைமையைக் காட்டிலும் அவள் கொண்டிருந்த நல்லெண்ணங்களில் மிக்க

நம்பிக்கை கொண்டிருந்த மருத்துவர் சண்டை நிகழு மிடத்தை யடைந்து அதைப்பற்றித் தாமே எல்லாம் கவனிக்கத் தொடங்கினர். பாலூட்டும் செவிலி, தாதி, பலவேலைச் சிறுமி முதலியோரைக் கொண்ட ஒரு படைக்கே தலைவியாய்த் தம் மனைவி அங்கே இருந்த தைக் கண்டார். அவர்கள் எல்லாரும் புதிதாக வந்த இருவரிடம்சொற்போர் தொடுத்துக்கொண்டிருந்தனர். அவருள் ஒருவர் கூரிய நோக்கும் வன்மையான பேச் சும் கொண்ட கறுப்பு நிறத்தவர்; அவருடைய பேச் சாற்றல் இப்போது கவலையாலும் துன்புறலாலும் குறைந்து காணப்பட்டது. தம் மனைவியிடம் நிறுத் தாது சண்டை தொடுத்துக்கொண்டிருந்த மற்றவர் கட்டுடலும், வீர நோக்கும், முரட்டு முகமும் உடையவ ராய்க் கைத் துப்பாக்கியை வைத்துக் கொண்டிருந்தார். தேவையில்லாது போயினும், வெளிப் பகட்டுக்காகவே அவர் அத் துப்பாக்கியைக் காட்டிக் கொண்டிருந்தார். வெற்றிக் குரலுடன் 'இதோ என் கணவர் வந்து விட் டார்' என்று கத்தினர் கிரேயின் மனைவி. உலகி லேயே மிகப் பெரிய மனிதர்களுள் தம் கணவரும் ஒரு வர் என்பது அவர் எண்ணம். "என் கணவர் இதோ இருக்கிறார்; அவரிடம் இப்போது என்ன சொல்லுவீர் கள் என்று பார்க்கலாம்" என்று கூறினர்.

அதற்கு அம் மனிதர், 'ஏன், நான் முன்பு சொன் னதைத்தான் சொல்கிறேன். அதாவது நான் கொண்டு வந்திருக்கும் அழைப்பாணைக்குக் கீழ்ப்படியவேண்டும். அதுதான் ஒழுங்கானது, அம்மா, அதுதான் ஒழுங் கானது" என்றார்.

இவ்வாறு அவர் கூறிக்கொண்டே கிரேயின் மனைவிக்கருகே இடக்கையால் ஒரு தாளைப்பிடித்து



நீட்டித் தம் வலது கை விரலால் தொட்டுக் காட்டினர். "தயவு செய்து என்னைப் பார்த்துப் பேச வேண்டும், ஐயா" என்றார் டாக்டர்; "நான்தான் இவ் வீட்டிற்குத் தலைவன். நீங்கள் இங்கு வந்தது எதற்காக என்று நான் அறிந்து கொள்ளவேண்டும்" என்றார். இவர் களைப்பற்றி நீதி மன்றத்தில் வழக்குத் தொடுப்பதில் காலதாமதம் செய்யக் கூடாது என்று அவர் மனத்தில் நினைத்தார்.

"நான் வந்தது இதற்குத்தான். நான் ஓர் அரச ரின் தூதுவன். ஆனல் இப்பெண் ஒரு கீழதிகாரியின் அலுவலகத்தைச் சார்ந்தவன் என்று கருதி என்னை அவமானப்படுத்தி யிருக்கிறாள்."

"அதெல்லாம் இங்கே செல்லாது. நீர் ஓர் அரச ரின் தூதுவர் என்றால் உமது அழைப்பாணை எங்கே? இங்கே என்ன செய்ய வந்துள்ளீர்?" என்று கேட்டார் மருத்துவர். அதே சமயத்தில் லாபோர்டு என்ற கிளார்க்கை உடனடியாக அங்கே அழைத்து வரும்படி ஒரு பணிப்பெண்ணிடம் காதோடு காதாய்ச் சொல்லியனுப்பினர். பெக்தாம்ச னின் நல்ல மகளும் தன் மாமியாருக்கேற்ற மருமகளைப் போலக் காரியத்தைக் கவனிக்க விரைந்து சென்றாள்.

"அழைப்பாணை இங்கேயுள்ளது; பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார் அவ்வதிகாரி.

"இந்த மானங்கெட்ட சோம்பேறி டாக்டரிடம் தான் வந்த காரியத்தைச் சொல்லப் பயப்படுகிறான்" என்று வீரமாகப் பேசினர் மருத்துவரின் மனைவியார்.

"அடை காக்கும் கோழியை அடித்துக்கொண்டு போகும் பருந்தைப்போலப் படுத்துக் கிடக்கும்

இவ்விளம் பெண்ணை எடுத்துக்கொண்டு போகும் கைராசியான காரியந்தான் இவன் வந்த காரியம்' என்று இரைந்தாள் லக்கி சிம்சன். 'குழந்தை பிறந்து ஒரு மாதங்கூடச் சரியாக ஆகவில்லை' என்று எதிரொலி செய்தாள் நர்சு ஜமீசன்.

''இருபத்து நான்கு நாட்கள், எட்டு மணி, ஒரு செகண்டு குறைய ஏழு நிமிடம்'' என்றார் கிரேயின் மனைவியார் சரியாகக் கணக்கிட்டு.

மருத்துவர் அழைப்பாணையைப் பார்த்ததும் அது ஒழுங்கானது என்று அறிந்துகொண்டார். ஆனால் பெண்கள் எல்லாம் தங்கள் பெண்ணினத்தைச் சேர்ந்த அக் குழந்தையின் தாயைப் பாதுகாப்பதிலேயே துணிந்து நிற்பர் என்றும், அந்த வேகத்தில் அவர்கள் திடீரென வெகுண்டெழுந்து இரைச்சலிட்டாலும் இடுவர் என்றும் கருதி அவர்களை அமைதியா யிருக்கும்படி கட்டளை யிட்டார்.

''இந்த அழைப்பாணை ரிக்சர்டுதிரேசாம், சிலியா டி மான்சாடா என்ற இருவரையும் துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யும்படி சொல்கிறது. நானும் மேன்மை தங்கிய அரசர்க்கு ஊழியனாக இருந்திருக்கிறேன். துரோகிகளுக்கு இடந்தரும் வீடு என் வீடல்ல. இதில் குறிப்பிடப்பட்ட இருவர்களில் ஒருவரைப்பற்றிக்கூட எனக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் பெயரைக்கூடக் கேள்விப்பட்டதில்லை'' என்றார் மருத்துவர்.

''ஆனால் நீங்கள் வீட்டில் வைத்திருக்கும் அப் பெண்தான் சிலியா டி மான்சாடா. இதோ அருகில் நிற்பவர்தாம் அவள் தந்தை மாத்தியஸ் டி மான்



சாடா. அவரையே கேட்டு உண்மை தெரிந்து கொள்ளலாம்" என்றார் தூதுவர்.

உடனே தூதுவரை நோக்கிக் கிரே, ''நீர் சொல்வது உண்மையானால் நீர் உமது கடமையை மேற்கொண்டவரேயாவீர். என்னுடைய செயல்களை ஒளிப்பதோ, மறைப்பதோ எனக்குப் பழக்கமில்லை. இவ்வீட்டிற்கு வந்து ஒரு வளமான குழந்தைக்குத் தாயாகிய ஒரு பெண், குழந்தைப் பேற்றின் வலியிலிருந்து குணமடைந்து வருகிறாள். அப் பெண்தான் இந்த ஆணையில் குறிப்பிடப்படும் பெண்ணானால்- இங்குள்ளவரின் மகளானால் - நான் நாட்டின் சட்டங்களுக்கு அப் பெண்ணை ஒப்படைக்கத் தயாரா யிருக்கிறேன்'' என்றார்.

"ஒப்படைப்பதா? டாக்டர் கிரே! இதைக் கேட்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது. பெண்களாலும் குழந்தைகளாலுமே பிழைத்து வருகிறீர்கள். அவர்களையே நீங்கள் காட்டிக் கொடுக்கிறீர்கள்'' என்று இரைந்தார் மருத்துவரின் வாழ்க்கைத் துணைவியார்.

''டாக்டர் பேசுவதைக் கேட்க எனக்கு வியப்பாயிருக்கிறது. இவர் இப்படிச் சொல்வதை இவ்வூரில் எப்பெண்ணும் நம்பமாட்டாள்" என்றாள் இளைய செவிலி.

"டாக்டர் ஒரு மனிதர் என்று இந்த வினாடி வரை நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போதுதான் இவர் ஒரு வயதுமிக்க பெண் என்றும், என்னைவிடத் தைரியமில்லாதவர் என்றும் அறிகிறேன்....'' என்றார் லக்கி சிம்சன்.

"பேசாதிரு, முட்டாள் பெண்ணே" என்று தொடங்கினர் மருத்துவர்; "இக்காரியம் ஏற்கெனவே மோசமாகப்போயிருக்கிறது என்று உனக்குத் தெரியவில்லை? தெரிந்தும் ஏன் இப்படிப் பேசி அதை இன்னும் மோசமாகும்படி செய்கிருய்? நண்பர்களே, இது ஒரு வருந்தக்கூடிய செய்தி. ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்குக் கூட்டிச் செல்லுவதற்குக்கூட இயலாத நிலையிலுள்ள ஓர் எளிய பெண்ணின்மேல் பெருங் குற்றஞ் சாட்டியுள்ள ஆணை வந்துள்ளது. சிறைக்கு அவளை இட்டுச் செல்வது எவ்வளவு துன்பமானது! நான் என் மனத்தில் படுவதை அப்படியே சொல்கிறேன். இவளைச் சிறைக்கு இட்டுச் சென்ருல் இவள் சாவத் துணிவது உறுதி. ஐயா, நீங்கள் உண்மையிலேயே இவள் தந்தையாயிருப்பின் இச் செய்தியால் வரும் தீங்கினை மேலோங்கவிடாது தணியச் செய்வதுதான் உங்கள் முதல் வேலை" என்ருர்.

"சாவே அவமானத்தைக் காட்டிலும் சாலச் சிறந்தது" என்ருர் துளங்காப் பார்வையுடைய கிழ மனிதர். அவரது சொல்லின் பொருளைப் போலவே அவர் குரலும் கடுமையாகவே இருந்தது. "உம்மைத்தான் தூதரே, நீர் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யும். ஆணையை உம் விருப்பம்போல் நிறைவேற்றும்" என்ருர்.

"நான் உடனடியாக அப் பெண்ணிடம் செல்ல வேண்டும், டாக்டர்" என்ருர் தூதுவர், மருத்துவரைப் பார்த்து.

"நல்ல வேளையாக நகரத்து எழுத்தரே வந்து விட்டார்" என்ருர் மருத்துவர். "வருக, வருக, லாபோர்டே வருக! சட்டம் அறிந்தவர் என்ற முறையிலும், இரக்கமும் அறிவும் உடையவர் என்ற முறையிலும் உமது கருத்து இங்கு மிகவும் தேவைப்படுகிறது. எனது வாழ்விலேயே உம்மை இப்போது பார்ப்பதைப்போல் மற்ற எச்சமயத்திலும் பார்த்துப் பெரு மகிழ்ச்சி அடைந்ததில்லை" என்ருர்.



பிறகு அவர் வந்தவரிடம் நிலைமையை விரைவில் விளக்கிக் கூறினர். தூதுவரும், வந்திருப்பவர் சட்ட நுணுக்க மறிந்தவர் என்பதைத் தெரிந்துகொண்டு அழைப்பாணையை அவர்க்குக் காட்டினர். சட்டமறிந்த அவர், "டாக்டர் கிரே, இது செல்லுபடியாகத் தக்கதும், போதுமானதுமான ஆணையே. இருந்தபோதிலும் உடனடியாக இப்பெண்ணை இங்கிருந்து அகற்றுதல் அவள் உடல்நலத்திற்குக் கேடு பயக்கும் என்று உறுதிமொழி கூறுவீர்களானல், அவள் தக்க பாதுகாப்புடன் இருக்கவேண்டும்" என்ருர்.

மருத்துவர் கிரே, "அப்பெண்ணை ஓரிடத்திலிருந்து இன்னேரிடத்திற்கு அழைத்துச் செல்வதைப் பற்றி மட்டும் நான் அவ்வளவாகப் பயப்படவில்லை. தந்தையின் சினத்தால் பிறந்த அச்சமும், அவமானமும், கைது செய்வதால் ஏற்படும் இகழ்ச்சியும், சிறையின் கொடுமையும் அவளுக்குப் பெரிதும் ஆபத்தான நோயை அல்லது சாவைக்கூடக் கொடுத்துவிடும் என்று என் உள்ளார்ந்த மனச்சாட்சி அறிவிப்பதை மிக உறுதியாகவே சொல்கிறேன்" என்ருர்.

அப்போது லாபோர்டு, "தந்தை தம் மகளைப் பார்க்கவேண்டும்; முன்பு அவர்கள் சண்டை யிட்டுக்-

கொண்டிருந்தாலும் பரவாயில்லை; நீதித்துறை அதிகாரியின் ஆணை குற்றவாளிக்குச் சாவைக் கொடுப்பதாக இருப்பினும், அவர் அவ்வாணையை நிறைவேற்றத்தான் வேண்டும். இத்துன்பங்கள் எல்லாம் எதிர்பாராமல் தோன்றுபவையே. இவையெல்லாம் நேரடியாக அல்லது உடனடியாக வரும் விளைவுகளல்ல. டாக்டர் கிரே, உங்கள் தயக்கம் இயற்கையானதெனினும், அப் பெண்ணை நீங்கள் விட்டுவிடத்தான் வேண்டும்'' என்றார்.

“லாபோர்டு, இந்த அழைப்பாணை தேடி வரும் பெண் இவள்தான் என்பதையாவது நான் உறுதியாக அறிந்துகொள்ளவேண்டும்'' என்றார் கிரே.

“என்னை அவளிருக்குமிடத்திற்குச் செல்ல விடுங்கள்'' என்றார் தூதுவரால் மான்சாடா என்று குறிக்கப்பட்டவர்.

லாபோர்டின் வருகையால் சிறிது நேரம் அமைதியாக இருந்த தூதுவர் மீண்டும் பொறுமை இழந்தார். இப்பெண்கைதியின் துணை கொண்டு மேலும் பெருங் குற்றம் செய்தவனைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள முடியும் என்று தாம் நம்புவதாகக் கூறினர். இத்தகவல்களை அறிவதற்குத் தடைகள் ஏற்பட்டு அதனல் தாமதமாகத் தகவலறிய நேரிட்டால் பின்னர் நேரும் விளைவுகளை இப்படித் தாமதம் செய்வதில் பங்கு கொண்ட எல்லாரும் ஏற்க நேரிடும் என்று எச்சரிக்கை செய்தார்.

“இதற்காக நான் தூக்குமேடை ஏறவேண்டியதாயிருப்பினும் இச்செயல் என் நோயாளியின் சாவிற்குக் காரணமாகும் என்று எதிர்க்கிறேன். பிணை எடுத்துக் கொள்ள முடியாதா, லாபோர்டு?'' என்று கேட்டார் மருத்துவர்.



“பெருந் துரோகச் செயல்களுக்கு அது முடியாது” என்று கூறிய லாபோர்டு, மெல்லிய இரகசியக் குரலில் தொடர்ந்து, “கிரே, இங்கு வாருங்கள், நம் மேன்மைப் பெருந்திரு ஜியார்ஜ் அரசரின் நன்மதிப்பையும், அவர் அரசாங்கத்தின் அன்பையும் நீங்கள் பெற்றுள்ளீர்கள் என்பதை நாங்கள் எல்லாரு மறிவோம். ஆனல் நீங்கள் விடாப்பிடியா யிருக்கக் கூடாது. இதனல் உங்கட்குத் துன்பங்கள் தாமே வரும்; அப்போது இவ்வூரிலுள்ளார் யாவரும் உங்களுக்காக வருந்த நேரிடும். அண்மையில் எழுந்த பெரும்போர் இன்னும் முடியவில்லை. ஆனலும் பல முறை இதுபோல் ஆணைகள் வருவதையும், நற்குணப் பெண்களே பெருங் குற்றச் சாட்டுகளுக்கு உட்படுவதையும் நாங்கள் அறிவோம். இப்பெண்ணைப் போலவே லேடி ஓகில்வி போன்ற பல மகளிர் இருக்கிறார்கள். எல்லாரும் நன்றாகவே கவனிக்கப்படுவர். இந்தத் தூதுவர் தம் பொறுப்பை உணர்ந்தவர். இப் பெண்ணின் பாதுகாப்புக்காக உறுதி கூறுகிறார். அதனல் இப்போது நீங்கள் சட்டத்திற்கு வளைந்து கொடுத்தே செயல் புரிய வேண்டும்'' என்று அறிவுரை பகர்ந்தார்.

“அப்படியானல் என்னோடு வாருங்கள். அப் பெண்ணைக் காணலாம்'' என்றார் கிடியன். அவளிடம் உண்மையைக்கூறி அவளுக்கு வரப்போகும் பேரவலத் துன்பத்தை முன்கூட்டி அறிவிக்கப் போகிறோமே என்ற உணர்ச்சி கொந்தளித்து வர, சிறிய படிக்கட்டுகள் மூலம் மான்சாடாவை இட்டுச் சென்று,

மாடிமேல் வந்து ஒரு கதவைத் திறந்தார். அவரிடம், "இதுதான் உங்கள் மகளுக்குப் புகலிடமாயிருக்கும் தனியிடமாகும். நான் எந்தப் பாதுகாப்பும் அளிக்க வியலாத நிலைமையில் உள்ளேன். நீங்கள் விரும்பினுல் உள்ளே செல்லலாம்" என்ருர்.

அப்புதியவர் சினப்பார்வையை அவர்மேல் செலுத்தினுர். நல்லபாம்பின் சீற்றத்தின் ஆற்றலை அவர்மீது கொட்டிவிடத் தயாரா யிருப்பது போலக் காணப்பட்டார். பிறகு செருக்குடன் முன் சென்று அறைக்குள் நடையிட்டுப் புகுந்தார். லாபோர்டும் கிரேயும் சிறிது தூரத்தில் பின்னுல் வந்து கொண்டிருந்தனர். தூதுவர் கதவருகே நின்றுகொண்டிருந்தார். அவ்விரங்கத் தக்க பெண் வெளியே நிகழும் கலவரத்தைக் கேட்டிருந்தாள். அதன் காரணம் என்னவெனச் சரியாக உணர்ந்திருந்தாள். புதியவர்கள் வண்டியிலிருந்து இறங்கும்போதே அவர்களை அவள் பார்த்திருக்கலாம். அவர்கள் இவ்வறைக்குள் நுழைந்தபோது அவள் ஒரு சாய்வு நாற்காலிக்கருகே மண்டியிட்டு அமர்ந்திருந்தாள். மான்சாடா என்பவர் ஒரு வார்த்தையைக் கூறினுர். அவர் சொல்லும் முறையிலிருந்தே அவர் 'பாவி' என்று சொன்னதுபோல் இருந்தது. ஆனுல் அவ் வார்த்தையின் பொருள் யாருக்கும் விளங்கவில்லை. அப்பெண் திடீரெனக் காக்கை வலிப்பு ஏற்பட்டது போலத் திடுக்கிட்டாள். போர்க்களத்தில் குற்றுயிராய்க் கிடக்கும் படை வீரர்களுக்கு முன்பு ஏற்பட்ட காயத்திலேயே இரண்டாம் முறையும் சுரீரென்று வேல் பாய்ந்தது போன்ற துன்பம் எய்தினுள். அவளுடைய துன்ப உணர்ச்சியைப் பற்றிக் கவலைப்படாது அவ்



கையை இறுகப் பற்றினுர் மான்சாடா. அப்படியே அவளை உயரத் தூக்கி நிறுத்தினுர். அவரது வல்லுடும்புப் பிடியினுல்தான் அவள் நின்றிருப்பது போலக் காணப்பட்டது. பிறகு இதுவரை அவள் அணிந்திருந்த முகமூடித் திரையைக் கிழித்தெறிந்தார். அவ்வெளிய மாதோ இன்னும் தன் முகத்தை மறைத்துக்கொள்ளப் பெரிதும் முயன்ருள். வலது கை முகத்தருகே எடுக்கமுடியாதபடி பற்றப் பட்டிருந்ததால், இடக்கையால் முகத்தை மூட முயன்ருள். முகத்தை முற்றிலும் மூடப் பயன்படாத அக் கையையும் அவர் விரைவில் பற்றிக்கொண்டார். எனவே ஒளி வீசும் அவள் திருமுகம் மறைக்கப்பட முடியாமல் வெட்கக் குறிகளுடன் கண்ணீர் வடிந்து காணப்பட்டது.

"லாபோர்டு, மருத்துவரே, உங்களைத்தான். இவள் என் மகள் சிலியா மான்சாடாவேதான். அவ்வாணையில் குறிக்கப்பட்டிருந்தவளும் இவளே தான். வழி விடுங்கள். இவளுடைய குற்றங்கள் கழுவாய் செய்யப்படு மிடத்திற்கு இவளை இட்டுச் செல்கிறேன்" என்ருர் அவள் தந்தை.

"இப்பெரியவரின் மகள்தானு நீ?" என்று அம் மடந்தையைப் பார்த்துக் கேட்டார், லாபோர்டு. அவளுக்கு ஆங்கிலம் தெரியாது என்று சொல்லிய கிரே அவளைப் பார்த்துப் பிரெஞ்சில் பேசினுர். அவள் அங்கு நிற்பவரின் மகளா இல்லையா என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டார். மகளாக இல்லாவிடில் பாதுகாப்பளிப்பதாக உறுதி கூறினுர். அவள் தழு தழுத்த மென் குரலில் விடையிறுத்தாலும், அவர் தன் தந்தையே என்று கூறியது தெளிவாகக் கேட்டது.

இனி எவ்விதக் குறுக்கீடும் செய்வதற்கில்லை. தூதுவர் தம் கைதியைக் கைது செய்தார். கை பிடித்து அழைத்துச் செல்லச் சில பெண்களின் உதவியைக் கோரினார்.

மீண்டும் கிரே குறுக்கிட்டார்: "தாயையும் குழந்தையையும் பிரிக்கமாட்டீர்களே?" என்று கேட்டார். ஆராயாது பிரெஞ்சிலேயே தன் தந்தையைப் பார்த்துக் கிரே கேட்ட இக் கேள்வியைச் செவிமடுத்த அப்பெண் தான் பெற்றெடுத்த ஆதரவற்ற குழந்தையைப் பற்றிய நினைவை எய்தினாள். அவள் தன் தந்தையின் வருகையால் குவிந்திருந்த அச்சங்களால் தன் குழந்தையைப் பற்றிய நினைவை அதுவரை மறந்திருந்தாள். துன்பம் மலிந்த குரலில் 'ஐயோ!' என்று அலறினாள். கருணை காட்டமாட்டாரா என்று ஏங்கும் இரக்கப்பார்வையுடன் தன் தந்தையைப் பார்த்தாள்.

"அறம் தழைக்கும் கோயிலுக்கு இப் பரத்தையை இழுத்துப் போங்கள்" என்று இரைந்தார் மான்சாடா. அப்போது ஆதரவற்ற அப் புனிற்றுத் தாய் தன்னைச் சூழக் கூடியிருந்த மகளிரின் கையகத்தே உணர்வற்று வீழ்ந்தாள்.

"அது உங்களுக்கு நல்லதன்று, ஐயா. அப்பெண்ணிற்கு நீங்கள் தந்தையானால் ஆதரவற்ற அக் குழந்தைக்குத் தாத்தா ஆவீர்கள்; அதன் எதிர்காலத்தைப் பற்றி ஏதாவது வழி வகுக்கவேண்டும் அல்லது எங்களில் யாரிடமாவது அதை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைத்து விடவேண்டும்" என்றார் கிடியன்.

மான்சாடா லாபோர்டை நோக்கினார். லாபோர்டும் கிரே சொன்னது செய்யத் தக்கதேயெனத் தம் கருத்தொருமிப்பை வெளிப்படுத்தினார்.



'இப்பாழுங் குழந்தைக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் கொடுத்துத் தொலைக்கத் தயாராயிருக்கிறேன்' என்று குழந்தையின் தாத்தா பேசினார்; கிரேயைப் பார்த்து, "ஐயா, நீங்கள் இக் குழந்தையை ஏற்று வளர்த்துவர ஒப்புக்கொள்வீர்களாயின் உங்கள் வாழ்வு வளம்பெறுமளவு பணம்பெறுவீர்கள்" என்றார்.

மருத்துவரோ அவ்வாறு மரியாதையின்றி அளிக்கும் பொறுப்பை மறுக்கத் துணிந்தார். ஆனால் ஒரு கணம் சிந்தித்து விட்டு, "இதுவரை நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், அவற்றுடன் தொடர்பானவற்றைப் பற்றியும் நான் அதிகமாகக் கவலைப்படப் போவதில்லை. நானே குழந்தையைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தாய் விரும்பினால் நான் அதை மறுத்தல் செய்யமாட்டேன்" என்றார். உணர்வற்ற நிலையிலிருந்து மீண்டும் நனவெய்திவரும் அப் பெண்ணைப் பார்த்து முதலிற் பேசிய அதே சினக் குரலுடன் பேசினார் தந்தை. இந்த ஏற்பாடு அவளுக்கு மனதாரப் பிடித்திருந்தது. அதனால் அவள் மகளிர் கையகத்தினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு கிரே இருக்குமிடத்தை அடைந்து, அவர் கையைப் பற்றி அதை முத்தமிட்டாள்; தன் கண்ணீரால் அக் கையை முழுக்காட்டினாள். குழந்தையைப் பிரியும் துன்பத்தையும் மறந்து, குழந்தை அந் நல்லோரிடம் வளரப் போவதை நினைந்து மனத்தை அமைதி செய்து கொண்டவளாய்க் காணப்பட்டாள்.

"அன்பு மிக்க நல்லோரே, தாயையும் குழந்தையையும் நீங்களே காப்பாற்றி விட்டீர்கள்!" என்று தன் கொச்சைப் பிரெஞ்சில் கூறினாள் அத்தாய்.

அவள் தந்தை 'இதற்குள் வாணிகச் செயல்' முறைப்படி லாபோர்டின் கைகளில் ஆயிரம்பவுன் மதிப்புள்ள நோட்டுக்களையும் உண்டியல்களையும் வைத்தார். இப்பணம் முழுவதும் அக்குழந்தைக்காகவே பயன் படுத்தப்பட வேண்டும் என்றும், குழந்தையின் உணவுக்கும் கல்விக்கும் செலவிடப்பட வேண்டு மென்றும் கூறினர். மரணம் அல்லது மற்ற எச்செய்திக்காக வேனும் கடிதப் போக்குவரத்துத் தேவையானல், இலண்டனில் உள்ள ஒரு பாங்குக்குத் தம் பெயரில் கடிதம் எழுதி உறையில் வைத்து அனுப்பவேண்டும் என்றும் கூறினர். பிறகு கிரேயைப் பார்த்து, "ஆனல் ஒன்று. மிக நெருக்கடியான தேவை ஏற்பட்டாலன்றிப் பிற சமயங்களில் இதைப் பற்றித் தொல்லை கொடுக்க முற்படக் கூடாது" என்ருர்.

அதற்குக் கிரே, "நீங்கள் ஒன்றும் அஞ்சவேண்டியதில்லை. இன்றியமையாத சமயத்தில் தவிரப் பிற சமயங்களில் உங்களுக்குக் கடிதம் எழுதவேண்டிய தேவை ஏற்படாது என்றுதான் நான் இன்றைய நிகழ்ச்சிகளைப் பார்த்த பிறகு நம்புகிறேன்" என்ருர்.

லாபோர்டும் கிரேவும் இக் குழந்தையின் பாதுகாப்பாளர்களாயிருப்பதாக ஏற்பாடானதால், இப்பணத்தைப் பற்றிய ஒரு குறிப்பை எழுதிக்கொண்டார் லாபோர்டு. திரேசாம் என்ற பெயரில் வந்து முன்பு ஒருவர் கொடுத்துச் சென்ற பணத்தில் மீதமானதையெல்லாம் அப்பெண்ணிடம் கொடுத்துவிட முயன்ருர் கிரே. ஆனல் எல்லாவித சைகைகளுடனும்—தன் கையும் கண்ணும் முகமும்கூட வேண்டா மென்று மறுத்துக்கூறும் குறிப்புடனும்—தன் அரைகுறைப்



பிரெஞ்சில் பணம் திருப்பித் தருவதை முற்றிலும் மறுத்தாள் அவள். மருத்துவர் அதைத் தம் பணமாகவே வைத்துக் கொள்ளலாம் என்று மன்ருடினுள். அதே சமயம் விலை மதிப்பு மிக்க பளிச்சிடும் கல்பதித்த மோதிர மொன்றை அவர் கையில் திணித்தாள். அப்போது அதைப் பார்த்த அவள் தந்தை சில கண்டிப்பான சொற்களைக் கூறினர். அவற்றைக் கேட்ட அப்பெண் மனத்துயரம் நிறைந்தவளாய்ப் பேசாது அடங்கினுள். 'அவளுடைய அவமானச் சின்னமான இவ்வளி நிலைக் குழந்தையைப் பார்த்து அழுதுவிட்டு வருவதற்காகச் சில மணித்துளி நேரம் கொடுக்கிறேன்' என்ருர் கண்டிப்பு மிகுந்த அத் தந்தை.

'நாம் அவளைச் சிறிது நேரம் தனியே விட்டு அப்பால் நகர்வோம்' என்று கூறிப் பின் தூதுவரை நோக்கி, "வெளியே அவ்வறையின் கதவருகே நின்று கவனித்துக் கொண்டிருங்கள்" என்று கூறினர். எனவே கிரே, லாபோர்டு, மான்சாடா எல்லாரும் அவ்விடத்தினின்று நகர்ந்தனர். வெளியே நின்று ஒவ்வொருவரும் தத்தமக்குள் என்னென்னவோ சிந்தித்துக் கொண்டு பேசாது நின்றுகொண்டிருந்தனர். அரைமணி நேரங் கழியுமுன் அப்பெண் புறப்படத் தயாராகி விட்டதாகச் செய்தி வந்தது.

"எது எதற்கு அடிபணிய வேண்டுமோ அதற்கு எல்லாம் அடிபணியும் அறிவை இன்னும் பெற்றிருக்கிருள் என்று மகிழ்ச்சி யடைகிறேன்" என்ருர் தந்தை

இவ்வாறு சொல்லிக் கொண்டே படியேறிச் சென்று, மீண்டும் முகத்தை மூடி மறைத்திருக்கும் மகளை அழைத்துக்கொண்டு திரும்பினுர். கிரேவைத் தாண்டிப்



காதல் மகளைக் கைவிட்டுத் தாய் கொண்டுபோகப்படல்



போனபோது சொல்ல முடியாத மனத்துன்ப உணர்ச்சி யுடன் அவள் 'என் குழந்தை, என் குழந்தை' என்ற சொற்களைக் கூறியழுதாள். மருத்துவரின் வீட்டினருகேயே கொண்டுவரப்பட்ட வண்டியில் ஏறிக்கொண்டாள். தூதுவரும், துணையாட்களான மற்றிருவரும் குதிரையின்மீது இவர்ந்து வண்டியைப் பின் தொடர்ந்தனர். வண்டியும் எடின்பரோவுக்குச் செல்லும் வழியில் விரைந்து ஓடியது. இந்தப் புதுமையான காட்சியைக் கண்டவர்கள் எல்லாரும் திரும்பிச் சென்று தங்களுக்குள் பலவாறு ஊகங்களைச் செய்து கொண்டனர். சிலர் தங்களுக்குக் கிடைத்த இலாபத்தைக் கணக்கிட்டனர். ஏனெனில் நோயாளிப் பெண்ணாகிய தன் பிரிவால் திடீரென நேர்ந்த பொருளிழப்புக்கு ஈடுகொடுப்பதைப் போலத் தாராளமாகத் தன்னைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களுக்கு எல்லாம் பணத்தை அள்ளியிறைத்துப் போயிருந்தாள் அப்பெண்.

## 2. ரிச்சர்டின் வளர்ப்பும் துடிப்பும்

வண்டியின் சக்கரங்கள் எழுப்பிய துகள்மேகம் தரையில் படிந்து மெதுவாய் மறைந்தது. மிக வியப்பான கவலைப்படத் தக்க நிகழ்ச்சிகளுக்கிடையே நிலவினாலும் மனிதரின் எண்ணங்களைத் திருப்பிவிடும் ஆற்றல் வாய்ந்த பசியால் உணவின் நினைவு மருத்துவரின் மனைவியாருக்கு ஏற்பட்டது. "டாக்டர், நீங்கள் வழக்கம் போல் இன்னொரு நோயாளி வரும்வரை சன்னலருகே நின்று எட்டிப்பார்த்துக் கொண்டிருப்பீர்கள்; பிறகு உண்ணாமலே புறப்பட்டுவிடுவீர்கள். இன்று லாபோர்டு நம்முடன் உண்பார் என்று நம்புகிறேன். இது அவருக்கு உண்ணும் நேரம். நல்ல வேளை அந்தப் பெண்ணுக்காகத் தயாரித்த தனிக்கறி வகைகள் இருக்கின்றன. அவை அவருக்குப் பயன் படும்" என்றார் மருத்துவர் மனைவி.

மருத்துவர் கனவிலிருந்து விழித்தவர் போல் எழுந்து வந்து மனைவியுடன் சேர்ந்து லாபோர்டை விருந்துண்ண அழைத்தார். அவரும் அவர்கள் அழைப்புக்கு இணங்கினார்.

உணவுக்குப் பிறகு உரையாடல் தொடங்கியது. அவர்கள் அன்று கண்ட புதிய நிகழ்ச்சிகளைப் பற்றிய பேச்சே நிகழ்ந்தது. அந்த நகர எழுத்தர் அந்நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கும் பண்பினைப் பெற்றிருந்தமைக்காக இவர்களது நன்மதிப்பைப் பெற்றார்.

"நான் வராவிடில் நீங்கள் திணறிப் போயிருப்பீர்கள், டாக்டர்" என்று மொழிந்தார் அவர்.



அதற்குக் கிரே, "ஆமாம் அப்படித்தான் ஆகியிருக்கும். இன்னும் சொல்லப் போனால், என் வீட்டில் அந்தப் பயல் துப்பாக்கியைக் காட்டிப் பெண்ணைத் துன்புறுத்தத் தொடங்கியதைத் தூரத்தில் கண்டபோது பழங்காலத்து வீரர்களின் துணிவு எனக்கும் வந்து விட்டது. அப்போது என்னை யாரும் தடுத்திருக்க முடியாது" என்றார்.

"அதெல்லாம் சரியன்று. கொஞ்சம் முன்னறிவு இருந்தால் உலகத்திலுள்ள எல்லாத் துப்பாக்கிகளையும் வென்று விடலாம்" என்றார் சட்டம் வல்லார்.

"உங்களை அழைத்துவரச் சொன்னபோது நான் நினைத்ததும் அதற்காகத்தான்" என்றார் கிரே.

"இந்த ஆபத்தான வேளையில் உதவ வேறு யாரும் தகுதி வாய்ந்தவர்கள் இருக்கமுடியாது" என்று ஒத்துப் பாடினார், தம்முடைய வேலையில் ஈடுபடத் தொடங்கிய மருத்துவர் மனைவி.

"மிக்க நன்றி, மிக்க நன்றி" என்றார் எழுத்தர்; "எந்த எதிர்ப்பும் நிகழாதிருப்பதற்காகவே அந்தத் தூதுவர் ஆணையைத் தக்க சமயத்தில் கொண்டு வந்தார் என்பதை நான் கூர்ந்து கவனித்தேன். நான் சட்டத்தை முன்வைத்த பிறகு அவர் எவ்வளவு அமைதியாக நடந்து கொண்டார் தெரியுமா? அப் பெண் அவரிடத்தில் ஆபத்திற்குள்ளாவாள் என்று நான் ஒரு போதும் நம்பவில்லை. ஆனால் அவள் தந்தையோ அடக்கு முறையில் வல்லவர். கடிவாளமிட்டு வைத்து அப்பெண் குதிரையை வளர்த்து வந்திருக்கிறார். ஆயினும் அது ஒரு நாள் கடிவாளப் பிடிக்குத் தப்பி ஓடிவிட்டது போலும். அவர் வெளிநாட்டுக்கே அவளை

இட்டுச் சென்று கன்னியர் மடத்தில் அடைத்துவிட்டாலும் வியப்படைவதற்கில்லை.''

அப்போது கிரே, ''அப்பாவும் மகளும் ஒரே யூத மதத்தைச்சார்ந்தவர்கள் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது'' என்றார்.

''யூதமதத்தைச் சார்ந்தவளா? அவளுக்காகவா இவ்வளவு துன்பங்களை நான் ஏற்றுக்கொண்டேன்! யூதர்களுக்கு எல்லாம் நீளமான தாடி இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அந்த ஆளுக்கு நம்மவர்களைப் போலவே தாடி ஒன்றும் இல்லையே! ஆனால் மயிர் மழித்துக்கொள்வதற்கு நேர மில்லாததால் வளர்ந்து விட்ட தாடியை உங்களிடம்தான் கண்டிருக்கிறேன்'' என்றார் மருத்துவர் மனைவி.

அப்போது லாபோர்டு, ''மான்சாடாவைப் பொறுத்தவரை தாடி இல்லாமல் இருந்திருக்கலாம். ஏனெனில் அவர் ஒரு கடின பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், யூதர்கள் பெரும்பாலும் மதிக்கத்தக்கவர்களே; அஞ்சத்தக்க குணம் அவர்களிடம் இல்லை. ஏனெனில் சட்டம் அவர்களுக்கு எதிராக உள்ளது. ஆனால் பணச்சந்தையில் அவர்கள் ஏற்றமுள்ளவர்கள்; பொருள்வளமிக்கவர்கள். நான் நினைக்கிறேன், இந்தப்பெண் தன் தந்தையிடமே சில துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு இருந்திருந்தால், அந்தப் போக்கிரியிடம் அகப்பட்டுச் சீரழிந்து போகாமல் சிறப்பாக வாழ்ந்திருப்பாள். டாக்டர் கிரே, நீங்கள் கூறியதுபோல் அவள் காதலன் ஒரு புரட்சிக்காரனைப் போலவே தோன்றுகிறான். யூதர்கள் தங்கள் அரசாங்கத்திற்கு மிகவும் பணிந்து கட்டுப்பட்டவர்கள்;



அவர்கள் போப், பேய், போலிகள் இவர்களையும், நம்மைப்போன்ற கிறித்துவர்களையும் வெறுக்கின்றனர்'' என்றார்.

கிடியன், ''எனக்கென்னவோ அவள் காதலன், அவள் தந்தை இருவரையும் பிடிக்கவில்லை. அவள் தந்தை கோபத்தின் குன்றேறி நின்றிருந்தார். அதற்குத் தக்க காரணமும் இல்லாமல் இல்லை. திரேசாம் என்ற பெயருடன் வந்த அவள் காதலன் பெருங்கேடன், இளங்காதலிக்கு அன்பு காட்டுவதை விடுத்து அந்தச் சமயத்தில் அவளை விட்டுவிட்டுப் போய் விட்டான்'' என்றார்.

''டாக்டர், நீங்கள் இந்தக் குழந்தையை எடுத்து வளர்க்கப் போகிறீர்கள், இல்லையா?'' என்று கேட்டார் லாபோர்டு.

''அதில் ஒன்றும் துன்பமில்லை. குழந்தை பிழைத்தால் நன்றாக வளர்வதற்கு வேண்டிய பொருள் வசதி இருக்கிறது. நான் அதற்கு நேர்மையான, பயனுடைய தொழிலைக் கற்றுத் தருவேன். அது எனக்கு விளையாட்டைப்போல் மகிழ்ச்சி தருமேயன்றித் துன்பமாயிராது. மேலும் குழந்தைநோய்களைப் பற்றிச் சிறிது ஆராய்ச்சி செய்யப்போகிறேன். கடவுளருளால் குழந்தை என் பொறுப்பில் நன்றாக வளரவேண்டும்; ஏனெனில் எங்களுக்கு வேறு குழந்தை இல்லை....'' என்றார் டாக்டர்.

''ஐயோ, பாவம்! இப்போதுதான் குழந்தைக்கு மிகவும் அவசரப்படுகிறீர்கள். இதுவரை திருமணம் ஆகாதவர் போல் இருக்கின்றீரே!'' என்று கூறிவிட்டுப் பின் தேநீர் அருந்திவிட்டுச் சென்றார் லாபோர்டு.

இந்த உரையாடலுக்குப்பின் நான்காண்டுகள் கழிந்து விட்டன. லாபோர்டு குறிப்பிட்டதுபோல மருத்துவரின் மனைவி கருவுயிர்த்தாள்; கணவர்க்கு ஓரழகிய பெண் மகவை ஈன்று தந்தாள். ஆனால் இந்த மண்ணுலக வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்தே வருகின்றன. குலக்கொடியைப் பெற்றெடுத்த அன்னை இந்த உலக வாழ்வை நீத்தாள். குடிமரபு தழைக்க விரும்பிப் பெற்ற இம்மகவால் எளிய அன்பு மனம் கொண்ட மனைவியை மருத்துவர் இழக்க நேரிட்டது. அவருக்கு இது விதியளித்த கொடிய பெருந்துன்பங்களுள் ஒன்றாய் இருந்தது. குழந்தை பிறப்பதால் கோலாகலம் நிலவும் என்று சில மாதங்களுக்கு முன்பு எதிர்பார்த்த அவ் வீடு இப்போது பொலிவிழந்து காணப்பட்டது. அறிவும் உறுதியும் சான்ற அவர் ஒரு பேரிடியைப் போன்ற தாக்குதலைப் பெற்றார். இத் தாக்குதலின் பிடியிலிருந்து அவர் முழுதும் மீண்டுவர எப்போதும் முடியாது என்றே எல்லோரும் நினைத்தனர். வழக்கம்போலவே மருத்துவர் தம் தொழிலின் கடமைகளையெல்லாம் நிறைவேற்றி வந்தார்; மக்களுடன் பழகும்போது மகிழ்ச்சியுள்ளவர் போலவே வெளிக்குக் காணப்பட்டார். ஆனால் அவர் வாழ்க்கையின் பேரொளி மறைந்து விட்டது. நோய் கொண்டோரின் நலத்திற்காகவே அல்லும் பகலும் உழைக்கும் மருத்துவரைத் தம் உடல்நலத்தையும் கவனத்துடன் பார்த்துக் கொள்ளும்படி ஒவ்வொரு நாள் காலையிலும் அன்புடன் எடுத்துக் கூறும் மனைவி இப்போதில்லை. ஒவ்வொரு மாலையிலும் வெளியிடங்களுக்குச் சென்று சோர்வுடன் திரும்பி வரும்போது அன்புரையால்



வரவேற்றுச் சோர்வை நீக்கி அன்றுடம் நிகழ்ந்த சிறு நிகழ்ச்சிகளையெல்லாம், கேட்பதற்குச் சுவை தோன்றுமாறு கூறும் உயிர் அங்கே இப்போதில்லை. தூரத்திலிருந்து வீடு நோக்கி வரும்போது மருத்துவர் மிடில்மசு ஊரின் கோயிற் கோபுரம் கண்டு மகிழ்ச்சியால் ஊதும் ஊதல் இப்போது உறங்கிக் கிடக்கிறது. சோர்வு மிக்க குதிரையும், மருத்துவரின் கைச்சாட்டையடியும் அவர் குரல் ஒலியும் பெறாது ஊக்கம் குன்றி அவர் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளுவதுபோல் மெல்ல நடமாடியது. சில சமயங்களில் அன்னையின் முகக் குறிகளை எல்லாம் அப்படியே பெற்றிருக்கும் பச்சைக் குழந்தை அன்னையின் சாவுக்குக் குற்றமற்ற, ஒன்றுமறியாக் காரணமாக இருந்தபோதிலும், அது இருப்பதுகூடப் பிடிக்காது மனம் வெம்பிப் புழுங்கினார் மருத்துவர். ‘இந்தக் குழந்தை இல்லாதிருந்தால்.......’ என்று நினைப்பார். ஆனால் உடனே அவ்வெண்ணம் பாவமானதென்று எண்ணிக் குழந்தையை எடுத்துத் தம் மார்போடணைத்து அன்பைச் சொரிவார்; பிறகு விரைவாக அக்குழந்தையை அறைக்கு வெளியே எடுத்துப் போகுமாறு பணிப்பார்.

இசுலாமியர்களுக்குள் ஒரு புதுமையான நம்பிக்கை இருக்கிறது. வானுலகத்தில் நம்பிக்கை கொண்டோர் வழியில் கொழுந்து விட்டெரியும் இரும்புப் பாலத்தை வெறுங்காலால் நடந்து கடக்க வேண்டும் என்ற கருத்தே அது. ஆனால் அந்தச் சமயத்தில், தம் வாழ்நாள் முழுதும் சேர்த்து வைத்திருந்த தாள்களை – தம்மைப் பற்றிக் கடவுள் எழுதிய எழுத்து ஏதேனும் கலந்திருக்கும் என்று எண்ணிப் பாதுகாத்த தாள்களை – இப்போது கொதிக்

கும் இரும்புக்கும் தம் காலுக்கும் இடையே வைத்துக் கொண்டு தீத்துண்டத்திலிருந்து விடுபடுவர். இதே போல இந்த உலகத்தில்கூடப் பொறுக்க முடியாத துயரங்களைக் குறைத்துக்கொள்வதற்காகச் சில சமயங்களில் அன்பும் பரிவும் மிக்க செயல்களும் இவ்வுலகில் நிகழ்கின்றன.

இரங்கத்தக்க கிரேவுக்கு, பேரிழப்புக்குப் பின் பேராறுதலா யிருந்துவந்தவை அவர் பொறுப்பில் விடப்பட்ட அக் குழந்தையின் குறும்பு விளையாட்டும் சிரிப்புமேயாகும். இந்தச் சிறு வயதில்கூட அது பேரழகு வாய்ந்து காணப்பட்டது. அமைதியா யிருந்தபோதும், மகிழ்ச்சி யில்லாதபோதும் அதன் கருங்கண்களும் எடுப்பான மூக்கும் அதன் தந்தையெனக் கருதப்படுபவரின் சாயலைப் பெற்று விளங்கின. தந்தையின் பண்புகளை நினைவு படுத்திப் பழைய எண்ணங்களை எழுப்பியது அக் குழந்தை. ஆனால் அது அடிக்கடி மகிழ்ச்சியாகவும் இன்பமாகவும் இருக்கும்போது அவ்வெண்ண மேகங்கள், அதன் குறும்பு விளையாட்டுப் பேச்சில் மாறிவிடும். உள்ளத்தில் எவ்வித எண்ணமுமின்றிச் சிரிக்கும் அக் குழந்தை மருத்துவரின் துன்பங்களையெல்லாம் மறக்கச் செய்தது. மனிதப் பண்பின் தனிச் சிறப்புக்களைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றில் ஈடுபடுதலிலும் தம் வயதிற்கும் அப்பாற்பட்ட ஆற்றல் பெற்றிருப்பதாகத் தம்மை நினைத்துக்கொண்டார். நர்ஸ் என்று சுருக்கமாக அழைக்கப்படும் செவிலி ஜமீசன் செவிலிகளின் திலகமே எனலாம். இவளே குழவி நிலையிலிருந்து அப்பையனை வளர்த்த செவிலியாவாள். அவள் தன் சொந்தக் குழந்தையையும் கணவனையும் இழந்தபிறகு தனிமைப்பட்டிருந்ததால், ஸ்காட்லாந்தில் பொதுவாய்க் காணப்படும் வழக்கம்போலவே, கிரேயின் குடும்பத்தைச் சார்ந்த ஒருத்தியாகவே மாறிவிட்டாள். கிரேயின் மனைவி இறந்தபிறகு வீட்டின் எல்லாக் காரியங்களையும் கவனிக்கும் தலைமைப் பொறுப்பைப் படிப்படியாக ஏற்றுக்கொண்டாள். நேர்மையும் திறமையும் பெற்ற மேலாள் போன்று விளங்கியதால் அவளுக்கு அக் குடும்பத்தில் தனிமதிப்பு இருந்து வந்தது.



இயல்பாய்த் துணிவுள்ளவளாயும், வன்மையான உணர்ச்சி உள்ளவளாயும் இருந்த ஜமீசன் அவள் நிலைமையில் இருப்போர்க்கு உள்ள இயல்புபோன்றே குழந்தை ரிச்சர்டிடம் பெரும்பாசம் கொண்டவளாய் இருந்தாள். தன் சொந்தக் குழந்தையைப் போலவே எண்ணி அவனை மார்பிலணைத்து வளர்த்து வந்தாள். இந்த அன்பை அக்குழந்தை தன் வயதில் எவ்வளவு அறிந்துகொள்ள முடியுமோ அவ்வளவில் உணர்ந்து மகிழ்ந்து தன் அன்பைப் பல வழிகளிலும் அவளிடம் காட்டி வந்தது.

பாதுகாப்பாளராயும் அன்புக் கண்காணிப்பாளராயும் இருந்த மருத்துவர் கிரேவிடமும் சிறுவன் டிக் பேரன்பும் பெரும்பற்றும் கொண்டிருந்தான். உரிய நேரத்திலும் இடத்திலும் மருத்துவர் அலுவல்மேல் கண்ணராயிருப்பார். ஆனால் படிக்கும்போதோ மனக் களிப்புக் கொள்ளும்போதோ குழந்தையிடம் ஆட்டுக் குட்டிபோல் குழைவுகொண்டிருப்பார். சில சமயங்களில் குழந்தைக்கு உதவிபுரியவோ, அதன் மனத்தை வேறுபக்கம் திருப்பவோ நேர்ந்தால், அப்போது சுறு

சுறுப்பாயும் தீவிர முயற்சியுடையவராயும் இருப்பார். இவ்வாறு குழந்தையை வளர்ப்பதில் தனித்திறமையுடன் விளங்கினர்.

காலம் செல்லச் செல்லச் சிறுவனின் இனிமைப் பண்பு இன்னும் சிறந்து பிறங்கிற்று. விளையாட்டு அல்லது களியாட்டத்தில் அவ்விடத்தில் இருந்த சிறுவர்களுக் கெல்லாம் பெருமை வாய்ந்த தலைவனாக இருந்தான். அவனது பலமும் செயல் திறனும் அவர்கள் எல்லார்க்கும் தலைவனாயிருக்குமாறு அவனைச் செய்தன. பள்ளியில் அவன் திறமைகள் அவ்வளவாகச் சிறக்கவில்லையேனும், பயனும் அறிவுமுள்ள ஆசிரியரின் செல்லப்பிள்ளையாகவே இருந்தான்.

“ரிச்சர்டிடம் வேகம் இல்லை; ஆனல் உறுதி உண்டு. கண்டார்க்கு இன்பமளிக்கும் இக் குழந்தையைக் கண்டு யாரும் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது” என்று மருத்துவர் கிரேவிடம் ஆசிரியர் கூறுவது வழக்கம்.

மருத்துவர்மீது சிறுவனின் நன்றிகலந்த அன்பானது அவன் அறிவு வளர வளரப் பெருகிக்கொண்டே வந்தது. மருத்துவரின் பெண்குழந்தை மெனி கிரேவை எடுத்துக் கொஞ்சி விளையாடுவதில் கவனம் செலுத்தும் இயல்பான போக்கும் அவனிடம் காணப்பட்டது. அப்பெண் குழந்தை சிறிதே குறிப்பாலுணர்த்தியதையும் தலைமேற் பணியென நினைத்துச் செய்திடுவான்; வீட்டினுள்ளேயே தங்கித் தனக்காக அட்டைவீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென மெனி விரும்பினல், அப்போது நூறுபேர் வந்து கால்பந்தாட்டத்தில் தலைமையேற்க வேண்டுமெனக் கூக்குரலிட்டு அவனைக் கூப்பிட்டாலும் அதனல் ஒன்றும் பயன் ஏற்படாது. விளையாட்டுத் தவிர மற்ற நேரங்களில் அக்குழந்தையைத் தன் கண்காணிப்பிலேயே வைத்துக்கொள்வான். வீதிகளிலே அதை எடுத்துக்கொண்டு செல்வான். பூக்களைப் பறித்துக் கொணர்ந்து புனைந்திடுவான். டிக்மிடில்மசின் அன்பு நிலையை யுணர்ந்து குழந்தையும் அவனை அன்புடன் பற்றிக்கொள்ளும். தந்தையும் இவற்றையெல்லாம் கண்டு மனக்களிப்புக் கொண்டார்.



ரிச்சர்டு அழகான குழந்தைப் பருவத்திலிருந்து சிறுவனாக வளர்ந்துவந்த காலத்திலும், சிறுவனாயிருந்து கண்ணுக்கினிய காளையாக மலர்ந்த காலத்திலும் மருத்துவர், மான்சாடாவுக்கு ஆண்டிற்கிருமுறை அவர் முற்கூறிப் போந்த முகவரிக்குக் கடிதம் எழுதி வந்தார். எந்தக் குடும்பமும் பெருமைப் படத்தக்க ரிச்சர்டை—யாவரும் விரும்பும் தோற்றமும் பண்பும் கொண்டவனை - அவன் தாத்தா பார்த்தால், நெருங்கிய இரத்தத் தொடர்பும் இனிய அழகுமுடைய அவனைத் தம்முடன் சேர்த்துக் கொள்ளாது தள்ளிவிடமாட்டார் என்றுதான் கிரே நினைத்தார். அதனல் அவன் தாத்தாவுக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டு வந்தால் படிப்படியே அவர் மனம்மாறி வருமென்றும் கருதினர். ஆனல் அக்கடிதங்கள் கிரேவைப் போன்ற நல்லுள்ளங் கொண்டோரின் பெருமைக் கேற்ப நெடிதாக அமையவில்லை. மான்சாடா எச்சரித்திருந்ததால் அக்கடிதங்கள் மிகச் சுருக்கமாகவே இருந்தன. ரிச்சர்டுக்காக ஆகும் செலவுகளின் கணக்குகளை மற்ருெரு பாதுகாப்பாளரான லாபோர்டின் பார்வைக் கையெழுத்துடன் அனுப்பினர். சிலசமயம் ரிச்சர்டின் உடல்நல நிலை, கல்வி முன்னேற்றம், அவன்றன் அறிவு, அன்பு நிலைகளைப்

பற்றிய புகழுரை இவற்றைச் சுருங்கிய சொற்களில் எழுதித் தெரியப் படுத்துவார். இக் கடிதங்களுக்குப் பதிலாக வந்த கடிதங்கள் இன்னும் சுருங்கிய அளவிலேயே இருந்தன. மான்சாடாவின் பதில்கள் "கிரே அவர்களின்....... தேதியிட்ட கடிதம் கிடைத்தது. அதனுள்ள செய்திகளை யறிந்தேன். இதுவரை கடிதத்தில் அறியப்படுத்தி வந்ததுபோல் இனியும் ரிச்சர்டைப் பாதுகாத்து வருமாறு வேண்டிக் கொள்கிறேன்'' என்று மட்டும் கூறுவனவாயிருக்கும். ரிச்சர்டுக்கு மிகுசெலவுகள் நேரிடும் என்று அறிந்த காலத்தில் அவர் உடனடியாகப் பணத்தை அனுப்பிவிடுவார்.

அன்று கிரேயின் மனைவி இறந்த பதினைந்தாம் நாள். மான்சாடா ஐம்பது பவுன்களை அனுப்பினர். அவை ரிச்சர்டைத் தக்கவாறு வருத்தங்கொள்ளச் செய்வதற்காகச் செலவிடப்படட்டும் என்ற குறிப்பையும் பொறித்தனுப்பினர். மேலும், மீதமுள்ள பணம் கிரேவுக்கே உரியவை; அவை பேரிழப்பு நேர்ந்தால் அவருக்கு ஏற்படும் செலவுகளுக்காகப் பயன்படட்டும் என்றும் சில வார்த்தைகளைச் சேர்த்து எழுதியிருந்தார். ஆனால் அவர் வாக்கியத்தைச் சரியான ஆங்கிலத்தில் எழுத மாட்டாமல் முடிக்காமல் விட்டிருந்தார். மருத்துவர் அவர் எழுதியதைப் பற்றி ஒன்றும் கருத்திற் கொள்ளாது, ரிச்சர்டின் சேமவைப்பிலேயே அப்பணத்தைச் சேர்த்துவைத்தார். ரிச்சர்டைத் தம் வீட்டில் இடங்கொடுத்து வைத்திருப்பதால் மருத்துவருக்குப் பொருட்கேடேயொழிய ஊதியம் ஏதுமின்று என்றறிந்த லாபோர்டு அதற்கெனச் சிறிது பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறியும் அதைக் கிரே செவியில்போட்டுக் கொள்ளவில்லை.



ரிச்சர்டு பதினான்காம் வயதை நெருங்கியபோது மருத்துவர் கிரே அவனது குணப்பண்பு, அறிவுநிலை, திறமை இவைபற்றிச் சிறிது விரிவாகவே எழுதியனுப்பினர். இவ்விளைஞனின் எதிர்காலக் கல்வி எப்படி அமையவேண்டும் என்பதை மான்சாடா எண்ணிப் பார்ப்பதற்காகவே அப்படி எழுதுவதாகத் தெரிவித்தார். "இதுவரை ரிச்சர்டு பெற்றுவந்த பொதுக் கல்வி இனிப் பல கிளைகளாகப் பிரிந்து செல்வதால், இனி ஒரு குறிப்பிட்ட துறையில் அவன் அனைத்தும் கற்றுப் புலமை எய்துமாறு செய்தல் இன்றியமையாததாகும். தங்களுக்கு விருப்பமான பயிற்சித்துறை எதுவெனத் தெரிவியுங்கள். ரிச்சர்டைப் பாதுகாத்து வளர்ப்பதோடு என் கடமை முடிந்துபோயினும் அவன் தன் இன்புறு நல்லியல்புகளால் அவன் தந்தையைப்போலவே நான் அன்பு காட்டும்படி செய்தான். அவன் விருப்பங்களை யெல்லாம் எவ்வகையிலாயினும் நிறைவேற்ற வேண்டுமென நான் விரும்புகிறேன்" என்று மருத்துவர் குறிப்பிட்டார்.

ஒருவாரத்தில் வந்த பதில் வழக்கத்தைக் காட்டிலும் விரிவாகவே வரையப்பட்டிருந்தது. உறவுநிலை மிகுதிப்பட்டதுபோன்றே கடிதத்தின் நடை அமைந்திருந்தது. அக்கடிதம் வருமாறு: "நண்பர் கிரே, நாமிருவரும் முதன்முதலாகச் சந்தித்தபோது ஒருவர்க்கொருவர் நன்ருகப் புரிந்துகொள்ளுமாறு சூழ்நிலைகள் அமையவில்லை. ஆனால் உங்களால் நானே நன்மையடைந்தேன். என்னைப்பற்றித் தவருன எண்ணம் கொள்ளவில்லை என்பதறிந்து உங்கள் நல்லுள்ளத்தைப் பாராட்டினேன். ஆனால் நான் அவமானமடையத்தக்கவாறு நிகழ்ச்சிகள் நடந்ததைப்பற்றி நீங்கள் அறியீர்களாதலின் நான் அப்போது அப்படி நடந்து கொண்டதன்

காரணங்களையும், என் உட்கிடக்கைகளையும் அறிந்திருக்க மாட்டீர்கள். ஒரு போக்கிரியால் என் மகளை இழந்தேன். அவளும் என் புகழைக் குலைத்துவிட்டதால் நான் அவள் குழந்தையைப் பார்க்க விருப்பங் கொள்ளவில்லை. குழந்தை குற்றமற்றதேயாயினும், அதைப் பார்க்கும்போது வெறுப்பும் வெட்கமும் நினைவுக்கு வாராமல் போகா. உங்கள் தொழில்கல்வியை அவனுக்குப் புகட்டினாலே போதும். அவன் தங்கள் தொழிலைக் காட்டிலும் உயர்ந்த நிலையை வாழ்க்கையில் அடையவேண்டும் என்று விரும்புகிறான் என்பதையும் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், உழவர், வழக்குரைஞர், மருத்துவர் போன்றவர்களின் படிப்புக்குத் திறமையும், நீண்டகாலப் பயிற்சியும் வேண்டும். கடைசியாக உங்களையும் அவனையும் எச்சரிக்க விரும்புகிறேன். நான் விரும்புமளவுக்கு மேல் அவனை என்னிடத்தில் திணிக்க முயன்றால், பிறகு எனது உதவியையும், பாதுகாப்பையும் நிறுத்திவிட நேரும். என் மனக்கருத்தைத் தெரியப்படுத்தி விட்டேன். அதன்படி நடந்து கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.''

இக்கடிதம் கிடைத்த பிறகு மருத்துவர் எத்தொழிலில் நாட்டங் கொண்டிருக்கிறாய் என்று அவ்விளைஞனையே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் எனத் தீர்மானித்தார். அதேசமயத்தில் அவனுக்குரிய சிறந்த தொழில் எதுவென்று தேர்ந்து எடுப்பது அனுபவமுள்ள தம்மாலேயே முடியும் என்றும் எண்ணினார்.

ஒருமுறை ரிச்சர்டுக்கு அவன் பிறப்பைப் பற்றிய வியப்புச் சூழ்நிலையைப்பற்றிக் கூறும் சங்கடமான நிலை மருத்துவருக்கு ஏற்பட்டது. இதுவரை அதைப்பற்றி



ஒன்றும் கூறாது இருந்ததால் அவனும் யாதுமறியாதவனாகவே இருப்பான் எனக் கருதியிருந்தார். ஆனால் தம் தூரத்து உறவினர் ஒருவரது ஆதரவற்ற குழந்தை என்று அவன் நினைத்துக்கொள்ளுமாறு நடந்து வந்தார். தாம் அவனிடம் உண்மையைக் கூறாதிருப்பினும், கேட்போருக்கு இன்பம் தோன்றப் பேசும் செவிலி ஜமீசன் அதைப்பற்றித் தாராளமாக அவனிடம் கூறியிருப்பாள் என்றும் அவர் கருதியிருக்கலாம்.

மிகச் சிறுவயது முதற்கொண்டே பழம்புனை கதைகளைத் தன் வளர்ப்பு மகனுக்குக் கூறிவந்திருக்கிறாள் ஜமீசன். அவன் உலகிற் பிறந்த பயங்கரச் சூழ்நிலையைப் பற்றியும் அவனிடம் கூற மறந்துவிடவில்லை. உலகமெல்லாம் தன் அடிக்கீழ்ப் படிந்து நிற்பதாகவே எண்ணும் அவன் தாத்தாவின் எடுப்பான தோற்றம், அன்னையின் அழகு, அவளணிந்திருந்த முகத்திரையின் கன்னங்கரிய நிறம், ஒளிவீசும் அவள் கண்கள், கைவிரல்களில் அணிந்திருந்த வைரங்கள், அவ்வைரங்களின் பெருமைச் சிறப்பு, அவளது உடலின் வனப்பழகு, அவளது பட்டு மேலாடையின் பகட்டுநிறம் இவற்றைப் பற்றி யெல்லாம் வெகுவாகப் புகழ்ந்து கூறினாள்.

பிறகு அவள் அவன் தாத்தாவின் வருகையைப் பற்றி நெடுநேரங் கூறினாள். அம் முரட்டு மனிதர் கைத்துப்பாக்கி, வாள் முதலிய ஆயுதங்களை ஏந்தி வந்ததைப் பற்றியும் பிறகு அவர் எப்படி ரிச்சர்டின் அன்னையைத் தூக்கிச் சென்றார் என்பதைப் பற்றியும் விரிவாகக் கூறினாள். எழுது தாள்களைப் போல வங்கி நோட்டுக்கள் வீடெல்லாம் பறந்து கொண்

டிருந்தன; சக்கிக் கற்களைப்போலத் தங்கக் காசுகள் உருண்டோடின என்றும் கூறினாள். இவற்றையெல்லாம் ரிச்சர்டுக்கு விருப்ப மகிழ்ச்சி உண்டாக வேண்டுமென்பதற்காகவும், அவ்வாறு கூறுவதில் ஒரு தனி மகிழ்ச்சி அவளுக்கே உண்டானதாலும் பல புதிய நிகழ்ச்சிகளையும் சேர்த்துப் பெரிதுபடுத்திக் கூறினாள். எனினும் கற்பனை வளமிக்க கவிதையின் முன்பு எளிய உரைநடை சுவையின்றி இருப்பதுபோலப், புதுமையான மறையும், வியப்பும் கலந்த அந்நிகழ்ச்சிகள் சொல்லாண்மையில்லாத அவள் வாயிலிருந்து வெளிப்பட்டுச் சுவைகுன்றி நின்றன.

இவற்றையெல்லாம் ரிச்சர்டு விருப்புடன் கூர்ந்து கேட்டான். மேலும் கற்பனையாகத் தானும் சிலவற்றை நினைத்துப் பார்ப்பதில் இன்பங் கண்டான். வீரமிக்க தன் தந்தை தனக்காகத் திடீரென்று ஒரு படையுடன் தலைமை ஏற்று வந்து, இன்னிசை முழங்க, வண்ணக் கொடிகள் பறக்கப், பார்ப்பதற்குக் கண்கொள்ளா அழகுடைய குதிரையின்மேல் வந்து தன்னை ஏற்றிக் கொண்டு செல்வார் என்று தன் கற்பனையில் நினைந்து பார்த்தான். அல்லது, முழுத்திங்களைப் போன்று அழகு மிளிரும் தன் அன்னையாவது நாலுகுதிரை வண்டியில் திடீரென வந்து தோன்றித் தன் அன்புக் குழந்தையை மீட்டுச் செல்வாள் என்று மனத்தில் நினைத்துப் பார்த்தான். அல்லது பழைய செயலுக்காகக் கழிவிரக்கங் கொண்டு தன்தாத்தா பை நிறைய வங்கி நோட்டுக்களைக் கொணர்ந்து, தம் பழைய கொடுமைக்கெல்லாம் கழுவாயாக இதுவரை கவனியாது விடப்பட்ட பேரனுக்குச் செல்வங்களைக் குவித்துக் கொடுத்துக் கூட்டிச் செல்வார் என்று எண்ணினான். ஆனால் ஜமீசன்



மட்டும் என்றைக்காவது ஒருநாள் அவர்கள் வருவார்கள் என்று உறுதியாக இருந்தாள். "ரிச்சர்டின் முகத்தை ஒருமுறை கண்டால்கூட அவர்கள் மனம் மாறிவிடும்; எல்லாரும் ஒன்றாக இவ்வூருக்குச் சேர்ந்து வருவார்கள்; அந்நாளை மிடில்மசு இதுவரை காணாத ஒரு திருவிழா நாளாகச் செய்வார்கள்; ரிச்சர்டின் தந்தை இனி மிடில்மசு என்ற பெயரால் அழைக்கப்படமாட்டார். ஆனால் பெருவீரர்களான காலாஷியன், சர் வில்லியம் வால்லசு, அல்லது ராபின்குட், அல்லது கதைகளில் வரும் வேறு பெரிய அரசர்களின் பெயரொன்றால் அழைக்கப்படுவார்'' என்று எண்ணினாள்.

ஜமீசன் கூறிய கடந்தகால வரலாறும், எதிர்காலத்தில் பெறப்போகும் இன்பநிலையும் ரிச்சர்டின் மனத்தில் மிக்க பேராவலைத் தரும் கற்பனைகளை எழுப்பிவிட்டன. இயல்பாகவே உலகத்தில் மேனோக்கி உயர வேண்டுமென்ற உறுதியான ஆசை கொண்டிருந்தான். முன்னேற்றத்திற்கு வேண்டிய சக்திகள் தன்னிடம் உள்ளன என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். தான் படித்த அல்லது கேட்ட கதைகளில் சிறப்புறக் கூறப்படும் நிகழ்ச்சிகளைப் போலவே ஏன் தன்னுடைய வீரச் செயல்களும் நற்புகழ் பெறக் கூடாது என்று எண்ணினான். சுருக்கமாகக் கூறின், மருத்துவர் கிரே தம் மாணவன் அவன் பிறப்புப் பற்றி ஒன்றுமறியாதவனாய் இருப்பான் என்று கருதிக் கொண்டிருக்கையில் ரிச்சர்டோ இப்போதைய இருள்நிலையைக் கடந்து உயர்நிலை பெறுதற்குரிய வழியும், காலமும் எப்போது வாய்க்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். உயர்குலப் பிறப்பினன் என்று தன்னைக் கருதிய அவன் உயர்வு மனப்பான்மையையே கொண்டிருந்தான்.

இளைஞனின் உணர்ச்சிகள் இவ்வாறு இருக்கையில் ஒருநாள் கிரே இரவுணவிற்குப் பிறகு மெழுகு விளக்கைத் தீண்டிவிட்டுத் தன் உடைப்பையினின்று ஒரு பெரிய தோலுறை பெற்ற குறிப்பேட்டை 'எடுத்தார். மிகவும் இன்றியமையாத சிறந்த மருந்துகளுடன், சில முக்கியமான தாள்களையும் அதில் வைத்திருந்தார். அதிலிருந்து மான்சாடாவின் கடிதத்தை எடுத்துக் கொடுத்து ரிச்சர்டு அப்போது இருக்கும் நிலையையும் எடுத்துக்கூறிக் கடிதத்தை மிக்க கவனத்துடன் படிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கடிதத்தைப் படித்ததும் ரிச்சர்டின் கரிய கண்களில் தீப்பொறி பறந்தது; அகன்ற, நன்கமைந்த அவன் நெற்றியில் குருதியெல்லாம் வந்து சேர்ந்து முகத்தைச் செந்நிறமாக்கிற்று. பிறகு கிரே ரிச்சர்டுக்குக் கடிதத்தின் விளக்கம் கூறினார். அவர் கட்டுரைத்தலைக் கவனமாய்க் கேட்டான் ரிச்சர்டு. அவ்வுரை, வாணிகத்தில் பயில்வார் இன்றியமையாதன என்பவற்றை மட்டும் குறிப்பிடுவதைப் போல, ஜமீசனின் மெருகு சேர்ந்த கற்பனை கலவாது பச்சையான உண்மையைக் கூறுவதாயிருந்தது. பெற்ற அன்னையாலும் தந்தையாலும் கைவிடப்பட்டுப் பிறர் இகழத்தக்க குழந்தையின் கதையாகவே இருந்தது. தூரத்து உறவினர் ஒருவரால் முழுமனமின்றி வளர்க்கப்படும் நிலைமையை விளக்கினார் கிரே. அவரும் விருப்பம் சிறிது மில்லாமல், ரிச்சர்டின் உணவுக்காகப் பணம் செலவுசெய்து கொண்டிருப்பதைக் காட்டிலும் அவன் இழவுக்காகச் செலவு செய்தல் நலம் என்று கூறுவதாகத் தெரிவித்தார் கிரே.

ரிச்சர்டின் குழந்தையுள்ளத்துக் கற்பனையில் கட்டப்பட்ட வானளாவிய கோபுரங்களும் கோயில்களும் திடீ



ரெனச் சரிந்து வீழ்ந்து தரைமட்டம் ஆயின. உண்மை நிலை அறியாமல் அத்தகைய மனக்கோட்டைகளைக் கட்டி வளர்த்துவிட்டு இப்போது அவை அழிந்துபடுவதால் ஏற்பட்ட அவமானம், துயரம் இவை அவனுள்ளத்தை அரித்துத்தின்றன. கிரே தொடர்ந்து பேசும் போது மனம் மாழ்கிச் சோர்ந்த நிலையில் ரிச்சர்டு அசைவற்று நின்றான். அவன் கண்கள் நிலத்திலேயே பதிந்தன; தலைநரம்புகள் விண்ணென்று தெறித்துக் கொண்டு உணர்ச்சியலையால் உந்தப்பட்டுப் புடைத்து நின்றன.

அந்த நல்ல மருத்துவர், "என் அன்பு ரிச்சர்டு, இப்போது உனக்காக நீ என்ன செய்யவேண்டுமென்பதை நீயே சிந்தித்துப் பார்க்க வேண்டும். உன் தாயின் தந்தை குறிப்பிட்டிருக்கும் மூன்று நேர்மையான தொழில்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள். செல்வம் மிக்கவனாக ஆகமுடியாது போயினும் தனி உரிமையாய் இருக்கலாம்; பெருமை பெற முடியாது போயினும் மதிப்புப் பெற்று வாழலாம். ஆராய்ந்து சொல்ல உனக்குச்சிறிது காலம் கொடுக்கிறேன்" என்று கூறினார்.

"வேண்டியதில்லை" என்று தலையை நிமிர்த்தி மருத்துவரைத் துணிவுடன் பார்த்துக் கூறினான் ரிச்சர்டு. "நான் உரிமையுடன் பிறந்த ஆங்கிலேயன். நான் விரும்பினால் இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்வேன்" என்று அஞ்சாதுரைத்தான்.

"உரிமையுடன் பிறந்த முட்டாள் நீ" என்றார் கிரே. "நீ பிறந்ததைப்பற்றி என்னைவிட வேறு யாருக்கும் அவ்வளவு நன்றாகத் தெரியாது. நீ பிறந்தது மிடில்

மசு ஊரில் ஸ்டீவன்லா மனையில் ஒரு நீல அறையில் தான். அப்படியிருக்க நீ உரிமையுடன் பிறந்த ஆங்கிலேயன் என்று கூறிக்கொள்வதா யிருந்தால் கூறிக்கொள்'' என்றார்.

ரிச்சர்டுக்கு நண்பனும், அறிவுரையாளனும், லாபோர்டிடம் தொழில்கற்றுக் கொள்பவனும் இருந்த டாம் கிலாரி என்பவரைக் குறிப்பிட்டு, "டாம் கிலாரி தான் என்னை உரிமையுடன் பிறந்த ஆங்கிலேயன் என்று கூறினார்'' என்றான் ரிச்சர்டு.

"பூ! உன் பெற்றோர்களைப்பற்றி எங்களுக்கு என்ன தெரியும்? ஆனால் இப்போதைய கேள்விக்கும் நீ ஆங்கிலேயனாயிருப்பதற்கும் என்ன தொடர்பு?'' என்றார் மருத்துவர்.

ரிச்சர்டு சிறிது காரமாக, "ஓ டாக்டர்! டுவீட் நகரத்தின் தென்பக்கத்திலிருந்து வரும் நாங்கள் உங்களைப் போல் துன்புறமாட்டோம். ஸ்காட் மக்கள் அளவுக்கு மீறிய ஒழுக்கமும், அறிவும், கொழுமையும் பெற்றிருப்பதால் எளிய கூழ்குடிப்போராகிய ஊர்மதகுருவாகவோ, வழக்குரைஞராகவோ, மருத்துவராகவோ வாழ முடியாது. என்னை மன்னிக்கவேண்டும்'' என்றான்.

"என்மேல் ஆணையாகக் கூறுகிறேன், டிக். உன் மூளையை இந்த டாம் கிலாரி கெடுத்து விடுவான். இந்தக் குப்பைப் பேச்சுக்கெல்லாம் என்ன பொருள்?'' என்று உரத்துக் கேட்டார் கிரே.

ரிச்சர்டு குரலைத் தாழ்த்திக்கொண்டு, ''டாம் கிலாரிதான், மதகுரு மக்களின் பாவங்களினாலும், வழக்குரைஞர் மக்களின் துன்ப நிலைகளாலும், மருத்துவர் அவர்களின் நோய்களினாலும் பிழைக்கின்றனர் என்றார். உங்கள் மன்னிப்பை வேண்டிக்கொள்கிறேன்'' என்றான்.



"டாம் கிலாரியை ஊரைவிட்டே அடித்துத் துரத்தவேண்டும். ஒரு சாதாரண வக்கீலின் அடியாளாயிருப்பவன், நியூகாசிலிருந்து பிழைப்பதற்காக ஓடி வந்தவன்! இப்படி அவன் பேசுவதைக் கண்டிருந்தால், அறிவு நிறைந்த தொழில்களைப்பற்றி அடக்க மரியாதையுடன் பேசுவதற்குக் கற்றுக் கொடுத்திருப்பேனே! சீ! அந்த ஒன்றுமில்லாப் பயலைப்பற்றி இனிப் பேசக்கூடாது. அறிவுள்ள இளைஞன்போலக் கொஞ்சம் சிந்தித்துப் பார். பிறகு மான்சாடாவுக்கு நான் என்ன பதில் கொடுக்கவேண்டும் என்பதைக் கூறு'' என்று கேட்டார் கிரே.

கிண்டல் குறிப்புள்ள வார்த்தைகளைப் பேசுவதை விட்டுவிட்டு அதற்குப் பதிலாகச் செருக்கு அடங்கிய குரலில், ''எனக்காக அவர் பரிந்துரை செய்யும் உதவா வேலை எதையும் ஏற்றுக்கொள்வதை என் மனம் விரும்பவில்லை என்று சொல்லிவிடுங்கள். என் தாத்தா அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்று தம் தொழில் நிலையில் என்னை வைக்காதுவிட்டால் நான் என் தந்தையின் தொழிலாகிய போர்ப் படையில் சேர முயல்வேன் என்று அவருக்கு எழுதிவிடுங்கள்'' என்றான்.

''ஆமாம், உன் தாத்தா அவர் தொழிலில் உன்னைக் கூட்டாகவே சேர்த்துக்கொள்வார்! ஏன் அவரது வாரிசாகவே கருதி ஏற்றுக்கொள்வார் என நினைக்கிறேன்! இவ்வளவு காலமாக அவர் உன்னைப் பாடுபட்டு வளர்த்துவந்த முறையையும், இப்போது

உன்னைப்பற்றி எழுதும் முறையையும் பார்த்தால், கட்டாயம் உன்னை வாரிசாகவே ஏற்றுக்கொள்வார்!" என்றார் மருத்துவர் கிண்டலாக.

அதற்குப் பதிலாக ரிச்சர்டு, "அப்படியானால் தங்களிடம் ஒன்றை மட்டும் வேண்டிக்கொள்கிறேன். தங்கள் கையில் எனக்குரிய பணம் மிகுதியாய் உள்ளது. என் செலவுக்காக அப்பணம் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டதால் அதில் சிறிது பணம் எடுத்து என்னைப் படையில் சேர்த்துவிடும் முயற்சியில் ஈடுபடுங்கள். மீதிப் பணத்தைக் கணக்குக்கட்டித் தீர்த்து என் கையிலேயே கொடுத்துவிடுங்கள். கடந்தகால அன்பிற்காக நன்றி கூறிவிட்டு இனிமேல் உங்களுக்கு எவ்விதத் தொல்லையும் தரமாட்டேன்" என்றான்.

இதைக் கேட்ட மருத்துவர் மனஞ் சுருங்கி, "இளைஞனே! உள்ள நிலைமையைச் சிறிதும் ஆராயாது உன் மனம்போன போக்கில் மனக்கோட்டை கட்டிக்கொண்டு ஏமாற்றமடைவதற்காகவும், உன் பழைய அறிவு நிலையும், நல்மனமும் முற்றிலும் மாறியதற்காகவும் மிகவும் வருந்துகிறேன். பணம் இருக்கிறது என்பது மிகவும் உண்மைதான். செலவுகள் எல்லாம் போக மீதி எப்படியும் ஆயிரம் பவுன் உன் பணம் என் கையில் இருக்கும். ஆனால் அப்பணத்தைக் கொடுத்தவரின் கருத்துப்படியே அதைச் செலவிடக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னவாயினும், அறிவுத் தெளிவு நிலையை நீ அடையும்வரை பணத்தைக் கேட்காதே. சட்டப்படி நீ அந்த வயதை அடைவதற்கு இன்னும் ஆறு ஆண்டுகள் இருக்கின்றன. உன்னுடைய இந்தப் போக்குகளை மாற்றிக்கொண்



டால் ஒழிய அந்த நிலையை நீ எப்போதும் அடையமாட்டாய். ஆனால் டிக்! இப்படி வா. இப்போதுதான் முதல் தடவையாக உன்னை இந்தத் தலைகீழான மனநிலையில் காண்கிறேன். நீ இப்போது இருக்கும் நிலையைக் காட்டிலும் பொறுமையிழந்து காணப்படுவதற்கான காரணங்கள் இருக்கலாம். ஆனால் உன் காழ்ப்பை என்மேல் காட்டக்கூடாது. என்மேல் தவறு ஏதுமில்லை. பிறரெல்லாம் உன்னைக் கைவிட்டுப் போனாலும், பிறந்ததிலிருந்து உன்னை வளர்த்துவரும் உன் ஒரே நண்பன் நான்தான் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதே" என்றார்.

உணர்ச்சி கையிகந்து மேலிட்டோங்கும் நிலையை அடைந்த ரிச்சர்டு "அதற்காக நான் நன்றி ஒன்றும் தெரிவிக்கப் போவதில்லை. நீங்கள் உண்மையில் விரும்பியிருந்தால் எனக்கு இன்னும் பெரிய நன்மையைச் செய்திருப்பீர்கள்" என்றான்.

"நன்றியில்லாத பையனே, இன்னும் எப்படி உனக்கு அதிக நன்மை செய்யவேண்டும்?" என்று முரட்டியல்பு வாய்ந்த தோற்றத்தையடைந்து கேட்டார் கிரே.

"அவர்கள் வண்டி ஓட்டிச் செல்லும்போது சக்கரங்களுக்கிடையே என்னைத் தூக்கி எறிந்திருக்கலாம். என் உணர்ச்சிகளை மிதித்து நசுக்குவதுபோல, அவர்கள் பெற்ற இந்த உடலை அவர்களே மிதித்துக் கொன்றிருக்கலாம்" என்றான் ரிச்சர்டு.

இவ்வாறு கூறிக்கொண்டே அறையைவிட்டு வெளியேறித் தடாலெனக் கதவைச் சாத்திக்கொண்டான். திடீரெனப் பொங்கிய அவனது சினத்தின்

தன்மையையும், மன வேறுபாட்டினையும் கண்டு வாயடைத்து நின்றார் மருத்துவர்.

"என்ன பேய் வந்து இவனைப் பிடித்துக் கொண்டதோ? சரி. அந்த டாம் கிலாரி இவன் மண்டைக்குள் போட்டுவைத்த கோளாறுகளால் உணர்ச்சி மிக்கு ஏமாற்ற முற்றிருக்கிறான். இந்த நிலைக்கு அனுடைன் மருந்துதான் ஏற்றது. அதைத் தான் கொடுக்கவேண்டும்" என்று தீர்மானித்தார்.

இவ்வாறு மருத்துவர் நல்லதொரு தீர்மானத்திற்கு வந்துற்றபோது இளம் மிடில்மசு ஜமீசனின் அறைக்கு ஓடிச் சென்றான். எப்போதும் ரிச்சர்டின் வருகையைக் கண்டு விடுமுறை நாளின் மகிழ்ச்சியை அடையும் எளிய மெனிக் குழந்தை அப்போது அங்கே புதிய ஒரு பொம்மையை வைத்துக் கொண்டிருந்தது. அதை அவன் பார்த்துப் பாராட்டவேண்டுமென்று முன்னால் வைக்க விரைந்தது.

பொதுவாக மெனியின் விளையாட்டுக்களில் ரிச்சர்டைப்போல வேறு யாருக்கும் அவ்வளவு மகிழ்ச்சி இராது. ஆனால் இந்தச் சமயத்தில் ரிச்சர்டு பழைய ரிச்சர்டாக இல்லை. அக்கறையில்லாமல் அந்த அழகுப் பொம்மையை முரட்டுத்தனமாகத் தட்டி எறிந்தான். அப்பொம்மை மெனியின் மென்கையிலிருந்து சிதறியோடி ஆட்டுக்கல்லின்மேல் விழ அதன் மெழுகு முகம் சிதைந்து போயிற்று. தவறு செய்தது தன் செல்வக் குழந்தையேயாயினும், அம்முரட்டுச் செயல் செவிலி ஜமீசனுக்குச் சினத்தை எழுப்பி வைதுரை கூறும்படி செய்தது.

"ரிச்சர்டா? — நீயா? — ரிச்சர்டைப் போலவா நடந்துகொள்கிறாய்?—இப்படியா மெனியை அழச் செய்வது? மெனி! அழாதே அம்மா, அந்தப் பொம்மைக் குழந்தையின் முகத்தைச் சரி பண்ணித் தருகிறேன். அழாதே" என்று தேற்றினாள்.



மெனி அழுவது பொம்மைக்காக அன்று. அன்பு கொண்ட ரிச்சர்டின் கடுமைச் செயலுக்காகவே அழுதாள். கன்னங்களின் வழியே மெதுவாகக் கண்ணீர் வார்ந்துக, அவள் பயமும், துயரமும், வியப்பும் கலந்த முகத்துடன் டிக்மிடில்மசைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். மெனி உரத்து அழவில்லை. எனினும் ரிச்சர்டின் மேலேயே கண்ணை உறுத்துவைத்துக் கொண்டு இமையாமல் இருந்தாள். கண்கள் சிவந்து வீங்கிக் காணப்பட்டன. உடனே ஜமீசன் தன் செல்லமான வளர்ப்புக் குழந்தையின் பால் கவனத்தைத் திருப்பி, தன்னைப்போன்ற செவிலியர் வழக்கம்போல நோயாளிகளிடம் வினாக்களை எழுப்பிக் கேட்டறிதலைப்போல, ரிச்சர்டின் கடுங் கோபத்துக்குக் காரணமான துன்பநிலையைக் கண்டறிய விரும்பினாள். "என் கண்மணிக்கு என்ன நேர்ந்தது? என் கண்மணியை அழச் செய்தது யார்?" என்றிவ் வாறான அன்புக் கேள்விகளை எழுப்பினாள்.

கண்மணி ரிச்சர்டிடமிருந்து கடைசியில் இந்தப் பதில்தான் வந்தது. "நான் உன் கண்மணி அல்ல— நான், யாருடைய கண்மணியுமல்ல. யாருடைய மகனுமல்ல. நான் என் குடும்பத்திலிருந்து வெளியேற்றப் பட்டவன்; எனக்கு யாரும் உறவினரில்லை. டாக்டர் கிரேவே அப்படி என்னிடம் சொல்லியிருக்கிறார்......"

"என் கண்மணியையா கண்டவருக்குப் பிறந்ததாக அவர் கூறினார்? கண்ணே, அது உண்மையன்று.

டாக்டரின் கண்ணிற்குப் பட்டதைக் காட்டிலும் உன் அப்பா சிறந்த மனிதர் ; அழகான நல்ல பெருமகன். அழகான கண்களும், நடையும் உடையவர்'' என்று ஆறுதல் கூறினாள் ஜமீசன்.

ஜமீசன் ஆணழகலீடுபட்டுப் பாராட்டும் வல்லமையுடையளாதலின் ரிச்சர்டின் தந்தையின் அழகைப்பற்றி இன்னும் நன்ருக விரித்துரைக்க விரும்பியிருப்பாள். ஆனால் அவளது கடைசிப் புன்முறுவலில் வெறுப்பே கொண்டான் அவள் கண்மணி ரிச்சர்டு. அவன் தன் பேச்சைக் குறைத்துக்கொண்டு, தனக்காகத் தாத்தா சரியாக எவ்வளவு பணம் டாக்டரிடம் கொடுத்து விட்டுச் சென்றுள்ளார் என்பதைச் சொல்ல முடியுமா? என்று கேட்டான்.

''எனக்குத் தெரியாது. பணம் வாங்கினதை நான் பார்க்கவில்லை. ஆனல் நூறு பவுனுக்கும் குறையாது. அதன் இருமடங்காயிருப்பினும் இருக்கும்'' என்ருள். உண்மையில் அவளுக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனல் டாக்டர் கிரே மீதிப்பணத்தில் ஒரு காசுகூடத் தமக்காக வைத்துக் கொள்ளாமல் திருப்பித் தந்துவிடுவார் என்று உறுதியாய் நம்பினாள். ஏனெனில் அவர் நேர்மை தவருதவர் என்பது எல்லாருக்கும் நன்கு தெரியும். ரிச்சர்டு இதைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் நகர எழுத்தரிடமிருந்து தெரிந்து கொள்ளலாம் என்று ஜமீசன் அவனிடம் கூறினாள்.

வேறொன்றும் பேசாமல் ரிச்சர்டு அவ்வறையை விட்டு அகன்ருன். நேரே எழுத்தரைப் பார்ப்பதற்காகச் சென்ருன். ஊரிலுள்ள மற்ற பெரிய மனிதர்களைப் போலவே அவரும் தம்மை எல்லாரும் விரும்புமாறு நடந்துகொண்டிருந்தார். அவரிடம் தனக்குகந்த தொழிலைத் தேர்ந்தெடுப்பது எப்படி என்பது பற்றி முதலில் உரையாடலைத் தொடங்கினான். பிறகு தான் பிறந்த வியப்புச் சூழ்நிலை பற்றியும் அவரிடம் பேசித் தனக்காகக் கொடுக்கப்பட்ட பணத் தொகையைப் பற்றிய பேச்சுக்குப் படிப்படியாக அவரை இழுத்துச் சென்ருன். ஏற்கெனவே தான் கேள்விப்பட்டது போன்றே மருத்துவரிடம் நிறையப் பணத்தொகை இருப்பது உண்மை என்பதை அவர் மூலம் கேட்டறிந்தான். அடுத்துத் தான் படையில் சேர்ந்து கொள்ளப் போவதாக அவரிடம் கூறினான். ஆனல், தக்க வயது வரும்வரை எந்தப் பணமும் தன் கைக்குக் கிடைக்காது என்று மருத்துவர் கிரே சொல்லியதை இரண்டாம் முறையாக உறுதிப்படுத்திக் கொண்டான். மேலும் இரு பாதுகாப்பாளர்களின் தனித் தனி ஒப்புதலின்றிப் பணம் பெற முடியாது என்பதையும் அறிந்து கொண்டான். அதனல் எழுத்தரிடம் விடைபெறும் போது அவர் அவன் மிகவும் எச்சரிக்கையுடன் தம்மிடம் உரையாடிய பான்மையினையும் வாழ்க்கையின் நெருக்கடியான இந்தக் கட்டத்தில் சரியான அறிவுரையாளரைத் தேர்ந்தெடுத்த அறிவுடைமையையும் எண்ணி மகிழ்ந்தார். சட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பினால் தாமே அவனுக்குத் தொழில் கற்பிக்கத் தயார் என்றும், அவனுக்காக இப்போதிருக்கும் டாம் கிலாரியை ஒதுக்கிவிடவும் தயார் என்றும் அவர் கூறினார். டாம் கிலாரி எப்போதும் தன் ஆங்கிலப் பழக்கவழக்கங்களைப் பற்றியே பெருமை பேசிக் கொண்டிருப்பவன் என்றும் கூறினார்.

மிடில்மசு அவருடைய அன்பிற்காக நன்றி செலுத்தினான். சட்டத்தையே தன் தொழிலாகக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கும்பொழுது அவருடைய அன்புச் செயலைத் தவறாது ஏற்றுக்கொள்வதாகக் கூறினான். டாம் கிலாரியின் தலைவரிடமிருந்து பிறகு டாம் கிலாரியிடமே சென்றான். அப்போது கிலாரியும் அலுவலகத்திலே இருந்தான். அவனுக்கு வயது இருபது இருக்கும். குள்ளமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தான். தலையைக் கச்சிதமாகச் சீவி வைத்துக் கொள்வதில் திறமை பெற்றவன். பூவேலைப்பாடமைந்த மேலங்கியையும், அழகுத் தொப்பியும் அணிந்து விளங்கினான். டாம் கிலாரி முதலில் நியூகாசிலில் ஒரு வக்கீலிடம் தொழில் கற்றுவந்தான். ஆனால் ஏதோ சில காரணங்களுக்காக ஸ்காட்லாந்தில் வாழ விரும்பினான். ஊர்ப்பதிவேடுகளை அழகாகவும் சரியாகவும் படியெடுக்கும் சிறப்பினைக் கேள்வியுற்று மிடில்மசுஊரின் எழுத்தரிடம் வந்தடைந்தான். ரிச்சர்டின் பிறப்பின் தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கேள்விப்பட்டதனாலோ, மிக்க பணத்திற்குரியவனாயிருக்கிறான் என்று அறிந்துகொண்டதாலோ வயதிற் பெரியவனான கிலாரி ரிச்சர்டைத் தன் கூட்டுறவில் சேர்த்துக்கொண்டான். மேலும் ரிச்சர்டே பிற்காலத்தில் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய சட்டத்தைப்பற்றிய பல செய்திகளைக் கூறி அவனது இளமனத்தின் அறிவை வளமாக்கினான். இருவரும் அடிக்கடி சீட்டாடுதலும், சூதாடுதலும் உண்டு. ஆனால் ரிச்சர்டே தனக்குச் சட்டம் சொல்லிக் கொடுக்கும் கிலாரியிடம் தோற்றுப் பணத்தைப் பலமுறை அவனுக்குக் கொடுக்க நேரிடும். இவனினும் மூத்த அறிவுடையோர் பலர் இருந்தும்,



அவரைத் துணைக்கொள்ளாமல் கிலாரியையே தனக்குச் சிறந்த அறிவுரையாளன் எனக்கொண்டு அவன் உரைகளைப் பெரிதும் மதித்துநடப்பான். இரவில் நெடுநேரம்வரை கிலாரியுடன் நீண்டதூரம் உலாவிவிட்டுப் பல நாட்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்று வருத்தத்துடன் உணவு உண்ணாமலும் படுத்துக்கொள்வான்.

மறுநாள் காலையில் எழுந்தான் ரிச்சர்டு. வழக்கம்போல இரவில் எடுத்துக்கொண்ட ஓய்வு அவன் உணர்ச்சிகளின் வேகத்தைத் தணித்துத் தெள்ளிய அறிவு நிலையை அளித்தது. முதன் முதலாகக் குழந்தை மெனிக்கு வேண்டியதெல்லாம் வாங்கிக்கொடுத்தான். குழந்தையும் அவன் கொடுத்த புதுப்பொம்மையை முந்தியநாள் செய்த வெறுப்புச் செயலுக்கு ஈடாகக் கொடுப்பதாக நினைத்து வாங்கிக்கொண்டது. கள்ளமில்லாத பளிங்கு மனத்தைப் பெற்ற மெனி தன்னிடம் அன்பாகப் பழகிவிட்ட ரிச்சர்டு ஒருநாள் அன்பில்லாது நடந்து கொண்டாலும் பொறுக்கமுடியாத துன்பத்தைப் பெற்றுவிடும். ஆனால் அவன் சிறிது ஆறுதல் சொன்னாலும், பழையவற்றை மறந்து மீண்டும் அன்புநம்பிக்கை கொண்டுவிடும்.

மெனியின் தந்தையும் இரக்கமில்லாதவராய் நடந்துகொள்ளவில்லை. கடந்தநாள் மாலையில் ரிச்சர்டு நன்றியறிவின்றி நடந்துகொண்ட முறையினால் மறுமுறை அவனைச் சந்திக்கும்போது அவர் முகத்தைக் கடுப்பாய் வைத்துக்கொள்வதில் தவறில்லை என்று எண்ணினார். ஆனால் விரைவில் ரிச்சர்டு அவர் சினத்தையெல்லாம் மாற்றிவிட்டான். தன் பெற்றோரின் பெருமையையும் சிறப்பையும் பற்றி அளவுக்கு

ரீதி மிருதியாக எண்ணி அவர்களைப்போல ஒருநாள் ஆகிவிடலாம் என்று நினைத்துக்கொண்டு தான் உயர்வாக நடந்துகொண்டதற்காக உண்மையில் மிகவும் மனத்துயரம் அடைவதாக வாய்விட்டுக்கூறி மன்னிப்புக் கேட்டான். தன் தாத்தாவின் கடிதம் அவனுடைய வாழ்க்கைக்குக் கேடு சூழ்வதாய், வாழ்க்கை நலத்தினைப் போக்குவதாய் அமைந்து தனக்குப் பேரிடியாகப் பட்டது எனக் கூறினான். பெருத்த ஏமாற்றத்தால் மனம் நொந்து தன்னை மகனாகக் கருதி அன்புடன் வளர்க்கும் ஒருவரிடம் அவ்விதம் தவறாகப் பேசும்படி நேர்ந்துவிட்டதே என்று மிகவும் மனம் உளைந்தான். இனி அவருடைய முடிவிற்கே தன் ஒவ்வொரு செயலையும் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டதாக உரைத்தான். இவ்வாறு மனமாரத் தவற்றினைப் பணிவுடன் ஒப்புக்கொண்டதால் மன மகிழ்ந்த கிரே அவன்மேல் கொண்ட சினத்தை அக்கணமே மறந்தார். மீண்டும் அவன் தொழிலைப் பற்றிச் செய்துகொண்ட முடிவு என்ன என்பதைப்பற்றி ஆவலுடன் வினவினார். இன்னும் முடிவுசெய்யாவிடில் சிந்திப்பதற்குப் போதிய காலம் கொடுப்பதாகக் கூறினார்.

ஆனால் ரிச்சர்டு முன்புபோலவே இதைப்பற்றிய தன் கருத்தை உடனே தெளிவாகத் தெரிவித்தான். நல்ல முடிவை எடுத்துக்கொள்வதற்காக எழுத்தருடன் கலந்து பேசியதாகக் கூறியபோது மருத்துவர் 'நல்லது' எனக்கூறி மகிழ்ந்தார். "லாபோர்டு மிகவும் இனிமையாகப் பேசினார். தம்முடைய தொழிலை வேண்டுமானாலும் கற்றுக் கொடுப்பதாகக் கூறினார். ஆனால் அவரிடம் சட்டம் கற்பதை என் தந்தையும்,



வளர்ப்பவரும் அனுமதித்தாலும், வளர்த்துப் பாராட்டிய டாக்டருக்கு அவர் தொழிலில் உதவியாயிருக்க வேண்டும் என்ற எண்ணம் பழுதுபட்டுப் போய்விடும். அப்படிப்பட்ட கல்வியும் தொழிலறிவும் பெற்றுப்பின் என் சொந்தக் காரியத்தில் ஈடுபடத் தொடங்க விரும்புவேன். மற்றொரு எழுத்தராக இவ்வூரில் புகழுடன் விளங்கும் பெருமையை அடையமுடியாது என நினைக்கிறேன்" என்றான் ரிச்சர்டு.

மருத்துவரிடமே மருத்துவக் கல்வியைக் கற்று அக்குடும்பத்திலேயே ஒருவனாக இருக்குமாறு மாற்றவியலாத முடிவினைச் செய்துவிட்டதாக ரிச்சர்டு கூறியதால், அம் முடிவைக் கிரே அவன் பாட்டனாருக்குத் தெரியப்படுத்தினார். தம்முடைய ஒப்புதலைத் தெரிவிக்கு முகத்தான் மான்சாடா மருத்துவர் குறிப்பிட்ட தொகையைப் போல் மும்மடங்கான நூறு பவுனைத் தொழில் கற்பதற்குரிய தொகையாக அனுப்பினார்.

இதற்குப் பிறகு ஒருநாள் மருத்துவரும் நகர எழுத்தரும் ஊர்ச்சிறு கழகத்தில் சந்திக்கும்போது இருவரும் ரிச்சர்டின் அறிவையும், உள்ளத் துணிவையும் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர்.

நகர எழுத்தர், "ரிச்சர்டு நல்லவன். பிறர்க்கு இடையூறு எதுவும் தராத பையன். டாம் கிலாரியைத் தள்ளிவிட்டு அவனுடைய இடத்திற்குப் போய்விட்டான் என்று பிறர் நினைக்கக் கூடாதெனக் கருதியே அவன் என் அலுவலகத்தில் சேர்ந்துகொள்ள முன்வரவில்லை" என்றார்.

கிரே, "கிளார்க், உண்மையில் அவன் டாம் கிலாரியுடன் நெருங்கிப் பழகிக் கொண்டிருப்பதைக்

கண்டு சில சமயம் அச்சப்பட்டேன். ஆனால் இப்போது இருபது கிலாரிகள் சேர்ந்தாலும் இவனறிவைக் கெடுக்க முடியாது என்பதறிந்தேன்' என்று மொழிந்தார்.

---

## 3. ஒன்றாய்ப் பயின்ற ஒன்று இளைஞர்கள்

ரிச்சர்டைத் தொழில் பயிற்றுதற்காகத் தம்பொறுப்பில் ஏற்றுக்கொண்டபோது கிரேவுக்கு ஆடம் ஹார்ட்லி என்பவனின் நண்பர்களிடமிருந்து, ஆடமையும் தொழிற்பயிற்சி மாணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள்கள் வந்தன. ஆடம் என்ற இளைஞன் மதிப்புமிக்க ஒருழவரின் மகன். அவ்வுழவர் தம் மூத்தமகனை உழவுத்தொழிலில் பயிற்சி பெறும்படி செய்துவிட்டு, இரண்டாம் மகனைத் தாம் குடியிருக்கும் வீட்டிற்குச் சொந்தக்காரரின் நட்பைப் பெறலாமெனக் கருதி மருத்துநூல் பயிலச் செய்வதற்கிசைந்தார். உழவருக்கு வாழ்க்கையில் பலவகையிலும் அறிவுரைகள் கூறுபவராயிருந்த அவ்வீட்டுக்காரர் மருத்துவத் துறையில் மனம் பற்றியவராக இருந்தமையின் அவர் விருப்பத்திற்கிணங்க ஆடமை மருத்துவநூல் பயில அனுப்பினார். ரிச்சர்டும் ஆடமும் ஒன்றாய்க் கல்வி பயின்று வந்தனர். குளிர்காலத்தில் மட்டும் எடின்பரோவில் தங்கிப் பட்டம் பெறுவதற்குத் துணைசெய்தற்கென்று நடக்கும் வகுப்புகளுக்குச் செல்வர். இவ்வாறு மூன்று நான்காண்டுகள் கடந்தன. சிறுவர்களாயிருந்த இருவரும் காளையராயினர். செல்வச் சிறப்பு என்று எதுவும் காணமுடியாத மிடில்மசில், அழகிகள் நிறைந்திருப்பினும் அழகிய காளையர் குறைந்த எண்ணிக்கை யுடையவராகவே இருந்தனராதலின் தோற்றமும், நல்லுடையும், நல்வளர்ச்சியும், கைப்பண்பும் பெற்றிருந்த அவ்விருவரும் அவ்வூரிலேயே முக்கியமான ஆடவராகத் தோற்றினர்.

இருவருக்கும் நண்பர் கூட்டம் தனித்தனியாகவே இருந்தது. இருவரும் நட்புறவுடன் ஒன்றாய் வாழ்ந்தாலும், சில சமயங்களில் இருவரிடையே கருத்து வேறுபாடுகள் நிகழ்வதுண்டு. அப்போது ஒவ்வொருவரும் தத்தம் பெருமையை எடுத்துக் கூறி உயர்வை நிலைநாட்ட முற்படுவர்.

இருவரும் மலர்ச்சியுள்ளங் கொண்டவராய், ஆடல்களில் விருப்புடையவராய் இருந்தனர். அவ்வூரில் ஆடல் கற்றுத் தருபவராய்ப் பிட்டாக் என்பவர் வந்தமைத்தார். குறைந்த தொகை பெற்றுக்கொண்டு மிடில்மசு இளைஞர்களுக்கு ஆடல் கற்றுக்கொடுத்துப் பணி புரிந்தார். அவ்வாசிரியர் மருத்துவரின் மாணவர்கள் இருவரையும் புகழ்ந்துரைத்தார்.

ஆடம் ஆடும்போது, உணர்ச்சி மெய்ப்பாடுகள் வெளித்தோன்ற ஆடினான்; ரிச்சர்டு ஆடலின் நயத்திறமறிந்து ஆடினான். ஆடலாசிரியர் அவ்விருவரையும் சிறந்தவர்களாகவே மதித்தார். ஆடம் விலையுயர்ந்த ஆடம்பர உடைகளை அணிந்தான். அவர் தந்தை அச் செலவுகளுக்கு ஈடுகட்டக் கூடியவராகவே இருந்தார். ஆனால் அவ்வுடைகள், புதிதாயிருக்கும்போது மட்டும் கவினுறு வனப்புடையவாய்க் காணப்பட்டன. பழமை எய்தியபோது ரிச்சர்டின் உடையைப் போலத் தோற்றவில்லை. ஆடம் சில சமயங்களில் அழகு தோன்றக் காட்சியளிப்பான். அப்போது தன் அழகுச் சிறப்பை யறிந்து பெருமிதங் கொள்வான். மற்றச் சமயங்களில் சிறிது மடியுள்ளவனாகவே இருப்பான். அவன்றன் உடனுறை தோழன் ரிச்சர்டு எப்போதும் ஒழுங்காயும் நன்றாகவும் உடுத்திருப்பான்.



செல்வத்தில் வளர்ந்தவனைப் போலக் காணப்பட்டதால், இயல்பாகவே செல்வ மகனாக நடந்து கொள்வான். எனவே அவனுடைய உடை எப்படியிருப்பினும், அந்தந்த இடத்திற்கும் நேரத்திற்கும் தக்கவையே என்று கூறும்படி அமைந்திருக்கும்.

அவர்களுடைய உடல் தோற்றத்தில் பெருத்த மாறுபாடு இருந்தது. ஆடம் நடுத்தரமான உயரம்; உடல் பருமை; ஆனால் உறுப்பமைதி யிருந்தது. ஆங்கிலநாட்டு முகநலம் உடையவனாயிருந்தான். வன்மைப் பயிற்சிகளான குத்துச்சண்டை, மல்போர், தாண்டுதல் இவற்றைப் பெரிதும் விரும்பினான். ஓய்வு கிடைத்தபோது, காளையைக் கட்டியடக்கும் விளையாட்டிலும், உதைபந்துப் போட்டியிலும் ஈடுபடுவான். இவற்றை ஊரினர் உற்சாகத்துடன் பார்த்து மகிழ்வர்.

இதற்கு மாறாக, ரிச்சர்டு தன் அப்பாவையும் அம்மாவையும்போல் கறுப்பு நிறமுடையவனாய், உருவ அமைப்பு அழகுற அமைந்தவனாய், ஆனால் பிறநாட்டுச் சாயல் சிறிது பொருந்தியவனாய் இருந்தான். உயரமாயும், ஒல்லியாயும்—ஆனால் வலிவும் சுறுசுறுப்பும் உடையவனாய்க் காணப்பட்டான். அவனுக்கு அணி நடையும், உடையணி திறனும் இயற்கையாகக் கைவந்தன. அவ்வூரிலுள்ளாரிடம் அவை காணப்பெறாது போயினும், அவனுக்கு மட்டும் அவை பொருத்தமாய் அமைந்தன. எடின்பரோவிலிருக்கும்போது சிறிய வாளை எடுத்து வீசும் பயிற்சியைப் பெற்றிருந்தான். நாடக அரங்கில் நடிப்பைப் பற்றிய பாடங்களை ஒரு நடிகரிடமிருந்து கேட்டறிந்தான். நாடகத்தைப் போற்றும் கலைஞனாகவும், திறனாய்வான

ருகவும் தன்னை நினைத்துக்கொண்டு நாடகசாலைக்குச் செல்வதை வழக்கமாக மேற்கொண்டான். சுவையுணர்வைப் பொறுத்தவரை இரு நண்பர்களையும் வேறுபடுத்திக் கூறவேண்டின், ரிச்சர்டு நுட்பங்களறிந்த, வெற்றியுறத்தக்க மீன்பிடிப்பவனுயிருந்தான். ஆடம், துணிவுடன் குறிதவறு தெய்யும் வீரனைப் போலிருந்தான். மருத்துவர் கிரேவின் மனையை அணிசெய்வதில் இருவரும் போட்டியிட்டுக் கொண்டு முனைந்தால், அம்மனை முன்பு தோற்றியதினும் பன்மடங்கு அழகு பொலிந்து காணப்படும். இலவசமாக மீன்களை வழங்குதலாலும், விளையாட்டுக்களைப் புரிந்து காட்டுவதாலும் இருவரும் அவ்வூர் வாழ்நரின் கவனத்தையீர்த்துப் புகழடைந்து வந்தனர்.

வேறு தக்க காரணமில்லாததால், மருத்துவரின் இரு மாணவர்களில் யார் சிறந்தவர் என்ற கருத்து வேறுபாட்டில் ஊரினர் இரு பிரிவாகப் பிரிந்தனர். மருத்துவரே அக்கருத்து மாறுபாட்டினைக் களையும் பொதுவராயிருந்தார். மற்றவற்றிற் போலவே இதிலும் மருத்துவர் கவனமாயிருந்தார். இருவரும் நல்ல வாலிபர்களே என்றும், மருத்துவத் துறையில் நற்பயன் விளைக்கக் கூடியவர்களே என்றும் கூறினர். இருவரும் அறிவில்லா ஊர்மக்கள் ஏற்பாடு செய்யும் உண்டாட்டுக்களில் அடிக்கடி கலந்துகொள்ளாது இருந்திருப்பார்களாயின், மருத்துவத் தொழிலில் சிறிதும் விலகிச்செல்ல நேர்ந்திராது என்றும் கூறினர். ஸ்காட்லாந்தினனைப் போலவே ஆடம் காணப்பட்டதால் அவன்மேல் இயல்பாய்க் கிரேவின் அன்பு சென்றது. ஆனால் அப்படி அவன்மேல் மன்ஞ் செல்லும்போதெல்லாம் அவர் தம்மைத்தாமே நொந்து



கொள்வார். ஏனெனில் தம் பொறுப்பில் அவ்வாறு விடப்பட்ட ரிச்சர்டே தம் தனித்த நல்லன்பையும் ஆதரவையும் பெறுதற்கு உரியவன்; மேலும் நன்றியுணர்வுடையவனுயிருக்கிருன்; குறிப்பாகக் கூறியதையும் செய்துமுடிக்கும் இயல்பினனுயுள்ளான் என்று நினைத்துக்கொள்வார்.

அவ்வூரில் சில நல்லறிவில்லாதவர்கள், இவ்விருவரைப் பற்றியும் பொதுமக்கள் கொண்டுள்ள இரு வேறு கருத்துக்களைப்பற்றி நடுநிலையில் நின்று தீர்ப்புக் கூறத்தக்கவள் கன்னி மெனிதான் என்று கருதினர். ஆனால் அவளிடம் மிக நெருங்கிப் பழகுபவர்கூட இக் கருத்தை அப்படியே அவளிடம் தெரிவிக்கத் துணியவில்லை. ஆயினும் அவள் இருவரிடமும் நடந்துகொள்ளும் முறைகளைக் கூர்ந்து நோக்கி வந்தனர். அவள் ஆடமிடமே மனம்விட்டுப் பழகுவதாக அறிந்தனர். அவள் ஆடமுடன் சேர்ந்து சிரிப்பதும், உரையாடுவதும், ஆடுவதுமாயிருப்பதைக் கண்டனர். ஆனால் ரிச்சர்டிடம் அவள் நெருங்காமல் சிறிது வெட்க உணர்வுடன் பழகினள். எனவே அவளுடைய முடிவு உறுதியாகத் தெரிந்துகொள்ளக் கூடியதே. எனினும் பொதுமக்களிடம் இருவேறுபட்ட முடிவு இருந்தே வந்தது.

இவ்விரண்டு இளைஞர்களும் வெளி நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படாதிருத்தல் முடியாதுதான். அவர்கள் பழகும் சிறு கூட்டத்திலும் ஒருவரையொருவர் பெருமையில் விஞ்சத் தலைப்பட்டனர். தாமே சிறந்தவர் என்ற உணர்ச்சி இருவரிடமும் இருந்துவந்தது. பொதுமக்களின் கைதட்டலைப் பெறுவதற்காக இருவரும் போட்டி போட்டுக்கொண்டு இருந்தனர்.

இதற்குள் மௌனி கிரே வளர்பருவமெய்தி அழகுத் திருவுருப்பெற்று விளங்கினாள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. மிடில்மசியிலும் அவ்வட்டாரத்திலுள்ள எல்லாச் சுற்றுப்புற ஊர்களிலும் இவளைப் போல் அழகிற் சிறந்தாள் வேறு யாருமில்லை. இவ்வுண்மைக்குப் பல சான்றுகள் உள்ளன. ஒன்று மட்டும் காட்டுவோம். ஆண்டுதோறும் நடக்கும் விளையாட்டுப் பந்தயக் காலங்களில் சுற்றுப்புற ஊர்களிலிருந்து பல உயர்குடி மக்கள் அவ்வூரில் கூடுவது வழக்கம். அவர்கள் ஒரு வாரம் உயர்ந்த வாடகை கொடுத்துப் பெரிய அறைகளை எடுத்துக்கொண்டு தங்கிச் செல்வர். சுற்றுப்புற ஊர்களிலுள்ள செல்வர்கள் எல்லாம் தத்தம் மனைவி மக்களுடன் பந்தயங்களைப் பார்க்கக் கூடுவதால் அப்போது அவ்வூர் விழாமல்கு நகரமாகவே தோன்றும். புதிதாக வந்தவர்களால் ஊரின் தோற்றமே மாறி விட்டதாக எண்ணும்படி இருக்கும். இச்சமயத்தில் குறிப்பிட்ட ஒரு சிலரே இரவில் நடக்கும், இருபாலார் சேர்ந்தாடும் நடன ஆட்டங்களில் பங்குபெற அனுமதிக்கப்படுவர். ஊரின் பழைய வளமனையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் மருத்துவர் கிரேவின் குடும்பம் மட்டும் எவ்விதத் தடையுமின்றிக் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. செல்வர்கள், உள்ளூர் ஆடவர்க்கும் மங்கையர்க்கும் சிறிது மரியாதை அளித்து அவர்களுக்குச் சில சலுகைகளைக் கொடுத்தனர். எனினும் அவர்கள் இரவில் இசை கேட்பதற்கன்றிச் சேர்ந்தாட அனுமதிக்கப்படுவதில்லை. பந்தய வாரத்தில் ஒருநாள் 'வேடுவர் ஆட்ட நாள்' எனப்படும். அந்நாளில் மட்டும் உள்ளூரினரும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றிக் களியாட்டத்தில் கலந்து



கொள்ளலாம். இதற்காக ஊரிலுள்ள எல்லா மதிப்புள்ள குடும்பங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. செல்வத்திற் சிறந்த ஆடவரும், அழகிற் சிறந்த மகளிரும் குழுமியிருந்த அன்று அக்கூட்டத்தில் மகளிர் எல்லாரினும் தனிப் பேரழகு வாய்ந்தவளாகக் கன்னி மௌனி விளங்கினாள். திருமகளைப் போன்றிருந்த மௌனியின் முகத்தையும் உடலையும் பார்த்த எல்லா நடுநிலைத் தீர்ப்பாளர்களும் இவளே அழகிற் சிறந்தவள் என ஒருமித்துக் கூறினர்.

பழம் பெருமையும் குடிச் சிறப்பும் பெற்றிருந்த லோபன்ஹைட்டு என்ற வாலிபச் செல்வர் ஒருவர் அந்நாள் மாலையில் பெரும்பாலான நேரத்தை அவள் கையைப்பற்றிச் சேர்ந்தாடுவதிலேயே கழித்தார். செல்வர்க்கே சிறப்புச் செய்யும் இயல்புடைய அவர்தம் அன்னையும், மருத்துவர் மகளைத் தம் மனைக்கு இட்டுச் சென்று இரவுணவளித்தாள். மௌனி ஆடலரங்கில் தன்னையும், சுற்றுப்புறத்தையும் உணர்ந்து அழகாக நடந்து கொண்டதாகப் புகழ்ந்தாள். அவ்வாலிபச் செல்வரோ மனமகிழ்ச்சியில் துள்ளினார்; பேரொலி எழும்புமாறு சிரித்தார். அதனால் அவர் அச்செல்வியைத் தட்டிக்கொண்டு போகப் போகிறார் என்றும் அவளைத் தம் பழங்குடிக் குரியவளாக்கிக் கொண்டு விடுவார் என்றும் பலத்த வதந்தி ஊர்க்கண் வழங்கலாயிற்று.

இந்த மறத்தற்கியலா மாலையில் ரிச்சர்டும் ஆடமும் இசையரங்கில் இடம் பெற்றிருந்தனர். இந்நிகழ்ச்சிகளைப் பார்த்தனர். வெவ்வேறு உணர்ச்சிகளைப் பெற்றிருந்தனர். இரண்டு புட்டி மதுவைக் குடித்து அதனால் வெறியூட்டப்பட்டிருந்த அச்செல்வர் அழகுற ஆடிய வேறொரு நங்கையைத் தம் அருகில் இருக்கும்படி செய்

திருந்தும், அடிக்கடி கண்பார்வையையும், கவனத்தை ரிம் மெனி கிரே மீது செலுத்தியதால் அவரைக் கண்டு மனம் பொருதவராய் இருந்தனர்.

பசியால் வாடும் வறியவன் ஒருவன் தான் கலந்து கொள்ள முடியாத விருந்தினைப் பார்த்து ஏங்குவது போல ஆடமும் மேலிருந்து கொண்டு கீழே நடக்கும் களியாட்டங்களைக் கண்டான். லோபன்ஹைட்டு விளையாட்டாகச் செய்த ஒவ்வொரு சிறு குறும்பையும் கண்டு மனம் துடித்தான். கடைசியில் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் அரங்கை விட்டு வெளியேறினான். பிறகு அங்குத் திரும்பி வரவேயில்லை.

ரிச்சர்டின் முகமோ இதனினும் முற்றிலும் வேறு பட்டிருந்தது. மெனிக்கு எல்லாரும் கொடுக்கும் மதிப் பையும் கவனத்தையும் கண்டு உளம் பூரித்து மகிழ்ந் தான். துணிவு மிக்க லோபன்ஹைட்டைச் சொல்ல முடியாத வெறுப்புணர்வுடன் நோக்கினான். ஆடலின் போது இசைக்கருவி இயக்குநருள் ஒருவராக இருந்த ஆடலாசிரியரைச் சுட்டிக் காட்டிப் பரிகாசச் சிரிப்பு எழுப்பினான்.

ரிச்சர்டு பலமாகச் சிரிப்பதைக் கண்டு அங்கிருந் தவர்கள் சத்தம் போடாதே என்று கத்தினர். அதனால் அமைதிநிலை அடைந்த ரிச்சர்டு மேலேயிருந்து கீழே நிகழும் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் முகத்தில் தோன்றிய புன்முறுவல் அந்நிகழ்ச்சிகளின் போக்கைக் கண்டு அவன் செய்த இகழ்ச்சிக் குறிப்பாகத் தோன்றியதன்றி, மற்றவர் களைப்போல மகிழ்ச்சிமீதூர்ந்து செய்யப்பட்டதாகத் தோன்றவில்லை என்று கூறலாம்.

---

# 4. காதல் போட்டியும் எதிர்காலத் திட்டமும்

அடுத்த நாள் காலை இரு வாலிபர்களும் மருத்து வர் மனைக்கருகேயுள்ள ஒரு நிலப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தனர். அந்த இடத்தை மருத்து வர் மூலிகைச் செடிகளும், அழகு மணமலர்ச் செடிகளும் வளர்தற்கிடமான சிறு தோட்டமாக மாற்றியமைத் திருந்தார். மருத்துவர் விருப்பத்தைப் பேணும் இரு வரும் அத்தோட்டத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்; அத்தோட்டத்திற்குத் தம் உழைப்பை நல்கினர். இதற்குப் பிறகு ஆடம் தனி யாகச் சமையல் தோட்டமொன்றைத் தோற்றுவித் தான். ரிச்சர்டு மலர்களையும், செடிகளையும் கொண்டு ஒரு வளைவுப் பந்தர் அமைத்து அதை 'மெனியின் வளைவு' என்று பெயரிட்டழைத்தான்.

இருவரும் தோட்டத்திலிருக்கும்போது ரிச்சர்டு ஆடமைப் பார்த்து, 'ஏன் நேற்றுமாலை ஆடலரங்கை விட்டு அவ்வளவு விரைவில் வெளியே வந்துவிட்டாய்?' என்று கேட்டான்.

அதற்கு ஆடம், "அங்கேயே தங்கி யிருக்கும்படி என்ன இன்பம் கண்டாய் என்று நான் தான் உன்னைக் கேட்க வேண்டும். நான் சொல்கிறேன், டிக், இந்த மிடில்மசு ஒரு மோசமான பட்டிக்காடு. இங்கிலாந்தின் மிகச்சிறிய ஊரில்கூட மதிப்புள்ள ஒவ்வொருவருக்கும் ஆடலில் பங்கு கிடைக்கும். இங்கே சும்மா பார்த்துக் கொண்டிருக்கும் நிலைதானே?" என்றான்.

"என்ன ஆடம், நீயுமா இந்தச் சிற்றூர்மக்களுடன் சேர்ந்தாட விரும்புகின்றாய்?" என்றான் ரிச்சர்டு.

"நான் நினைப்பது உனக்குப் புரியாது. இந்த நாட்டுப்புறத்து மக்களுடன் சேர்ந்து கும்மாளமடிக்க விரும்புவதற்கு நான் ஒரு முட்டாளல்லன். அவர்கள் என்னைப்பற்றிக் கவலைப் படாதிருப்பது போலவே நானும் அவர்களை மதிப்பதில்லை. ஆனால் அவர்கள் நம்மை ஆடுதற்கு அழைக்க விழையாவிடின், எதற்காக அவர்கள் நம் மகளிரை மட்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும்?" என்று கேட்டான் ஆடம்.

"நம் மகளிரா? மெனி உன்னைச் சேர்ந்தவள் என்று நான் நினைக்கவில்லை" என்றான் ரிச்சர்டு; "நான் சொல்கிறேன், ஆடம், அடுத்தமுறை ஆடல் நிகழும் போது மெனிகிரே உன்னோடு சேர்ந்தாட வரமாட்டாள் என்று பந்தயங் கட்டுகிறேன்."

"மெனி கிரேவைப்பற்றிப் பந்தயங்கட்ட நான் முன் வரவில்லை. அவள் தந்தை என் தலைவர்; அவருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நீயும் நானும் அவளைப்பற்றி வாதம் செய்தால் நான் மோசமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கும்" என்றான் ஆடம்.

"சரி சரி. அடுத்த சண்டையைத் தொடங்குமுன் முதல் சண்டையை முடித்துக் கொள்வோம். நான் வேண்டிக்கொள்கிறேன். முதலில் உன் குதிரையைப் பூட்டு. லோபான்ஹைட்டு மாளிகைக்குப் போ. மெனியின் அழகுக்கையைப் பற்றிய அச் செல்வனைச் சண்டையில் வீழ்த்து, போ" என்றான் ரிச்சர்டு.

"மெனியைப் பற்றிய பேச்சை விட்டுவிடுவோம். ஊர்ப்புறத்து மக்களோடு நீ ஒன்று சேர்ந்து கொள்கிறாய். அவர்கள் 'மருத்துவரின் மாணவரைப் பற்றி



என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்" என்றான் ஆடம்.

"நீ யார் என்பதை உணர்ந்து பேசு, ஆடம். நான் சாதாரண ஆட்களைப் போல ஒரு கோமாளியாகப் பிறக்கவில்லை. அவர்களிடம் போய்ப் பேசுவதைப் பற்றிக் கவலைப்படமாட்டேன்" என்றான் ரிச்சர்டு.

ஆடம் பொறுமையிழந்து, "இருக்கலாம். நீயும் அவர்களில் ஒருவன்தானே! மிடில்மசில் பிறந்த பட்டிக் காட்டான்தானே!" என்றான்.

'ஏ போக்கிரி' என்று கூறிக்கொண்டே, சினமீக்கூர்ந்தவனாய்க் கொதித்து அவனருகே சென்றான் ரிச்சர்டு

"தூர நில்; இல்லாவிடில் உனக்குக் கெடுதி நேரும்; நீ கிண்டலாய்ப் பேசினால் கடுமொழி விடையைக் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்" என்றான் ஆடம்.

"கடவுளே, இந்த அவமதிப்பைப் பெற்று நான் திருப்தியாக இருக்க வேண்டுமா?" என்றான் ரிச்சர்டு.

"ஏன், இருக்கத்தான் வேண்டும்; இனிமேல் இதைப்பற்றிப் பேசாமலிருப்பது நல்லது. பேசாமல் விடக்கூடியதைப் பற்றி இருவரும் பேசிவிட்டோம். நீ என்னைக் கோபமூட்டினாலும் நான் உன்னிடம் சொன்னது தவறுதான். இப்போது உனக்கு மனநிறைவுதானே?" என்றான் ஆடம்.

"நான் வேண்டும் மன நிறைவு ஒரு பெருமகனுடையதாக இருக்க வேண்டும். மருத்துவர் இரண்டு கைத்துப்பாக்கிகள் வைத்துள்ளார்" என்றான் ரிச்சர்டு,

"இரு பீரங்கிகளும் வைத்திருக்கிறர்; அவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று கூறிக் கொண்டே அங்கு வந்தார் கிரே. அவர் இதுவரை செடியின் மறைவிலிருந்தே அவர்களுடைய சண்டைப் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தார். "என் துப்பாக்கிகளைக் கொண்டே என் மாணவர்கள் சுட்டுக் கொன்று கொள்வது நல்ல கதைதான்! காயத்தை ஏற்படுத்து முன்பு துப்பாக்கிக்காயத்தை நீங்கள் எப்படி ஆற்றுவீர்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டும். போங்கள், நீங்களிருவரும் முட்டாள்கள் இவ்வாருன சண்டைகளில் என் மகளின் பெயரை நீங்கள் இழுத்துப் பேசுவது உங்களுக்கு நன்ருயில்லை. இங்கே பாருங்கள், நீங்களிருவரும் எனக்கு மதிப்புச்செய்ய வேண்டியவர்கள்; நன்றி கூறவும் கடமைப்பட்டவர்கள். ஆனல் தங்கையுடன் அண்ணனைப்போல் அமைதியாய் இந்தத் தாயில்லாச் சிறுமியுடன் பழகாமல் இருக்கிறீர்கள். இன்னும் சில மாதங்கள் நீங்கள் தங்கியிருக்கும் வரை அவளை வெளியே அனுப்பி விட்டு என் வசதியையும் குறைத்துக் கொண்டு நான் தனியே வாழ வேண்டுமென்று தூண்டுவது போல் நடந்து கொள்கிறீர்கள். இதுதான் நன்றிக்குச் செய்யும் கைம்மாரு? எங்கே, இருவரும் கைகுலுக்கிக் கொள்ளுங்கள், பார்க்கலாம். இதுபோன்ற சண்டை இனிமேல் போடக் கூடாது" என்று அறிவுறுத்திஞர் மருத்துவர்.

இவ்வாறு மருத்துவர் பேசும்போது இருவரும் குற்றத்தை யுணர்ந்த குற்றவாளிகளைப் போல நின்றிருந்தனர். மருத்துவரின் வைதுரை முடிந்தபின் ஆடம் திரும்பிப்பார்த்துத் தன்தோழனிடம் கைகுலுக்கக் கையை நீட்டினன். ரிச்சர்டும் ஒரு கணம் தயங்கிப்



பின் கைகுலுக்கினன். இதைப் பற்றி மறுபடியும் இருவரிடையேயும் பேச்செழாது போயினும், இருவரும் பண்டுபோல் நண்பெய்தி உறவாடி இருக்க முடியவில்லை. அதற்கு மாருகச் சூழ்நிலையில் மிக இன்றியமையாத நேரந் தவிர, மற்ற நேரங்களில் சேர்ந்திருப்பதில்லை. தொழிற்பயிற்சி செய்யும்போது இன்றியமையாத பேச்சு வேண்டியிருப்பினும் அதைக் குறைத்துக் கொண்டனர். ஒரு சிறிய வீட்டில் இருவரும் ஒன்ருய்த் தங்கியிருந்தும் அயலார்போல வாழ்ந்து கொண்டிருந்தனர்.

மெனிகிரேயைப் பற்றி அவள்தந்தை எவ்விதக் கவலையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. நாடோறும் அடிக்கடி அவர் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டு விடுவதால், அவள் அவ்விரு அழகிய வாலிபர்களுடனும் அடிக்கடி பேச்சுறவாட வாய்ப்பு ஏற்பட்டது. ஒருவர்க்கொருவர் போட்டிபோட்டுக் கொண்டு அவர்களிருவரும் அவள் மனத்தை மகிழ்விப்பதற்காக அவள் விரும்பியவற்றைக் கொடுத்தும் இன்னுரையாடியும் வந்தனர். ஜமீசனும் ரிச்சர்டின்மேல் கண்ணுயிருந்தாளே அன்றி இவளைக் கவனிக்க நேரமில்லாதிருந்தாள். மெனி நேர்மை மிகுதியும், தூயகற்புத் திண்மையும் பெற்றிருப்பவள் என்று மருத்துவர் நம்பியிருந்ததால், தம் நம்பிக்கைக்கு மாருக அவள் நடப்பாள் என்று எண்ணவில்லை. அதனல் அவள் தன் அன்பையும் உணர்ச்சிகளையும் கொட்டி ஆடவருடன் பழகுவதை அவர் பொருட்படுத்த வில்லை.

நாளடைவில் மெனியும் வாலிபர்களும் சந்திப்பதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. உண்ணும் நேரத்தில் மட்டும்தான் சந்திக்க முடிந்தது. இதனல்

மெனிக்குச் சங்கடம் மிகுதியாயது. ஏனெனில் தந்தை அவ்விருவரையும் சமமாக மதித்து நடக்கவேண்டு மென்று விதித்திருந்தார். ஆனால் இது எளிதான காரியமன்று. ஆடம் முகத்தில் இனிமை காட்டாது ஒதுங்கிக் கொள்பவன் போல இருந்தான். அதனால் அவனிடம் முன்புபோல் பேசிப் பழகிக் கொண்டிருக்க அவளால் முடியவில்லை. ஆனால் மிடில்மசு அவளிடம் தன் தொடர்பை வளர்த்துக் கொண்டு வந்தான். அவ ளிடம் நெருங்கிப் பழகுவதைப் பிறர் அறிந்து கொள் ளாதபடி அவளைத் தன்வயப்படுத்திக் கொண்டான்.

கடைசியில் தொழிற்பயிற்சி முடிந்துவிட்டது. இரு வரும் உலகில் தம் விருப்பம்போல வாழத் தலைப்பட்ட னர். மருத்துவர் ரிச்சர்டைப் பார்த்து, அவனைப்பற்றி மான்சாடாவுக்குப் பலமுறை வலியுறுத்தி எழுதியும் பதிலொன்றும் வரவில்லை என்றும், அவன் தாத்தாவின் மனத்தை அறியும் வரை தாமே அவனுக்கு அறிவுரை வழங்க விரும்பவில்லை என்றும் கூறினர். மருத்துவர் அவன் எவ்வளவு பொறுமையுடன் இருக்க முடியும் என்று எதிர்பார்த்தாரோ அதற்கு மேலாகவே ரிச்சர்டு பொறுமையுடனிருந்தான். எந்தக் கேள்வியும் அவன் கேட்கவில்லை; கவலையான முகத்தையும் காட்டவில்லை. ஆனால் பொறுமையுடன் காலம் செய்யும் காட்சியைக் காணலாம் என நின்றிருந்தான் எதிர்காலத்தைப் பற்றி மனத்திற்குள்ளேயே ரிச்சர்டு ஏதாவது திட்டம் வைத்திருப்பான் என்று மருத்துவர் தமக்குள் நினைத் துக் கொண்டிருந்தார்.

உண்மையில், துளங்காமனமுடைய உறவினரான மான்சாடாவுக்குத் தன் கடமையுணர்ச்சி, அன்பு, நன்றி



யறிவு இவை கலந்த கடிதம் ஒன்று எழுதி இனி நேரடி யாகத்தானே அவருக்குக் கடிதம் எழுதிக் கொள்ள விரும்புவதாகவும், அவர் விருப்பப்படியே நடந்து கொள்வதாகவும் முதன்முதலாகத் தெரிவித்தான் ரிச் சர்டு. ஆனால் அவனுடைய முறையீட்டுக்குப் பதிலாக அவன் கடிதமே திரும்பிவந்துவிட்டது. வங்கியில் உள்ளவர்கள் அக்கடிதத்தின் மேலுறையில் இனி மான் சாடாவுக்குத் தொல்லை கொடுத்தால் அவர்களிடமிருந்து பணம் வராது என்ற குறிப்பையும் எழுதியனுப்பினர்.

இவ்வாறு மருத்துவர் மனையில் நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கப் பலமாதங்கள் இடையிட்டு, வழக்கத்திற்கு மாறாக ஆடம் ஒருநாள் மாலை ரிச்சர்டைத் தனியே சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்தான். ரிச் சர்டைத் தோட்டத்தில் கண்டான். அப்போது ரிச்சர் டின் கையில் மண்வெட்டி ஒன்று இருந்தது. தோட் டத்தைக் கொத்திவிடும் வேலையில் ஈடுபட்டிருந்தான். 'நான் உன்னிடம் பேச விரும்புகிறேன்; ஆனால் உன் வேலையில் குறுக்கீடு செய்கிறேனோ என அஞ்சுகிறேன்' என்றான் ஆடம்.

மண்வெட்டியைக் கீழே வைத்துக் கொண்டே, "அதெல்லாம் ஒன்றுமில்லை சும்மா களைபிடுங்கிக் கொண்டிருந்தேன். தாராளமாய் என்னிடம் பேசலாம்" என்றான்.

ஆடமும் தோட்டத்திற்குள் சென்று உட்கார்ந் தான். ரிச்சர்டும் அருகிலுட்கார்ந்து ஆடம் பேச்சைத் தொடங்கட்டும் எனக் காத்திருந்தான்.

"மருத்துவரிடம் நான் ஒரு மகிழ்ச்சியான உரை யாடல் செய்தேன்" என்று நிறுத்தினான் ஆடம்.

ஏதோ கடினமான வேலையைத் தொடங்கி முடித்தவனைப் போலப் பேசி நிறுத்தினான். "பேச்சின் முடிவு திருப்தியாகவே இருக்கும் என நம்புகிறேன்" என்றான் ரிச்சர்டு.

"அதை நீயே தீர்மானிக்கலாம். மருத்துவர் கிரே நம் தொழிலில் எனக்குள்ள திறமையைப் பற்றி வெகுவாகப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைந்தார். அவர் முதுமையடைந்து கொண்டிருப்பதால், எனக்குப் பெருவியப்பு உண்டாகும்படி இன்னும் ஈராண்டுகள் அவரிடம் சம்பளம் பெற்றுக் கொண்டு இருக்க முடியுமா என்று கேட்டார். அதற்குப்பிறகு அவரிடம் உடனுழைக்கும் துணைவனாக இருக்கவேண்டுமென வற்புறுத்திக் கூறினார்" என்றான் ஆடம்.

"தமக்கு மிகச் சிறந்த உதவியாளராக இருக்கத் தக்கவர் யாரெனத் தீர்மானிப்பதில் அவரே கெட்டிக்காரர்" என்றான் ரிச்சர்டு; "ஆண்டுதோறும் இருநூறு பவுன்கள் சம்பளம் கிடைக்கும்; இன்னும் திறமையாக வேலை செய்தால் மேலும் அதைப்போல ஒரு மடங்கு பணம் சம்பாதிக்கலாம்" என்றான். "ஆனால் அதுமட்டுமன்று. மருத்துவர் இந்த இரண்டு ஆண்டு தமக்குப் பிடித்தமான முறையில் நடந்துகொண்டால், இரண்டாமாண்டின் முடிவில் நான் அவர் மருமகனாகவும், துணையாளனாகவும் இருக்கலாமென்று மொழிகிறார்" என்றான் ஆடம்.

இவ்வாறு கூறும்போது உணர்ச்சி கொந்தளிக்கும் ரிச்சர்டின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் ரிச்சர்டு விரைவில் சமாளித்துக் கொண்டு கர்வமும் நம்பிக்கையும் குலைந்தவனாய்,



ஏமாற்றம் தொனிக்கும் குரலில், ஆனால் உள்ளத்திலுள்ளதை வெளிக்காட்டாதவன்போல அலட்சியமாகப் பேசத் தொடங்கினான்: "சரி, ஆடம். உறவுமுறை ஏற்படுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது. நீ ஐந்தாண்டுகள் ஒரு தொழிற் பட்டத்திற்காக உழைத்திருக்கிறாய். உயிர்களைக் கொல்லவும் குணப்படுத்தவும் வல்ல தொழில். இப்போது ஓர் அழகுத் தேவதைக்குப் புதிய வகையில் தொண்டு செய்யப் போகிறாய். நான் கேட்பது உறுதியாய் நாகரிகமில்லாததுதான். ஆனால் கேட்காமல் இருக்க முடியவில்லை. உண்மையாகவே நீ அந்த இன்ப ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டாயா?" என்று கேட்டான் ரிச்சர்டு.

"ஆனால் இன்னொரு தடையும் இருப்பதை மறந்துவிடக் கூடாது" என்று புதிர்போட்டான் ஆடம்.

"இத்தனை யாண்டுகளாகப் பழகிய பெண்ணிடம் மனமொத்து நடந்து கொள்வதுதானே?" என்று சிறிது குத்தலாகக் கேட்டான் ரிச்சர்டு; "மருத்துவரின் நன்மதிப்பைப் பெற்று அவரது ஆதரவைப் பெற்றிருக்கும் உனக்கு எவ்வித இடையூறும் இருக்காது. எந்தத் தடையும் இருக்கவே இருக்காது" என்றான்.

"ஆனால் அதுதான் முடியாது என்பதை நாமிருவரும் அறிவோம்" என்றான் ஆடம்.

"நானா? குமாரி மெனியின் ஆசைகளைப்பற்றி உன்னைவிட நான் எப்படி அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியும்? அவற்றைத் தெரிந்துகொள்ள

நம்மிருவருக்கும் சமமான வாய்ப்பே கிடைத்தது.'' என்றான் ரிச்சர்டு.

"இருக்கலாம். ஆனால் சிலர்தான் வாய்ப்பை எப்படி நன்கு பயன்படுத்திக் கொள்வது என்றறிவதில் வல்லவராயிருக்கின்றனர். ரிச்சர்டு, நான் பலகாலமாய்க் குமாரி மெனியின் அன்புக்கு ஆளாகும் அளவிலாப் பேறுடையவன் நீதான் என்று ஐயுற்று வந்தேன்........"

'நானா?' என்று இடைமறித்தான் மிடில்மசு; "நீ கேலி செய்கிறாய் அல்லது பொறாமைப்படுகிறாய். உன்னைப்பற்றிக் குறைவாகவும் என்னைப்பற்றி அதிகமாகவும் தப்புக் கணக்குப் போடுகிறாய். ஆனால் உன் புகழ்ச்சி மிகப் பெரிதாயிருக்கிறது. அந்தப் புகழ்ச்சிக்காக நான் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்."

"ஊகத்தினாலோ அல்லது நீ சொல்வதுபோலப் பொறாமையினாலோ நான் பேசவில்லை. வெளிப்படையாகவே கூறுகிறேன். மெனிகிரேவே என்னிடம் அவளது அன்புநிலையை உரைத்திருக்கிறாள். அவள் தந்தையிடம் நான் நிகழ்த்திய உரையாடலை அவளிடம் அப்படியே கூறினேன். ஆனால் அவள் தந்தை என்னிடம் காட்டிய நல்லன்பிற்கு ஏற்றவாறு அவள் இதயத்தில் இன்ப அன்பு நிறைந்திருக்குமாறு இதுவரை வகை செய்தேனில்லை என்று உறுதியாய் நம்புவதாகவும், அவ்விதய அன்புதான் அவளிடம் கலந்துறவாடும் நிலையை எய்துவிக்கும் என்றும், அவ்வன்பைப் பெறுவதற்காக இன்னொருமுறை வாய்ப்புத் தரவேண்டும் என்றும், அதுவரை ஒரு முடிவுக்குத் திடீரென அவள் வந்துவிடக் கூடாதென்றும் அவளிடம் கூறினேன். அவள் தந்தையிடம் பணிசெய்யப் போவதால் எனக்கு நன்மையே விளையும் என்று எதிர்பார்க்கிறேன் என்றும் அவளிடம் பகர்ந்தேன்" என்றான் ஆடம்.



"இயல்பான, நியாயமான கோரிக்கைதான். ஆனால் மெனி அதற்கு என்ன பதில் கூறினாள்?" என்று கேட்டான் ரிச்சர்டு.

"அவள் ஒரு மென்மையுள்ளங் கொண்டவள். அழகு, நல்லறிவு இவற்றை விட்டுவிட்டாலும், அவளுடைய கள்ளமில்லாத உள்ளம் ஒன்றிற்கே இவ்வுலகத்தை ஈடாகத் தரலாம். அவள் என் அன்புள்ளத்தை உணர்ந்து கொண்டதாகத் தன் காதலுள்ளத்தைத் திறந்து காட்டிக் கூறிய அடக்கத்தின் அழகை என்னால் கூறமுடியாது. உன்னோடு சேர்ந்து இரகசியமாகப் பழகி வந்ததையும், நீங்கள் உருவப் படங்களை ஒருவர்க்கொருவர் மாற்றிக் கொண்டதையும் ஒளிவுமறைவின்றி என்னிடம் தெரிவித்தாள். அவள் தன் தந்தையின் ஒப்புதலின்றி உனக்குரியவளாக ஆகமுடியாது போயினும், உன்னைத்தவிர வேறு எவரையும் தன் மனத்தில் நினைத்துப் பார்க்கமுடியாது என்று உணர்ந்ததாக என்னிடம் கூறினாள்" என்றான் ஆடம்.

"அவள் உண்மையிலேயே மிகவும் திறந்த உள்ளமுடையவள்; அதற்காக நான் அவளைப் பாராட்டுகிறேன்" என்றான் மிடில்மசு.

"அவள் இவ்வாறு வெளிப்படையாகக் கூறியதில் மனமகிழ்ச்சி அடையாவிடில் நீ அவளுக்கு நன்றியறிவு காட்டாதவனாவாய்; அவளுக்குத் தீமை புரிந்தவனாவாய். தன் அன்புக்குரிய முதற் பொருளை ஒரு

பெண் எப்படிக் காதலிப்பாளோ, அதைக் காட்டிலும் பெரிதாக உன்னைக்........" என்று ஆடம் சொல்லி முடிப்பதற்குமுன் அவ்வாக்கியத்தை முடித்தான் மிடில்மசு.

"என் தகுதிக்குமேல் அன்பு காட்டுகிறாளா? அப்படியே இருக்கட்டும். நானும் பெரிதும் அவளைக் காதலிக்கிறேன். ஆனால் இதை இருவரும் இரகசிய மாகவே வைத்திருப்பதால், அவள் இதை வெளிப் படுத்து முன்பு என்னைக் கலந்தாலோசித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்" என்றான் ரிச்சர்டு.

அப்போது ஆடம், "மிடில்மசு, இந்த இரகசியம் எனக்குத் தெரிந்துவிட்டதே என்று சிறிதும் கவலைப் படவேண்டாம். குமாரி கிரேவின் நல்ல உள்ளத்திற் காக நன்றியறிவுடைய என்னைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டாலும், என் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவராது" என்றான்.

கொஞ்ச நாட்களாக அவர்களிடை உலவாத நட்புரிமை மீண்டும் புலப்படுமாறு விளித்து மிடில்மசு கூறுகிறான்: "இல்லை, இல்லை நண்ப. நானும் கொஞ் சம் பொறாமைப்படுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். உன் உண்மையான காதலி எனக்கு இப்படி ஒரு பெரிய உரிமையைத் தந்திருக்கக் கூடாது. என்ன விருந்தாலும், நான் பயப்படத்தக்க போட்டிக்காரனா யிருக்கும் ஒருவனைக் காதலனாகப் பெற்றிருந்தும் அவ்வாறு உரிமை கொடுத்தது வியப்பாகவே இருக் கிறது. ஆனாலும் நான் மகிழ்ச்சியடையாமலில்லை. அறிவுமிக்க அவள் மிகநல்ல காதலனையே தேர்ந் தெடுத்திருக்கின்றாள் என்பதை நான் அறிந்துகொள்ள



வில்லை. இனி எங்களிருவருக்கும் இடையேயுள்ள மனவேறுபாடு முடிவுபெறுதலே நல்லது; அதன் உண்மையான காரணம் நம்மிருவரிடையேயுமுள்ள காதல் போட்டிதான் என்பதை நீயும் உணர்வாய். எனக்கு நிறைய அறிவுரை தேவை; அதை என் பழைய நண்பனாகிய உன்னைத் தவிர வேறு யார் தரக் கூடும்? நடுநிலை யறிவுபெறாத சில நண்பர்கள் என்னைப் பாராட்டிக் கொண்டிருந்தாலும், நல்ல தீர்ப் பினைச் செய்யும் உன்னறிவைக் கண்டு நான் எப்போ தும் பொறாமைப்பட்டிருக்கிறேன்."

ரிச்சர்டு நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கினான் ஆடம். ஆனால் கொடுத்த கையின் உணர்ச்சி குலுக் கும் கைக்கு இல்லை.

"நான் இங்குப் பல நாட்கள் தங்கப்போவதில்லை; இன்னும் சிலமணி நேரங்களே தங்கலாமென்றிருக்கி றேன். அதற்குள் என் அறிவுரை மூலமோ, பிறவற் றாலோ உனக்குப் பயன்பட முடியுமானால், நீ எனக்கு உத்தரவிடலாம். மெனிகிரேவுக்கு நான் நன்றி செய்ய அவ்வொரே வழிதான் உளது" என்றான் ஆடம்.

"என்னை விரும்புவதானால் என் நாயையும் விரும்பு என்ற பழமொழிப்படி என்னை விரும்புவதால் என் காதலியிடத்தும் அன்பு காட்டுகிறாய். சரி, பிறகு மெனிகிரேவுக்காக - எனக்காக இல்லாவிடில் - தீவினை மிக்க எங்கள் விளையாட்டைப்பற்றி என்ன நினைக் கிறாய், என்பதைக் கூறுவாயா?". என்று கேட்டான் ரிச்சர்டு.

"எல்லாம் உனக்கு நன்மையாகவே இருக்கும் என்பது தெளிவாகத் தெரியும்போது நீ இந்தக்

கேள்வியை எழுப்புவதற்கு இடமேயில்லை எனக்கு ஆதரவு கொடுக்க முன்வந்தது போலவே மருத்துவர் கிரே உன்னை அவர்க்குத் துணையாளராக வைத்துக் கொள்வார் என்று நம்புகிறேன். வாழ்க்கையைத் துவங்குவதற்கு முதல் வைத்துக் கொண்டிருக்கும் நீதான் எல்லா வகையிலும் அவர் மகளுக்குப் பொருத்தமான இணை " என்றான் ஆடம்.

"எல்லாம் சரிதான். ஆனால் இதைப் பொறுத்த வரை மருத்துவர் கிரே எனக்கு முதன்மை கொடுக்க வில்லை என்றுதான் எனக்குப் படுகிறது " என்றான் மிடில்மசு.

" தடையின்றி யாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சிறப்புடைய உனக்கு மருத்துவர் அநீதி செய்திருந் தால், அதற்காக அவர் மகளை உனக்குக் கொடுத்து விடுதல் அந்த அநீதிக்கு ஈடுகட்டியதினும் மேலான தாகும் " என்றான் ஆடம்.

"ஐயமில்லாமல் நான் அவளை உயிர்க்குயிராய்க் காதலிக்கிறேன். இல்லாவிடில் பிறர் உடைமைகளுக் காக அலைவது என் வழக்கமன்று" என்றான் ரிச்சர்டு.

அப்போது ஆடம் கூறினான்: "ரிச்சர்டு, உன் அந்தக் கர்வத்தை அடக்காவிடில் அது உன்னை நன்றி யறிவில்லாதவனாயும், துன்பமுடையவனாயும் ஆக்கி விடும். கிரேவின் சொற்கள் எல்லாம் அன்புரிமையால் எழுந்தவை. அவர் என்னைத் துணையாளனாயும் குடும்பத்தில் ஒருவனாயிருக்கவும் தேர்ந்தெடுத்த அன்புச் செயலுக்கு உன்னை இளமையிலிருந்து அன்புகாட்டி வளர்த்துவந்ததே ஈடாகும் என வெளிப் படையாக எடுத்துக் கூறினர். அவர் கொடுக்கப்



போகும் ஊதியம் குறைவுள்ளதாக உனக்குத் தோன்றி யதை அவர் உணர்ந்தார். நீ உலகின் பிற இடங் களுக்குச் சென்று பெரும்பொருளீட்டவேண்டும் என்ற விருப்பம் பெற்றிருப்பதையும் அறிந்துள்ளார். உன் இந்தப் பேராவல்களையெல்லாம் அவர் மகளுக்காக நீ விட்டுவிடத் தயாராயிருந்தாலும், பேராவல் பேராசை என்னும் இரு பேய்களும் காதல்வசியம் தன் வலுவை இழந்தபிறகு மீண்டும் தலைகாட்டும் என்றும், அதனால் தன் மகளின் எதிர்கால இன்பத்தைப்பற்றியே நன்கு சிந்திக்கவேண்டும் என்றும் அவரே என்னிடம் கூறினர்."

"மருத்துவர் கல்வி, அறிவு வல்லாரைப்போலவே நன்கு பேசுகிறார். இவ்வளவு தெளிவுக்காட்சி பெற்றி ருப்பார் என நான் முன்பு நினைக்கவேயில்லை. உண்மையைச் சொன்னால், அழகு மெனிகிரே இல்லாது போனால் இந்தப் பட்டிக்காட்டில் சுற்றிச் சுற்றிவரும் செக்குமாட்டைப் போலவே இருந்திருப்பேன். சரி, நீ இனி என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான் ரிச்சர்டு.

"என் அம்மாவின் தம்பி ஒருவர் கம்பனிக் கப்ப லொன்றை ஓட்டுகிறார். அவருடன் போயிருந்து அக்கப்பல் மருத்துவரின் துணைவனாக இருக்க விரும்பு கிறேன். கப்பல் வாழ்க்கை எனக்குப் பிடித்திருந்தால் அங்கேயே இருப்பேன். இல்லாவிடில் வேறு பக்கம் போய்விடுவேன் " என்று பெருமூச்சுடன் கூறினான் ஆடம்.

அப்போது ரிச்சர்டு, "இந்தியாவுக்கா! உலகத் தின் அப்பகுதியில் வாழநேரிட்டால் எல்லாத் துன்பங்

களையும் பொறுமையுடன் பொறுத்துக் கொள்ளலாம் ஓ டில்லி! ஓ கோல்கொண்டா! இன்ப எண்ணங்களை என் மனத்தில் எழுப்பும் வல்லமையை நீங்கள் இழந்துவிட்டீர்களா? இந்தியாவே, உன் நாட்டில் எஃகைக் கொடுத்து அதற்குப்பதிலாகப் பொன்னைப் பெறலாம். உன்னைப்பற்றி எண்ணி எண்ணி இன்புறும் இந்த வீரன் ஒரு கருங்கண் அழகுப்பெண் தன்னினும் நல்வினை குறைந்த ஒருவனிடம் கடைக்கண் பார்வை செலுத்தி விட்டதனால் மனமுடைந்து போதல் நல்லதா?'' என்று பேசினான்.

ஆடம் ரிச்சர்டைப் பார்த்துக், "குறைந்த நல் வினையா? மெனியின் உயிர்க்காதலனாகிய நீயா விளையாட்டாகவேனும் இப்படிப் பேசுவது?'' என்று கேட்டான்.

ரிச்சர்டு பதிலுரைக்கும்போது "இல்லை ஆடம். என்மேல் கோபப்படாதே. ஏனென்றால், இவ்வளவு தூரம் நான் வெற்றியடைந்தாலும், அந்த அளவு வெற்றியில்லாத உன்னைப்போல் அவ்வளவு மிகை யாக என் தீவினையைப்பற்றி நினைக்கவில்லை. நாம் உறுதியாகக் கிடைக்கும் என நம்பும் பொருளே சில சமயங்களில் அந்தப் பெரும் உறுதிப்பாட்டினாலும், அதில் அளவில்லாத பெரும் மதிப்பு வைத்திருப் பதினாலுமே கிடைக்காமல் போய்விடுவது உண்டு என்பதை நீ படித்த தத்துவம் உனக்கு உணர்த்தி யிருக்கும். அதெல்லாமில்லாவிடில், நான் என் கண்மணி மெனியை விட்டுவிட்டு வாழமுடியாது. உள்ளமெலாம் மகிழ நான் அவளைத் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன். இவ்வளவு இளமை யிலேயே திருமணம் செய்வதால் எங்கள் கால்கட்டுக் கட்டுப்போடுவது போலாகும் என்றுகூட ஒரு மணித் துளியும் எண்ணமாட்டேன். ஆனால் திறமை குறைந்த வர்கள் எல்லாம் வெளியே இலட்சம் கோடி என்று பணத்தைக் குவிக்கும்போது நான் மட்டும் இந்த நரகக் காட்டிலிருந்து கொண்டு, ஒரு பென்னிக்கும், இரண்டு பென்னிக்கும் ஆலாய்ப் பறந்துகொண்டு இன்னும் இரண்டு ஆண்டுகள் கழிப்பது—அது ஒரு பெரிய கீழ்நிலைதான். எனக்கு நீதான் ஒருவழி சொல்ல வேண்டும். இந்த இரண்டாண்டுக் காலத்தின் சாபக் கேடான துன்ப நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வழி சொல்லமாட்டாயா?'' என்று கேட்டான்.



ஆடம் தன் மனக்குறையை மறைக்க முடியாமல் மறைத்துக்கொண்டு, "என்னால் முடியாது. அவ்வளவு நேர்மையான ஒரு நிலையை மாற்றும்படி மருத்துவர் கிரேவை நான் தூண்ட முடியுமானால், அதற்காக நான் வருத்தமுறுவேன். உனக்கு இருபத்தொரு வயதுதான் ஆகிறது. உன்னைவிட இரண்டாண்டுகள் மூத்த எனக்கே இரண்டாண்டுப் பயிற்சிக்காலம் இன்றியமை யாதது என்று தம் மனுபவத்தால் மருத்துவர் கருது வாரானால், உனக்கு அப்பயிற்சிக் காலம் வேண்டா மென்று கூறுவார் என்று நான் நம்பவில்லை'' என்றான்.

அதற்கு ரிச்சர்டு, "நம்ப முடியாததுதான். ஆனால் இரண்டு அல்லது மூன்றாண்டுப் பயிற்சிக் காலத்தை இன்னும் சிறப்பாகக் கழிக்க முடியும் என்று நீ கருதவில்லையா? அங்கே கொஞ்சகாலத்தில் நிறை யப் பணத்தைக் குவிக்க முடியும். ஆனால் இங்கேயோ

சோற்றுக்காக வேண்டிய உப்புக்குத்தான் சம்பாதிக்க முடியும். எனக்கென்னவோ இந்தியாவில் வாழ வேண்டுமென்ற நெடுநாளைய ஆசை இருக்கிறது. என் தந்தை பார்த்தவர்க்கெல்லாம் ஒரு படைவீரராகத் தோற்றமளித்தார். நான் வாளை விரும்பும்படியும் செய்திருப்பார். என் அம்மாவின் தந்தை ஒரு மதுவாணிகர் - பணத்தின் மேல் அவருக்குப் பெரிய ஆசை. அதை எப்படிப் பெறுவது என்பதும் அவருக்குத் தெரியும். நான் வருடத்திற்கு வருமானமாய்ப் பெறும் இருநூறு பவுன்களையும் இந்த முதிய மருத்துவருடன் பகிர்ந்து கொண்டு வாழ்வது என்பது மதிப்பாகப் பிச்சையெடுப்பதுபோலத்தான் இருக்கிறது. எனக்கு இப்பரந்த உலகமே திறந்து கிடக்கிறது. வாள் கைக்கொண்டு முன்னேற வழியும் இருக்கிறது. மெனி—அவள் ஒரு மாணிக்கம்— ஒரு வைரம்— ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட விலைமதிப்பில்லா நகையை ஈயப்பெட்டியிலோ, பித்தளைப் பெட்டியிலோ வைக்கலாமா? தங்கப்பெட்டியிலேதான் வைக்கவேண்டும். ஆடம், அதை ஒளிவீசும் மணிக்கற்களின் நடுவிலேதான் வைத்திருக்கவேண்டும். ஆடம், நீ நல்லவனாகவே இரு. மருத்துவரிடம் என்னைப்பற்றி நன்றாக எடுத்துச் சொல். இந்தக் குறுகிய பயிற்சிக் காலத்தை நான் வெளிநாட்டில் செலவழிக்க அனுமதிப்பதுதான் மருத்துவருக்கும் நல்லது; மெனிக்கும் நல்லது. எப்படியிருந்தாலும் நோய்க்கு மருந்து கொடுக்கும் போதெல்லாம் என் மனம் வெளிநாடுகளிலேயே இருக்கும். ஒரு நவாப் அல்லது ராஜாவின் செல்வத்தைப் பங்கிட்டுக்கொண்டு வாழும் நினைவாகவே இருப்பேன். எனக்கு இவ்வுதவி செய்வாயா? துணையாக



இருப்பாயா? எனக்காக வாதாட உனக்குப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால் நான் புறப்படுவதற்கு முன்பு கைப்பிடியுள்ள வாளோ, வில்லோ கொண்டுவரப்படலாம். பிறகு நீ உன் விருப்பம்போல மெனியை நெருங்கலாம். அவளுக்குத் தேறுதலாக நீ ஒருவனேயிருப்பதால் உன்பாடு கொண்டாட்டம்தான். கண்களில் நீர்வழிந்து கொண்டிருக்கும் அவளுக்குத் துணையாய் நீ ஒருவனே இருப்பாய்'' என்றான்.

இதைக்கேட்ட ஆடம், ''ரிச்சர்டு மிடில்மசு, உன்னை மிகுதியாய் வெறுக்கிறேனா அல்லது உனக்குப் பரிவுகாட்டுகிறேனா என்பதைச் சில சொற்களால் சுருங்கக் கூறமுடிந்தால் நல்லது என்று நினைக்கிறேன். இன்பம், தகுதி, மனநிறைவு இவையெல்லாம் உனக்கு நிறையக் கிடைக்கும்படி கடவுள் கொடுத்திருக்கிறார். ஆனால் நீ உன் பேராசையையும், நப்பாசையையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக அவற்றைத் தூர எறிய விரும்புகிறாய். இதை மருத்துவர் கிரேவுக்கோ அவர் மகளுக்கோ தெரியப்படுத்தினால், உன்னிடம் அவர்கள் கொண்டுள்ள தொடர்பெல்லாம் அற்றுப்போக நேரிடும். இயற்கையால் எவ்வளவுதான் நன்முறையில் வளர்க்கப்பட்டவனாயினும் உன் உணர்ச்சி வசத்தால் வில்லனாக ஆகி விடுவாய். உன் இகழ்ச்சிக் கோபத்தை மாற்றிக்கொள். நான் அவர்களிடம் இதைச் சொல்லப்போவதில்லை; ஏனெனில் என் மனக் கருத்தையறியாதவரை என்சொல் பயனிலாதொழியும் என்றுதான் நினைக்கிறேன். இந்த வீட்டிலிருந்து விரைவில் புறப்பட்டுப் போக விரும்புகிறேன். நாமிருவரும் மீண்டும் சந்திக்க மாட்டோம். கர்வமும் அறியாமையும் தரும் ஆபத்துக்களிலிருந்து நேர்மையும்

வாய்மையுமுடையோரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்றான். இவ்வாறு சொல்லிக்கொண்டே இளமையாசைக்கொள்கலமாகிய ரிச்சர்டிடமிருந்து வெறுப்புற்றவனைத் திரும்பித் தோட்டத்தைவிட்டகன்றான்.

மனச்சாட்சியில் எழுந்த மனக்கருத்தால் உந்தப்பட்டு 'நில்' என்று கூறினான் ரிச்சர்டு. ''நில். ஆடம்! நில்.... நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன்!....'' ஆனால் அவன் அச்சொற்களைத் தயங்கிக்கொண்டே கூறியதாலோ, ஆடம் காதில் விழாததாலோ அல்லது அவை அவன் மனத்தை மாற்றும் சத்தியில்லாததாலோ என்னவோ ஆடம் கேட்டும் கேளாதவன் போல் வெளியேறி விட்டான்.

ஆடம் தோட்டத்தை விட்டுச் சென்ற பிறகுதான் ரிச்சர்டுக்குத் தான் வீரமாகப் பேசிய உரைகள் அவன் நினைவிற்கு வந்தன. இன்னும் ஒரு கணம் நின்றிருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கலாமே என்று நினைத்தான். மேலும் அவன் தனக்குள் நினைத்துக் கொண்டதாவது : ''சீ! எவ்வளவு அவசரப்பட்டுவிட்டேன்! என்மேல் ஏன் அவனுக்கு இவ்வளவு கவலை? மெனியும் அவனும் எப்படிப் பழகினார்களோ? அவள் அவனுக்குப் பதில் கூறிவிட்டாள். மேலும் அவன் எங்களிருவருக்குமிடையே வருவதற்கு என்ன உரிமையிருக்கிறது? வயதான மான்சாடா ஒரு பாட்டனாரின் கடமையைச் செய்திருந்து, இவ்வினிய பெண்ணை மணந்து கொள்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்து அவள் ஊரிலேயே தங்கி வாழச் சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆனால் அவளுடைய



தந்தையைப்போல இருபதுமைல் சுற்றளவுள்ள ஒவ்வொரு பட்டிக்காட்டானுக்கும் பரிந்துவாழும் வாழ்க்கை எனக்கு அறவே பிடிக்கவில்லை. ஊர் ஊராய்த் திரிந்து வீடு வீடாய்ச் சென்று வீட்டுப் பெண்களுக்குக் குண்டூசியும், பாசியும், ரிப்பனும், பொடியும் புகையிலையும் பண்டமாற்றாக விற்கும் நாடோடிக்குக்கூட அதிக லாபம் கிடைக்கும்; தொல்லை அதிகமில்லை. அவ்வேலையும் மதிப்புள்ள வேலைதான். இல்லை, பக்கத்தூரிலே பணம் சம்பாதிக்க முடியாவிடில் வேறிடத்தை நாடிச் செல்வேன். சரி, அன்னசத்திரத்துக்குப் போய் வக்கீல் நண்பருடன் கடைசியாகத் தீர்மானிக்கலாம்.''

0111,3LS0,S N62

# 5. பொருள்வயிற் பிரிவும் நன்றியுணர்வும்

மிடில்மசு சந்திக்க நினைத்தது வேறு யாருமில்லை; டாம் கிலாரியைத்தான். வக்கீலின் எழுத்தாளராக வளர்ந்து நகரஎழுத்தர் லாபோர்டின் கீழ்ச் சிலகால மிருந்த அவன் அறிவுரை கூறக் கூடியவனே. ஐந்து வருடத்திற்கு முன்பிருந்ததைக் காட்டிலும், மிடில்மசுக்கு வந்த ஆறுமாதங்களில் அவன் முற்றிலும் வேறுபட்ட தோற்றமுடையவனாக மாறிவிட்டான்.

இப்போது அவனை எல்லோரும் 'கேப்டன்' என்று அழைக்கிறார்கள். அதற்கேற்றவாறு படைத்தளபதி போன்ற உடையை அணிந்திருந்தான். அவன் பேச்சும் படையினர் பேசும் மொழியாகவே இருந்தது. பார்ப்பதற்குப் பணம்மிகப் படைத்தவன்போலக் காணப் பட்டான். ஆனால் இங்கு வந்த பிறகு சில பழைய கடன்களைத் திருப்பிக் கொடுத்தான். எனினும் ஏழை களுக்காக நிறையப் பணம் கொடையாகக் கொடுத்துத் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டான். பழைய கடன்களை மறவாதிருந்தவனும், ஏழைகளின் குரலுக்கு மனம் இரங்குபவனுமான இவனுடைய நேர்மையும் இரக்கமும் பொருந்திய செயல்கள் எல்லா ருக்கும் தெரியவந்தன. இளவரசர்களைப் போன்று சிறப்புடன் விளங்கிய வணிகர்களால் நடத்தப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலைபார்த்தவன் என் றறிந்தபோது இவன்பெருமை இன்னும் உயர்ந்து காணப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் லெடன் ஹால் என்னும் தெருவில் நிறுவப்பட்ட இக்கம்பெனி



ஐரோப்பாவும் ஆசியாவும் வியக்கும்படி பரந்து பெருகிப் பலம் பெற்றது. கிழக்கு நாடுகளில் அக்கம்பெனி செய்த போர்களைப்பற்றியும், பிடித்த நாடுகளைப் பற்றி யும் ஆச்சரியத்துடன் செவிமடுத்தது ஐரோப்பா. வீரச் செயல் புரிவதற்காகத் தாய்நாட்டை விட்டுப் புறப்பட் டவர்கள் இப்போது மிகப்பெருஞ் செல்வமுடைய ஆங்கிலப் பிரபுக்களின் புகழும் மங்குமாறு கீழை நாட்டுச் செல்வத்தையும் சிறப்பையும் பெற்றுத் திரும்பி வந்திருக்கின்றனர் என்று ஐரோப்பா வியந்தது. உண்மையைக் கூறின் கிலாரி ஒரு தொழிலாளியாக இருந்தவன். எனினும் இப்போது மூவாயிரம் ஏக்கர்ப் பரப்புள்ள ஒரு நீர்வளப் பகுதியை வாங்கி நிறைய மீன் பிடித்து விற்றுப் பெரும்பண மீட்டலாம் என்று மனத் தில் எண்ணம் தோன்ற அவன் இதைப்பற்றி லாபோர் டிடம் ஆய்வுரை கேட்டான். ஆனால் இப்போது பரந்த நிலம் வாங்குவதை அவர் விரும்பவில்லை. அதனால் கம்பெனிவேலையிலேயே கருத்துநாட்டஞ்செலுத்துவது கட்டாயமாயிற்று. இருப்பினும் வாழ்க்கையின் இன்பம் அனுபவிக்க வேண்டிய அவ்விளமைக் காலத்தில் ஆண் டுக்கு ஆயிரம் அல்லது ஆயிரத்திருநூறு பவுன்களை மட்டும் பெற்றுக்கொண்டிருப்பது போதாது; வேலையி லிருந்து ஓய்வு பெறுமுன்பு பணத்தை நிறையப்பெருக்க வேண்டுமென விரும்பினான். அவன் வேண்டியது எல்லாம் அறிவுமிக்க ஒரு சிலர்தாம். அவர்களைக் கூட் டாகச் சேர்த்துக் கொள்ள விரும்பி[illegible]தற்குத் தகுந்தவர்கள் மிடில்மசில்தான் [illegible]டைப்பார்கள் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது.

• காதல் அல்லது வீர[illegible]ர்வு நிரம்பியவர்கள[illegible] மிடில்மசு ஊரினர் கேப்டன் கிலாரியின் அ[illegible]

110770

யங்களைக் கேட்டு வெவ்வேறு உணர்ச்சிகளைப் பெற்ற னர். ஆனால் அவற்றைப் பற்றி யாரும் ஐயுறவில்லை; வல்லமையுடையவன் என்ற எண்ணமே எல்லா ருடைய உள்ளத்திலும் இருந்தது. அவனிடம் பெரும் பணம் இருப்பதாக எண்ணி மிடில்மசில் இருந்த அவன் பழைய நண்பர்கள் அவனை நன்கு வரவேற்றனர்.

அச்சிற்றூரில் சில முக்கியமானவர்கள் தனித்தே இருந்து வந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மருத்துவர் கிரே. இவ்வுலகில் ஆடம்பரம் என்று சொல்பவற்றிற்கு எல்லாம் அவர் எதிரி. போரைப் பற்றி மிகுதியாகப் பேசிக் கொண்டிருப்பவன் வீரமிக்க போர்வீரன் அல்லன் என்பதும், எப்போதும் பணத் தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவன் உண்மையில் பணக்காரன் அல்லன் என்பதும் அவர் பொதுவிதி யாகக் கொண்டிருந்தவை. இவ்வாறு அவர் உலகத்தை நன்கு உணர்ந்திருந்தார். கிலாரி தான் வாங்கப் போகும் நிலத்தைப்பற்றி நன்கு சொல்லியிருந்தும் லாபோர்டு அடக்கமாகவே இருந்தார். 'கேப்டன்'னின் பழைய முதலாளியான லாபோர்டு அவனிடம் அதிகம் வைத்துக் கொள்ளாமலிருப்பது கண்டு பலருக் கும் சிறிது ஐயம் தோன்றலாயிற்று. இருவருக்கும் முன்பு ஏதாவது மனத்தாங்கல் நிகழ்ந்திருக்கும் என்று எண்ணிக்கொண்டனர். லாபோர்டே இதைப்பற்றி எதுவும் கூற விரும்பாததால் நாம் எதுவும் ஊகிக்க வேண்டியதில்லை.

ரிச்சர்டு மிடில்மசு மிக இயல்பாகவே தன் பழைய நண்பனின் தொடர்பைப் புதுப்பித்துக் கொண்டான். கிலாரியின் உரையாடலிலிருந்தே இந்தியாவைப்பற்றி அறிந்து கொண்டு இந்தியாவின் மேல் ஆர்வங் கொண்



டான். வீர உணர்வு ததும்பும் உள்ளமுடைய—உலக அனுபவமில்லாத—ஓர் இளைஞன் சொல்லாற்றல் மிக்க கிலாரியின் உரைகளில் மயங்கி அவற்றை அனுதாபத் துடன் கேட்காமல் இருந்திருக்க முடியாது. கிலாரியின் வருணனையில் புற்றீசல் போல மாட மாளிகைகள் தோன்றிவிடும். மாமலர்ச் சோலைவனங்களும், நறு மணப் பூம்பொழில்களும் அரசப்புலி முதல் குள்ளநரி யீறாக அனைத்து விலங்குகளும் வாழுமிடங்களாகக் கூறப் படும். அக் கேப்டன் வெவ்வேறு சமயங்களில் விவ ரித்த பெரும் போர்களையும் வெற்றிகளையும் போலவே, வானுலகத்து அரம்பையர் வெற்றிப்புகழ் படைத்த ஆங்கிலேயர் முன்பு வந்துதோன்றிப் பலவித நடனங் களை யாடுவர் என்று அவன் விளக்கும் பகுதிகளும் சுவை மலர்ந்திருக்கும். அவன் பேசுவதெல்லாம் தாஜ்மகாலைவிடச் சிறந்த மாளிகைகளைப் பற்றியே. பேசும் ஆறு எல்லாம் பொன்மணலில் ஓடும் ஆறுகளே. அவன் வருணனைகள் எல்லாம் நறுமணம் கமழ்ந்தன. ஒவ்வொரு சொல்லும் மல்லிகை மலரின் மணத்தை வீசியது. இவ்வருணனைகள் பேசப்படும்போதெல்லாம், சுகவாழ்வில் விருப்பினனான இக்கேப்டன் எடின்ப ரோவிலிருந்து கொண்டு வந்த மதுத்தேறல் பருகப் படும். இந்த மகிழ்ச்சிச் சூழலில் இருந்துவிட்டு ரிச்சர்டு மருத்துவரின் வீட்டுச் சாப்பாட்டை உண்பதற்காக மாலையில் மனநிறைவின்றிச் செல்வான். மெனியின் பகட்டில்லாத எளிய அழகெல்லாம் சேர்ந்துகூட அவன்றன் வெறுப்புணர்ச்சியைத் தணிக்க முடிய வில்லை. அவன் கண்காணிப்புக்கு வரும் எளிய ஏழை களின் நோய்களைப் பற்றிய கேள்விகளுக் கெல்லாம் விடையளிக்கவும் விருப்பமின்றி யிருந்தான்.

ரிச்சர்டு தன்தந்தை தன்னை ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கையை இழந்து எவ்வளவோ காலம் கடந்துவிட்டது. அவன் தாத்தா மட்டும் அடிக்கடி அவனைப் பற்றி நினைத்து வந்தது அவனுக்கோர் ஆறுதலாயிருந்தது. எனினும் அப்போதோ அல்லது எதிர்காலத்திலோ, ஜமீசன் அவனுள்ளத்தில் வித்திட்ட இன்பஎதிர்கால எண்ணங்களை அவனால் என்றும் மறக்கமுடியாது. பேராவலைத் தூண்டிவிட்ட பழைய நம்பிக்கைகள் அவற்றை இப்போது உயிரூட்டி வளர்க்காவிட்டாலும், ஆசை என்னவோ தணியாமல்தான் இருந்து வந்தது. பழங்காலக் கதைகளிலிருந்து முதலில் சொல்வன்மையுடன் கருத்துக்களை எடுத்துக் கூறிய கேப்டன் பிறகு லாரென்சு, கிளைவ் முதலியோரின் வெற்றிச் சாதனைகளைப் பற்றியும், இந்தியாவில் செல்வம் சேர்க்க நனிசிறந்த வாய்ப்புக்களை இவ்வீரர்களின் செயல்கள் ஏற்படுத்திக் கொடுப்பதைப்பற்றியும் இப்போது விளக்கிக் கூறவே, ரிச்சர்டுக்கு இரவில் தூக்கமே வருவதில்லை. இத்தகைய செயல்களில் ரிச்சர்டும் ஈடுபடத் தடையாயிருப்பன மெனிகிரேயின் காதலும், அதனால் நேர்ந்த காதல் சந்திப்புக்களுமே. தன்னுடைய பெருமையைப்பற்றியும், அந்தக் கள்ளமற்ற பேதைப் பெண்ணின்மேல் தனக்குள்ள அடங்காக் காதலைப்பற்றியும், அவளிடம் நிறையக் கூறியிருக்கிறான். அக்காதல் பரிசைத் தானே தட்டிக்கொண்டுபோக ஆசைகொண்டான் ரிச்சர்டு. ஆனால் அப்பரிசைக் காதலிக்காத ஆடம் அதற்காக ரிச்சர்டுடன் சண்டையிடும் உரம் பெற்றிருந்தான். தன்னைக் காட்டிலும் மதிப்பிலும் செல்வத்திலும் மிக்கோர் மெனியை வியந்து போற்றும்போது,



அக் காதல்பரிசைப் பற்றி அவர்களுடன் வழக்காட ரிச்சர்டின் பேராசை தூண்டியது. முதலில் தற்பெருமையுடன் தன் சிறப்பை எல்லாருக்கும் வெளிக்காட்டத் துடித்தபோதிலும், அடக்கமாகவும், மனம்விட்டும் அவன் காதலை மெனி ஏற்றுக்கொண்டாள். அதனால் அவன் மனநிறைவுற்றான்.

மற்றெல்லாரினும் தன் அழகையும், திறமைகளையும் பெரிது பாராட்டிய அவ்வழகு மடந்தைக்கு ரிச்சர்டு நன்றியுள்ளவனாயிருந்தான். அவள்மேல் இடையறாக் காதல்கொண்டிருப்பதாகவும் நினைத்துக்கொண்டான். அவளுடைய எழில் வனப்பும், மனச்சிறப்புக்களும் தன்னினும் உயர்ந்த எவரையும் அவளிடம் மனங்கொள்ளச் செய்யும் என்பதை உணர்ந்திருந்தான். எனினும் தன் வாழ்க்கைப் போக்கைத் தீர்மானிப்பதில் மருத்துவர் மகள் மேற்கொண்டுள்ள காதல் தேவைக்கதிகமான சிறப்பிடம் பெறக்கூடாது என விரும்பினான். அதனால் தனக்குச் செல்வம் சேரும்வரை திருமணத்தை ஒத்திப் போடலாம் என்பதே மெனியின் கருத்துமாகும் என்று தனக்குத்தானே அடிக்கடி கூறிக்கொண்டு தன் மனத்தைச் சமாதானம் செய்துவந்தான். தக்க காலத்திற்கு முன்பே காதல் வாழ்க்கையில் ஈடுபட்ட எத்தனை இளங்காதலர்கள் மாழாந்து போயுள்ளனர் என்று மனத்தில் எண்ணிக் கொண்டான்.

கடைசி முறையாகச் சந்தித்தபோது ஆடம் இகழ்ச்சிக் குறிப்புடன் நடந்துகொண்ட முறையினால் ரிச்சர்டிடம் இருந்த நம்பிக்கையில் ஆட்டம் உண்டாகிவிட்டது. அன்பு பாராட்டத் தக்கவளும் நல்லூழ் வாயாதவளுமாகிய இவ்விள நங்கையிடம் இன்னும்

உறுதிப்பாட்டுடன் பழகாது வெறுப்புண்டாக்கத்தக்க முறையிலும், ஆண்மையில்லாதும் பழகுவதாக உணர்ந்தான். இந்த ஐயப்பாட்டு உணர்ச்சியுடன் தன் நண்பன் கேப்டனுக்காக அன்னச் சத்திரத்தில் நின்று அவனை ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

கேப்டன் வந்ததும் இருவரும் வசதியான ஓரிடத்தில் அமர்ந்தனர். தனக்கே யுரித்தான எச்சரிக்கையுணர்வுடன் கேப்டனைப் பார்த்து, கம்பெனி வேலையில் மேல்வரும்படி பெறுவதற்கான வாய்ப்புக்களைப் பெறுவது அரிதா எளிதா என்று வினவி, அதற்கேற்ற விடையை எதிர்பார்த்தான். உண்மையை உரைப்பதாயிருந்தால் அது எளிதுதான் என்றே கிலாரி பதிலுரைத்திருப்பான். ஏனெனில் அக்காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனிப் பணியில் நுழைந்து விட்டவர்களுக்கு எவ்விதக் கட்டுப்பாடும் இருக்கவில்லை. ஆனால் பொதுவாக மேல்வரும்படி பெறுவது புதிதாகச் சேர்ந்த இளைஞர்கட்கு அரிதாயினும், தன் படையில் சேர்ந்தவர்க்கு எளிதாகும் என்று கேப்டன் கூறினான். ரிச்சர்டின் கையைப்பற்றி, "ரிச்சர்டு. நீ பயிற்சிப் படையில் ஒருவனைச் சேர்ந்திருப்பதே முதலில் உனக்கு இன்றியமையாததாயினும், என்னுடன் உடன்பிறந்தானைப் போலவே கப்பலில் பழக வேண்டும். நாம் சென்னைக் கடற்கரையை அடைந்ததும் செல்வமும் புகழும் நீ ஒருங்கே பெறும் வழியில் உன்னைச் செலுத்துவேன். நீ இரண்டாயிரம் பவுன்களேனும் வைத்திருப்பாய் என நம்புகிறேன்" என்றான்.

கேப்டனைப் போலவே கருத்தில்லாதவனைப்போல ஓராயிரம் அல்லது ஆயிரத்திருநூறு பவுன் இருக்கும்



என்று பதில் கூறினன் ரிச்சர்டு. ஆனால் மனத்துக்குள்ளே போதிய பணமில்லாக் குறையை எண்ணித் தாழ்வுணர்ச்சியுற்றான். "உடைக்கும் பயணச் செலவுக்கும் அது போதும். உண்மையில் இந்தப் பணம் எல்லாச் செலவுக்கும் போதுமானதன்று. ஒரு நண்பரிடம் 'உனக்கு உதவி செய்வேன்' என்று சொன்னால், இந்த டாம் கிலாரி பணத்திற்காகப் பயப்படுபவனல்லன். ஆனால் எதற்கும் உன்னிடம் சொந்தப் பணம் இருப்பது எவ்வளவோ நல்லது" என்று அறிவுரை கூறினன் கேப்டன்.

"ஆமாம்" என்று ஒத்தூதினன் ரிச்சர்டு; "யாருக்கும் பாரமாக இருப்பதை நான் விரும்பவில்லை. உண்மையைச் சொல்லப்போனால், பிரிட்டனைவிட்டுப் போவதற்கு முன்பு திருமணம் செய்துகொள்ளலாம் என்று இருக்கிறேன். அப்போது என் மனைவி என்னுடன் புறப்பட்டு வந்தாலும் வராவிட்டாலும், பணம் தேவைதான். அதனால் உங்களிடம் ஒருசில நூறு பவுன்கள் மட்டும் கடன்வாங்க வேண்டியிருக்கும்" என்றான்.

"என்ன ரிச்சர்டு, திருமணத்தைப்பற்றி இப்போது பேசிக்கொண்டிருக்க உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? வீரம் சிறந்த இளைஞன். வயது இருபத்தொன்றுகூட ஆகவில்லை., ஐந்தரையடி உயரம்தான் வளர்ந்திருக்கிறாய். இதற்குள் நீ வாழ்கைக்கு அடிமையாகப் போகிறாயா? கூடாது டிக், அப்படிச் செய்யக்கூடாது" என்றான் கிலாரி.

"ஆமாம், அது நல்ல அறிவுரைதான். அப்படியானால் பழைய நினைவுகளையெல்லாம் மறந்துவிட வேண்டியதுதான்" என்றான் ரிச்சர்டு.

"எவ்வளவு விரைவில் மறக்கமுடியுமோ அவ்வளவு நல்லது; பழைய நினைவுகள் எல்லாம் பழைய துணிகளைப் போன்றவை; அவற்றையெல் லாம் மொத்தமாக வெளியேற்றிவிட வேண்டும்; துணிவைக்கும் அலமாரியில்தான் அப்பழந்துணி களுக்கு இடமுண்டு. அவைகளை அணிவது பழம் பாணியாகக் கருதப்படும். உன்னைப் பார்த்தால் கடுமுக முடையவளாகக் காணப்படுகிறாய். அப்படி உன் மனத் தில் வெறுப்புத் தோன்றச் செய்த பேய் யார்?" என்று கேட்டான் கிலாரி.

"ஆ, என் தலைவர் மகள் மெனிகிரேயை உனக்கு நினைவிருக்குமென நினைக்கிறேன்" என்றான் மிடில்மசு.

"என்ன, மிஸ் கிரீனா? மருந்து விற்றுவந்த கிரீன் என்பவர் மகளா? நல்ல பருவம் வந்தவள் தான்" என்றான் கிலாரி.

"என் தலைவர் ஒரு டாக்டர். மருந்து விற்பவ ரல்லர். அவருடைய பெயர் கிரே" என்று விளக்க மாகக் கூறினான் ரிச்சர்டு.

"கிரே அல்லது கிரீன். இருவருக்கும் என்ன வேற்றுமை? கிரீன் மருந்துகளை விற்கிறார். அவரை நாங்கள் மருந்துக்காரர் என்கிறோம். அந்தப் பெண் ணும் நடனமாடுவதற்கேற்ற பருவமடைந்திருக்கிறாள். சரி. அந்த மெனி எப்படிப்பட்டவள்?"

"அவள் என்னைக் காதலிப்பவள்; சிறந்த அறிவுடையவள். சிறந்த அன்பும் எளிமையும் படைத்தவள்; எதையும் திறம்பட நிர்வகிக்கும் ஆற்ற லுடையவள்" என்று பதிலளித்தான் ரிச்சர்டு.



"அப்படியானால் அவள் பயனில்லை. மன்னிக்கவும் டிக். அவள் பயன்படமாட்டாள். இந்தியாவில் நாம் வாழும் சுறுசுறுப்பான வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய பெண்கள் சிலர் இவ்வுலகில் இருக் கின்றனர். கடைசித் தீர்ப்புநாள்வரை மண்ணில் மறைந்து கிடக்கும் இயல்புடைய சில மனிதர்களைக் கணவராகப் பெற்றிருந்தும் அவர்களை மேன்மையுறச் செய்துவிடுகின்றனர். ஆனால் அவர்கள் நீ சொல் லும் பெண்ணைப்போலத் தங்கள் கண்ணெல்லாம் கணவரைக் காண்பதற்காகவே என்றும், கைகள் எல்லாம் குழந்தைகளின் துணிகளைத் தைப்பதற் காகவே என்றும் எண்ணுபவர்கள் அல்லர். எனவே நீ உன் திருமணத்தையும், அதைப்பற்றிய எண்ணங் களையும் மறந்துவிட வேண்டும். வேண்டுமென்றே கழுத்தைச் சுற்றித் துண்டைக் கட்டிக்கொள்ள விரும்பி னால், ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்ளும் எண் ணத்தை விட்டுவிடவேண்டும்; ஆனால் காதலியைக் கைவிடுவதால் வாழ்வில் ஏதேனும் பேரிடி ஏற்பட்டு விடும் என்று நினையாதே. பிரியும்போது துன்பம் இருக்கலாம். ஆனால் விரைவிலேயே அவளை மறந்து விடுவாய். அவளும் வேறொருவனைக் காதலித்துக் கொள்வாள். இந்தியாவில் வாழ அவள் தகுதியற்ற வள் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்" என்று பேசினான் கிலாரி.

பொருள்களைப் பற்றியோ, மனிதர்களைப் பற்றியோ அவர்களின் உண்மையான மதிப்பை நாமே நேரில் கண்டு மதிப்பிடுவதை விட்டுவிட்டுத் தகுதியில்லாத பிறருடைய கருத்துக்களைக் கொண்டு மதிப்பிடுவது மனிதகுலத்தின் குறிப்பிடத்தக்க குறைபாடாகும். டிக்

மிடில்மசு மெனியைப்பற்றி இதுவரை கொண்டிருந்த உயர்ந்த எண்ணமெல்லாம் இப்போது குறைந்து விட்டன. இதற்குக் காரணம் அவளைப்பற்றிக் கிலாரி மதிப்புக் குறைவாகப் பேசியதை அவன் அப்படியே நம்பியதுதான். ஹோமரின் காப்பிய அழகை அனுப விக்கும் தகுதியைப் பெறுவதுபோலவே மெனியின் சிறப்புக்களை மதிப்பிடும் அவ்வளவு தகுதியும் பெற்ற வர்களாக அவர்கள் இருந்திருக்கவேண்டும்!

உறுதியானதும், நம்பிக்கை யூட்டத்தக்கதுமான கிலாரியின் பேச்சு, ரிச்சர்டுக்குக் கேடு பயப்பதாகவே அமைந்தது. கிலாரி, ரிச்சர்டைக் காட்டிலும் செய்தி களை யறிவதிலும், திறமையிலும் குறைந்தவனாயினும், இப்போது ரிச்சர்டின் எண்ணங்களை அலைமோதச் செய்தான். இளமையிலிருந்தே எதிர்கால இன்பக் கனவுகளைக் கண்டுகொண்டிருந்த ரிச்சர்டுக்குக் கிலாரி செல்வத்தையும் சிறப்பையும்பற்றிக் கூறிய சொற்கள் கற்பனைக்கு விருந்தாய் அமைந்தன. ஒரு வாக்குறுதி மட்டும் கேட்டு வாங்கிக்கொண்டான் கிலாரி. எதற்கு இந்தியாவுக்குப் போகிறோம் என்பதை மட்டும் பிறரிடம் சொல்லக்கூடாது என்று உறுதி கூறும்படி கேட்டுக் கொண்டான். "இவ்வூரில் முதலில் பிறக்கும் பிள்ளைகளை எல்லாம் போர் வீரர்களாக ஆக்க எனக்கு விருப்பம். வாக்குறுதி கொடுப்பதில் எப்போதும் கவனமுடைய வன் நான். எல்லாருக்கும் நான் வாக்குறுதி கொடுப்ப தில்லை. உன்னைப்போன்ற பழைய நண்பர்க்குத்தான் வாக்குறுதி தருவேன்" என்றான் கிலாரி.

ரிச்சர்டு இரகசியத்தைக் காப்பதாக உறுதி கூறினான். இருவரும் இவ்வூரிலிருக்கும்போதுகூடப் பிரியக்கூடாது என ஒப்பந்தம் செய்துகொண்டனர். கிலாரி முதலில் புறப்படவேண்டும்; அவன்றன் புதிய படை எடின்பரோவில் வந்து, அவனுடன் சேர்ந்து கொள்ளவேண்டும்; பிறகு இருவரும் இந்தியாவுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டும் என்று கிலாரி கூறினான்.



இதற்குப்பின், உறுதியாகப் புறப்படப் போவதாக முடிவு செய்திருந்தாலும், ரிச்சர்டு அடிக்கடி கவலையுட னும் வருத்தத்துடனும் மெனியைப் பிரிய நேருவதைப் பற்றி எண்ணிக் கொள்வான். முடிவு செய்தாயிற்று; ஓங்கிய கை அடித்தேயாகவேண்டும். நன்றியறிவில் லாத காதலனால் அவள் தன் இன்பங்களை எல்லாம் இழக்க நேர்ந்தது. அவன் தன் கருத்துக்களைச் சிறிது மாற்றிக் கொண்டிருந்தால், அவளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்கலாம். இப்போது ரிச்சர்டு அவளை முற்றி லும் கைவிட்டுப் போவதென முடிவு செய்யாமல் அவளை மீண்டும் சந்திப்பதை இந்தியப் புறப்பாட்டின் வெற்றிக்குப் பிறகு வைத்துக்கொள்ளலாம் என எண்ணினான்.

இந்தியப் பயணத்தைப் பற்றியே ரிச்சர்டு எந்நேர மும் எண்ணிக் கொண்டிருந்தான். இந்தியாவில் பெருஞ்செல்வம் பெறுவதாயினும், மெனிகிரே தன் தந்தையின் கட்டளையை மீறிவிட்டு இந்தியாவுக்குப் புறப்படமாட்டாள். ஒரே சமயத்தில் மகளும் புறப்பட்டு விட்டால் மருத்துவருக்கு உதவியாளரான இருவரை யும் ஒருங்கே இழந்து விட்டோமே என்ற கவலை ஏற்படும். ஓய்வு நாட்களில் முற்றிலும் தனிப்பட்ட வரைப்போல வாழ நேரிடும். இருவரும் விரைவில்

திருமணம் செய்வதற்கு உடன்படுவதில்லை என்று மாற்றமுடியாத உறுதிகொண்டுள்ளனர். மற்றக் காதலிகளைப் போலத் தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்ளும் சக்தியையும் மெனி படைத்திருப்பவளேயாயினும், ரிச்சர்டு அவளை நெருங்கித் தொடுவதை விரும்பவில்லை. கிடைக்கும் பணத்தைக்கொண்டு அமைதியாக இருந்து அவளுடன் வாழ்ந்தின்புறுவதைக் காட்டிலும் பேராசைத் திட்டங்களை மேற்கொண்டு காதலன் வெளிநாட்டுக்குச் செல்வதை அவள் உள்ளம் விரும்பவில்லையாயினும், அவளது அடக்கமும், நாணமும் அதை வெளிக்காட்டாமல் மறைத்துவிட்டன.

மெனியின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியலைகள் இவை: "ரிச்சர்டு என்னிடம் சொல்லியதைப்போல உண்மையாக என்னைக் காதலித்திருந்தால் என் தந்தை ஆடமுக்குக் கொடுத்த தொகையை இவருக்கும் கொடுப்பதில் கடைசியில் பின்வாங்கியிருக்கமாட்டார். அவருடைய தடைகள் யாவும் நீங்கி என் வாழ்க்கையின்பத்திற்கு வழியும் ஏற்பட்டிருக்கும். அல்லது ரிச்சர்டு வற்புறுத்தி வேண்டிக்கொண்டிருந்தால் தந்தையின் ஐயப்பாடுகள் எல்லாம் நீங்கியிருக்கும். ஆனால் ரிச்சர்டு அந்த ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ள விரும்பியிருக்கமாட்டார். இவ்வளவு நன்கு பழகியிருந்தும் அவர் என்னைத் தந்தையுடனே இருக்கிறாயா அல்லது இந்தியாவிற்கு வந்து செல்வத்தை நுகர விரும்புகிறாயா என்று என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கக்கூடாதா? தந்தையின் சம்மதமின்றி இந்தியாவுக்குப் புறப்பட ஒருப்பட்டிருந்தால் அது மிகப்பெருந்தவறாகும். ஆனால் ரிச்சர்டே அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். ஐயோ! பெண்களைப்போல ஆண்கள்



காதலிக்கத் தெரியாதவராயிருக்கின்றனரே! அவர்களுக்கு ஏற்படும் ஆயிரம் உணர்ச்சிகளுள் காதலும் ஒன்றாயிருக்கிறதே! நாள்தோறும் இன்பமாகப் பழகுகின்றார்கள். அதனால் அவர்கள் உணர்ச்சிகள் மழுங்கிவிடுகின்றன. அவர்கள் செய்யும் தொழில் அவ்வுணர்ச்சிகளைத் திசைமாற்றி விடுகின்றன. நாம்—பெண்கள்—வீட்டில் அழுவதற்காகவே பிறந்திருக்கிறோம். நம் அன்பு இவ்வாறு அவமதிக்கப்படுகின்றது என்பதை நினைத்து அழுகிறோம்."

இப்போது ரிச்சர்டு நகர எழுத்தரிடமும், மருத்துவர் கிரேவிடமும் கொடுக்கப்பட்ட பணத்தை உரிமையுடன் கேட்கும் காலம் வந்தது. அவனும் அவ்வாறே அதைக் கேட்டு வாங்கிக்கொண்டான். வாழ்க்கையைத் துவங்குவதில் ரிச்சர்டு என்னென்ன திட்டங்கள் வைத்துள்ளான் என்பதை விசாரித்தறிய லாபோர்டு விரும்பியது இயல்பே. அவருக்கு ரிச்சர்டு உடனே பதில் சொல்லத் தொடங்கினான். ஆனால் சில உண்மைகளைச் சொல்லிவிடக்கூடாதென அவன் மனத்தில் தோன்றியதால், இலண்டனுக்குப் போனபிறகு தன் இன்ப எதிர்காலத் திட்டங்களைப் பற்றி அவர்க்கு எழுதுவதாகக் கூறினான்.

இந்த முக்கியமான வாழ்க்கைக் கட்டத்தில் அவன் தந்தையோ, பாட்டனாரோ அவனிடம் தொடர்பு வைத்துக் கொள்ள விழைவர் என்று எண்ணிய மருத்துவர் இவை மட்டும் கூறினார்: "ரிச்சர்டு, நீ ஓர் அதிசயக் குழந்தையாகப் பிறந்தாய். நீ எப்படி என்னிடம் வந்தாயோ அப்படியே என்னைவிட்டுப் பிரிகிறாய். அப்போது நீ எங்கிருந்து வந்தாய் என்றறியாமல்

இருந்தேன். இப்போது நீ எங்கே போகிருய் என்றறிகிலேன். உன் சாதகத்திலேயே அப்படி அமைந்திருக்கும்போலும். அதனுல்தான் உன்னைப்பற்றி ஒவ்வொன்றும் இரகசியமாகவே இருக்கிறது. நீண்டநாள் பழகியோரை நான் எப்போதும் அன்புடன் நினைத்துக் கொள்வது வழக்கம். அதுபோலவே நீயும் இக்கிழவனைப் பற்றி நினைக்கும்போது, நான் என் சக்திக்கும், திறமைக்கும் ஏற்றவாறு என் கடமையைச் செய்திருக்கிறேன் என்பதையும், நீ எங்கே போனுலும் உனக்கு எப்படியும் உணவுக்காகச் சம்பாதித்துக் கொள்வதற்கான ஒரு நல்ல தொழிலைக் கற்றுக்கொடுத்துள்ளேன் என்பதையும், அத்தொழில் உன் சகோதரர்களின் துன்பங்களைத் துடைக்கும் அரிய தொழில் என்பதையும் நினைத்துக் கொள்வாயாக.''

அவருடைய அடக்கம் நிறைந்த அன்பைக் கண்டதும் ரிச்சர்டுக்கு உணர்ச்சி மிக்கது. அவருக்கு நன்றியுரைகளை அள்ளிச் சொரிந்தான். அப்போது ஒரு மோதிரப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு மருத்துவர் 'இன்னும் ஒரு வார்த்தை' என்று சொல்லத் தொடங்கினுர்; "இந்த விலை மதிப்புள்ள மோதிரம் உன் நல்வினையில்லாத தாயினுல் என்னிடம் கொடுக்கப்பட்டது. எனக்கு நிறையப் பொருள் கொடுத்திருப்பதால், இந்த மோதிரத்தையும் எனக்காக வைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. இதுபோன்ற சமயம் வரும்வரை வைத்திருந்து உனக்குக் கொடுக்கலாம் என்றே அதை நான் ஏற்றுக் கொண்டேன். உன்னைப்பற்றி அடையாளம் அறிந்து கொள்வதற்கு இது பயன்படும்; வைத்துக்கொள்" என்று சொல்லி மோதிரத்தை அவன் கையில் கொடுத்தார். அதை



வாங்கிய ரிச்சர்டு, "என் தந்தையினும் சிறந்தவரே, மீண்டும் நன்றி கூறுகிறேன். மிகவும் பயன்படும் இந்த விலை மதிப்புள்ள அடையாளத்திற்காக மிக்க நன்றி! இந்தியாவில் வைரங்கள் கிடைத்தால் இதற்குப் உங்கட்கு பதிலாக அவற்றைத் தருவேன்" என்றுன்.

"இந்தியா! வைரங்கள்! என்ன உன் மூளை மாறி விட்டதா?'' என்று கேட்டார் மருத்துவர்.

"இல்லை, இலண்டனில் கிடைக்கும் இந்திய வைரங்களைச் சொன்னேன்" என்றுன் ரிச்சர்டு.

"பூ! பைத்தியம்! நீ எப்படி வைரங்களை வாங்கப் போகிருய்? நான்தான் அவ்வளவு வைரங்களை வாங்கி வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறேன்? நான் கோபமாயிருக்கும்போதே என்னை விட்டுப் பிரிந்துவிடு.''—இவ்வாறு சொல்லும்போது அவர் கண்களிலிருந்து நீர்த்துளிகள் தெறித்தன. "உன்மேல் மீண்டும் விருப்பங்கொண்டால் பிறகு உன்னைப் பிரிவது எப்படி என்று தெரியாது" என்றுர்.

ரிச்சர்டு மெனியைப் பிரிந்து செல்வது இன்னும் உணர்ச்சிப் பெருக்குடையதாய் இருந்தது. அவனுடைய துன்பம் தலைநாட் காதலின் மகிழ்ச்சியை யெல்லாம் அவன் உள்ளத்தே மீண்டும் தோன்றும் செய்தது. உண்மைப் பாசம் மலர்ந்தது. உணர்ச்சி வசப்பட்டு உடனடியாகத் தன்னுடன் சேருவதற்கு இணங்குமாறு கெஞ்சினுன். மருத்துவரின் மகளை உரிமையாகப் பெறுவதாயிருந்தால், பெருஞ்சிறப்புக்களைப் பின்னுல் நல்கும் இந்த ஏற்பாடுகளை யெல்லாம் தவிர்த்து, மருத்துவரது எளிய தொழிலை மேற்கொள்ளவும் தயார் என்று தெரிவித்தான். அவள் தன் காதலனின்

கூற்றில் மனநிறைவு பெற்றுளாயினும், பின்னால் வருந்தக்கூடிய தியாகத்தைச் செய்யுமளவுக்கு அவள் உணர்ச்சிவயப்பட்டு விடவில்லை.

அவள் ரிச்சர்டைப் பார்த்து, 'இல்லை,' ரிச்சர்டு. பலநாள் முயன்று செய்துகொண்ட முடிவை உணர்ச்சி வயப்பட்டுத் திடீரென ஒரு கணத்தில் மாற்றிக்கொள்வதால் இன்பமான பயன் விளையப்போவதில்லை. இந்த இடம் கொடுக்கக்கூடிய பலன்களைக் காட்டிலும், அதிக பலன்களை யடைவதற்காகவே நீங்கள் திட்டமிட்டிருக்கின்றீர்கள் என்பதை நீண்டகாலமாய் அறிந்து வந்திருக்கிறேன். உங்கள் பிறப்பு செல்வத்துடனும், சிறப்புடனும் தொடர்புகொண்டிருப்பதைக் கருதும்போது உங்கள் திட்டமும் அவ்வாறு இருப்பது இயல்பே. போங்கள். போய்ப் புகழையும் செல்வத்தையும் தேடுங்கள். பொருளீட்டத்தின் ஈடுபாட்டில் உங்கள் மனம் மாறிவிடலாம். அப்படி மாறினால் மெனி கிரேவைப் பற்றி நினைக்காதீர்கள். இல்லாவிடில் நாமிருவரும் மீண்டும் சந்திப்போம். ஆனால் மெனிகிரேவின் காதலில் மாற்றம் ஏற்பட்டுவிடும் என்றுமட்டும் நம்பவேண்டாம்'' என்றாள்.

இந்தச் சந்திப்பில் இன்னும் எத்தனையோ பேசப்பட்டன; எண்ணப்பட்டன. இச்சந்திப்பு ஜமீசன் அறையில்தான் நிகழ்ந்தது. அவள் அவர்களைப் பார்த்துக் கடவுள் அவர்கள் இருவரையும் ஒருவர் மற்றவர்க்காக இருக்கும்படியே படைத்துள்ளாரென்று கூறினாள். இருவரையும் மாப்பிள்ளையாயும் மணப்பெண்ணாயும் பார்த்த பிறகு இவ்வுலகில் ஒரு நாள்கூட வாழவிரும்பவில்லை என்று அவன் கடவுளிடம் வேண்டிக்கொண்டான்.



ரிச்சர்டு குதிரையிலேறிச் செல்லுதல்

கடைசியில் பிரிவுக்கட்டம் முடிவுறும் நிலை வந்தெய்தியது. ரிச்சர்டு பயணத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒரு குதிரையின் மேலேறிக்கொண்டு எடின்பரோவுக்குப் புறப்பட்டான். புறப்படுமுன்பே அந்நகரத்திற்குத் தன் மூட்டை முடிச்சுகளை யனுப்பி விட்டான். வழியில் செல்லும்போதுகூட மீண்டும் திரும்பிச் சென்று மெனியுடன் கூடிக் களித்து, எளிய ஊதியத்துடன் வாழலாமே என்ற எண்ணம் பலமுறை அவன் மனத்தில் தோன்றியது. ஆனால் நண்பன் கிலாரியைக் குறிப்பிட்ட இடத்தில் சந்தித்த நாளிலிருந்து தன் கொள்கையில் சிறுமாற்றம் ஏற்படவிருந்ததை அவனிடம் குறிப்பாகச் சொல்லக்கூட வெட்கமுற்றான். ஒரு குறிப்பிட்ட அளவு பணமும் புகழும் சேர்ந்தவுடனே அவற்றை மெனிகிரேவுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உறுதிப்பாட்டு எண்ணத்தைத் தவிரப் பிற எண்ணங்களும், உணர்ச்சிப்பாடுகளும் அவனுள்ளத்திலிருந்து மறைந்தன. ஆயினும் அவள் தந்தையாகிய மருத்துவரிடம் அவன் கொண்டிருந்த நன்றியுணர்ச்சி தூங்கிவிடவில்லை. எடின்பரோவை அடைந்ததும், தங்கத்தால் செய்த சிங்க உருவம் பொருந்திய ஒரு முத்திரையைக் கவனமாக ஒரு கடிதத்துடன் மருத்துவருக்கு அனுப்பிவைத்தான். மெனிக்கு அவன் கையெழுத்துத் தெரியும். அதனால் அக்கடிதத்தைத் தந்தை படிக்கும்போது அவர் முகத்தில் தோன்றிய மெய்ப்பாடுகளை உற்று நோக்கினாள். வேறு பொருளைப் பற்றிய கடிதம் என்று ஊகித்தாள். அவர் 'பூ' என்று பலமுறை சொல்லிக்கொண்டு, அதைப் படித்துவிட்டு அம்முத்திரையைப் பிரித்துப் பார்த்தார். "டிக் மிடில்மசு ஒரு பைத்தியம்தான்! இதை ஒரு



ஞாபகச் சின்னமாக இருக்கும்படி அனுப்பியிருப்பதால் நான் என்றும் அவனை மறக்கமுடியாது. இதற்குப் பதிலாக மருத்துவக் கருவிகள் சிலவற்றை வாங்கி யனுப்பியிருக்கலாமே! சரி, மெனி, இந்த அழகான பொருளை எடுத்துப் பாதுகாப்பாக வை." என்றார்.

# 6. கப்பல் வாழ்வளித்த கடுந்துன்பங்கள்

கிழக்கிந்தியக் கம்பெனியின் புகழ்பெற்ற தொண்டில் பங்குபெறுவதற்காக வந்தவர் எல்லாருடைய பெயர்களையும் கேப்டன் கிலாரி பதிவு செய்துகொண்டான். எல்லாரும் எடின்பரோவை விட்டுப் புறப்பட்டனர். அங்கிருந்து கப்பல் வழியே நியூகாசிலுக்குச் சென்றனர். அங்கே கிலாரியின் உடன்பயின்ற ஒருவர் தலைமையில் புறப்படும் கப்பல் ஒன்றிருந்தது. மிடில்மசிடம் கிலாரி, 'நான் அந்த நண்பருடன் புறப்பட்டுப்போக ஏற்பாடு செய்திருக்கிறேன். ஏனெனில் கப்பலின் அடித்தளத்திலிருக்கும்போது நீ உன் கடமையைச் சிறிது அறிந்து கொள்வாய். அதைக் கப்பலின் மேல்தளத்திலிருக்கும்போது கற்றுத்தர வியலாது. பிறகு உனக்கு வேலையுயர்வைத் தருவது எளிது" என்றான்.

"நீங்கள் இலண்டனில் மகிழ்ச்சியாக இருக்கும்போது எல்லா நாளும் நான் மட்டும் வைட்தீவிலேயே இருக்க வேண்டும் என்கிறீர்களா?" என்று கேட்டான் ரிச்சர்டு.

"ஆமாம். உனக்கும் அது நல்லதுதான். இலண்டனில் ஏதாவது உனக்கு வேலையிருக்குமானால் அதை நானே கவனித்துக் கொள்கிறேன். உன்னைவிடக் கொஞ்சம் நன்றாகவே நான் அதைக் கவனிப்பேன்" என்றான் கிலாரி.

ஆனால் ரிச்சர்டு சிறிது சினம் கொண்டவனாய், "என் வேலையை நானே செய்துகொள்ள விரும்புகிறேன், கேப்டன் கிலாரி" என்று கத்தினான்.



"மிஸ்டர் மிடில்மசு! அப்படியானால் நீயே உனக்குத் தலைவனாக அமர்ந்திருக்க வேண்டும். இப்போது நீ மாண்புமிகு கிழக்கிந்தியக் கம்பெனியில் புதிதாகச் சேர்க்கப்பட்ட ஒருவன். நான் உன் மேலதிகாரி. நான் சொல்வதுபோல் நடக்கத் தவறினால் உன்னை விலங்கிட்டுச் சிறையில்கூட வைத்துவிடுவேன்" என்றான் கிலாரி.

இது விளையாட்டாகவே கூறப்பட்டது. ஆனால் அக்குரல் ரிச்சர்டின் செருக்கிற்குக் குறைவு ஏற்படுத்தி, அவனிடத்துச் சிறிது பயத்தையும் கிளப்பிவிட்டது. பிறர் முன்னிலையில் தன் நண்பன் அதிகாரத்துடனும், மேலாளத் தன்மையுடனும் பேசியதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அக்கடுமைப் பேச்சு இரு நண்பர்களுக்கிடையே நிகழ்வதொன்றே ஆயினும், இப்போது அவனால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இருப்பினும் அதை எதிர்க்கவோ, மீறிக்கூறவோ வழியறியா திருந்தான். முன்பெல்லாம் இப்படிப்பட்ட மனத்தாங்கலுக்குப் பிறகு விரைவிலேயே அவர்கள் நட்பு ஒன்றுகூடி விடும். ஆனால் இந்தச் சமயத்தில் அவ்வளவு விரைவாக மனம் ஒன்றுகூடவில்லை.

வேறு வழியில்லாமல் ரிச்சர்டு அவனுடைய நண்பனுடன் வைட் தீவுக்குப் போக ஒப்புக்கொண்டான். ஏனெனில், அவனுடன் சண்டையிட்டுக் கொண்டால், இந்தியாவுக்குச் செல்லும் பயணமும், அதன்மேல் எழுப்பப்பட்ட நம்பிக்கைக் கோபுரமும் இடிந்து தரைமட்டமாய்விடும் என்று அஞ்சினான். ஆனால் தன் எல்லாப் பொருளையும் கிலாரியிடமே

ஒப்படைத்து விடுவதாக எண்ணியிருந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டான். தன் விருப்பம்போல் பணத்தை எடுத்துக்கொள்ளுதற் கேற்றவாறு தன் பயணப் பெட்டியிலேயே வைத்துக்கொண்டான். தன் செலவினத்தை நன்கு கண்காணித்து வந்தான். கேப்டன் கிலாரியும் இதைப்பற்றித் தான் முன்பு கொடுத்த ஆலோசனையை ரிச்சர்டு ஏற்க மறுத்து விட்டதால், பிறகு அதைப்பற்றி நினைக்கவில்லை.

கடற்பயணம் இடையூறின்றியும் சிறப்பாகவும் செய்யப்பட்டது. உலகின் எப்பாகத்திற்குச் சென்றாலும் தான் பார்க்கும் எதையும் மறக்காத பண்புடைய ரிச்சர்டு அந்த அழகிய தீவை அகன்று சென்றான். விரைவில் கப்பல் ரைட் நகரத்தருகே நங்கூரம் பாய்ச்சி நின்றது. அங்கே அலைகள் மிகவும் அமைதியாக இருந்தன. பயணகாலத்தில் பயணிகளின் பெரும்பாலான நேரத்தைக் கொள்ளைகொண்ட கடல் நோய் இப்போது குறைந்து வருவதை உணர்ந்தான்.

கப்பலின் தலைவன் தன் பயணிகளுக்காகவும், தன் பள்ளித் தோழனின் அன்புக்காகவும் கப்பலின் மேல்தளத்தில் ஒரு கூடாரம் அமைத்து, அதில் எல்லோருக்கும் கப்பலைவிட்டு இறங்குமுன் சிறு விருந்தொன்று அளிக்க விரும்பினான். விருந்தினர்களுக்குக் கடல்மீது செல்வோர் மிகுதியாக விரும்பும் உணவு வகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டன. பிறகு உணர்ச்சியூட்டும் தேறல்கள் நிறைய அளிக்கப்பட்டன. கப்பல் தலைவனே பாம்புக் கடுப்பன்ன பன்ச் என்னும் மதுவை எல்லாரும் பருகுமாறு வழங்கினான். பிறகு இந்திய நாட்டின் பலதிறக் காட்சிப் படங்களையும்,



வீரச்செயல் படங்களையும் எடுத்துக் காட்டினான். அவை முதலில் ரிச்சர்டின் ஆவலைத் தூண்டிவிட்டன. இந்தியாவுக்குச் சென்ற உடனே கைப்பொருள் கிடைக்காது போயினும், அப்போது ஏற்படும் காலத்தாழ்வால் படைப்பயிற்சி யனுபவங்களாவது கிடைக்கும் என்று எண்ணினான். பன்ச் பானத்தை நன்கு பருகிக் களித்த ரிச்சர்டு தன் எண்ணத்திற்கு இடையூறாக எதுவும் நிற்காது என எண்ணமிட்டான். மற்றவர்களைக் காட்டிலும் அவன் மிகுதியாகக் குடித்தானோ இல்லையோ தெரியாது. ஆனால் குடிப்பவர்கள் எய்தும் பலவேறு நிலைகளைப் படிப்படியே அடைந்தான். சிரித்தல், பாடுதல், இருமுதல், உளறல், சிரிப்பிற்களித்தல், சினத்தில் சிறத்தல் முதலிய நிலைமைகளைக் கடந்து பின் ஆழ்ந்த, யாரும் கலைக்கமுடியாத உறக்கத்தில் ஆழ்ந்தான்.

வழக்கம்போலத் தேறலின் திறனால் நூறு கடுங் கனவுகள்—வறண்ட பாலைநிலம் பற்றியும், தீர்த்தற்கரிய விடாய்தரும் கடியைத் தரும் பாம்புகளைப் பற்றியும்—கனவுகள் கண்டான். இந்தியர்கள் கழுமரத்திலேறித் துன்புறுதலையும், நரகலோகத் துன்பக் காட்சிகளையும் கனவில் கண்டான். கடைசியில் அவன் துயில் நீங்கி எழுந்தான். ஆனால் பிறகு கனவிற்கண்ட காட்சி எல்லாம் நனவானதுபோலத் தோன்றியதை யுணர்ந்தான். முதலில் அவன் கனவைத் தூண்டிய ஒலிகளும், கடைசியில் அவன் உறக்கத்தைப் போக்கிய ஒலிகளும் மிகவும் பயங்கரமானவைகளாயும், மிகவும் இரங்கத்தக்க வருணனைக் கிடந்தருவனவாயு மிருந்தன.

'கப்பலில் கடுங்காய்ச்சல்' பரவியிருந்தது. நோயாளிகளிற் பலர் கடுமையான குளிர்காய்ச்சலுக்கு

ஆட்பட்டனர். அதனால் அவர்கள் கத்தினர், கிரீச்சிட்டனர், சிரித்தனர், திட்டினர், பயங்கரமான சாபங்களை யிட்டனர். மற்றவர்கள் தங்கள் அவலநிலையை உணர்ந்து துன்ப முனகலுடன் அழுது புலம்பினர்; சமயத்தின் கொள்கைகளேயோ, உருவங்களையோ அறியாதவர்களாய்ச் சிலர் கடவுளை வழிபட முயன்றனர். நோயிலிருந்து நலம் பெற்று வந்தவர்கள் உரத்த குரலில் கீழ்த்தரமான மொழியைப் பேசினர். சிலர் மந்திரச் சொற்களைப்போல் முணுமுணுத்துக் கொண்டனர்.

ரிச்சர்டு மிடில்மசுக்கு இவையெல்லாம் வியப்பைப் போலவே பயத்தையும் அளித்தன. மற்றத் தோழர்களைக் காட்டிலும் இவனுக்கு ஒரு நன்மை ஏற்பட்டிருந்தது; இவனுக்கென ஒரு பாய் கிடைத்திருந்தது. பெரும்பாலோர் அதுவுமின்றி வெறுந்தரையில் கிடந்தனர். தங்கள் தேவைகளைக் கவனித்துக்கொள்ளவோ, துன்பங்களைக் கேட்கவோ, தங்கள் நிலையைப்பற்றிப் பிறரிடம் முறையிடவோ அங்கே யாருமில்லை. அப் பயங்கரக் குகையிலிருந்து வெளியேறிச் செல்லலாமென்று ரிச்சர்டு தன் ஆடைகளைத் தேடிப் பார்த்தவிடத்து அவை காணப்படவில்லை. அவை இனிக் கிடைக்குமா? என்று அவன் ஐயுற்று நிற்கவேண்டியிருந்தது.

பிறகு, நகர எழுத்தரிடம் வேலை செய்யும்போது அவருடைய நம்பிக்கைக்கு மாறாக நடந்துகொண்டதால் கேப்டனை (கிலாரியை) அவர் வேலையிலிருந்து நீக்கிவிட்டாரெனச் சிலர் பேசிக்கொண்டிருந்தது ரிச்சர்டுக்கு நினைவுக்கு வந்தது. ஆனால் நண்பனாக இருந்து



ஆதரவு காட்டியதால் இந்தச் செய்தியை மற்றவரிடம் பரப்ப விரும்பவில்லை. எனினும் பேசாமலிருக்க ரிச்சர்டால் முடியவில்லை. போர்ப்படை அதிகாரியோ, மருத்துவ அதிகாரியோ எவரேனும் அங்கு வரும்போது அவரிடம் தன் பயத்தைப் பற்றியும், கிலாரியைப்பற்றியும் முறையிடவேண்டும் என்று முடிவு செய்தான். இந்தச் சமயத்தில் அவனுக்கு மிகவும் தாகமாயிருந்தது. அதைத் தணிக்க வழியறியாது அங்கே படுத்திருந்தோருள் யாரேனும் அந்தப் பயங்கர இடத்தைப்பற்றிச் சொல்ல முன்வருவார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தான். அவனருகில் குழிந்த கன்னங்களும், உட்குழிவான கண்களும், 'பேய்ப் பார்வையுமுடைய இருவர் படுத்திருந்தனர். அவர்களைப் பார்த்தால் சாவுப்பிடியிலிருந்து தப்பி நோயினின்று குணமாகிக்கொண்டு வருபவர்களைப்போல இருந்தது. அவர்கள் சிறு தொகையினை வைத்துக்கொண்டு ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்ளும் சீட்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஒவ்வொரு ஆட்ட முடிவிலும் வென்றவர் வெற்றிக்குரல் எழுப்புவதும், தோற்றவர் விதியை இகழ்ந்து கொள்வதுமாக, அவர்கள் உடலையும் உயிரையும் கெடுத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

சீட்டாட்டக்காரரை அடுத்து ஒரு பாயில் இரண்டு உடலங்கள் கிடந்தன. அவற்றுள் ஒன்றுதான் உயிரோடிருந்தது. மற்றது அப்போதுதான் பெருந்துன்பத்திலிருந்து விடுதலையாகி யிருந்தது.

'செத்துவிட்டான், செத்துவிட்டான்' என்று பிழைத்திருந்த மற்றவன் கத்தினான். "அப்படியானால்

நீயும் செத்துப்போய்த் தொலே. பிறகு எல்லோரும் நீங்களிருவரும் இணையாகச் செத்துப்போனதாகச் சொல்லிக்கொள்ளலாம்'' என்று சீட்டாட்டக்காரருள் ஒருவன் கத்தினன்.

“அவன் விறைத்துக் குளிர்ந்து போய்விட்டான்; செத்தவன் உயிரோடிருப்பவனின் படுக்கைத் துணே வன்—கடவுளுக்காகவாவது இந்தப் பிணத்தை அப்புறப்படுத்துங்கள்'' என்று இரைந்தான் பிழைத் திருந்தவன்.

''ஆமாம், அவனேச் சாகடித்த பெருமையையும் நீயே அடை'' என்று ஆட்டக்காரருள் ஒருவன் கூறினன்.

“பேசாமலிரு. இல்லாவிடில் உன் தலேயைத் திருகி உன் முதுகிலிருக்கும் எழுத்துக்களே உன் கண்கள் பார்க்கும்படி செய்துவிடுவேன். எங்கள் ஆட்டத்தைச் சத்தம்போட்டுக் கலேத்தால் உன் படுக்கையிலிருப்பவனேப் போலவே உன்னேயும் ஆக்கிவிடுவேன்'' என்று மற்ற ஆட்டக்காரனும் உரத்துக் கூறினன். பாவம்! அந்த மனிதன் சோர்வுற்றுப் பிணத்திற்கருகிலேயே சாய்ந்தான். முன்புபோலவே ஆட்டக்காரர்கள் தங்கள் ஆட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர்.

துன்பத்தின் எல்லேயில் நின்ற ஒருவனேயும், அத் துன்பத்தைச் சிறிதும் பொருட்படுத்தாத வன்னெஞ்சத்தாரையும் கண்ணுற்கண்ட ரிச்சர்டு துன்புறும் தோழர்களுக்காக எப்படி முறையீடு செய்வது என்று எண்ணிப் பேசாமலிருப்பதே நல்லது என நினேத்தான். அவன் உள்ளம் உள்நோக்கியது. தன்



சொந்த வீடு என்று கூறிக்கொள்ளக் கூடிய இன்பமான—அமைதியான—அந்த வீட்டைப்பற்றிய எண்ணங்களும், பைத்தியத்தின் அருகே தன்னே இழுத்துச் செல்லும் இந்தக் காட்சியும் அவன் மனக்கண் முன்னே மாறிமாறித் தோன்றின. மிடில்மசு ஊரைச்சுற்றி வளேந்தோடும் சிற்ருறு அவன் கண்முன்னே தோன்றியது. சிறு வயதில் மெனிக்காகக் காகிதக் கப்பல் செய்துவிட்ட அந்த ஆற்றின் ஒரு கை நீர் இப்போது கிடைத்தால் இந்தியாவின் வைரங்கள் எல்லாம் கிடைத்தது போலாகும்; ஆனல் அந்தத் தண்ணீர் இப்போது அவனுக்குக் கிடைக்கவில்லே.

மருத்துத் துறையிலிருப்போர் இவ்வாருன அலே பாயும் எண்ணங்களுக்கு இடங்கொடாமல் தடுத்து நிறுத்தவேண்டியதன் இன்றியமையாமையை நன்கு உணர்ந்திருந்த ரிச்சர்டு, தான் ஒரு மருத்துவன் என்பதை நினேவுபடுத்திக்கொள்ள முயன்ருன். தான் கண்ட காட்சிகளில் கருத்தைச் செலுத்தாமல், ஒரு போர்ப்படையைச் சார்ந்த மருத்து நிலேயத்தில் இருக்கும்போது மிக்கபயம் கொள்ளக் கூடாது என்றும், அதன் பயங்கரத் துன்பங்கள் புதிய மருத்துவரையும் தொண்டுசெய்யத் தூண்டும் என்றும் கருதினன். இவ்வாருன எண்ணங்களால் மன அமைதி பெற முயன்ருனயினும், கடமையைச் செய்யும்போது மட்டும் அங்கே வரும் மருத்துவரின் நிலேமைக்கும், நோயாளியாய்ச் சிறைப்பட்டிருக்கும் தன் நிலேமைக்கும் உள்ள வேறுபாடுகளே நன்ருய் உணர்ந்து கொண்டான்.

அறையில் ஒரு காலடிச் சத்தம் கேட்டது. அதனல் அந்த அறையை நிரப்பிய அழுகுரல்கள்

எல்லாமடங்கின. ஆட்டக்காரர் சீட்டுக்களை மறைத்து வைத்துக் கொண்டனர்; பேசுவதையும் நிறுத்தினர்; நோய்த் துன்பமுறுவோர் ஆற்றாமல் இடும் ஒலிகளையும், உதவி உதவி என்று கூக்குரலிடும் ஒலிகளையும் நிறுத்தினர். அவலம் தன் கூக்குரலை மெதுவாக்கியது; பைத்தியம் தன் பொருளில்லாக் குழப்பங்களை நிறுத்தியது. சாவுகூடக் கேப்டன் சீலன்கூப்பரின் முன்னிலையில், நோயாளிகள் துன்ப ஒலிகளை எழுப்பிக் கொண்டிருப்பதைத் தடைசெய்து நின்றது.

அந்த அதிகாரி ஒரு மேற்பார்வையாளன்; அந்தத் துன்புறும் நோயாளிகள் சொல்வதுபோல மருத்து நிலையக் கவர்னர் அவன். ஒழுங்காக நடத்தப்படாத ஒரு சிறையின் சிறைச்சாலைக் காவலனாயிருந்த தோரணையுடன்—பருத்த, குள்ளமான, சப்பைக் காலுடைய மனிதனாய்—இரட்டைச் சினம் கதுவும் ஒற்றைக் கண்ணனாய் இருந்தான். மங்கிய பழங்காலத்தைச் சேர்ந்த தனியுடையுடுத்தியிருந்தான். அது அவனுக்காகத் தைக்கப்பட்டது என்று கூறமுடியாது. மனிதகுல நன்மையைக் கருதும் இவ்வதிகாரி நோயாளிகளைப் பார்த்துப் போட்ட குரல், கப்பலதிகாரி புயற்காலத்தில் கத்தும் கூச்சலைப் போலிருந்தது. அவன் தன் இடுப்புக் கச்சையில் சிறு துப்பாக்கியையும் கைவாளையும் வைத்திருந்தான். மருத்துநிலைய நோயாளிகள்கூட எதிர்த்து எழும் அளவுக்கு அவனுடைய அதிகாரத்தன்மை இருந்தது. அவர்களுக்கிடையே அவனுயிர் ஒரு தடவைக்கு மேல் ஆபத்துக்குள்ளாகவிருந்தது. அவனைப் பின் தொடர்ந்து இருவர் விலங்குகளுடன் வந்துகொண்டிருந்தனர்.



சீலன்கூப்பர் சுற்றிவரும்போது, நோயாளிகளின் குறைகூறலும் வலியும்கூடக் குறைந்துவிட்டன. அவன் கையில் வைத்திருந்த மர ஊதல் மந்திரக்காரன் ஒருவனது மந்திரக்கோல்போல் எல்லாக் குறைகூறலையும், எதிர்ப்புக்களையும் அடக்கும் வல்லமையுடையதாகக் காணப்பட்டது.

“பூச்செண்டுபோல இனிமையானது இந்த இறைச்சியுணவு. அப்பமும் இந்தத் தடியர்களுக்கு மிகவும் நல்லதாகக் கிடைக்கிறது. நோயாளிபோல் நடிக்கும் அவர்கள் மாண்புமிகு கம்பெனியின் உணவைத் தின்று வருகின்றனர்; உண்மையாகவே நோய்வாய்ப்பட்டவர்களைப் பற்றி நான் பேசவில்லை. கடவுளுக்குத் தெரியும், நான் மனிதகுல நன்மைக்காகவே எப்போதும் பாடுபடுபவன் என்று.” இவ்வாறு, நோயாளிகள் மெல்லிய குரலில் கூறிய குறைகளுக்குப் பதில் கூறிக்கொண்டேவந்த கேப்டன், மிடில்மசு இருக்கும் இடத்தருகே வந்தபோது, மிடில்மசு, “அப்படியானால் நான் சொல்லுவதற்கும் உங்கள் மனிதகுல நன்மை நாடும் உள்ளம் செவிசாய்க்கும் என நம்புகிறேன்” என்றான்.

நெருப்புப் பொறி பறக்கும் ஒற்றைக் கண்ணைத் திரும்பிப் பார்த்து ‘நீ யார்?’ என்று கேட்டான் கேப்டன். அவன் முகத்தில் எரிச்சல் குறிகள் தெளிவாகத் தென்பட்டன.

“என் பெயர் மிடில்மசு. நான் ஸ்காட்லாந்திலிருந்து வருகிறேன். ஏதோ ஒரு தவற்றினால் இங்கே அனுப்பப்பட்டுவிட்டேன். நான் ஒரு தனிப் போர்ப் படையைச் சேர்ந்தவனுமல்லன்; இந்த இடத்தின்

வெப்பத்தைத் தவிர எனக்கு வேறு எவ்வித நோயு மில்லை '' என்றான் ரிச்சர்டு.

" நான் கேட்பதெல்லாம் நீ பெயர் பதிவுபெற்ற ஆள் தானா, இல்லையா ? என்பதுதான் '' என்று கத்தினான் கேப்டன்.

"நான் எடின்பரோவில் பெயர்ப் பதிவுபெற்றவன். ஆனால்....'' என்று இழுத்தான் மிடில்மசு.

" ஆனால் என்ன ? இன்னும் என்னவேண்டும் ? உன் பெயர் பதிந்தாயிற்று. கேப்டனும் டாக்டரும் உன்னை இங்கனுப்பியுள்ளனர். நீ தனியாளா, அதிகாரியா; நோயாளியா அல்லவா என்பதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்'' என்றான் சீலன் கூப்பர்.

" ஆனால் எனக்கு டாம்கிலாரி உறுதிமொழி கூறியுள்ளார். உறுதி மொழி....'' என்றான் மிடில்மசு.

" உறுதிமொழியா ? உனக்கா ? ஏன், இங்கு உறுதிமொழி யாருக்கேனும் கொடுக்காதவரோ, தனக்குத் தானேயாவது உறுதிமொழி கொடுக்காதவரோ கிடையாது. உறுதிமொழி கூறுவோரின் நாடு இது. ஆனால் இந்தியாதான் உறுதிமொழிகளை எல்லாம் நிறைவேற்றுவதற்குரிய இடம் ஆகும். சரி, போய் வருகிறேன். டாக்டர் இப்போது இங்கு வருவார். எல்லாரும் சரியாக இருங்கள்...'' என்றான். "ஒரு கணம்—ஒரு கணம் மட்டும் நில்லுங்கள். யாரோ என்னிடம் திருடிவிட்டார்கள் '' என்று கெஞ்சினான் ரிச்சர்டு. " திருட்டா ? இங்கு வரும் ஒவ்வொருவரும் ஏதாவது திருடப்படுகின்றனர். கடவுளே! நான்தான் ஐரோப்பாவில் மிக்க நற்பேறுடையவன். மற்றவர்கள் எல்லாரிடமும் திருடர்களும், ஏமாற்றுபவர்களுமே வருகின்றனர். ஆனால் என் முன்னர் நேர்மையும், ஒழுங்கும்; திருடப்பட்ட கெடுபேறும் உடையவர்களைத் தவிர வேறு யாரும் வருவதில்லை !'' என்றான் கேப்டன்.

"சாதாரணத் திருட்டு என்று எண்ணிவிடாதீர்கள்—ஆயிரம் பவுன்களைத் திருடி விட்டனர்'' என்றான் ரிச்சர்டு.

இப்போது கவர்னர் சீலன் கூப்பரின் கடுகடுப்புப் போயிற்று. அவன் எழுப்பிய சிரிப்பொலியை எல்லா நோயாளிகளும் எதிரொலித்தனர். சிலர் அவனுடைய தயவைப் பெறுவதற்காகச் சேர்ந்து சிரித்தனர். சிலருக்குத் தங்கள் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள வருவோர்க்கு நேர்ந்த துயரங்களைக் கண்டு மகிழும்படி செய்யும் தீயசக்திகளின் தூண்டுதலால் சிரிப்பு வந்தது.

சிறிது நேரங்கழித்து, 'ஆயிரம் பவுன்களா?' என்று போன மூச்சுத்திரும்பி வந்தவனைப்போல அதிசயித்தான் சீலன் கூப்பர் ; " வா'ப்பா, நீதான் நல்லவன். இதுவரை ஒரு சில பென்னிகளுக்குமேல் தொலைத்தவர் யாரும் இங்கு இருந்ததில்லை. ஆனால் மாண்புமிகு கம்பெனியின் வேலைக்காரன் ஒருவன் ஆயிரம் பவுன்கள் தொலைத்தான் என்பது இக்கப்பல் சரித்திரத்திலேயே இதுவே முதல் தடவை ! நல்லது. பத்தாயிரம் பவுன் பணக்காரரே! நீர் இந்தக் கம்பெனிக்கே ஒரு செல்வம். அதனால் நான் போய்வருகிறேன்.''

இப்படிச் சொல்லி விட்டு மேலே அவன் சென்றான். சினமும் துன்பமும் கலந்து புயல்போல எழுந்தான் ரிச்சர்டு. கேப்டனைக் கூப்பிடத் தொடங்கினான். ஆனால் தாகத்தாலும், மனக்குழப்பத்தாலும் ஊடாடிய அவன் நா ஒலியெழுப்ப மறுத்துவிட்டது! சீலன் கூப்பரைப் பின் தொடர்ந்து வந்த ஒருவனின் சட்டையைப் பிடித்துக்கொண்டு 'தண்ணீர், தண்ணீர்' என்று கத்தினான். அவன் அலட்சியமாகச் சுற்று முற்றும் பார்த்தான். சீட்டாட்டக்காரர்களுக்கருகே ஒரு கோப்பை இருந்தது. அதை எடுத்து மிடில்மசிடம் கொடுத்து "இதைக் குடித்துத் தொலை!" என்றான்.

அவன் போவதற்குத் திரும்பினானோ இல்லையோ, அதற்குள் ஆட்டக்காரருள் ஒருவன் படுக்கையிலிருந்து எழுந்துவந்து ரிச்சர்டின் கையை வலிதாகப் பற்றிக் கொண்டு, கோப்பையை வாய்க்கருகில் கொண்டுபோகு முன், "அதைக் குடித்தால் தொலைந்து விடுவாய்" என்று உறுதியாகக் கூறினான். அதை அவன் ஆர்வத்துடன் விரைந்து பற்றிக்கொள்ளத் தொடங்கியதால் அதில் ஏதோ ஒரு பொருள் இருக்கவேண்டுமென ஊகிக்கலாம். உண்மையில் முக்கால் பாகம் அதில் சாராயம்தான் இருந்தது. இச்சண்டையில் கோப்பை கீழே விழுந்தது. மது சிதறியது. தாக்கியவனுக்குப் பலத்த ஓரடி கொடுத்தான் ரிச்சர்டு. ஆனால் பதிலாக இன்னும் பெரிய சரியான அடியை வாங்கிக் கொண்டான். பெரிய சண்டையே நிகழ்ந்திருக்கும். ஆனால் அதற்குள் மேலாளனும் அவன் துணைவனும் அங்கே வந்துவிட்டனர். சண்டையிடும் இருவரும் பெரிய துணிபோடப்பட்டுப் பிடிக்கப்பட்டனர். ரிச்சர்டின் கெஞ்சுதல் சீலன் கூப்பரிடமிருந்து ஓரடி வாங்கித்



தந்தது. 'உடலின்மேல் ஆசையிருந்தால் வாயை மூடு' என்று அதட்டினான் சீலன் கூப்பர்.

மனத்தாலும் உடலாலும் ஒருங்கே எரிச்சல்பட்டுக் கொண்டும், தகிக்கும் தாகத்தாலும் பயங்கர நிலையாலும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொண்டுமிருந்த ரிச்சர்டின் மனம் நிலைகுலையும் நிலையை அடையவிருந்தது. முனகல், சபதம், ஏச்சுரை இவற்றிற்கும் பதில்கொடுத்துக் கத்தலாம் என்று தோன்றியது ரிச்சர்டுக்கு. பேசமுடியாமல், போராடிக் கொண்டிருந்த ரிச்சர்டுக்குப் பதிலுக்குப் பதில் திட்டவேண்டுமென்று இருந்தாலும், அவனால் முடியவில்லை. அவன் நாக்கு மேல்பாகத்துடன் ஒட்டிக்கொண்டது. வாய்கூட அப்படியே அடைத்துப் போயிற்று; கண் பஞ்சடைத்தது; காதில் ஏதோ ஓர் ஒலியுண்டாயது; உயிர்த்துடிப்புச் சிறிது நேரம் நின்றுவிட்டது!

# 7. ஆடமின் கைவண்ணமும் ரிச்சர்டின் முன்னேற்றமும்

சிறிது நேரங்கழித்து ரிச்சர்டு தன்னுணர்ச்சி யடைந்ததும் தன் குருதி உறைந்து கொண்டிருப்பதை உணர்ந்தான். காய்ச்சலால் நாடித்துடிப்புக் குறைந்து விட்டது. நரம்புகள் எல்லாம் அற்றுப்போய் விட்டன போலவும், காற்றுப் பைகள் முன்னைய நிலையைக் காட்டிலும் மிக வேகமாக வேலை செய்வன போலவும் உணர்ந்தான். வெளியே மிகுதியான குருதி ஊற்றெடுத்த ஒரு நரம்பினை ஒருவர் பிடித்துக் கட்டினார். இன்னொருவர் ரிச்சர்டின் முகத்தைக் கழுவிவிட்டு வாசனைக் காடி ஒன்றை மூக்கருகே வைத்துக் கொண்டிருந்தார். ரிச்சர்டு கண்ணைத் திறந்துபார்க்கும் போது, நரம்பைக் கட்டி முடித்தவர் இலத்தீனில் 'இன்னும் வலியிருக்கிறதா? இலத்தீனில் பதில் சொல்லுக' என்று கூறினார். ரிச்சர்டும் இலத்தீனில் இன்னும் வலியிருக்கிறது என்று மொழிந்தான். மீண்டும் கண்களை மூடிக் கொண்டான். ஏனெனில் அப்போது ஆடம், ரிச்சர்டின் பழைய நண்பன், அங்கு வந்திருந்தான். இந்தச் சமயம் அவன் வந்தது நன்மைக்கே எனினும், அவன் வருகையால் ரிச்சர்டின் புண்பட்ட கர்வம் மேலும் புண்படலாயிற்று. பழைய நண்பனின் அன்பிலாமைமையைப் பற்றி எண்ணினான். தன்னிடம்கூட அதிகார தோரணையுடன் நடந்து கொண்டதை நினைத்தான். இப்போது அவன் காலடியிற் கிடந்து அவன் கருணையை எதிர்நோக்கி யிருக்கவேண்டிய நிலையை நினைக்கும்போது அவனுடைய அவல நிலை இன்னும்



மோசமாகியது. ஆனால் இவ்வுணர்ச்சி ஒரு மணித் துளிக்குமேல் நிலை நிற்கவில்லை. அடுத்த மணித்துளியில் இருவருமறிந்த இலத்தீன் மொழியில் (அக்காலத்தில் எடின்பரோப் பல்கலைக் கழகத்தில் பெரும்பாலும் மருத்துவக் கல்வி இலத்தீனில்தான் அளிக்கப்பட்டது) ஆடமிடம் தன் குற்றத்தையும், கிலாரியின் வில்லங்கத்தையும் தெரியப்படுத்த விரும்பினான்.

“நான் விரைவிலேயே திரும்பிப் போகவேண்டும். தைரியமாயிரு. உனக்கு உதவ முடியும் என்று நம்புகிறேன். இதற்கிடையே என் வேலைக்காரனிடமிருந்தே உணவு பெற்றுக்கொள். கடற்பஞ்சைக் கையில் வைத்திருப்பவனே என் வேலைக்காரன். சட்டையில் இருக்கும் தங்கப் பொத்தானுக்காக ஒருவன் வாழ்க்கையை இழந்த இடத்தில் இப்போது நீ இருக்கிறாய்” என்றான் ஆடம்.

'ஒரு கணம் நில். இந்த ஆபத்தான மனிதர்களிடமிருந்து இந்த ஆசையுணர்ச்சிப் பொருளை அகற்றி விடுகிறேன்' என்று கூறிக்கொண்டே தன் இடுப்பிலுள்ள ஒரு சிறிய பொட்டலத்தை வெளியே எடுத்தான். அதை ஆடம் கையில் வைத்தான் ரிச்சர்டு. “நான் இறந்தால் என் வாரிசாக நீயே இரு. அவளை மணப்பதற்கு என்னிலும் நீயே மிக்க தகுதியுடையவன்” என்றான்.

இதற்கு ஆடம் பதில் கூறுவதைச் சீலன் கூப்பரின் கடுங்குரல் தடுத்துவிட்டது. 'டாக்டர், உங்கள் நோயாளியைக் கவனித்துக் கொண்டிருக்கிறீர்களா?' என்று கத்தினான் சீலன் கூப்பர்.

“நோய்க் குறிகள் இன்னும் ஐயத்திற்கிடமாகவே உள்ளன. அது ஒரு பயங்கரமான சன்னி. என் தனி

வார்டில் அவரைத் தூக்கிக்கொண்டுவரச் செய்ய வேண்டும். என் வேலைக்காரன் அவரைக் கவனித்துக் கொள்வான்'' என்றான் ஆடம்.

''சரி, நீங்கள் சொல்லிவிட்டால் அது கட்டாயம் செய்யப்படும். ஆனால், நம்மிருவருக்கும் தெரிந்த ஒரு மனிதனைப் பொதுவார்டிலேயே வைத்திருக்க ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன.''

''அந்த ஆயிரம் காரணங்களைப் பற்றி எனக் கொன்றும் தெரியாது. கம்பெனியிலிருக்கும் மற்றப் புதியவர்களைப் போலவே இவரும் நல்ல உடற்கட்டும், தகுதியும் உடையவரே என்பது மட்டும் நான் சொல்ல முடியும். கம்பெனி வேலைக்காக நான் அவரைக் காப்பாற்ற வேண்டும். உங்கள் கவனக் குறைவால் அவர் இறக்க நேரிட்டால் அப்புறம் என்மேல் பழிவரக்கூடாது. இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்ததைப் பற்றித் தளபதியிடம் கூறப்போகி றேன்" என்றான் ஆடம்.

'தளபதியா?' என்று அதிர்ச்சியுற்றவன்போல் பேசினான் சீலன் கூப்பர்; ''தளபதியிடம் சொல்வதா? அவனுடைய உடல் நிலையைப் பற்றியா? ஆனால் அவன் கோபத்தில் என்னென்ன சொன்னான் என்பதை அவரிடம் சொல்ல மாட்டீர்கள் அல்லவா? இந்த நோயாளிகள் எல்லாம் என்னென்ன கூறுகின் றனர் என்பதைக் கேட்டீர்களாயின், உங்கள் முதுகு உடனே விரிந்துபோகும். அந்தக் கோள் மொழிகளை எல்லாம் நீங்களும் கொஞ்சம் அறிந்து செல்லுமாறு வேண்டிக் கொள்கிறேன்'' என்றான்.



''கேப்டன் சீலன் கூப்பர், மருத்துவ நிலையத்தில் உங்கள் துறையில் தலையிட நான் விரும்பவில்லை. நான் கேட்டுக் கொள்வது என் துறையைப் பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம் என்பதே. எனக்குக் கம்பெனியில் சில கடமைகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. மேலும் நல்ல மருத்துவ டிப்ளமா ஒன்றும் வாங்கிவைத்திருக்கிறேன். எப்போது என் நோயாளி நல்ல நிலையில் இருக்கிறான், எப்போது இல்லை என் பதைப்பற்றி எனக்குத் தெரியும்'' என்றான் மருத்துவன் ஆடம் மேலும் ''உங்கள் பொறுப்பிலேயே இவர் கவனமாகக் கவனிக்கப்படட்டும்'' என்றும் கூறினான்.

இவ்வாறு சொல்லிக் கொண்டே மருத்துவ நிலையத்தை விட்டுச் சென்றான். செல்லுமுன் மீண்டும் ரிச்சர்டின் நாடியைப் பிடித்துப் பார்ப்பவனைப் போல, மீண்டும் அவன் விடுதலைக்காக முயலப் போவதை உணர்த்தும் முறையில் அவன் கையை அழுத்தினான்.

''அம்மாடியோ! ஸ்காட்லாந்திலிருந்து வந்த இந்தக் கோழிக்குஞ்சு கொக்கரிப்பதைப் பார்! இதை எப்படித் தொலைப்பது என்று எனக்குத் தெரியும்'' என்று முணுமுணுத்தான் சீலன் கூப்பர்.

இச்சொற்கள் ரிச்சர்டின் காதில் விழுந்தபோது விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுள்ளத் தில் பிறந்தது. வேறு தனி வார்டுக்குத் தன்னை எடுத் துச் சென்றபோது அந்த நம்பிக்கை உறுதிப்பட்டது. அந்த வார்டு ஒழுங்காகக் காணப்பட்டது. அதில் சிறு அதிகாரிகளைப் போன்ற இருவர் மட்டுமே இருந்தனர். கடுங்குழப்ப வுணர்ச்சிக்குப் பிறகு ஏற்பட்ட வலுக் குறைவைத் தவிர உண்மையாக நோயொன்றுமில்லை

என்பதை உணர்ந்தபோதிலும், தன் நண்பனின் மேற்பார்வையில் இருக்கலாம் என்ற மனக்கருத்துடன் தனக்கு நோயிருப்பதுபோலப் பாவனை செய்து காட்டிக் கொள்வதே அறிவுடைமையாகும் என எண்ணினான். ஆடமின் நல்லுதவிகளைப் பெறுவதற்கு முந்தினானாயினும், ரிச்சர்டின் உள்ளத்தின் அடித்தளத்தில் தோன்றிய எண்ணம் ஒரு நன்றியறிவில்லா உணர்ச்சியே! “உலகிலேயே நான் மிகவும் குறைவான அன்பைக் காட்டுதற்குரிய இவன் கையைத் தவிர என்னைக் காப்பாற்றும் வழி கடவுளுக்கு வேறு இல்லையா?” என்று மனம் புழுங்கினான்.

இதற்கிடையே, ரிச்சர்டின் நன்றியறிவில்லா உணர்ச்சியை அறியாதவனாய், உண்மையில் தன்னைப் பற்றி அவன் என்ன எண்ணுகிறான் என்பதைப் பற்றியே கவலைப்படாதவனாய், ஒரு மனிதனைப்போலவும், கிறித்துவனைப் போலவும் தன் கடமையைச் சரிவரச் செய்வதைத் தவிர வேறெவ்விதக் கருத்துமின்றி ஆடம் தன் சக்திக் கேற்றவாறு அவனுக்குப் பணிபுரிய முனைந்தான். இங்கே தன் நண்பனுக்கு உதவி செய்வதற்கான தகுதியை ஆடம் எப்படிப் பெற்றான் என்பதைச் சிறிது விளக்க வேண்டியிருக்கிறது.

பிரிட்டிசு அரசனை அவ்வளவு உயர்வுக்கு எழுப்பிய கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் தங்களுக்கு உதவியாக இருப்பதற்காக ஐரோப்பியப் படைகளை இந்தியாவுக்கனுப்ப உறுதி செய்து அதில் இடையறாத முயற்சி உடையவராயிருந்தனர். இக்கதையும் இந்தச் சமயத்தில்தான் நிகழ்ந்தது. தன் அரசனைத் துரத்திவிட்டு மைசூர் அரசாங்கத்தைக் கைப்பற்றிய



புகழ்பெற்ற ஹைதர்அலி ஆங்கிலேய அரசாட்சியை எதிர்த்துக்கொண்டிருந்தான். கம்பெனி வேலைக்குத் தக்கவரைப் பொறுக்குவதில் மிக்க தொல்லையிருந்தது. போர்வீரர்களாக மட்டும் பணியாற்ற வேண்டும் என்று கருதியவர்கள் இந்தியாவின் தட்பவெப்ப நிலையைக் கண்டஞ்சினர்; தாய் நாட்டை விட்டுப் பிரிந்திருக்கும் நிலையும் அவர்களுக்குத் துன்பம் தந்தது. ஆங்கிலச் சட்டங்கள் இல்லாத வெகு தூரத்திலிருக்கும்போது தங்களைக் காப்பாற்றுவதற்கு வேறொன்றுமில்லாததால், கம்பெனி வேலை எவ்வளவு தூரம் உண்மையாக நீடிக்கும் என்று ஐயுற்றனர். இக்காரணங்களாலும் வேறு காரணங்களாலும் தாய்நாட்டு அரசப்படையில் சேருவதையே பெரும்பாலோர் விரும்பினர். ஆர்வமிகும் கம்பெனி பேராளர்கள் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சிறந்த முறைகளையே கைக்கொண்டாராயினும் கம்பெனி வேலைக்காகத் தகுதியில்லாதாரே முன்வந்தனர். அரசப்படைக்கோ அல்லது கம்பெனிக்காகவோ ஆட்களை வலிந்து இழுத்துக் கொண்டு செல்லுதல் அக்காலத்தில் பொதுவாகக் காணப்பட்டது. திருட்டுத்தனமாய் ஆள் பிடித்துத் தருவதிலீடுபட்ட பேராளர்கள் அவர்களின் தகுதிகளைப் பார்த்துப் பிடிக்க முடியாது. அதனால் வாணிக முறையில் பல ஏமாற்றுகளும் வஞ்சச் செயல்களும் நிகழ்ந்தன; குறிப்பிடத்தக்க பல பெருந் திருட்டுக்களும் கொலைகளும்கூட நிகழ்ந்தன. அத்தகைய கொடுஞ் செயல்கள் மேலதிகாரிகளுக்குத் தெரியாமலேதான் நடந்து வந்தன. கம்பெனிக்கு நிறைய ஆள்சேர்க்கும் கட்டாயத் தேவை ஏற்பட்டதால், ஆள்சேர்க்கும் முறைகளில் அதிகக் கண்டிப்பு ஏற்படாமல் போனது இயல்பே.

இவ்வாறு சேர்க்கப்பட்ட ஆட்களின் படை தங்குவதற்குரிய தளமாயிருந்தது வைட்தீவுதான். அந்த இடத்தின் அப்போதைய பருவநிலை உடல் நலத்திற்கு உகந்ததாயில்லை. அவ்வாட்களில் பெரும்பாலோர் நல்ல உடற்கட்டுடையோருமல்லர். அதனால் கொடிய குணமுள்ள காய்ச்சல் அவர்களிடையே எளிதில் பரவியது; அந்தப் போர்ப்படை மருத்து நிலையத்தில் நோயாளிகளின் கூட்டம் மிக்கது. அதில் அனுபவமுள்ள பழைய ஆள்திருடி சீலன் கூப்பர் எப்படியோ மேர்பார்வையாளனாயிருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தான். உடல் நலமுடைய படையினரிடத்தும் ஒழுங்குக் குறைபாடுகள் தோன்றலாயின. கம்பெனி வேலையில் இருக்கும் கப்பற்படையதிகாரிகளிற் பலர் இவர்களை ஒரு விதமான கடும் பழக்கப் பயிற்சியில் ஆட்படுத்தாவிடில் இவர்கள் வழியில் ஆபத்து விளைக்கும் கலகக்காரர்களாகி விடுவார்கள் எனக் கருதிச் சில ஒவ்வாப் பயிற்சிகளுக்கு உட்படுத்தினர்.

பருவநிலைக் கோளாற்றைப் போக்குவதற்காகக் கம்பெனி இயக்குநரின் கழகம் பல மருத்துவர்களை அத்தீவுக்கு அனுப்பிவைத்தது. அவர்களுள், ஒரு மருத்துவக் கழகத்தின் தேர்வுச் சான்றிதழும், எடின்பரோப் பல்கலைக் கழகத்து டிப்ளமாவும் பெற்றிருந்த ஆடமும் ஒருவனாவன்.

படையினரின் ஒழுங்குப் பயிற்சியை வற்புறுத்திச் செய்வதற்காக இயக்குநர் கழகம் தங்களிடத்திலிருந்து விதரிங்டன் என்ற ஒருவரைக் கப்பல் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. கம்பெனி வேலையில் புகழடைந்தவர் அவர். ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு பெருஞ்



செல்வத்துடன் இந்தியாவிலிருந்து திரும்பிவந்து, அச்செல்வத்தை ஒரு செல்வச் சீமாட்டியை மணந்ததன் மூலம் பெருக்கிக் கொண்டவர். அவரும் மனைவியாரும் பொதுமக்களிடையே பழகுவதில்லை. ஆனால் இரு பிள்ளைகளும், ஒரு பெண்ணுமாகிய மூவரடங்கிய தங்கள் சிறு குடும்பத்திற்காகவே வாழ்பவர்களைப் போலக் காணப்பட்டனர். கம்பெனியிலிருந்து ஓய்வு பெற்று நீங்கியிருந்தாலும், தமக்குக் கொடுக்கப்பட்ட தற்காலிகப் பொறுப்பை விரும்பி ஏற்றுக்கொண்டார். ரைட் நகரத்திலிருந்து சிறிது தூரத்தில் வீடொன்றை அமைத்துக்கொண்டு படைகளைத் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்தார். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு அதிகாரியை நியமித்தார். ஒழுங்கான பயிற்சியாலும், கட்டுப்பாட்டாலும் அப்படைகளை ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவந்தார். படைகள் உணவுப் பொருள்களைப் பெறுவதிலும், வேலை நியமனத்திலும் குறைபாடுகள் கூறப்பட்டதைக் கேட்டார். எல்லாச் சமயத்திலும் நேரான நன்னீதியைச் செலுத்தினார். ஆனால் திருட்டுத்தனமாகவோ. சட்ட விரோதமாகவோ வேலையில் சேர்ந்திருப்பினும் அவர்களை இதுவரை வேலையிலிருந்து நீக்கியதில்லை. "நீங்கள் எப்படிப் படையில் சேர்ந்தீர்கள் என்பதைப் பற்றி எனக்கு எள்ளளவும் கருத்தில்லை; உங்களைப் படையினராகக் கண்டேன்; படையினராகவே மதிப்பேன்" என்று மொழிந்தார் விதரிங்டன்; "ஆனால் படையினராகிய உங்களுக்குத் தேவையான பணமோ, குண்டூசி முதலிய பொருள்களோ எதுவாயினும் உங்களுக் குரியவற்றைத் தருவதில் மிகக் கவனமாயிருப்பேன்" என்றும் கூறினார்.

கண்ணோட்டமோ, பயமோ இல்லாது பணி செய்தார்; தவறான நிகழ்ச்சிகளை இயக்குநர் கழகத்திற்கு அறிவித்தார்; குற்றம் செய்த பல அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கியுள்ளார். இந்தியாவில் பிரிட்டனின் எதிரிகளுக்குப் பயம் விளைத்தது போலவே, கம்பெனிப் பணத்தைச் சொந்தச் செலவுக்குப் பயன்படுத்துவோர்க்கும் இவர் பெயர் பயங்கர நடுக்கத்தை உண்டு பண்ணுவதாயிருந்தது.

மருத்து நிலயத்திலிருந்து கேப்டன் சீலன்கூப்பரும், அவர் துணையாளனும் அடுத்துத் தங்களிடத்தை விதரிங்டன் பார்வையிட வருவாரென அறிந்து நடுங்கிப் பயந்தனர். ஆனால் மற்ற இடங்களை நேரிடையாகப் பார்வையிட்ட அவர் மருத்து நிலயத்தைப் பார்வையிடத் தயங்கினர். இதற்குக் காரணம் நோய் தம்மைப் பற்றிக் கொள்ளுமோ என அவர் பயந்ததுதான் என்று பலர் கூறினர். அதுதான் உண்மையுங்கூட. தம்மை நோய் பற்றிக்கொள்ளும் என்று பயந்ததைவிட நோயை எங்கே தாம் பேணும் வீட்டிற்குக் கொண்டு போய் விட்டுவிடுவோமோ என்று அவர் மிகப் பயந்தார். காரணமில்லாமல் அவர்மனைவியும் இன்னும் மிகப் பயந்தார். மருத்து நிலயம் அமைந்திருக்கும் இடத்திலிருந்து காற்று வீசும் திக்கில்கூடத் தம் குழந்தைகளை வெளியே அனுப்பவும் அவர் மனம் ஒப்பார்.

ஆனால் மனிதர்கள் எச்சரிக்கையாயிருந்த போதிலும் அதைக் கடவுள் நிலைமாற்றிவிடுகின்றார். ஒரு நாள் வயல் வெளியில் தனியிடமெனத் தெரிந்த இடத்தில் அக்குழந்தைகள் கீழ் நாட்டு வேலைக்காரருடனும், ஐரோப்பியப் பணியாளருடனும் நடையுலாச்



சென்ற போது, பெரியம்மையிலிருந்து குணமாகிக் கொண்டிருந்த ஒரு குழந்தையைக் கையிலேந்தி எதிரே வந்த ஒரு தாயைக் கண்டனர். ஆனால் குழந்தைகளுக்கு வலிக்குமோ என்று தந்தை அஞ்சியதாலும், சமய நம்பிக்கையால் ஊசிபோட்டுக் கொள்ளுதலைத் தாய் தடுத்தமையாலும், குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட்டுக்கொள்வது தள்ளிப் போடப்பட்டது.

தடுப்பூசி போட்டுக் கொள்வது அக்காலத்தில் பெருவழக்கில் இல்லை. இதனால் அத்தொத்து நோய் தீக்குச்சியில் நெருப்புப் பற்றுவது போல் பற்றிக் காட்டுத் தீப்போல் குடும்பத்திலுள்ள எல்லாரிடத்திலும் பரவியது. இதற்கு முன் அக்குடும்பத்தில் யாருக்கும் அந்நோய் வந்ததில்லை. விதரிங்டனின் இரண்டாவது குழந்தை இறந்துவிட்டது. ஆயாக்களில் இருவரும் அதேகதியை அடைந்தனர். மிகவும் ஆபத்திலிருப்பதாக அறியப்பட்ட உயிருள்ள மற்ற இரு குழந்தைகளைப் பற்றிய கவலையில்லாவிடில் இறந்துபோன குழந்தைக்காக அன்னையும் தந்தையும் தங்கள் உயிரையும் இழந்திருப்பர். இறந்த குழந்தைக்கு ஏற்பட்டது போன்ற நோய்க் குறிகள் இந்தக் குழந்தைகட்கும் படிப்படியே காணப்பட்டதால் அவர்கள் அலமந்து திகைத்து நின்றனர்.

இவ்வாறு துன்ப நிலையில் பெற்றோர்கள் கலங்கிக் கொண்டிருக்கும் போது, நார்த்தம்பர் நாட்டிலிருந்து வந்த விதரிங்டனின் முக்கிய வேலைக்காரருள் ஒருவன் அதே நாட்டிலிருந்து வந்த ஓர் இளைய மருத்துவனைப் பற்றிக் கூறினான். பொதுவாக மக்கள் எல்லாரும் கடைப்பிடிக்கும் முறை தவறானதென்று

இகழ்ந்துகூறி, மிகவும் சிறந்த வெற்றியைத் தரும் சரியான முறையொன்றைத் தான் கடைப்பிடிப்பதாக இளம் மருத்துவன் கூறியதாக அவர்களிடம் வேலைக்காரன் கூறினான்.

"எவனோ தன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டு பணம் சம்பாதிக்க முயல்கிறான். டாக்டர் தூர்னிக்கும், டாக்டர் லான்சுலாட்டுமே புகழ் மிகப் படைத்த மருத்துவர்கள்" என்றார் விதரிங்டன்.

"அவர்கள் புகழைப் பற்றிப் பேசவேண்டாம்" என்று பொறுமை இழந்து கத்தினார் அவர் மனைவி; "அவர்கள் நம் கண்மணி ரூபெனைச் சாகவிட்டுவிடவில்லையா? நோயாளி இறக்கும்போது அம் மருத்துவர்களுடைய புகழ் என்ன பயனைச் செய்தது?" என்று கேட்டார்.

வேலைக்காரன் முதலில் விதரிங்டனின் மனைவியைப் பார்த்து, "தாங்கள் டாக்டர் ஆடமை ஒரு முறையாவது பார்த்தால்......" என்று கூறிவிட்டுப் பிறகு அவரைப்பார்த்து, "அவர் ஒரு திறமையான இளைஞர். அவர் உங்கள் காதுக்கு எட்டுமென்று தம் பெருமையைக் கூறிக் கொள்ளவில்லை. தங்களைப் போல நார்த்தம்பர் நாட்டைச் சேர்ந்தவர்" என்றான். உடனே அவர், "ஒரு வேலைக்காரனைக் குதிரையோடு அனுப்பி அவரை இங்கு உடனே வரச்செய்" என்று கட்டளையிட்டார்.

இயற்கை வற்புறுத்தும் எல்லாவற்றையும் நோயாளிக்கு மறுத்துவிடுவதுதான் அம்மை நோயைப் போக்குவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட பழைய முறை என்பதை எல்லாருமறிவர். குளிர் நீரையும், புதிய காற்றையும்



கொடுக்கவேண்டும் என்று இயற்கை குறிப்பிட்டாலும், வெந்து புழுங்கும் அறைகளில் கம்பளிப் போர்வை நிறைந்த படுக்கைகளில் படுக்க வைத்து வாசனை மதுவைக் குடிக்கச் செய்வர்.

சில மருத்துவர்கள் துணிந்து கடைப்பிடிக்கும் புதிய முறையானது பழைய மரபைக் காட்டிலும் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டது. மதுத்துவர் கிரே இந்த முறையினால் பல ஆண்டுகள் பெரு வெற்றியை அடைந்துவந்தார்.

தளபதி விதரிங்டன் ஆடமைப் பார்த்தபோது அவனிளமையைக் கண்டு அப்படியே அசந்துபோனார். ஆனால் அவன் அடக்கமாகவும், நம்பிக்கையுடனும் இரண்டு மருத்துவ முறைகளுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறியபோதும், தன் முறையின் சிறப்பை விளக்கியபோதும், அவர் மிகவும் கவனமாக உற்றுக் கேட்டார். அவ்வாறே அவர் மனைவியும் உற்றுக் கேட்டார்.

ஆடம் கூறியவற்றைக் கேட்டுத் தம் கணவர் என்னென்ன மெய்ப்பாடுகளை எய்துகின்றார் என்பதை அறிவாரைப் போல, இதுவரை ஆடமைப் பார்த்துக்கொண்டிருந்த நீர்பொழியும் கண்களைத் தம் கணவரிடம் திருப்பினார். ஆடம் பேசி நின்ற பிறகு விதரிங்டன் சிறிது நேரம் அமைதியாகவே இருந்தார்; பெரிய யோசனையில் ஆழ்ந்தவரைப் போலக் காணப்பட்டார். "ஒரு காய்ச்சலைக் குணப்படுத்த முயலும்போது இன்னொரு காய்ச்சல் உண்டாகச் செய்வது எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பது போலாகும்' என்று கூறினார்.

"ஆமாம், நாம் இந்தச் சின்ன டாக்டரையே நம்புவோம். புதுக் காற்றுக்கும், குளிர் நீருக்கும் துடித்துக் கொண்டிருக்கும் நம் கண்மணிகளுக்கு அவற்றையாவது கொடுக்கலாம்'' என்றார் அவர் மனைவி.

ஆனால் தளபதி ஒரு முடிவுக்கும் வராதவர்போலவே இருந்தார். ஆடமைப் பார்த்து, "நீர் கூறுவது ஒப்புக் கொள்ளக் கூடியதுதான். ஆனால் அது வெறும் கோட்பாடுதான். பொதுவான நடைமுறைக்கு மாறாக உம் கொள்கையை நிலைநாட்ட என்ன ஆதாரம் காட்டுவீர்?'' என்று கேட்டார்.

"என் சொந்த ஆராய்ச்சிதான். நான் கவனித்துக் குணப்படுத்திய நோய்ப் பட்டியல் இதோ இருக்கிறது, பாருங்கள். அதில் இருபது பெரியம்மை நோயாளிகளில் பதினெட்டுப்பேர் குணமடைந்துள்ளனர் என்பதைக் காணலாம்."

"மற்ற இரண்டு பேரும்?'' என்று கேட்டார் தளபதி.

"இருவரும் உயிர்க்கிறுதி பெற்றுவிட்டனர். மனித குலத்தின் சாபக்கேடான இந்நோயை நாம் இன்னும் முற்றிலும் போக்கமுடியாத நிலையிலேயே இருக்கிறோம்'' என்றான் ஆடம்.

"சின்ன டாக்டர், உமது முறையில் எங்கள் குழந்தைகளை உயிர்பிழைக்கச் செய்வதானால் ஆயிரம் தங்க மொகராக்கள் கொடுப்போம். அவர்களுக்கு ஆபத்து நேர்ந்தால் நீர் என்ன கொடுப்பீர்?"

"என் புகழைக் கொடுக்கிறேன்'' என்று பதிலளித்தான் ஆடம்.



"நோயாளிகளைக் குணப்படுத்துவதற்கு உம் புகழை ஈடுவைக்கமுடியுமா?'' என்று கேட்டார் தளபதி.

"நான் தற்பெருமை பேசுவதிலிருந்து கடவுள் என்னைக் காப்பாற்றட்டும். ஆனால் என் முறைகளைப் பயன்படுத்திக் கடவுளின் அருளால் நல்ல முறையில் குணப்படுத்தும் வாய்ப்பைப் பெறமுடியும் என்றே நம்புகிறேன்.''

"சரி—நீர் மிக்க அடக்கமும், அறிவும், துணிவும் உடையவராயிருக்கின்றீர். உம்மை நான் நம்புகிறேன்."

அவர் மனைவியும் ஆடமின் வார்த்தைகளாலும், பேசும் முறையாலும் அவன் மீது நன்னம்பிக்கை கொண்டாள். நோய்க் குழந்தைகளுக்குப் பெருந்துன்பந்தரும் முறையை விட்டுவிட ஆவலுடனிருந்தாள். ஏற்கெனவே அக் குழந்தைகள் மோசமான நிலையை எய்தியிருந்ததால் ஆடமை மருத்துவனாக உடனே ஏற்க ஒப்புக்கொண்டாள். ஆடமும் நோயாளி இருந்த அறையின் முழு அதிகாரத்தையும் பெற்றான்.

சன்னல்கள் எல்லாம் நன்றாகத் திறக்கப்பட்டன; கொழுந்துவிட்டெரிந்த வீட்டுத் தீ தணிக்கப்பட்டுப் பின் அணைக்கப்பட்டது. படுக்கையில் பாரமான துணிகள் எல்லாம் அகற்றப்பட்டன. காரமான மதுவுக்கும், வாசனைக் குடிகளுக்கும் பதிலாகக் குளிர் பானங்கள் கொடுக்கப்பட்டன.

நர்சுகள் 'சாவு' என்று கத்தினர். டாக்டர்களான டூர்னிக்கும், லான்சுலாட்டும் இப்புது முறை ஹிப்போகிராடசின் தத்துவங்களுக்கு எதிர்மாறானதெனக் கூறி அதை எதிர்த்தனர்; பழிக்குப்பழி கூறுவாராய்ச் சாவுதான் நிகழப் போகிறது எனச் சபித்துவிட்டுக் கோபங்

கொண்டு வெளியேறினர். ஆனால் ஆடம் அமைதி யாகவும், ஒரே சீராகவும் தன் வேலையிலீடுபட்டான். குழந்தைகளும் நோய்ப் பிடியிலிருந்து விடுபட்டுக் குணப்பாடு என்னும் பாதைமீது நகர்ந்து சென்றன.

நார்த்தம்பர் மருத்துவனுக்குக் கர்வமோ, மிகைப் படுத்திக் கூறும் திறனோ இல்லை. எனினும், தன் கள்ளமிலாப் பண்பால் வெற்றி நடைபோடும் மருத் துவன், தான் கல்லறையிலிருந்து காப்பாற்றியகுழந்தை களின் பெற்றோர்களிடமிருந்து செல்வாக்கைப் பெறும் வழியை எளிதாக அறிந்துகொள்ள வில்லை. முக்கிய மாக. நோய் குணப்படும் முன்பே செல்வாக்கைப் பெறும் கலையை அவன் பழகிக்கொள்ளவில்லை. புழைய நண்பனான ரிச்சர்டுமூலம் தன் புகழை நிலைநாட்டத் தீர்மானித்திருந்தான். இப்போது தளபதி விதரிங்டன் அளித்த மதிப்பால் தன் புகழ் பரவும் என நம்பினான்.

தளபதியின் வீடு, இப்போது அவன் அடிக்கடி தங்கியிருக்கும் இடமாகிவிட்டது. அவ்வீட்டிற்குப் போகும்போது ரிச்சர்டு தன்கையில் கொடுத்த அப் பொட்டலத்தைப் பிரித்துச் சோதித்துப் பார்த்தான். அதில் மெனிகிரேவின் படமும், ரிச்சர்டின் அன்னை மருத்துவர் கிரேவிடம் கொடுத்துச் சென்ற ஒளிக் கற்கள் பதித்த மோதிரமும் இருந்தன. மெனியின் படத்தைக் கண்டதும், நேர்மையான ஆடமின் உள்ளத்திலிருந்து ஒரு பெருமூச்சு வந்தது; பழைய துன்ப நினைவுக் கறிகுறியாகக் கண்ணிலிருந்தும் ஒரு துளி நீர் தெளித்தது. "சரியான ஆளை அவள் தேர்ந் தெடுக்கவில்லை; ஆனால் நான் நினைத்து முயன்றால் அவள் மகிழ்ச்சியோடு வாழ்வாள்' என்று தன்னுள் கூறிக்கொண்டான் ஆடம்.



தளபதி வீட்டிற்குச் சென்றதும் நம் ஆடம் நேரே அறைக்குள் நுழைந்தான். பின்பு, குழந்தைகள் கட்டாயம் பிழைத்து விடுவார்கள் என்ற செய்தியைப் பெற்றோர்களுக்குச் சொல்லுவதற்காக அவர்களிருக்கும் இடத்தை அடைந்தான்.

உணர்ச்சிப் பெருக்கால் உடம்பு நடுங்கிக் கொண் டிருக்க ஆடமைப் பார்த்துக் "கடவுள் உம்மைக் காப் பாற்றட்டும்'' என்றாள் குழந்தைகளின் தாய்; "அவ லங் கொண்டிருந்த அன்னையின் அழுகண்ணீரைத் துடைத்து விட்டீர். ஆனால் ஐயோ! ஐயோ! செல் வன் ரூபனை நினைக்கும்போது கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஓ! டாக்டர், உம்மை ஏன் நாங்கள் ஒரு வாரத்திற்கு முன்பே தெரிந்துகொள்ள வில்லை? தெரிந்திருந்தால் என் கண்மணி இறந்து போயிருக்க மாட்டானே'' என்றழுதாள்.

"கடவுள் கொடுக்கிறார். எடுத்துக் கொள்கிறார், அம்மா! ஆனால் மூன்று பேரில் இரண்டு பேரை உங் களுக்குத் திருப்பிக் கொடுத்துள்ளார் என்பதை மறந்து விடக் கூடாது. இப்போது குணமாகி வரும் இவர் களுக்குச் செய்த முறையை இறந்து போன குழந்தைக் குப் பயன்படுத்தியிருந்தாலும் அது பிழைத்திருக்கும் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. ஏனெனில், எனக்குச் சொல்லியதிலிருந்து, அதற்கு நோய் முற்றி விட்டது என்றறிகிறேன்'' என்றான் ஆடம்.

வழக்கத்திற்கு மாறாக உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்திய விதரிங்டன், "டாக்டர், நோயாளிகளின் உடம்புக்கும், உயிருக்கும் ஆறுதலளிக்க உம்மால் முடி யும். சரி, இப்போது பணத்தைப் பற்றிப் பார்க்க

வேண்டும். நீர் உம் புகழைப் பணயமாக வைத்தீர்; அது உமது சிறந்த வெற்றிப் புகழை மேலும் பெருக்கி உம்மிடமே தங்கியிருக்கிறது. உமக்குரிய ஆயிரம் தங்க மொகராக்களின் மதிப்பு அந்தப் பாக்கெட் புத்தகத்தில் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளும்'' என்றார் விதரிங்டன்.

''தளபதி விதரிங்டன்! நீங்கள் செல்வர். அதனால் வாரிவழங்கும் உரிமை உங்களுக்குண்டு. ஆனால் நான் ஏழை; அதனால் என் தொழில் செய்கைக்கு ஒப்பானதாயினும், மிகுதியானதாயினும் அப்பணத்தை மறுத்து விடுவதற்கில்லை. ஆனால் கொடுப்பதிலும் வாங்குவதிலும் கூடத் தாராளத்திற்கு ஓர் எல்லை உண்டு. தாங்கள் புகழ்ந்த என் புதிய புகழை, நான் குழந்தைகளுக்காகக் கவலைப்பட்டு அலைமோதிக் கொண்டிருந்த பெற்றோர்களைப் பிழிந்தெடுத்துப் பணம் வாங்கிக் கொண்டதாக எல்லாரும் சொல்வதற்கு இடங்கொடுத்து, அழித்து விடக்கூடாது. இப்பெருந் தொகையை இருபங்காக்கி விடுவதற்கு அனுமதியுங்கள். ஒருபாதியை என் முயற்சிக்கு மிகவும் தாராளமாகக் கொடுக்கப் பட்ட கொடை என நான் நன்றியுணர்வுடன் ஏற்றுக் கொள்வேன். ஆனால் இன்னும் நீங்கள் கொடுக்க விரும்பினால், உங்கள் நல்லெண்ணமும் நன்முகமும் எனக்குப் பயன்படுமாறு அருளுங்கள்'' என்றான்.

விருப்ப மின்றிப் பாக்கெட் புத்தகத்திலிருந்து கொஞ்சம் பகுதியைத் திரும்ப ஏற்றுக்கொண்ட தளபதி, ஆடமைப் பார்த்து, ''உமது விருப்பத்திற்கு நான் இணங்குவது என் பணப்பையைக் காட்டிலும், என் நல்லெண்ணம் உமக்குப் பயன் படமுடியும் என்று எண்ணுவதால்தான்'' என்றார்.



''உங்கள் நல்லெண்ணத்தில் நான் இப்போது கொஞ்சம் உரிமை பெறலாமென்று விழைகின்றேன்'' என்று ஆடம் உரைத்தான்.

''நீர் கேட்கும் வரம் எதுவாயினும் உமக்குக் கொடுக்கப் பட்டுவிட்டது'' என்று ஒரே குரலில் கூறினர் தளபதியும் அவர் மனைவியும்.

''அதைப்பற்றி நான் உறுதியாக இருக்கமுடியாது. ஏனெனில் நான் கூறப்போகும் செய்தி தாங்கள் அசைந்து கொடுக்க விரும்பாத ஒன்றைப் பற்றியது; ஒரு புதிய ஆளை விட்டுவிடுவதைப் பற்றியது'' என்றான் ஆடம்.

''என் கடமை என்னை அப்புடிச் செய்துவிடுகிறது. நாம் எப்படிப்பட்ட ஆட்களை வைத்துக் கொண்டு மனநிறைவு அடைய வேண்டியிருக்கிறது என்பதை நீரே அறிவீர். அவர்கள் நிறையக் குடிக்கின்றனர்; வயிறு பெருக்கின்றனர். இரவுமுழுதும் துன்புறுகின்றனர். மறுநாள் அதற்காக வருந்துகின்றனர். மூளைக்குறைவுடையவர்கள் எனக் கூறப்படும் எல்லாரையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டால், பிறகு ஒரு சிலரே மிஞ்சுவர். ஒவ்வொருவரும் தங்கள் துன்பக் கதைகளைக் கூறுகின்றனர். எல்லாவற்றையும் கவனிக்க முடியாது. எனினும் உமது செய்தியைக் கவனிக்கிறேன்'' என்றார் தளபதி.

''என் செய்தி ஒரு தனிப்பட்ட செய்தி. அவரிடமிருந்து ஓராயிரம் பவுன்களை யாரோ திருடிக்கொண்டனர்.''

''ஆயிரம் பவுன் வைத்திருக்கும் ஆளும் இந்த வேலைக்கு வந்துள்ளானா? டாக்டர், நான் சொல்வதைத்

நம்பும். அவன் நிச்சயமாய் உம்மை ஏமாற்றியிருக்கிறான். கடவுளே! யாராவது ஆயிரம் பவுன்களை வைத்துக்கொண்டு இந்த வேலையில் சேருவதற்கு முன் வருவார்களா?''

''அவருக்கு அந்த எண்ணமில்லை. இந்தியாவில் வேலை கிடைக்கும் என்று சொல்லித் தூண்டி ஏமாற்றிய ஒரு போக்கிரியை அவர் நம்பி வந்துவிட்டார்.''

''அப்படியானால் அது அவருடைய நண்பன் டாம் கிலாரியாகத்தான் இருக்க வேண்டும். அவனைப் போல ஏமாற்றுத் தனமும், வஞ்சனையும் உடையவர் வேறு யாருமில்லை. அவன் கட்டாயம் கழுமரம் ஏறத்தான் போகிறான். ஆனால் இந்த ஆயிரம்பவுன் கதை டாம்கிலாரியின் எல்லையையும் தாண்டிச் செல்கிறது. இந்த ஆள் அவ்வளவு பணம் வைத்திருந்தான் என்று நம்புவதற்கு என்ன காரணங் காட்டுவீர்?''.

''அவர் பணம் வைத்திருந்ததை நான் நிச்சயமாய் அறிவேன். அவரும் நானும் ஒரே மருத்துவப் பேராசிரியரிடம் ஒன்றாய்ப் பயின்றோம். தாம் படித்த படிப்புத் தொழிலை விரும்பாதவராய், வயது வந்ததும் தம் பணத்தை வாங்கிக்கொண்டு இந்தக் கிலாரியின் உறுதிமொழிகளால் ஏமாற்றப்பட்டிருக்கிறார்'' என்றான் ஆடம்.

''நமது ஒழுங்கான பிணியாளர் நிலையத்தில் யார் அவரை அடைத்து வைக்கச் செய்தவர்?'' என்று கேட்டார் தளபதி.

''அது எந்த நோய்க்காகவும் இல்லை. அதிகாரிகளின் எல்லா விசாரணைகளையும் அமுக்கிவிடும் ஒரு வாய்ப்பை அவர் பெறட்டும் என்று கருதி நான் செய்ததுதான்.''

''இது மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படும். ஆனால் டாம்கிலாரியைப் போன்றவர்களின் துணையையும் நட்பையும் கொண்டு ஓர் அனுபவமில்லாத இளைஞர் உலகில் புகுவதற்கு அனுமதித்த அவர் நண்பர்கள் எவ்வளவு வருந்தத் தக்க முறையில் கவனமில்லாது போய்விட்டனர்! அதுவும் ஆயிரம்பவுனைக் கையில் வைத்துக் கொண்டிருப்பவரை அவனுடன் அனுப்பியிருக்கின்றனரே! பெற்றோர்கள் அவரைத் தலையில் தட்டி அங்கேயே நிறுத்தி வைத்திருக்க வேண்டும்.''

''உண்மையில் அந்த இளைஞரின் பெற்றோர்கள் புதுமையான வன்னெஞ்சம் உடையவராய் அல்லது கவனம் இல்லாதவராய்த்தான் இருக்கவேண்டும்!'' என்றார் விதரிங்டனின் மனைவி.

''பெற்றோர்களே அவருக்குத் தெரியாது, அம்மா. அவருடைய பிறப்பே ஓர் இரகசியமாக இருக்கிறது. அவர் சட்டப்படி பணம்பெறும் வயதுவந்ததும், விருப்பமின்றி அடையாளந் தெரியா ஒருவர், வன்னெஞ்சத்துடன் அவருக்குரிய தொகையைக் கொடுத்துவிட்டுப் போனார். துடுப்போ, திசைகாட்டும் கருவியோ, மாலுமியோ இல்லாது கடற்கரையிலிருந்து தள்ளப்பட்ட ஒரு கப்பலைப்போல் அவர் இவ்வுலகில் சேர்க்கப்பட்டார்'' என்றான் ஆடம்.

இந்தச் சமயத்தில் தற்செயலாய்த் தளபதி விதரிங்டன் தம் மனைவியை நோக்க, அவரும் அதேபோலத் தம் கணவரை நோக்கினார். இருவரும் ஒரு கணம் ஆழ்ந்த, புதுமையான பொருளுள்ள பார்வையைப்

பரிமாறிக் கொண்டனர். பிறகு இருவர் கண்களும் நிலத்தில் பதிந்தன.

தழுதழுத்த குரலில் "நீங்கள் ஸ்காட்லாந்திலா வளர்ந்து வந்தீர்கள்? உங்கள் பேராசிரியரின் பெயர் என்ன?" என்று தளபதியின் மனைவி ஆடமைப்பார்த்துக் கேட்டார்.

"மிடில்மசு நகரத்தில் கிடியன்கிரே என்பவரிடம் நான் தொழில்பயின்றேன்" என்றான் ஆடம்.

"மிடில்மசு! கிரே!" என்று திருப்பிக் கூறினார் தளபதியின் மனைவி. பிறகு நிலத்தில் மயங்கி வீழ்ந்தார்.

ஆடம் தன் தொழில் குறிப்பிட்ட உதவிகளை எல்லாம் அவருக்குச் செய்தான். கணவர் மனைவியின் தலையைத் தாங்குவதற்கு விரைந்தார். மனைவி மயக்கந் தெளியும்போது, வேண்டுகோளும் எச்சரிக்கையும் கலந்த குரலில், "ஜிலியா, கவனம் கவனம்!" என்று காதோடு காதாய்க் கூறினார்.

சில பொருளில்லா ஒலிகள் அவர் நாக்கில் தோன்றி அங்கேயே மறைந்தன.

"கண்ணே, உன் உடுப்பறைக்கு அழைத்துச் செல்லட்டுமா?" என்று கவலையுடன் கேட்டார் கணவர்.

மனைவியும் எழுந்து கணவர்மேல் பாதி சாய்ந்து கொண்டு, தன் முயற்சியால் பாதி நடந்து சென்று, அறையின் அருகே சென்றபோது, பின்னால் வந்த ஆடம், தான் ஏதாவது உதவி செய்யக் கூடுமா என்று கேட்டான்.



"வேண்டாம்!" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார் தளபதி.

"புதியவரின் இடையீட்டுக்கு இது இடமன்று; நீர் தேவைப்பட்டால் சொல்லியனுப்புகிறேன்" என்றும் சொன்னார்.

இதற்குமுன் இப்படிப் பேசாத தளபதி விதரிங்டன் இப்போது தன் முகத்திலடித்தாற்போல் இதைக் கூறியதும், ஆடம் பின்னோக்கி நகர்ந்தான். நற்குணங்கள் நிறையப் பெற்றிருப்பினும் மிகவும் கர்வமும் திமிரும் உடையவர் என்று பொதுமக்கள் அவரைப்பற்றிக் கூறிய செய்தி உண்மையானதே என்பதை முதன் முதலாக நன்கு உணர்ந்து கொண்டான்.

"இதுவரை கவலையாலும், வருத்தத்தாலும் அவர் மனம் வலுக்குன்றி யிருந்தது; இப்போது பழைய முறுக்கினை அடைந்துவிட்டது" என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். ஆனால் அவர் இந்தத் தீவினைமிக்க ரிச்சர்டைப்பற்றிச் சிறிது அக்கறை எடுத்துக்கொண்டால் நல்லது என்று விரும்பினான்.

தளபதி ஓரிரு மணித்துளி கழித்துத் திரும்பிவந்து ஆடமைப் பார்த்துப் பழைய மரியாதைக் குரலில் பேசலானார். ஆனால் இன்னும் பெரிய சங்கடமான நிலையில் இருந்ததை அவர் குரல் காட்டினாலும், அதை மறைக்க வீணே முயன்றார்.

"என் மனைவிக்கு இப்போது பரவாயில்லை. பகல் உணவுக்கு முன்பு முழு நலம் எய்திவிடுவாள். எங்களுடன் இன்று உணவுண்பீர் என எண்ணுகிறேன்" என்றார்.

ஆடம் இசைவைக் காட்டுவதுபோல் தலை வணங்கினான்.

"என் மனைவிக்கு இதுபோல நரம்புத் தளர்ச்சி அடிக்கடி ஏற்படும். கவலையாலும் பயத்தாலும் அண்மையில் அவள் பாதிக்கப்பட்டிருக்கிறாள். அதிலிருந்து அவள் மீளும்போது தன்னுணர்ச்சி பெறுவதற்குச் சில மணித்துளிகள் ஆகும். உமக்குமட்டும் இரகசியமாகச் சொல்லுகிறேன் டாக்டர்; அவ்விடை நேரத்தில் அவள் என்றும் நடைபெறாத கற்பனை நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசுவாள். சில சமயம் தன் இளமைக் காலத்தே நிகழ்ந்த துன்ப நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறுவாள். அதனால் என்னைத் தவிர அல்லது அவளுடைய பழைய வேலைக்காரி லோபசைத் தவிர வேறு யாரும் அச்சமயத்தில் அங்கிருப்பதை நான் விரும்புவதில்லை" என்றார்.

தலைசுற்றல் பொதுவாக நரம்புத்தளர்ச்சியின் விளைவால் ஏற்படுவதே என்று ஆடம் விளக்கினான்.

தளபதி மேலே தொடர்ந்தார்: "இந்த வாலிபர்—உம் நண்பர்—ரிச்சர்டு மிடில்மசை—அப்படித்தானே அழைப்பீர்கள்?"

"நான் இதுவரை கூறாவிட்டாலும், அவர் பெயரைச் சரியாகச் சொல்லிவிட்டீர்களே!" என்றான் ஆடம்.

"வியப்புத்தான். சரி, நீர் மிடில்மசைப்பற்றி ஏதோ சொன்னீரல்லவா?" என்று கேட்டார் தளபதி விதரிங்டன்.

"நான் அந்நகரத்தின் பெயரைக் கூறினேன்" என்றான் ஆடம்.



"ஆடம், நான் அந்தப் புதிய பயிற்சியாளரின் பெயரும் அதுவேயெனக் கொண்டுவிட்டேன். அந்தச் சமயத்தில் உண்மையில் என் மனைவியைப்பற்றிய கவலையில் மூழ்கியிருந்தேன். ஆனால் இந்த மிடில்மசு—பேர் அப்படியிருப்பதால் ஒரு முரட்டு இளைஞரோ?" என்று வினவினார்.

"நான் அப்படிச் சொன்னால் அவருக்குத் தீங்கு புரிந்தவனாவேன். மற்ற இளைஞரைப்போலச் சில குற்றங்களுடையவராய் இருக்கலாம். ஆனால் நானறிந்தவரை அவர் நடத்தை மதிக்கத்தக்கதாகவே இருந்துவந்திருக்கிறது. ஆனால் ஒரே வீட்டில் இருந்து வந்தாலும் நாங்கள் மிகவும் நெருங்கிப் பழகவில்லை" என்றான் ஆடம்.

"அது நல்லதன்று; உம்மைப்போன்ற நண்பர் அவருக்குக் கிடைத்திருந்தால் இன்பம் அடைந்திருப்பார். ஆனால் அவரைவிட நீர் நன்றாகப் படித்துள்ளீர் என்று நினைக்கிறேன். அவர் போர்ப்படையில் சேருவாரா? பார்ப்பதற்கு நன்றாயிருப்பாரா?"

"மிகவும் நன்றாயிருப்பார்."

"அவருடைய் நிறம் கறுப்பா சிவப்பா?" என்று கேட்டார் தளபதி.

"மிகவும் கறுப்புத்தான். உங்கள் நிறத்தோடு ஒப்பிடுவதற்கு அனுமதித்தால் உங்களைவிடக் கறுப்புத்தான்" என்றான் ஆடம்.

"அப்படியானால் கறுப்புக் காகம்தான்! என்னென்ன மொழிகள் அவருக்குத் தெரியும்?"

"இலத்தீனும் பிரெஞ்சும் நன்றாகத் தெரியும்."

"வாள்வீச்சும், நடனமும் தெரியாது என்று நினைக்கிறேன்."

"மன்னிக்கவேண்டும். நான் அதைப்பற்றித் தீர்ப்புக்கூறத் தகுதியில்லாதவன். ஆனால் ரிச்சர்டு அவ்விரண்டையும் மிகத் திறம்படச் செய்பவராகவே கருதப்படுகின்றார்."

"அப்படியா? இது போதும். சுருங்கக் கூறினால், அழகானவர், பயிற்சிகள் நன்கு பெற்றவர், நன்றாகக் கற்றவர், மிகநன்றாக வளர்க்கப்பட்டவர்; காரண மின்றிக் கடுரங்கொள்ளாதவர். இவையெல்லாம் ஒரு பயிற்சியாளனுக்கு வேண்டிய தேவைக்கு மேற்பட்ட தகுதிகளே. டாக்டர், உங்களுக்காகவாவது அவர் உயர் வேலை பெறத்தான் வேண்டும்."

"தாங்கள் மிகவும் தாராள மனப்பான்மை யுடையவர்."

"நான் அப்படித்தான். டாம்கிலாரி தூக்கிலிடப் படுதற்கே தகுதியுடையவன். தூக்கிலிடப்பட விரும்பா விடில் அவன் திருட்டுப் பணத்தையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடுமாறு செய்கிறேன். நீர் இன்று பிணி யாளர் நிலையத்திற்குத் திரும்பிச் செல்லமுடியாது. எங்களுடனேயே சாப்பிடவேண்டும். என் மனைவிக்கு நோய்ப் பயம் இன்னுமிருக்கிறதா என்று அறிந்து கொள்ளும். ஆனால் நாளைக்கே உம் நண்பரைக் கண்டுபிடிக்கலாம். அவர் வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கும்படி வேலைக்காரனிடம் சொல்கிறேன். டாம்கிலாரி எல்லாப் பணத்தையும் திருப்பித் தரும்படி செய்கிறேன். அடுத்த திங்களன்று புறப்படும் கப்பலில் உம் நண்பரை முதலில் அனுப்பிவிட வேண்டும்.



பாவம் அவர் வைட் தீவிலிருந்ததால் துன்பமுற்றிருப் பார்!" என்றார் தளபதி.

"அவர் புறப்படு முன்பு தங்களுக்கு நன்றி வணக் கம் செலுத்த வாய்ப்பளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றான் ஆடம்.

"இவையெல்லாம் எதற்காக?" என்று அவசர மாகக் கேட்டார் தளபதி; "நீர் சொல்வது சரி. நானும் அவரைப் பார்க்கவேண்டும். குளிர்கால மானதால் அவர் குதிரைமேலறி வரலாம். ஆனால் பிணிநிலையத்தி லிருந்து சென்று ஓரிரு நாட்கள்தான் ஆகியிருக்கும். எனவே அவருக்கு இன்னும் கொஞ்சம் ஓய்வு கொடுப் பது நல்லது. இதற்குள்ளே உமது இடத்திற்கே அவரை அழைத்துச் செல்லும், டாக்டர். அவர் அதிகாரிகளிடமோ, மற்றவர்களிடமோ அதிகம் வைத் துக்கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளுவது நல்லது. இன்னொரு கிலாரியிடம் அகப்பட்டுக் கொள்ளப் போகிறார்" என்றார்.

ஆடம் ரிச்சர்டின் பிறப்பைப்பற்றிய சூழ்நிலைகளை யெல்லாம் நன்கு அறிந்து கொண்டிருந்திருந்தால் ரிச்சர்டைப்பற்றிப் பேசும்போதெல்லாம் தளபதி விதரிங்டன் நடந்துகொள்ளும் முறையைப்பற்றிக் கவனித்து உணர்ந்திருப்பான். ஆனால் மருத்துவர் கிரே வும், ரிச்சர்டும் அதைப்பற்றிப் பேசாமல் இருந்துவிட்ட தால் அவனுக்கு அதிகம் தெரிந்துகொள்ள வாய்ப்புநேர வில்லை. பொதுவாகப் பேசப்படும் செய்தியை மட்டும் கேட்டிருந்ததால், இன்னும் அதைப்பற்றித் துருவி யறிந்துகொள்ள வேண்டும் என்ற தூண்டுதல் ஆடமுக்கு ஏற்படவில்லை. எனினும் தானறிந்த செய்தியே

அவனுக்கு வியப்பூட்டுவதாய் இருந்ததால், இப்போது மேலும் அதைப்பற்றி அறிந்து கொள்ளுவதற்காகச் சிறு சோதனை ஒன்று செய்துபார்க்கலாம் என்று விரும்பினான். அதனால் ஒன்றும் தீங்கு நேராது என்றும் நினைத்தான். ரிச்சர்டு கொடுத்த அழகிய மோதிரத்தைக் கையிலணிந்துகொண்டு தளபதி இல்லாத சமயம்பார்த்து அம்மோதிரத்தை அவர் மனைவி நன்கு காணுமாறு சந்திக்கவேண்டும் என்று சென்றான்.

மோதிர ஒளிக்கல்லைக் கண்டவுடனே அவர் மனைவி அதிலேயே தம் கண்ணை வைத்துக்கொண்டவராய் அதை அருகில் வந்து காட்டுமாறு ஆடமை வேண்டினார். அது அவர் தம் நண்பருக்குக் கொடுத்த மோதிரத்தைப் போலவே இருக்கிறதென்று எண்ணினார். அவன் கையிலிருந்த அம் மோதிரத்தை எடுத்துத் தம் மென்கையில் வைத்தார். ஆடம், "இந்த மோதிரம் தளபதி முன்னே சொல்லிக்கொண்டிருந்த என் நண்பருடையது" என்றான். விதரிங்டன் மனைவி வியப்பிலாழ்ந்தார்; மறுநாள் தனியே வரும்படி ஆடமைக் கேட்டுக்கொண்டார். இவ்விருவருடைய சந்திப்பைப்பற்றிப் பிறகு தேவையான அளவு அறிவிப்போம்.

இந்த முக்கியமான நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்த பிறகு மறுநாள் மிடில்மசு வியக்கும்படி, பிணி நிலையத்து அணிமையிலிருந்து பிரிக்கப்பட்டு ரைட் நகரத்தில் தன் நண்பனின் இருப்பிடத்திற்கு மாற்றப்பட்டான். அவ் வீட்டிற்கு ஆடம்கூட அடிக்கடி வருவதில்லை. தளபதியின் மனைவியின் பயமெல்லாம் அகற்றுவதற்காக அவர் வீட்டிலேயே ஆடம் அடிக்கடி தங்கும்படி நேர்ந்தது.



இரண்டு மூன்று நாட்களுக்குள் ரிச்சர்டுக்கு ஒரு வேலை வந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் உதவிப் படை ஆணையாளராகப் பதவி கிடைத்தது. விண்டர் என்னும் வேலைக்காரன் புதிய அதிகாரிக்குத் தக்க ஆடைகளைப் புனைந்தான்; ரிச்சர்டு பயங்கரத் துன்பங்களிலிருந்து விடுபட்டதுடன், மிகவும் முக்கியமான தளபதியின் கண்காணிப்புக் குரியவனானதற்காக ஆராப் பெருமகிழ்ச்சி உற்றான். ஆடம் குறித்த குறிப்புக்களின் படி தவறாது நடந்தான். யாருடனும் பழகுதலையோ, வெளியே பொதுமக்களிடம் நடமாடுதலையோ தவிர்த்தான்; ஆடமைக்கூட அடிக்கடி பார்ப்பதில்லை. நன்றியுணர்வுமிக்க ரிச்சர்டு, தன் கீழ்மை நிலையைப்பற்றிய எண்ணத்தை எப்போதும் தன்னிடம் எழுமாறு செய்துகொண்டிருந்த ஆடம் அறையில் இல்லாமைக்காக ஒன்றும் வருந்தவில்லை.

# 8. கற்றாவின் மனம்போலக் கசிந்துருகும் தாய்

டவுன்சு நகரத்திற்குப் புறப்படும் நாளின் முந்திய மாலையில் புதிதாக வேலை ஏற்ற உதவித்தளபதியான ரிச்சர்டை வேலையாள் விண்டர் வந்தழைத்தான். ரிச்சர்டு தளபதி விதரிங்டன் இருப்பிடத்திற்குச் சென்று தம் புரவலரை அறிமுகம் செய்து கொள்வதுடன், அவரிடம் விடையும் பெற்றுக் கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வழியில் வரும்போது முதியவனான வேலைக்காரன் தளபதியிடம் எப்படி மரியாதையுடன் நடந்து கொள்வது என்பதைப் பற்றி ரிச்சர்டுக்குச் சொல்லிக் கொடுத்தான். “நார்த்தம்பர் நாட்டிலிருந்து வந்த எல்லாரினும் தாராளமான மனமுடையவராயினும், தளபதி தமக்குரிய மதிப்பைப் பெறுவதில் மிகவும் கண்டிப்பானவர்” என்று அறிவுறுத்தினான்.

அவர்கள் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கையில், வீட்டில் தளபதியும் அவர் மனைவியும் அவர்கள் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் கொண்டு காத்திருந்தனர். ரிச்சர்டு வந்ததும் எல்லாரும் ஓர் அழகியவிருந்தினர் அறைக்குள் உட்கார்ந்தனர். தளபதியின் பின்னால் ஒரு பெரிய விளக்குத்தாங்கி தொங்கிக் கொண்டிருந்தது. விளக்கின் வெளிச்சமெல்லாம் தளபதியின் எதிர்ப்புறத்தில் விழுந்ததால் அது அங்கே அமர்ந்திருப்போர் எல்லாரையும் நன்றாக விளங்கக் காட்டியது. ஐரோப்பாவிற்கே புதுமையான, பொன்னும் வெள்ளியும் கலந்த மஸ்லின் பட்டுத் துணிகளால் உறையிடப்பட்ட வெண்மையான திண்டுகள், பட்டுச் சால்வைகள் முதலிய ஆடம்பரப் பொருள்கள் அங்கே



இருந்தன. அவற்றுக்கிடையே அமர்ந்திருந்த தளபதியின் துணைவி அழகின் உச்சநிலையை ஏற்கெனவே கடந்து நின்ற போதிலும், முன்பு அழகின் கொழுந்தாயிருந்ததற் கேற்ற அடையாளச் சிறப்புக்களுடனும், ஆழ்ந்த உணர்ச்சி ததும்பும் உள்ளத்துடனும் வீற்றிருந்தார்.

“ஜிலியா, நீ எடுத்துக்கொண்ட வேலையைச் செய்ய உன்னால் செய்யமுடியாது. நான் சொல்வதைக் கேள். ஓய்வு எடுத்துக் கொள். இங்கே நடப்பதெல்லாம் உனக்குத் தெரியப்படுத்துகிறேன். போய் ஓய்வாயிரு. மறுபடியும் பார்க்க முடியாத ஒருவனை ஒரு கணம் மட்டும் பார்க்கும் நப்பாசைக்கு இடங்கொடுத்து என்ன பயனைப் பெறப்போகிறாய்?” என்றார் தளபதி.

“ஐயோ! அவனை இனிமேல் பார்க்க முடியாது என்று நீங்கள் அறிவிப்பதொன்றே நான் இப்போது கட்டாயம் பார்க்கவேண்டுமென்பதற்குப் போதிய காரணமாகாதோ? நான் இவ்வுடலில் இருக்கும்வரை மீண்டும் பார்க்கமுடியாத ஓர் உருவத்தையும், அதன் சிறப்புநிலைகளையும் ஒரு தடவையாவது பார்த்து உள்ளக்கிழியில் எழுதிவைத்துக் கொள்ளக் கூடாதா? ரிச்சர்டின் தெய்வத்திருமுகம் என்னைவிட்டு என்றும் மறையாது. அதுதான் எனக்கு இளமைக்காலங்களில் சொல்லமுடியாத துன்பங்களுக் கெல்லாம்’ காரணமாகவும் ஆறுதலாகவும் இருந்தது” என்றார் தளபதியின் மனைவி.

“போதும் ஜிலியா. நீ இந்த வரத்தை வேண்டினாய், கொடுத்தேன். எப்படியாயினும் என் வாக்குறுதியைக் காப்பாற்றவேண்டும். ஆனால் அந்த உயிர்

போகும் இரகசியத்தில் எவ்வளவு அடங்கியிருக்கிறது என்று எண்ணிப் பார். என் உயர்வும், சமூகத்தில் மதிப்பும் உன்பெருமையும் மங்கக் கூடாது என்று தான் விரும்புகிறேன். ஜிலியா, அந்த இரகசியம் அலர்தூற்றுவோர்க்கும் பழிதூற்றுவோர்க்கும் எப்படியாவது வெளிப்பட்டு விட்டால், பிறகு உன்னை எல்லோரும் அவமதிப்புடன்தான் நோக்குவர். சொல்ல முடியாத துயரம் பெருகும். அவ்வதந்தியைப் பரப்ப எவனாவது துணிந்துவிட்டால் இரத்தம் சிந்தும் போருண்டாகும்; சாவுகளும் ஏற்படும்.

"என் இயற்கையின் வலிமை அனுமதிக்குமளவு உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன். ஆனால், ஓ, என் முன்னோரின் கடவுளே. ஏழைமானிடராகிய எங்களை எந்த மண்ணால் உருவாக்கினீர்கள்! பாவத்தினால் வரும் பழிக்கு அஞ்சி வெட்கப்படுகிறோம். ஆனால் அப் பாவத்திற்காக வருந்துவதில்லை!" என்றார் விதரிங்டன் மனைவி. இதற்குப்பின் ஒரு மணித்துளியில் காலடிச் சத்தம் கேட்டது; கதவு திறந்தது. உதவித் தளபதி மிடில்மசின் வருகையை விண்டர் தெரிவித்தான். பெற்றோரென்றறியாது அவனும் அவர்களுக்கு முன்னே வந்து நின்றான்.

விதரிங்டன் உள்ளத்தில் முதலில் அவரையறியாது ஒரு மகிழ்ச்சி தோன்றியது. ஆனால் உடனே தம்மை அடக்கிக் கொண்டு ஓர் உயர்ந்த அதிகாரி தம் கீழதிகாரியை வரவேற்கும் முறையைப் பின்பற்றினார். ஆனால் இத்தளபதியைப் பொறுத்தவரை அது ஓரளவு கொடுமை கலந்ததாகவும் இருந்தது. ரிச்சர்டின் அன்னையால் தம்மை அடக்கிக் கொள்ள முடியவில்லை.



அவர் வருந்தியழுது துடித்துக்கொண்டு தம் மகனின் உடல் மீது சாய்ந்து அணைத்துக் கொள்ளத் தாவினார். ஆனால் எச்சரிக்கை செய்யும் கணவரின் பார்வை அவரை மந்திரம் போலக் கட்டுப்படுத்திவிட்டது. அப்படியே நின்று கொண்டிருந்தார்; அவரது அழகிய தலையும் கழுத்தும் சற்று முன்னோக்கிச் சென்றன; கைகள் ஒன்றுக்கொன்று பிசைந்து கொண்டன; பின் தம் கையை மகனை நோக்கி நீட்டினார். ஆனால் அசைவற்று நின்றார். உயிராற்றலைக் கொடுக்காது உயிர்ச்சிலை போலத்தோற்றமளிக்கும்படி சிற்பிசெய்த பளிங்குச் சிலைபோல் நின்றார். அப்புதுமையான நிலையும், உறுப்பசைவுகளும் இள அதிகாரிக்கு வியப்பை மிகுதியாகக் கொடுத்திருக்கும். ஆனால் தொங்கும் விளக்கின் நிழலில் அவன் அன்னை நின்றிருந்தார். மேலும் அவன் புரவலரான விதரிங்டனைப் பார்ப்பதில் ஈடுபட்டிருந்தால் அவர் மனைவி அங்கே இருப்பதைக் கூடக் கவனிக்காதிருந்தான்.

தளபதி பேசாமலிருப்பதைக் கண்டு, ரிச்சர்டு பேசத் தொடங்கி, "இந்த வாய்ப்புப் பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன். தங்களுக்கு எவ்வளவு நன்றிகள் கூறினாலும் அவை போதியனவாக மாட்டா" என்றான்.

நன்றி கூறுவதில் வழக்கம்போலவே கவனமில்லாமல் வார்த்தைகளைப் பேசினாலும், அவன் குரலொலி அன்னையை அசைவற்றிருந்த கட்டிலிருந்து விடுவித்து விட்டது. அவன் அன்னை ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்; முன்பிருந்த நிலையினின்றும் சிறிது தளர்ந்தார். எழுந்துவந்து திண்டின் மேலேயே மீண்டும் சாய்ந்தார். அவரது பெருமூச்சின் உயிர்ப்பையும்

ஆடையின் சலசலப்பையும் கேட்டு அப்பக்கம் சிறிது திரும்பினன் ரிச்சர்டு. அப்போது தளபதி அவனிடம் பேசுவதற்கு விரைந்தார். "ரிச்சர்டு, என் மனைவிக்குக் கொஞ்சநாளாய் உடம்பு நலமில்லை. நரம்புக் கோளாறு உடையவள். உன் நண்பர் ஆடம் இதைப்பற்றி உன்னிடம் சொல்லியிருப்பாரே'' என்ருர்.

மிடில்மசுக்கு வருத்தம் மேலிட்டது.

"மிடில்மசு, எங்கள் குடும்பத்தில் ஒரு பேரிடி விழுந்தது. இதயம் வெடித்துப் போகக்கூடிய பேராபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றியது ஆடமின் கைவன்மையே. எங்கள் நன்றியைத் தெரிவிக்கும் வழியாக அவர் நண்பனுகிய உனக்கு ஏதாவது நன்மை செய்ய வாய்ப்பு ஏற்பட்டால் மிக மகிழ்வோம்'' என்ருர் தளபதி.

''நான் ஆடமின் கண்காணிப்பில் இருப்பவன் மட்டும்தான்; நண்பனல்லன்'' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் ரிச்சர்டு. ஆனல் அவரைப்பார்த்து, "தளபதி விதரிங்டனும், அவர் குடும்பத்ினரும் உதவியாயிருக்கும் கிடைத்தற்கரிய பேறு பெற்றமைக்காக அவருடைய நண்பனுகிய என்னைப் பார்த்து எல்லாரும் பொருமை கொள்வர்" என்ருன்.

''நீ வேலை ஏற்பதற்குரிய கட்டளை வந்திருக்கும் என்று நினைக்கிறேன். போய்ச் சேருமிடத்தைப் பற்றி ஏதாவது குறிப்பிடத்தக்க விருப்பமோ ஆசையோ இருந்தால் தெரியப்படுத்தலாம்'' என்ருர் தளபதி.

"ஒன்றுமில்லை. ஆடம் தங்களுக்கு என் மகிழ்ச்சியில்லாத மனநிலையை அறிவித்திருப்பார் என நினைக்கிறேன். நான் ஓர் அனதை. பரந்த உலகில்



என்னைத் தனியே விட்டு விட்டுச் சென்றனர் என் பெற்ருேர். என்னைப் பற்றி இங்கு யாருக்கும் தெரியாது. எனக்காகக் கவலைப்படுவோரும் இவ்வுலகில் இல்லை. நான் வெகுதூரத்திற்குச் சென்று அங்கு அலைந்து திரிந்து கொண்டு யாருமறியாமல் வாழ வேண்டும் என்றும், தங்களிடம் தொடர்பு கொண்டு அவர்கள் மதிப்பை நான் கெடுக்கக் கூடாது என்றும் ஒரு சிலர் விரும்புகின்றனர்'' என்ருன் ரிச்சர்டு.

இவ்வாறு அவன் பேசும்போது ஜிலியா தம் கைகளைப் பிசைந்தார். மஸ்லின் திரைச்சீலையைத் தலைமுழுவதும் சுற்றிக் கொண்டார். தம் மனத்துன்பத்தை மிகுதிப்படுத்தும் மனத்து ஒலியை மறைப்பது போல், ஆடையால் தம்மை மறைத்துக் கொண்டார்.

தளபதி ரிச்சர்டைப் பார்த்து, "உன் செய்திகளைப் பற்றிக் குறிப்பாக ஆடம் ஒன்றும் சொல்லவில்லை; நானும் அதைப்பற்றி யெல்லாம் பேசி உன் மனத் துயரத்தை அதிகப்படுத்த விரும்பவில்லை. நான் விரும்புவதெல்லாம் நீ சென்னையைச் சென்றடைவதுடன் மனநிறைவு கொள்வாயா என்றறிந்து கொள்வதுதான்'' என்ருர்.

''கட்டாயம் மனநிறைவடைவேன். வில்லன் கிலாரி இல்லாத இடம் எங்காயினும் எனக்குச் சரிதான்'' என்ருன் ரிச்சர்டு.

''ஓ! கிலாரி போன்றவர்கள் நியூகாசில் முதலிய இடங்களிலிருந்து மனிதச் சட்டகங்களைப் பொறுக்கி இந்தியாவுக்கு அனுப்புவதற்குத் தேவையானவர்களே. எனினும் அவன் திருடிய பண நோட்டுக்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன. நீ தொலைத்த அதே பணத்

தாள்கள்தாம். அந்தப் போக்கிரி கொஞ்சம் செலவு செய்து விட்டான். மீதிப் பணமெல்லாம் அப்படியே தான் இருக்கிறது. உன் துன்பநிலையை அறிந்து அப்பணத்தையும் ஒரு நண்பர் கொடுத்து நிறைவு செய்துள்ளார்'' என்றார் தளபதி.

ரிச்சர்டு மண்டியிட்டு வணங்கித் தனக்கு விடுதலையளித்த அவர் கைகளை முத்தமிட்டான். 'சீ உனக்கென்ன பைத்தியமா ?' என்று சொன்னார் தளபதி. ஆனால் தம் கையை அவனது அன்புப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளவில்லை. இதுபோன்ற சமயங்களில் நம் மிடில்மசின் சொல்லாற்றல் வீறு பெறத் தொடங்கிவிடும்; ''ஓ, என் தந்தையினும் சிறந்தவரே! என்னை இவ்வுலகத்திற்குத் தாங்கள் செய்த பாவத்தால் கொண்டுவந்து இரக்கம் சிறிதுமின்றி என்னைக் கைவிட்டுப் போன, இயற்கைக்கு மாறான என் பெற்றோர்களைக் காட்டிலும் உங்களுக்கு நான் எவ்வளவோ பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றான்.

வாள்போல் அறுக்கும் இந்தச் சொற்களைக் கேட்டதும் ஜிலியா தம் முகத்திரையைத் தூக்கியெறிந்தார்; மீண்டும் அதை இருகையாலும் எடுத்துத் தூர எறிந்தார். பின் துன்பக் குரலொன்றை எழுப்பிக் கொண்டு கீழே வீழ்ந்தார். ரிச்சர்டின் கையை விரைவாக உதறிவிட்டுத் தளபதி விதரிங்டன் தம் மனைவிக்கு உதவி செய்வதற்காக ஓடினார். குழந்தையைப் போல அவரை எடுத்துத் தம்தோளில் சாய்த்துக்கொண்டு முன்னறையை நோக்கிச் சென்றார். அங்கே முதிய வேலைக்காரன் ஒருவன் இருந்தான்; மூர்ச்சை தெளிவிக்கும் முறைகளை எல்லாம் செய்தான். துன்பம் நிறைந்த



தளபதி எதிர்பார்த்தபடியே அந்த வேலைக்காரன் அவர் மனைவியை மூர்ச்சை தெளிவித்துக் கொண்டிருந்தான். எல்லாம் அவசரமாகச் செய்த போதிலும் மூர்ச்சை தெளிந்து விட்டது. ஆனால் பயங்கரமான மனவுணர்ச்சியுள்ள நிலையில்தான் அம்மையார் இருந்தார். தம் மகன் கடைசியாகக் கூறியசொற்களே அவர் மனத்தைக் கரைத்து விட்டன. பலமெல்லாம் சோர்ந்து விட்ட நிலையைப் பார்த்துக் கணவரிடம், ''ரிச்சர்டு சொன்னதைக் கேட்டீர்களா ?'' என்று மிகப் பலத்த குரலில் கேட்டார்; ''அந்த வார்த்தையைக் கேட்டீர்களா ? நம் சொந்தக் குழந்தையின் மூலமாகக் கடவுளே நம் பாவத்தைப் பற்றிப் பேசுகிறார். ரிச்சர்டு! பயப்படாதே! அழாதே! கடவுளின் இடிமுழக்கத்திற்கு அவரது இசையினிமையைக் கொண்டே பதிலளிக்கிறேன்'' என்றார் அன்னையார்.

பின்னர் அவ்வன்னை பியானோ இருந்த அறைக்கு ஓடினார். அவர் தம் அறிவெல்லாம் முற்றிலும் இழந்து விட்டாரோ என்று எண்ணித் தளபதியும், வேலைக்காரனும் ஒருவர்க்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டனர். அம்மையார் அவ்விசைக் கருவியில் கையை வைத்து இயக்கினார். இன்னிசை நாதம் பிறந்தது. அவரது இசைவன்மையாலோ, அவர் நினைவில் மலர்ந்த சிறந்த கீதங்களாலோ இசை பொலிவுபெற்றது. கடைசியில் அவர் குரல் ஒலியும், கருவியின் நாதமும் இளமைக் காலத்தில் புகழ் ஈட்டித்தந்த ஒரு பாட்டினைப் பாடும்போது ஒன்றாய் இயைந்தன. அவர் பாடியது அப்பாட்டை இயற்றிய ஈப்ரு அரசன் பாடியதைப் போலவே இருந்தது. அவர் கண்களில் கண்ணீர் தாரைகப் பெருகி வழிந்தது. அவர் குரல் ஒலியும்,



மகன் பிரிவாற்றாது அன்னை மாய்தல்



இசைக் கருவியின் ஒலியும் உடனியைந்து, மிகவும் சிறந்த இசைவாணர்களாலும் எட்டமுடியாத உயர்ந்த குரல்நிலையை அடைந்தது. பிறகு அது கீழிறங்கிக் கொண்டே வந்தது. மீண்டும் உயரவில்லை. ஏனெனில் பாடுபவரே தளர்ச்சியுற்று உயிர்நீத்து விட்டார்!

போன உயிரை மீட்கச் செய்த எல்லா முயற்சிகளும் பயனற்றுப்போயின. நிலைகலங்கிய கணவரின் அவலநிலையை ஊகித்து உணர்ந்து கொள்ளலாம். மருத்துவர்கள் எல்லாரையும் அழைத்துவர வேலைக்காரர்கள் அனுப்பப்பட்டனர். ஆடமும் மற்ற மருத்துவர்களும் அழைக்கப்பட்டனர். தளபதி அவ்வறையினுள்ளே தடுமாறி வீழ்ந்தார்; பின் எழுந்து அவசரமாக மிடில்மசு இருக்குமிடத்திற்கு ஓடினார். மிடில்மசும் அடுத்த அறையிலிருந்து இன்னிசை ஒலியைக் கேட்டு அதுவரும் திசைநோக்கி வந்துகொண்டிருந்தான். அவ்வறையருகே வந்ததும் அங்கிருந்த கலவரத்தையும், குழம்பிய குரல்களையும், அவசர ஓட்டங்களையும் கண்டு ஆச்சரியத்துடன் திடுக்கிட்டான். அவ்வளவு அலங்கோலங்களுக்கும் காரணம் என்னவென்று சிந்தித்தவாறே ஆங்கே நின்றிருந்தான்.

அந்தத் தீவினைமிக்க ரிச்சர்டைக் கண்டதும், தளபதியின் புயல்வீசும் உணர்ச்சிகள் பெருகிக் குன்றேறி நின்றன. மனைவியின் சாவுக்குக் காரணமானவனாகவே தம் மகனைக் கருதினார். மேல்சட்டையைப் பிடித்து இழுத்துக் கடூரமாய் அவனுடலைக் குலுக்கிவிட்டுப் பிணவறைக்கு அவனைத் தரதரவென்று இழுத்துச் சென்றார்.

" இங்கேவா. உனக்குக் கீழ்நிலைச் சேற்றில் ஆழ்ந்துகிடக்கும் வாழ்க்கைதான் மேலான வாழ்க்கையாகும். இங்கேவா. நீ அவ்வளவு சொல்லிப் பொருமைப்பட்ட உன் பெற்றவளைக் கண்ணால் பார். வெளுத்த, ஒல்லிய உருவத்தை, மெழுகால் செய்த உருவினைப் பார். சதையும் குருதியும் இல்லாத உன் தாயினுருவத்தைப் பார்! அதுதான் துயர்கொண்டிருந்த ஜூலியா மான்சாடா. அவளுக்குத்தான் உன் பிறப்பு வெட்கத்திற்கும் துயரத்திற்கும் காரணமாக இருந்தது. தீச் சகுனமான உன் வருகைதான் இப்போது அவளுக்குச் சாவினை வரவழைத்துத் தந்தது. என்னையும் பார்........" இவ்வாறு சொல்லிக்கொண்டே அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு நிமிர்ந்து நின்றார். தோற்றத்திலும், உருவத்திலும் பேயறைந்தவர்போலக் காணப்பட்டார். " என்னைப்பார்........ என் தலைமயிர் கந்தக நாற்றம் வீசுவது தெரியவில்லையா? என் புருவம் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார். 'பேய்க்கு அரசன் நான்தான். நீ தேடும் அப்பாவும் நான்தான்—நான்தான் எல்லாராலும் சபிக்கப்படும் ரிச்சர்டு திரேசாம். அவளைக் கொலை செய்த உன் தந்தையும் நான்தான்......." என்றார்.

இப்பயங்கரக் காட்சி முடிந்த பிறகு ஆடம் உள்ளே நுழைந்தான். இறந்தவரைக் கவனிப்பதையெல்லாம் உடனடியாக நிறுத்தவேண்டும் எனக் கருதினான். வேலைக்காரன் விண்டரிடமிருந்தும், தனபதியின் பித்து மொழிகளினின்றும் ஒருவாறு நிகழ்ந்த நிகழ்ச்சியின் இயல்பை அறிந்துகொண்டு, முடிந்தால் பயப்படத்தக்கதும், இகழத்தக்கதுமான இக்காட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென எண்ணினான். தன் புகழி



னைப் பற்றித் தனபதி கொண்டிருந்த நுண்ணுணர்ச்சியை நன்கறிந்திருந்த ஆடம், தனபதியின் நிலையை அத்தனைபேருக்கும் முன்னிலையில் கடிந்துரைத்தான். ஆனால் இப்போது தனபதி வெட்க உணர்ச்சியை விட்டுவிட்டுப் பேசினார் :

" உலகமெல்லாம் என் பாவத்தையும் எனக்குற்ற தண்டனையையும் கேட்டாலும் நான் கவலைப்படப் போவதில்லை. பாவத்திற்காக வருந்துவதிலும் வெட்கத்திற்காகவே பயப்படுகிறேன் என இனிமேல் என்னைப் பற்றி யாரும் சொல்லமாட்டார்கள். ஜூலியாவுக்காகவே நான் வெட்கத்தை அஞ்சினேன். இப்போது அவள் இறந்துவிட்டாள்!" என்று அலறினார் தனபதி.

" மனைவியைப்பற்றி இனிமேல் மறந்துவிடுங்கள், தனபதி. அதுதான் உங்கள் குழந்தைகளுக்கு நல்லது" என்றான் ஆடம்.

" எனக்குக் குழந்தைகளே இல்லை!" என்று உணர்ச்சியிழந்த நிலையில் அலறினார் தனபதி; " என் ரூபன் இப்போது இவ்வுலகிலிருந்து தப்பிச் சென்றான். என் தேவதைக்கு இடம் தேடி வைப்பதற்காக முன்கூட்டியே தேவருலகம் சென்றுவிட்டான். அத்தேவதையும் தேவருலகத்திலேதான் தனக்குகந்த இசை கிடைக்கும் எனக் கருதி இசை எழுப்பிக்கொண்டே உயிர் துறந்தாள். மற்ற இரு தேவக் குழந்தைகளும் இனி அம்மாவைப் பிரிந்து பிழைக்கமாட்டா. நான் இனி மேல் ஒரு குழந்தையில்லாத மனிதனே. இப்படி ஏற்கெனவே எண்ணிவிட்டேன்."

" என்னவானாலும் நான் உங்கள் மகன்தான்" என்றான் மிடில்மசு துன்பம் மலிந்த குரலில். அதே

சமயத்தில் அவன் குரலில் சிறிது கோபம் கலந்த வெறுப்பும் கலந்திருந்தது.

" நீங்கள் திருமணம் செய்துகொண்ட மனைவிக்குப் பிறந்த மகன் நான். இங்கே உடல் வெளுத்துக் கிடக்கும் அன்னையின் முன்னிலையில் கேட்கிறேன். என் உரிமைகளை இருவரும் ஒப்புக்கொள்ளுங்கள். இங்கு நிற்பவர்கள் எல்லாம் சாட்சிகளாக இருக்கட்டும்."

பித்துக்கொண்ட தந்தை கத்தினர்: "பாவி! உன் பாழாய்ப்போன உரிமைகளைப்பற்றிச் சாவும் பைத்தியமும் நடமாடும் இப்போதுதான் நினைப்பதா? என் மகனும்! இவ்வுலகத்தில் எல்லாத் துன்பமும் எனக்குத் தந்த நீ ஒரு பேய்தான். அடுத்த வுலகத்தில் என் அழிவில்லாத துயரத்தைப் பங்கிட்டுக் கொள்பவனும் நீதான்! அதனுல் என் கண்பார்வைக்கும் சாபத்திற்கும் முன்னுல் நில்லாது ஓடிப்போ!"

அவர் கண்கள் நிலத்தில் பதிந்தன. கைகள் மார்பில் படிந்து நின்றன. மிடில்மசின் கடூரமான நாய்க் குணமுடைய மனம் இன்னும் பதிலைச் சிந்தித்துக் கொண்டிருப்பதாகவே தோன்றிற்று. ஆனுல் ஆடம், விண்டர், இன்னும் அங்கு நின்றிருந்தோர் எல்லாரும் சேர்ந்து அவனை அறையிலிருந்து வெளியே இழுத்துத் தள்ளினர். அவர்கள் அவனைத் தாக்க முற்பட்டதும் அவர்கள் பிடியிலிருந்து திமிறிக்கொண்டான். குதிரைலாயத்திற்கு ஓடினுன். சேணம் பூட்டப்பட்டுத் தயாராக நின்றிருந்த முதல் குதிரையைப்பற்றி அதன் முதுகில் தாவி ஏறியமர்ந்தான். வெகு வேகமாகக் குதிரையைத் தட்டிவிட்டான். ஆடம் இன்னெரு



குதிரைமீதேறி அவனைப் பின்தொடரத் தொடங்கினுன்; ஆனுல் விண்டரும் பிற வேலைக்காரர்களும் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். தீவினைமிக்க தங்கள் தலைவரைக் கைவிட்டுப் போகாதீர்கள் என்று அவனிடம் மன்றுடினர். ஏனெனில் இந்தச் சமயத்தில் தளபதியின் உணர்ச்சிப்பெருக்கைத் தணிப்பதற்கு அவர் ஆடம்மேல் கொண்டிருக்கும் மதிப்பே உறுதுணையாயிருக்கும் என்று அவர்கள் கருதினர்.

"அவன் இந்தியாவின்மேல் உயிரை வைத்திருக்கிறுன். அதனுல் எதுவாயினும் செய்துவிடும் சக்தி பெற்றுள்ளான். இந்தக் கோழைகளால் அவனை அடக்க முடியாது. நானும் வயதில் மூத்துத் தளர்ந்து போயுள்ளேன்" என்றுன் விண்டர்.

மிடில்மசைக் காட்டிலும் தளபதி விதரிங்டனே பெரிதும் இரக்கத்திற்குரியவராவார் என்று உறுதியாக நினைத்ததாலும், நன்கு தப்பித்து ஓடிவிட்ட அவனை இனிப் பிடித்துவிடுவது முடியாது என்று கருதியதாலும், கோபத்தை அடக்கிக்கொண்டு, தளபதியாரைக் கவனிப்பதற்காகத் திரும்பி வந்தான் ஆடம். அப்போது தளபதி தம் குடும்ப நிலையைப்பற்றிக் கவலை கொள்ளுபவராய்க் காணப்பட்டார். தம் குழந்தைகள் படுத்துக்கொண்டிருந்த அறைக்கு ஆடமைச் செல்ல விடவில்லை. குழந்தைகளைப் பார்த்துத் தளபதி வெறி கொண்டவரைப்போல அலறினுர்: "மகிழுங்கள், என் செல்வங்களே மகிழுங்கள்! அவன் பறந்தோடிவிட்டான். உங்கள் அப்பாவிற்குத் தீங்கு புரிந்தவன்—அம்மாவிற்கு அவமானம் தேடித்தந்தவன்—ஓடிவிட்டான்! இனித் திரும்பி வரவேமாட்டான். அவன்

வாழ்க்கை அவன் அம்மாவின் சாவுக்குக் காரணமாயிற்று; அப்பாவின் அழிவுக்கும் காரணமாயிற்று. தைரியமாயிருங்கள், குழந்தைகளே! உங்கள் அப்பா இதோ நான் உங்களிடம் இருக்கிறேன்! நூறு தடைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் தகர்த்து எறிவேன்!" என்றார்.

அப்போது ஆடம் வந்து துயரமிக்க தளபதியின் முன்னால் நின்றான். அவர் கண்களையே உற்றுப் பார்த்துவிட்டு மெதுவான ஆனால் உறுதியான குரலில், "பைத்தியம்! உங்கள் குழந்தைகளைக் கொன்றுவிடப் போகிறீர்களா?" என்று கேட்டான்.

தளபதி தம் முடிவான எண்ணத்தில் தளர்ந்தவர் போலக் காணப்பட்டார். எனினும் ஆடமைத் தாண்டி ஓட முயன்றார். ஆனால் ஆடம் அவரது மேல்சட்டையினைத் தன் இருகையாலும் பற்றிக்கொண்டு, "நீங்கள் என் கைதி! என்னைப் பின்தொடர்ந்து வரவேண்டும் என்று கட்டளையிடுகின்றேன்" என்றான்.

"ஆ! கைதியா? மாபெருங் குற்றத்திற்கா? நாயே, நீ உன் சாவினைத் தேடிக்கொண்டாய்!" என்றார் தளபதி. நிலைகலங்கிய அவர் ஒரு குறுவாளைத் தம் தோளிலிருந்து இழுத்து எடுத்தார். அப்போது விண்டர் தளபதியின் வலது கையைப் பிடித்துத் தளர்த்தி அவ்வாளைக் கீழே விழும்படி செய்திராவிடில் ஆடமின் பலமோ, வன்மையோ அவனுயிரைக் காப்பாற்றியிருக்க முடியாது போயிருக்கும்.

"சரி. நான் உன் கைதிதான். என்னை மரியாதையாக நடத்து. என் மனைவியையும் குழந்தைகளையும் பார்க்கவிடு!" என்றார் தளபதி.



"அவர்களை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம். ஒன்றும் வாய்பேசாது எங்களைப் பின்தொடர்ந்து வா" என்றான் ஆடம்.

பெருமையளித்த அதே காரணத்திற்காகத் துன்பமுறும் உணர்ச்சியுடன் தளபதி விதரிங்டன் ஒரு குழந்தையைப்போல் அவனைப் பின்தொடர்ந்தார்.

"என் கொள்கைகளுக்காக நான் வெட்கப்படவில்லை. என் அரசனுக்காக நான் சாகவும் தயாராயிருக்கிறேன்" என்றார் தளபதி.

மேலும் அவருடைய உணர்ச்சிகளைக் கிளறிவிடாது, அவர் கற்பனையில் எண்ணியிருந்த எண்ணத்தை மாற்றியமைக்கும் வகையில் அவரிடம் தன் அதிகாரத்தை நிலைநிறுத்தினான். அவரது அறைக்குச் செல்லும்படி கட்டளையிட்டான். வற்புறுத்திப் படுக்கையில் கிடக்குமாறு செய்தான். நன்றாக வேலைசெய்யும் ஒரு மருந்தை அவருக்குக் கொடுத்துவிட்டு, ஒரு வேலைக்காரனை அறைக்குள்ளேயே தூங்கும்படி சொல்லிவிட்டு மறுநாள் விடியும்வரை அந்தத் துர்ப்பாக்கியத் தளபதிக்குக் காவலிருந்தான்.

காலையில் எழும்போது தளபதி தன்னுணர்ச்சி பெற்றிருந்தார். அவர் தம் உண்மையான நிலையை அறிந்து கொண்டிருந்தமைக்கு அடையாளமாக அவரிடத்து மென்குரலில் முக்கலும் முனகலும், தேம்பலும், கண்ணீர்விடுதலும் காணப்பட்டன. தம் படுக்கையருகே ஆடம் வந்தபோது அவனை அடையாள மறிந்துகொண்டு கூறினார்: "என்னைப்பற்றிப் பயப்படவேண்டாம். எனக்குக் காய்ச்சல் போய் விட்டது. என்னை விட்டுவிட்டு அங்கேயிருக்கும் தீவினை

யாளனை (ரிச்சர்டை)ப் பாருங்கள். கூடிய விரைவில் அவன் பிரிட்டனைவிட்டு அவன் விதி அழைக்கும் திசையில், இனி நாம் அவனைப் பார்க்கவியலாத இடத்திற்குப் போகட்டும். எனக்கு என்ன வேண்டும் என்பதை விண்டர் அறிவான்; என்னைக் கவனித்துக் கொள்ளுவான்."

விண்டரும் அப்படியே கூறினான்: "என் தலைவரின் பாதுகாப்புக்கு இனி நான் உறுதிகூற முடியும்; ஆனால் கடவுளின் பெயரால் கேட்டுக்கொள்ளுகிறேன். இனிமேல் அந்த முரட்டுப்பயல் இவரைச் சந்திக்காமல் தடுத்துவிடுங்கள்" என்றான்.

---

# 9. தாயின் சொத்து மகனுக்கு இல்லை

ரைட் நகரத்திற்கு வந்தவுடனே ஆடம் முதன் முதலில் விசாரித்தது தன் நண்பனைப் பற்றித்தான். அவன் முந்திய நாளிரவு வெகுநேரம் கழித்துத்தான் வந்தான்; அவன் குதிரையும் வாயில் நுரைதள்ள வந்து சேர்ந்தது. இரவுச் சாப்பாட்டைப் பற்றியோ அல்லது அதைப்போன்ற பிற செய்திகளைப் பற்றியோ அவன் கேட்ட கேள்விகட்கு ரிச்சர்டு பதில் ஒன்றும் கூறவில்லை. ஆனால் ஒரு மெழுகுவர்த்தியைக் கையில் எடுத்துக்கொண்டு மாடிமேல் ஏறித் தன் அறையை அடைந்தான். கதவைமூடி இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டான். நிறையக் குடித்துவிட்டதால் வேகமாகக் குதிரைமீது ஊர்ந்து வந்த தன்னைப் பிறர்க்குக் காட்ட விருப்பமின்றி உள்ளே உடனே சென்றுவிட்டான் என்று அங்கிருந்தோர் எல்லாரும் பேசிக்கொண்டனர்.

ஆடம் ரிச்சர்டின் அறைக் கதவருகே சென்றான். ஆனால் அவன் உள்ளத்தில் ஒருவித சஞ்சலம் இல்லாமல் இல்லை. பலதடவை கதவைத் தட்டிய பிறகே, 'யார்?' என்ற குரல் உள்ளேயிருந்து கேட்டது.

ஆடம் தன் பெயரைக் கூறியவளவில், கதவு திறந்தது. அழகாகத் தலைசீவிக் கொண்டு பகட்டாடை உடுத்தி வெளிவந்தான் ரிச்சர்டு. அவன் படுக்கையைப் பார்த்தபோது, சென்ற இரவு அதில் அவன் படுத்துறங்கியதாகத் தெரியவில்லை. பேயறைந்தது போல் காணப்பட்ட ரிச்சர்டின் முகமும் களையின்றி,

இரவில் அவன் தூங்கவில்லை என்பதைக் காட்டியது. ஏதோ அலட்சியமாகப் பேசுபவனைப் போலவே ரிச்சர்டு பேசினான்: "ஆடம், உலக அறிவில் வளர்ச்சி பெற்றமைக்காக உன்னைப் பாராட்டுகிறேன். ஏழையை விட்டுவிட்டுப் பணமிகப் படைத்தோனைப் பற்றிக் கொள்ளுதற்கேற்ற காலமும் அதுதான்" என்றான்.

"விதரிங்டன் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்ததால் நேற்றிரவு அவர் வீட்டிலேயே தங்கிவிட்டேன்" என்றான் ஆடம்.

"முன்பு செய்த பாவங்களையே மீண்டும் திருப்பிச் செய்யும்படி அவரிடம் சொல்லுக. ஒரு பூசாரியைப் போலவே மருத்துவரும் பேயறிவுரை கூறுவதற்கு உரியவரே என்று வயதுமிக்க கிரே கூறுவது வழக்கம். டாக்டர் டல்பெரி பிறர் செய்திகளில் தலையிட்டுச் செய்தியறிந்து கொள்பவர் என்று அவர் சொன்னது நினைவிருக்கிறதா? ஹா! ஹா! ஹா!" என்று சிரித்தான் ரிச்சர்டு.

"உன் சூழ்நிலையில் இருக்கும் ஒருவர் இதுபோன்று பேசுவது எனக்கு வியப்பாகவே இருக்கிறது" என்றான் ஆடம்.

கசப்பான புன்முறுவலைச் செய்துகொண்டே. ரிச்சர்டு, "இருக்கும். தந்தையையும் தாயையும் திரும்பப் பெற்றுப் பின் இழந்து விட்டுப் பெரிய சொத்தையும் எல்லாம் ஒரே நாளில் இழந்துவிட்டால், எவரும் தம் உணர்ச்சிகளைப் பெறுமல் இருக்க இயலாது" என்றான்.

"மிஸ்டர் மிடில்மஸ், நீ என்ன சொல்கிறாய் என்பதே எனக்குப் புரியவில்லை."



"ஏன், நான் நேற்று என் பெற்றோர்களைக் கண்டு கொண்டேன், இல்லையா?" என்று கேட்டான் ரிச்சர்டு; "என் அம்மா இறப்பதற்கு முன்பு என்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காக அதுவரை காத்திருந்தாள். என் தந்தையும் பித்துப் பிடித்தவர்போல் அலைந்தார். அவர் என்மேல் அவ்வளவு வெறுப்புக் காட்டியதால், பெற்றோர் இருவரும் வேண்டு மென்றே என் சொத்தினை எனக்குத் தராமல் ஏமாற்றுவதற்கென்றே முயற்சி செய்தார்கள் என்று முடிவு கட்டிவிட்டேன்."

'சொத்தா?' என்று திருப்பிக் கேட்டான் ஆடம். ரிச்சர்டின் பேரமைதியைப் பார்த்துத் திகில்கொண்டு, தந்தையின் பித்து இவனுக்கும் வந்தது குடும்ப வழி முறைப் பண்போ என்று அரை ஐயப்பாடு கொண்டான். "கடவுள் பேரால் கேட்கிறேன். உன்னையே நீ எண்ணிப்பார். இந்த மாய உணர்ச்சிகளை மறந்து விடு. நீ கனவுகாணும் சொத்து எது?" என்று கேட்டான்.

"என் அம்மாவினுடையதுதான். வயதுமூத்த மான்சாடாவின் செல்வத்தை அவள் வாரிசாகப் பெற்றிருக்க வேண்டும். அச் சொத்து அவள் மக்களுக்கன்றி வேறு யாருக்கு உரியதாகும்? நான் அவர்களுக்கெல்லாம் மூத்தவன். இந்த உண்மையை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது" என்றான் ரிச்சர்டு.

"சிந்தித்துப் பார், ரிச்சர்டு—உன்னை மீண்டும் எண்ணிப்பார்"

"சிந்திக்கிறேன். அப்புறம் என்ன?" என்று கேட்டான் ரிச்சர்டு.

"உனக்கு நன்மையாக உயில் எழுதப்பட்டாலன்றி, உன் பிறப்புக்குச் சொத்துரிமையில்லை என்பதை நீ மறந்துவிடக் கூடாது'' என்ருன் ஆடம்.

"நீ சொல்வது தவறு. நான் சட்டப்படி சொத்துப் பெறுதற்குரியவனே. சாவிலிருந்து நீர் காப்பாற்றிய அந்த இளைஞர்கள் என்னைவிடச் சொத்துரிமைக்கு உரிமையுடையவர்கள் அல்லர். ஆம்! என் தந்தையாயிருந்தால் அவர் கடவுளின்காற்று அவர்கள்மேல் மட்டும் படும்படி செய்யமாட்டார்; என்னைக் காற்றுக்கோ கடவுளுக்கோ ஒப்படைத்துவிட மாட்டார். எவ்வாருயினும் அவர் உரிமை மகனே யான். அழுதுவடிகின்ற, வயதுவந்த, நலங்குன்றிய அவர்களுக்குள்ள உரிமை எனக்கும் உண்டு. நான் அவர்களைப் பார்த்தேன், ஆடம்—என் பெற்ருேர்கள் என்னை விருந்தினர் அறைக்கு அழைத்து வரவேற்க முயன்றபோது, விண்டர் அப்பிள்ளைகளை எனக்குக் காண்பித்தான். அங்கே அவர்கள் படுத்திருந்தனர். செல்வக் குழந்தைகள்! கீழைநாட்டுச் செல்வப் பயன்கள்! மெல்லணையில் தூங்கி இன்புற்று விழித்தெழும்படி அங்கே படுக்கவைத்திருந்தனர். மூத்த அண்ணனுகிய நான்—வாரிசுக்குரிய நான்—பிணி நிலையத்துக் கந்தைத் துணியை மாற்றிக் கடன்வாங்கி அணியப்பட்ட உடையுடன் அவர்கள் படுக்கைக்கருகே நின்றேன். அவர்கள் படுத்திருந்த கட்டில்கள் சொல்லுதற்கரிய நறுமணம் கமழ்ந்தன. நாஞே நாற்றம் வீசும் குப்பைக் குடிசையிலிருந்து வந்தவன். வாரிசுக்குரியவன் என்று மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்—பெற்ருேரின் முதலின்பக் காதலில் மலர்ந்த பரிசாகிய என்னை இவ்வாறு நடத்தினர்'' என்ருன் ரிச்சர்டு.



"பேய்க்குணம் பிடித்தவனைப் போலவே நீ பேசுகின்ருய். அல்லது ஏதோ ஒரு பெரிய மாயை உன் கண்ணை மறைத்திருக்கிறது" என்ருன் ஆடம்.

"பிரார்த்தனைப் புத்தகத்தினின்று சடங்குக்காக ஒரு சோம்பேறி மதகுரு ஓதினுல்தான் அவர்கள் உண்மையாகத் திருமணம் செய்து கொண்டவர்கள் ஆவார்கள் என்று கருதுகிருய். உன் ஆங்கிலச் சட்டத்தில் அப்படி விதிஇருக்கலாம். ஆனுல் ஸ்காட்லாந்தில் காதல்தான் மதகுரு. இங்கிலாந்தின் மிகப் பெரிய மாதாகோவிலில் பெரிய மதகுரு நடத்தும் சடங்குகளைப் போலவே, நீலவானம் மட்டும் சாட்சியாகக் காதலர் இருவர் தமக்குள் செய்துகொண்ட சூள், சஞ்சலமுடைய ஆணின் தீய எண்ணத்திலிருந்து அவனை நம்பிவந்த அப்பெண்ணைக் காப்பாற்றும் திறமுடையது. இன்னும் சொல்லப் போனுல், காதல் குழந்தை ஞான முழுக்காட்டிலிருக்கும்போது தந்தையால் தன் குழந்தை என ஒப்புக்கொண்டாலும், மதிப்புக்குரிய பிறர் முன்னிலையில் தன் காதல் மனைவியை அறிவித்தாலும், ஏமாற்றப்பட விருக்கும் காதல் மனைவிக்கோ, ஒன்றிய காதலிற் பிறந்த குழந்தைக்கோ நீதி வழங்குவதில் ஸ்காட்லாந்துச் சட்டம் பின்னடையாது. இந்தத் தளபதி திரேசாம் அல்லது விதரிங்டன், துயரம் மிக்க என் அன்னையை மருத்துவர் கிரே போன்ருேரின் முன்னிலையில் தம் மனைவி என நடத்தினுர். மதிப்புள்ள அவர் குடும்பத்தில் அப்படியே சொல்லித் தங்கும்படி செய்தார். அந்தச் சமயத்தில் தம் பெயரையே அவளுக்கும் அளித்தார். மதகுருவிடம் தமக்குப் பிறந்த குழந்தை என்றே என்னை அறிமுகப் படுத்தியிருக்கிருர்! ஸ்காட்லாந்தின் சட்டம் ஆதா

வில்லாக் குழந்தைகளுக்குச் சாதகமாயிருப்பதால், அப்படி அவர் ஒப்புக்கொண்ட பின் இப்போது என்னைக் கைவிட்டுவிட முடியாது. என் உரிமைகள் எவை என்று எனக்குத் தெரியும். அவைகளைப் பெறுவதற்கு உறுதி பூண்டுள்ளேன்'' என்றான் ரிச்சர்டு.

''அப்படியானால் மிடில்மசுக்குக் கப்பலில் போக விருப்பமில்லையா? கொஞ்சம் சிந்தித்துப்பார். இல்லாவிடில் உன் பயணத்தையும், வேலையையும் இழந்துவிட நேரிடும்'' என்றான் ஆடம்.

''என் பிறப்புரிமையை நான் காப்பாற்றிக்கொள்வேன். இந்தியாவுக்குப் போக எண்ணியபோது, என் பெற்றோர்களை எனக்குத் தெரியாது. அல்லது அவர்கள் மூலம் பெறுதற்குரிய நற்பயன்களை எப்படிப் பெறுவதுஎன்றும் அறியாமலிருந்தேன். அந்தச் சிக்கல் இப்போது தீர்க்கப்பட்டு விட்டது. நான் இப்போது மான்சாடாவின் சொத்தில் மூன்றிலொருபாகத்துக்கு உரிமையுடையவன் என்பதை நன்கறிந்து கொண்டேன். விண்டரின் கருத்துப்படி அதுவே மிகப்பெரிய தொகையாகும். பெரியம்மையைத் திறம்படக் குணப்படுத்திய நீ இல்லாவிடில், எல்லாச் சொத்தும் எனக்கே வந்து சேர்ந்திருக்கும். மருத்துவர் கிரே பெரியம்மையை நீக்கும் புதிய முறைகளை நமக்குக் கற்றுக் கொடுத்த போது அது இத்துணைப் பவுன்களை நான் இப்போது இழக்கச் செய்யும் என்று முன்கூட்டியே அறிந்தேனில்லை'' என்றான் ரிச்சர்டு.

''அப்படியானால் இந்தக் கடும்வழியிலேயே செல்வதென முடிவுகட்டி விட்டாயா?'' என்று கேட்டான் ஆடம்.



''என் உரிமைகள் எவை என்பது எனக்குத் தெரியும். அவற்றைப் பெறுவதற்குத் துணிந்துவிட்டேன்'' என்று பதிலிறுத்தான் ஆடம்.

''மிஸ்டர் ரிச்சர்டு மிடில்மசு! உனக்காக நான் வருந்துகிறேன்.''

''மிஸ்டர் ஆடம், உன் வருத்தத்தால் என்னை ஏன் வாழ்த்துகிறாய் என்பதை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்'' என்றான் ரிச்சர்டு.

''நேற்றிரவு பார்த்த காட்சிக்குப் பிறகும் பணத்தைப் பற்றி நினைக்கும் தன்னலப் பிடிவாதமும், அதைப் பெறமுடியும் என்று நம்பும் பயனிலாக் கற்பனையும் உனக்கிருப்பது கண்டு எனக்கு இரக்கந்தான் உண்டாயிற்று.

''தன்னலமா?'' என்று கத்தினான் ரிச்சர்டு; ''ஏன், நான் கடமைதவறாத மகன்தானே. பழிச் சொல்லை ஏற்படுத்திவிட்ட அன்னையின் நினைவை அகற்றப் பாடுபடுகிறேன். நானா கற்பனை செய்பவன்? ஏன், என்னை எப்போதும் அறியாமையில் இருத்திவைக்கும்படி மான்சாடாக் கிழவன் கிரேவுக்குக் கடிதமூலம் சொல்லிய போதுதான் முதலில் என் நிலையைப் பற்றி அறிந்துகொள்ளும் உணர்வு பிறந்தது. என் இளமைக் கனவுகள் எல்லாம் கலைந்தன. பிறகுதான் இந்த நம்பிக்கை என்னிடத்தில் முகிழ்த்தது. உன்னுடன் பகிர்ந்துகொண்டு வாழ்ந்த அற்ப வாழ்வுக்கு என்னை அடிமைப்படுத்திக் கொண்டிருப்பேன் என்று நினைக்கிறாயா? இயற்கைக்கு மாறான என் பெற்றோர்களுக்கு என்னை அடையாளம் அறிவிப்பதற்காக நான் சில அடையாளங்களை வைத்துக் கொண்டிருந்தேன். தேவை

யாஞல், ஒழுங்காகப் பிறந்த குழந்தையின் உரிமைகளை எல்லாம் வற்புறுத்திப் பெறலாம் என்று காத்திருந்தேன். என்னைப்பற்றி விசாரிக்காமலே மான்சாடா இறந்து விட்டதால் என் திட்டங்கள் எல்லாம் உடைந்தன. அதற்குப் பிறகுதான் நான் இந்தியாவைப் பற்றிய எண்ணங்களில் அமைதி கொள்ளலானேன்'' என்ருன் ரிச்சர்டு.

'' நாம் இருவரும் ஒன்ருய்ப் பயிலும்போது, ஸ்காட்லாந்துச் சட்டங்களை அறிந்துகொள்ள உனக்குப் போதிய வயது வரவில்லை. ஆஞல் உனக்கு அவற்றை அறிவுறுத்தியவன் எவன் என்பதை நான் ஊகிக்க முடியும்'' என்ருன் ஆடம்.

''டாம் கிலாரியைத் தவிர வேறு யாராயிருக்க முடியும்? அவனுடைய அந்த அறிவுரையைப் பெற்றதால்தான் நான் இப்போது அவனைக் கழுவில் ஏற்றுவதற்கு ஒப்பவில்லை'' என்ருன் ரிச்சர்டு.

''அவனைத்தான் நானும் நினைத்தேன்'' என மொழிந்தான் ஆடம்; ''ஏனெனில், நான் மிடில்மசை விட்டு நீங்கும் முன்பே அவன் அதைப்பற்றி லாபோர்டிடம் வாதம் செய்து கொண்டிருந்தான். இப்போது நீ கூறியதுபோல அப்படியே அவன் சட்டம் பேசியது என் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.''

''அதற்கு லாபோர்டு என்ன பதில் கூறிஞர்?'' என்று கேட்டான் ரிச்சர்டு.

'' ஐயப்படத்தக்க சமயங்களில் அவ்வாருன உரிமை ஒப்புக்கொள்ளக் கூடியதே என்று கூறிஞர். ஆஞல் பெற்றவள் தன் குழந்தையன்று என்று



உறுதி கூறிஞல், அல்லது அதற்கேற்ற சான்றுகள் கிடைத்தால் அவ்வுரிமை நிலைக்காது போதலுமுண்டு என்றும் கூறிஞர்.''

ரிச்சர்டு அவசரமாகவும், முகத்தில் பயக்குறிகள் புலப்படவும், ''என்னைப் பொறுத்த வரையில் யாரும் அப்படியில்லை,'' என்ருன்.

''நான் உன்னை ஏமாற்றமாட்டேன், ரிச்சர்டு. ஆஞல் உனக்கு வரும் துன்பத்தை என்ஞல் தடுக்க முடியாது என்று அஞ்சுகிறேன். நேற்று உன் அம்மாவிடம் நீண்டநேரம் பேசினேன். அவள் உன்னை மகஞக ஒப்புக் கொண்டாள். ஆஞல் திருமணத்திற்கு முன்பு பிறந்த குழந்தை என்று கூறிஞள். இந்தத் தெளிவான உண்மை உன் நம்பிக்கைகளைச் சேர்த்து வைத்திருக்கும் ஆசைகளைப் பயனில்லாதுபோம்படி செய்துவிடுகிறது. நீ விரும்பிஞல், அவர் கைப்பட எழுதிய கடிதத்தை நீயே படித்து அறிந்துகொள்ளலாம்'' என்ருன் ஆடம்.

''குழப்பம்! அதுதான் என் உதடுகளிலிருந்து எப்போதும் வெளிப்படக் கூடிய சொல்'' என்று முணு முணுத்தான் ரிச்சர்டு. ஆஞல் விரைவில் தன்னுணர்வை அடைந்து, தான் பெற்றிருக்கும் பெருமித உணர்வு தலைதூக்கி நிற்க, ஆடமைப் பார்த்துத் தொடர்ந்து பேசுமாறு வேண்டிஞன். ஆடமும் ரிச்சர்டின் பிறப்புக்கு முன்பும் பிறப்புக்குப் பின்பும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறத் தொடங்கிஞன். இதுவரை ஆசையுடன் மனத்துட்கொண்டிருந்த, பொங்கிப் பூரிக்கும் நம்பிக்கைகளை வேருடன் தகர்த்தெறியும் கதையை ஒப்பில்லாத

அமைதித் தோற்றத்துடன், ஒரு பெட்டியின்மேல் உட்கார்ந்து கேட்கத் தொடங்கினான்.

"ஜிலியா மான்சாடா செல்வம் மலிந்த ஒரு போர்த்துக்கீசிய யூதரின் ஒரே மகள். அச் செல்வர் வாணிகம் நடத்துவதற்காக இலண்டனுக்கு வந்தார். அவர் வீட்டுக்கு அடிக்கடி வருபவர்களில் ஒரு சிலரே வீட்டில் சேர்ந்துண்ண அழைக்கப்படுவர். அவர்களுள் ரிச்சர்டு திரேசாம் என்பவரும் ஒருவர். நார்த்தம்பர் நாட்டுப் பெரிய குடியிற் பிறந்தவர். சார்லசு எட்வர்டின் படையெடுப்புக் காலத்தில் அவரிடம் பணி புரிந்தவர்; அவருடைய வீரத்தினாலும், போர்த்துகீசியரிடம் வேலை பார்த்து வந்ததாலும், பிரிட்டிசு அரசாங்கம் அவரைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்துவந்தது. இப்பெருமகனார் செல்வக்குடியிற் பிறந்து செழித்து வளர்ந்ததாலும், போர்த்துகீசிய மொழியிலும் பண்பாட்டிலும் முற்றிய அறிவு பெற்றிருந்ததாலும், மான்சாடாக் கிழவரின் நட்பை எளிதில் பெற்றார். ஆனால் அரம்பை போன்ற அழகுடைய, உலக அனுபவமில்லாத ஜிலியாவின் உள்ளத்தையும் கவர்ந்துகொண்டார். ஜிலியா, புனிற்றிளம் ஆட்டுக்குட்டி போன்று உலகம் இன்னதென்று அறியாக் குழந்தையுள்ளம் பெற்றிருந்தார்.

ஓர் உயர்குடிக் கிறித்தவர் செல்வ யூதரிடத்தில் தம் நிலையில் இறங்கிவந்தே திருமணத்திற்குப் பெண் கேட்கப் புகுந்ததாகச் சொல்லி மான்சாடாவிடம் தம் கருத்தை அறிவித்தார். ஆனால் அவர் வேண்டுகோளை மான்சாடா மறுத்துவிட்டார். இனித் தம் வீட்டிற்குக்கூட வரக்கூடாது எனத் தடையும் விதித்தார். ஆனால் காதலர் இருவரும் தனிமையில் கூடிக்



களிப்பதை அவரால் தடுக்க முடியவில்லை. பாவம், ஜிலியா முன்னறிவு இன்றி நடந்துகொண்ட முறையைத் தகாத முறையில் அவர் பயன்படுத்திக்கொண்டார். அதன் பயனாக ஜிலியா கண்டது அழிவுதான். அவர் தாம் செய்துவிட்ட தீங்கினைச் சரிப்படுத்துவதற்கு ஒவ்வொரு வழியையும் கடைப்பிடிக்க முயன்றார். மறைமுகத் திருமணத்திற்கு எவ்வளவோ திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் மதம் குறுக்கிட்டதாலும், பிற சூழ்நிலைகளாலும் அம் முயற்சிகளும் திட்டங்களும் தவிடுபொடியாயின. அதனால் ஸ்காட்லாந்திற்கு இருவரும் ஓடிவிடுவது எனத் தீர்மானம் ஆயிற்று. அவசரப் பயணத்தாலும், அதனால் தமக்கு நேர்ந்த பயம், கவலை இவற்றாலும், உரிய காலத்திற்கு முன்பே ஜிலியா மகப்பேற்று நிலையை அடைந்தார். அதனால்தான் மருத்துவர் கிரே கொடுத்த இடத்தையும், உதவியையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசரநிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் அங்கே சென்ற சில மணி நேரத்திற்குள், கூர்நோக்கும் கூர்செவியுமுடைய ஒரு நண்பர்மூலம் தாம் செய்திருந்த தகாத குற்றச் செயல்களுக்காகப் பிடிப்பாணைகள் வந்திருப்பதாகத் திரேசாம் அறிந்தார். நண்பராக இருந்த காலத்தில் அவர் சார்லசு எட்வர்டு அரசனிடம் தொடர்பு வைத்துக் கொண்டிருந்ததைப் பற்றி மான்சாடா அறிந்து வைத்துக் கொண்டார். பிரிட்டிசு அமைச்சவைமீது பழிவாங்க வேண்டும் என எண்ணிய மான்சாடா இவ்வுண்மையைக் காட்டிக்கொடுத்துவிட்டார். அவர் வேண்டுகோள்படியே அவர் மகளுக்கும் பிடிப்பாணைகள் பிறப்பிக்கப்பட்டன. தப்பியோடிய அவர்கள் இருவரும் உண்மையில் திருமணம் செய்து

கொண்டிருந்தாலும், ஒருவரை ஒருவர் பிரிந்திருக்குமாறு இந்தப் பிடிப்பாணைகள் செய்யும் என்று கருதியிருந்தார். குழந்தை பிறந்ததனுல் ஏற்பட்ட பழியை மறைப்பதற்காக அவர் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டார். மான்சாடா தம்முடன் மகளைக் கூட்டிச் சென்றுர்; கடுங் கட்டுப்பாடுகளை விதித்தார். ஜிலியாவின் துயரங்களுக்கெல்லாம் காரணரான திரேசாம் அவர் செய்த அரசியல் குற்றங்களுக்காக வாளால் தண்டிக்கப்பட்டிருப்பின், மான்சாடாவின் பழிவாங்கும் படலம் முடிவடைந்திருக்கும். ஆனுல் திரேசாம் தம் நண்பர்களிடையே ஒளிந்து மறைந்துகொண்டார்; இந்தச் செய்தி மறக்கப்படும்வரை அரசாங்கத்திற்குத் தப்பி வாழ்ந்தார்.

அவர் பிறகு தம் தாயின் பெயரான விதரிங்டன் என்ற பெயரை வைத்துக்கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியில் நுழைந்தார். அவர் ஒரு கிளர்ச்சிக்காரர் என்ற உண்மையும் நாளடைவில் மறைந்தது. போர்ப் படை பற்றிய செய்திகளில் அவர் காட்டிய திறமை அவருக்குப் புகழையும் செல்வத்தையும் ஈந்து அவரை உயர்நிலையில் ஏற்றிவைத்தது. அவர் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்த உடனே முதல் வேலையாக மான்சாடாக் குடும்பத்தைப்பற்றி விசாரித்தார். அவர் புகழையும் செல்வத்தையுமறிந்த மான்சாடா, தம் மகள் முதலிற் காதலித்தவரைத் தவிர வேறு யாரையும் மணந்துகொள்ள மாட்டாள் என்ற உறுதியான எண்ணத்தையுமறிந்து, தளபதி விதரிங்டனுக்கு—சட்ட விரோதியான மேஜர் திரேசாமுக்கு—முன்பு விருப்புடன் கொடுக்க மறுத்த மகளை இப்போது கொடுக்க முன்வந்தார். அதனுல் பதினைன்காண்டுகள் பிரிந்து வாழ்ந்த



காதலர் இருவரும் மீண்டும் கடைசியில் திருமணத்தால் பிணைக்கப்பட்டுவிட்டனர்.

பழங்கால நினைவு எல்லாம் முற்றிலும் மறக்கப்பட வேண்டும் என்று கருதிய மாமனுரைப் போலவே தளபதி விதரிங்டனும் கருதினுர். தூரத்தில், ஆதரவற்ற இடத்தில், முன்பு பிறந்த ஊழ்வினைக் குழந்தைக்கு வேண்டியனவெல்லாம் கொடுக்கப்படவேண்டும் என்று ஏற்பாடாயிற்று. ஜிலியா முற்றிலும் வேறு விதமாக எண்ணினுர். நம்மை முதலில் தாயாக்கிய குழந்தையை — பெற்ற தாய்ப்பாசம் மேலோங்க— மீண்டும் பெறத் துடித்தார். ஆனுல் தந்தையின் விருப்பத்திற்கும், கணவரின் தீர்மானத்திற்கும் எதிராக நிற்பதற்குத் துணிவு கொள்ளவில்லை. நீண்டகாலம் இங்கிலாந்திலேயே தங்கிவிட்டதனுல் சொந்த மதப் பிடிப்புக்களை எல்லாம் சிறிது தளரவிட்ட மான்சாடா தம் மகள் கணவரின் மதமும் நாட்டு மதமுமான கிறித்துவத்தில் ஈடுபடவேண்டும் எனக் கருத்துக் கொண்டார். செருக்குமிக்க தளபதியும் தம் உயர் குலத்து உறவினர்களிடம் மதம் மாறிய மனைவியை அறிமுகம் செய்வதில் பெருமைகொண்டார். மனைவியின் பழைய குற்றங்களின் கொள்கலமான மகன் பிறரால் அறியப்பட்டால், அச்செய்தி மனைவியினுடைய மரியாதையையும், செல்வச் சிறப்பின் புகழையும் கெடுத்துவிடும். தளபதியும் புகழ்கெடுதல் உயிரிழப்பது போலாகுமென்று அஞ்சினுர். ஆனுல் இதை மனைவிக்குத் தெரியாமல் நீண்ட நாட்கள் மறைத்து வைக்க முடியாது. இந்தியாவில் ஏற்பட்ட ஒரு நோயினுல் உணர்ச்சிகளைக் கிளறிவிடும் எப்பொருளும் அவரது அறிவைச் சிறிது அசைத்துவிடும் நிலைமை

எய்தினர், அவர் மனைவி தம் தந்தையிடம் கற்றுக்கொண்ட பாடமான பொறுமையையும், சாந்தத்தையும் கடைப்பிடிக்கத் தொடங்கினர். இதைக் கணவர் மிகவும் ஆவலுடனும், ஆர்வமுடனும் போற்றினர். திருமணத்திற்குப் பிறகும் பல குழந்தைகளைப் பெற்றாலும் அம்மையாரின் மனம் மட்டும் தம் மார்பில் முதலில் அணைத்த அந்தக் குழந்தை—கைவிடப்பட்டுத் தூரத்தில் விடப்பட்ட ரிச்சர்டைப்பற்றிய நினைவாகவே இருந்தது.

இந்த உணர்ச்சிகள் எல்லாம் நீண்டகாலம் அடக்கி வைக்கப்பட்டு மனத்தில் தங்கவைத்திருந்ததால், இப்போது பெரிய அவலங்களுக்குத் தப்பி விடுதலையாகி அத்தகைய சூழ்நிலையில் அன்னையின் முன்னர்க் கொண்டுவரப்பட்டதும், அன்னையின் கற்பனையில் அவ்வுணர்ச்சிகள் எல்லாம் தலைதூக்கி முழு ஆற்றலையும் பெற்று நின்றன.

தம் பணத்தாலும், பரிவினுலும் ரிச்சர்டுக்குச் செல்வ வாழ்வைத் தேடித் தருவதாகத் தம் மனைவியிடம் தளபதி எவ்வளவோ உறுதி கூறினும், அவையெல்லாம் வீணாயின. மூத்த மகனுக்கு விதிக்கப்பட்ட கொடுமைக்கு—கைவிட்டுவந்த கொடுமைக்குக்—கழுவாயாக ஏதாவது நன்மை செய்தாலன்றி மனைவியாரின் மனம் சமாதானம் அடையாதுபோலத் தோன்றியது. அத்தனை யாண்டுகளாக உள்ளத்திலே குமுறிக்கொண்டிருந்த உணர்ச்சிகளினுல் பழுதுபட்டுப்போன உடல் நிலையைப் பெற்றிருந்த அவர் மிக விரைவில் தம் மகனுக்கு நன்மை செய்ய வேண்டுமெனத் துடித்தார். அதனுல் தளபதியின் மனைவி தம் தந்தையின் சொத்



தினைப் பங்கிட்டு ரிச்சர்டுக்குக் கொடுப்பதில் ஆடமின் துணையை ஏற்றுக்கொண்டது இயல்பே. ரிச்சர்டுடன் பயின்ற தோழனும் அவனே. மற்றக் குழந்தைகள் பிறக்கும்வரை மூத்த மகனையே குலதெய்வமாகக் கருதிவந்த ஜிலியா தமக்கே உரிய பொருளான இரண்டாயிரம் பவுன்களை ஆடமின் கையில் வைத்து மிகவும் அன்பும் குழைவும் கலந்த குரலில், அப்பணம் எம்முறையில் ரிச்சர்டுக்காகச் செலவிடுவது நல்லது என ஆடம் கருதுவதுபோலவே செலவிடப்படலாம் என்று வேண்டிக் கொண்டார். மேலும் தேவையானுல் உதவுவதாக அவனிடம் உறுதிகூறினர். தனது பிறப்பின் இரகசியத்தை ரிச்சர்டு அறிந்துகொள்ளும் பருவத்தை எய்திவிட்டதாக ஆடம் கருதும்போது, ரிச்சர்டிடம் கொடுப்பதற்கெனச் சிறு கடிதம் ஒன்றை எழுதிக் கொடுத்து, அதைக் கவனமாய் வைத்திருந்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அக்கடிதம் வருமாறு:

"ஓ—என் துன்பத்தின் குழந்தையே! உன் துரதிர்ஷ்ட அன்னை உன்னைப் பார்ப்பதற்குக்கூட ஏன் அனுமதி பெறவேண்டும்? உன் அன்னைக்கு உன்னை மார்பில் இன்புற அணைத்துக்கொள்ளும் உரிமை ஏன் மறுக்கப்பட்டுவிட்டது? யூதர்களின் கடவுளும், யூதரல்லாதாரின் கடவுளும் உன்னைப் பார்த்து இரங்கிக் காப்பாற்றுவார்களாக! நல்ல சமயத்தில் அவர் (கணவர்) கண்மணியான உனக்கும் எனக்கும் இடையே நிறைந்துள்ள இருளைத் துரத்திவிடட்டும்! இன்பமில்லாத—இல்லை, தூய்மையாக்கப்படாத—அன்பில் பிறந்த முதற்

நீ! என் அன்பே—ஒருபோதும் நீ தனித்து வாழ்வதாகக் கருதிவிடாதே! உன்னுடைய பாதுகாப்பிற்காகவும், நலத்திற்காகவும் வேண்டிய சக்தி உனக்கு உண்டாகட்டும் என்று ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் பிரார்த்தனை புரிந்து கொண்டிருக்கிறேன். என்னைப் பார்ப்பதற்காக ஆசைப்படாதே!—ஓ! நான் ஏன் அப்படிச் சொல்லவேண்டும்?—ஆனால் என்னை நானே தாழ்த்திக்கொள்ளவே வேண்டும். ஏனெனில் அது நான் செய்த பாவமே! என் சொந்தக் குற்றமே! நானே அதை வெறுக்கிறேன்; ஆனால் என்னைப் பார்க்கவோ, என்னிடம் பேசவோ விரும்பாதே. அவ்விருப்பம் நம்மிருவரின் சாவாகவும் முடியலாம். உன் எண்ணங்களையெல்லாம் அறிவிற் சிறந்த ஆடமிடம் சொல்லிவிடு. எங்கள் எல்லாரையும் காப்பாற்றிய குலதெய்வமே அவர் தாம். நீ ஆசைப்படுவதும், ஆடம் சரி என ஒப்புக்கொள்ளுவதும், என்னால் முடிந்தால் அதைக் கட்டாயம் நிறைவேற்றுவேன். அன்னையின் அன்பைப்பற்றி என்ன கூறுவது! அது கடலின் எல்லையில் கட்டுப்பட்டதா? அல்லது பாலைவனங்களும், தொலைதூரமும் அதன் எல்லையை அளவிட்டுக் கூறிவிட முடியுமா? ஓ என் துயரத்தில் உருவாகிய குழந்தையே! உன் ஆவி என்னுடன் இருப்பதுபோல, என் ஆவியும் உன்னிடமே இருக்கட்டும்.

ஜி. மான்சாடா."

இந்த ஏற்பாடுகள் எல்லாம் முடிந்த பிறகு, அத் துர்ப்பாக்கிய மடந்தை அடுத்துத் தம் மகனை இந்தியா



வுக்குப் பிரிந்து செல்லும் போதாயினும் கண்ணால் காண அனுமதிக்க வேண்டுமென வற்புறுத்தினார். பின் பிரிந்து செல்பவனைக் கண்டு உயிர் பிரிந்தார். அதனால் அவருடைய இரகசிய ஆலோசகனான ஆடம் இப்போது நீக்கப்பட்டுவிட்டான்."

கடிதத்தைக் காட்டிய பிறகு ஆடம் புறப்படுவதற்கு எழுந்தான். இந்த ரிச்சர்டைப் பிடித்திருக்கும் பேராசை, பேராவல் என்னும் பேய்கள் திண்ணமாய் இனி இவனைக் கெடுத்துவிடும் என்று எண்ணினான்.

உண்மையில் ரிச்சர்டின் இதயம் வலிய கருங்கல் போன்றது. அன்னையின் முதல், கடைசி அன்பளிப்புக்களால்தான் அவன் சிறிது இளகிய மனமுடையவனாயிருந்தான் எனலாம். அருகேயிருந்த மேசைமீது சாய்ந்தான். அவன் கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்து வழிந்தது. ஆடம் ஒரு மணி நேரத்திற்கு மேலாக ரிச்சர்டைத் தனியே விட்டுவிட்டுப் போயிருந்தான். பிறகு வந்து பார்க்கும்போது அவன் முன்பிருந்த துன்ப நிலையிலேயே இருந்ததைக் கண்டான்.

"இந்தச் சமயத்தில் உன்னைத் தொந்தரவு செய்ய வந்தமைக்கு வருந்துகிறேன்" என்றான் ஆடம்; "ஆனால் இன்னும் நிறைவேற்ற வேண்டிய கடமையின் ஒரு பகுதி உள்ளது. என்னிடமுள்ள உன் அன்னையளித்த பொருள்களை உன்னிடமே ஒப்படைத்து விடுகிறேன். மேலும் காலம் வேகமாக ஓடுவதை உனக்கு நினைவூட்டுகிறேன். இந்தப் புதிய சூழ்நிலைகளில் இந்தியப் பயணத்தை மேற்கொள்வதா

வேண்டாமா என்று நீ தீர்மானிப்பதற்கு இன்னும் ஒன்றிரண்டு மணிநேரங்கூட இல்லை."

அன்னை அளித்துச் சென்ற கடிதங்களையும், பணத் தாள்களையும் மிடில்மசு எடுத்துக்கொண்டான். தலையை நிமிர்த்தியபோது அவன் கண்களில் நீர் தேங்கியிருந்ததை ஆடம் கண்டான். ரிச்சர்டு வணிகரைப்போலப் பணத்தை மிகவும் கவனமாய் எண்ணிச் சரிபார்த்துக் கொண்டான். தேற்றமுடியாத பெருந்துயரத்துடன் வேலையிலிருந்து நீங்கிக்கொள்ளுவதாக எழுதலாம் என்று தன் பேனாவை எடுத்தான். ஆனால் தன்னறிவு நிலையை முழுதும் பெற்றவனைப்போல நல்ல சொற்களையே எழுதப் பேனாவைப் பயன்படுத்தினான்.

"சரி. என் அன்னையின் இன்னொரு கடிதத்தையும் கொடுத்துவிடு" என்று துயரம் நிரம்பிய குரலில் ஆடமைப் பார்த்துக் கூறினான்.

ஆடம் விரைவாகப் பேசத்தொடங்கினான்: "உனக்கு எழுதப்பட்ட கடிதத்தை உன்னிடமே கொடுத்துவிட்டேன். இன்னொரு கடிதம் எனக்கு எழுதப்பட்டதுதான். பெரிய பணத்தொகையை உரியவர்களிடம் சேர்த்து விடுவதற்காக உதவுவது அக் கடிதம். அது மற்றவர்களைப் பற்றியது; அதனால் கொடுக்க முடியாது" என்றான்.

"நான் அழுவதற்கு உதவும் கடிதமாயிருந்தால் என்னிடம் கொடுத்திருப்பாய்" என்று கூறினான் ரிச்சர்டு; "ஆடம், என் விதி கொடுமை நிறைந்ததாகவே இருந்து வந்திருக்கிறது. ஐயமின்றி என் பெற்றோர்கள் என்னைத் தங்கள் வாரிசாகவே ஏற்றுக் கொள்ள முயன்றனர். ஆனால் தற்செயலாய் அவர்கள் எண்ணம் தடுமாறிவிட்டது. இப்போது என் அம்மா நல்லெண்ணத்தோடு கூடிய அன்பால் என் செல்வத்தைப் பெருக்க முயன்றாள். ஆனால் அதை அழிப்பதற்கும் இடமளித்திருக்கிறாள். ஆடம், இவற்றையெல்லாம் எனக்காகவே என் அன்னை எழுதியிருக்கிறாள் என்பதை நீ உணர்ந்து பார்க்க வேண்டும். நேர்மையான உரிமையுடையவன் நானே. அதனால் அவ்வுரிமைகளை நான் பெற்றாக வேண்டும்."



"உன் வற்புறுத்தலை மறுக்கவேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன்" என்று சொல்லிக் கொண்டே தாள்களைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். ஆடம். மேலும், "இந்தச் செய்தி உன் மனக்கோட்டைகளையும், நம்பிக்கைகளையும் தகர்த்தெறிந்து விடுவதே ஆயினும், இப்போது உனக்கு மூன்று பங்குப் பணம் கிடைத்திருக்கிறது. உன்னைவிடச் சில நூறுபேர் பணக்காரர்களாக இருப்பார்களாயின், பல்லாயிரக்கணக்கானவர் உன்னைக் காட்டிலும் மிக ஏழையராய் வாழ்கின்றனர். அதனால் கிடைத்ததைக் கொண்டு மன நிறைவு பெறுக. வாழ்க்கையில் இனிக் கிடைக்கும் வெற்றியைப்பற்றி ஐயம்கொள்ளாதே" என்றான்.

இவ்வார்த்தைகள் ரிச்சர்டின் துயரமனத்துள் மூழ்கி அப்படியே பதிந்துவிட்டன. ஒரு கணம் அமைதியாக நின்றிருந்தான். பிறகு தட்டுத்தடுமாறும் குரலில் பதில் கூறினான்:

"என் அன்புக்குரிய ஆடம், நாமிருவரும் வெகு நாளாய் நண்பர்களாயிருந்து வந்திருக்கிறோம். என் ஆசைகளைத் தகர்த்தெறிவதில் உனக்கு இன்பமோ

ஆர்வமோ இருக்காது என நினைக்கிறேன். அவ்வாசைகளை ஆதரிப்பதால் உனக்குச் சிறிது மகிழ்ச்சியும் ஏற்படலாம். என் துன்பங்களுக்குத் துணையாக நிற்கும் நண்பனுக்கு (உனக்கு) மான்சாடாவின் சொத்துக் கிடைத்தால் ஐயாயிரம் பவுன் கொடுக்கலாம் என்றிருக்கிறேன்."

"வணக்கம், மிடில்மசு" என்று கூறிக்கொண்டு பின் வாங்கிக் கொள்ள முயன்றான் ஆடம்.

"ஒரு நிமிடம், ஒரு நிமிடம்" என்று சொல்லிக்கொண்டு நண்பனின் பொத்தானைப் பற்றிக்கொண்டான் ரிச்சர்டு. "பத்தாயிரம் தருகிறேன். மேலும்—இன்னும்—நீ யாரை மணக்க விரும்பினாலும் உனக்குத் தடையாயிருக்க மாட்டேன்" என்றான்.

"நீ ஒரு வில்லன். அப்படித்தான் நான் எப்போதும் உன்னைப்பற்றி நினைத்து வந்திருக்கிறேன்" என்றான் ஆடம்.

"நீயோ ஒரு முட்டாள். அதைவிட நல்ல முறையில் உன்னைப் பற்றி நினைத்ததேயில்லை" என்று பதிலுக்குக் கூறினான் ரிச்சர்டு. தன் மனத்துக்குள், "போனால் போகிறான்—போகட்டுமே—விளையாட்டுத் தொடங்கித் தோற்றாயிற்று. என் உறுதிகளை எப்படியும் தளரவிடக் கூடாது. இந்தியாவுக்குப் போகத்தான் வேண்டும்" என்று நினைத்தான்.

அவன் புறப்படுவதற்கு எல்லாம் தயாராயிருந்தன. ஒரு சிறிய படகு அவனையும் மற்றவர்களையும் டவுன்சு என்ற துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றது. அவர்களை ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு எடுத்துச் செல்லும் இந்தியாமேன் என்ற கப்பல் அவர்களை வரவேற்றது.



ரிச்சர்டின் உள்ளத்தே எழுந்த எண்ணங்கள் அவனுக்கு நம்பிக்கை ஊட்டுவதாயில்லை. ஆனால் இளமையிலிருந்தே மனத்துன்பங்களை மறைத்து வாழும் பண்பை வளர்த்துக்கொண்டிருந்ததால், ஒரு வாரக் காலத்திற்குள் மிகவும் மகிழ்ச்சியுடையவனாயும் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குச் செல்பவர் எல்லாரைக் காட்டிலும் மேம்பட்ட குடிப்பிறந்தவனைப் போலவும் காணப்பட்டான்.

நற்குணமுள்ள எந்த வெளிநாட்டாரையும் விரும்பி ஏற்றுக்கொள்ளும் சென்னை நகர்வாழ் மக்கள் ரிச்சர்டையும் ஆர்வத்துடன் வரவேற்றனர். ரிச்சர்டும் கீழைநாட்டின் நல்விருந்தோம்பும் பண்பை நேரில் கண்டு இன்புற்றான். ஒவ்வொரு விருந்து அல்லது கலைநிகழ்ச்சியிலும் ரிச்சர்டு ஓர் இன்றியமையாத விருந்தினன் ஆயினான்.

ரிச்சர்டு வந்த அதே கப்பலில் ஆடமும் மருத்துவரின் துணையாளனாக வந்து சேர்ந்தான். ஆனால் அவனுடைய நிலைமையில் மக்களின் மதிப்பும் கவனமும் கிடைக்கவில்லை. எனினும் ஆடம் தளபதி விதரிங்டனிடமிருந்தும், லெடன்ஹால் தெருவில் உள்ள பெரிய அதிகாரிகளிடமிருந்தும் சிறப்பான அறிமுகக் கடிதம் பெற்று வந்திருந்ததால், சென்னையில் வாழ்ந்த முக்கியமானவர்களின் செல்வாக்கைப் பெற்றான். அவன் மிடில்மசுடன் மீண்டும் முன்பு போலவே பழக வேண்டியிருந்தது. மரியாதையுடன் ஆனால் நெருங்கிப் பழகாது வாழ்தல் அல்லது முற்றி

லும் அவனுடைய தொடர்பை அறுத்துக் கொண்டு வாழ்தல்— இவ்விரண்டில் ஒரு முறையைத்தான் அவன் பின்பற்றவேண்டியிருந்தது. இவற்றுள் முதல் முறையைப் பின்பற்றுவதே அறிவுடைமையாகும். ஆனால் நேர்ப்போக்குடைய ஆடமின் பண்புக்கு இரண்டாம் முறையே ஏற்புடையதாக இருந்தது. வெறுப்பு, இகழ்ச்சி, மனவேறுபாடு இவற்றை மறந்து நட்பு முறையில் பழகுவதாக வெளிக்குக் காட்டிக்கொள்வது ஆடமுக்கு எளிதாகவோ இயல்பாகவோ இல்லை.

அக்காலத்தில் சென்ட்ஜியார்ஜ் கோட்டையைச் சார்ந்த வட்டாரத்தில் பழகுவது மிகவும் கடினம். அங்கிருந்தோர் இவ்விருவருடைய மன வெறுப்பினையும் விரைவில் உணர்ந்து கொண்டனர். அவர்கள் இருவரும் ஒரு காலத்தில் ஓரிடத்திலிருந்து ஒன்றாய்ப் படித்தவர்கள் என்பது எல்லார்க்கும் தெரியலாயிற்று. ஆனால் விருந்து நிகழ்ச்சிக்கு இருவரும் ஒருங்கே அழைக்கப்பட்டபோது அழைப்பை ஏற்றுக் கொள்ள இருவரும் தயங்கினர். இக்கொடிய மனமுறிவைக் கண்ட பிறர் அதற்கு வெவ்வேறான—ஒன்றுக்கொன்று முரண்பாடான—காரணங்களைக் கூறத் தலைப்பட்டனர். ஆனால் தனக்குச் சாதகமான நிலையில் பகைமைக்குக் காரணம் கூறப்படும்போது அதை ரிச்சர்டு ஒப்புக் கொள்ளத் தயாராயிருந்தான்.

மிகவும் நெருங்கிப் பழகும் சிலர் பகைமைக் காரணத்தை வற்புறுத்திக் கேட்டபோது, "எங்களுக்குள் கொஞ்சம் போட்டி ஏற்பட்டுவிட்டது" என்றான் ரிச்சர்டு; "ஓரழகிய பெண்ணின் கடைக்கணோக்கத்தை நான் அவனைக் காட்டிலும் மிகுதியாகப் பெற்று



விட்டேன். அவன் இப்போது நீங்கள் பார்த்ததுபோல், இந்த வயதில் இப்படிச் சண்டையிட்டு வருவது முட்டாள் தனம் என்றே கருதுகிறேன். வேறு சில காரணங்கள் இருந்தபோதிலும், இந்தப் பகைமையின் விசித்திரப் போக்கிற்காகப் பெரிதும் வருந்துகிறேன்" என்றான்.

இந்த இரகசியங்கள் எல்லாம் மக்களிடத்தில் பரவிக் கொண்டிருந்த போதிலும் அவை சென்னை அரசாங்கத்தில் ஆடமுக்குக் கிடைக்கும் அலுவல் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. சிறிது காலத்திற்குள்ளேயே, சென்னையிலிருந்து வெகு தூரத்தில் உள்ள ஊரொன்றில், பொருள் வருவாய் மிகுத்துத் தரும் மருத்துவத் துறையதிகாரி வேலை கிடைத்திருப்பதாக ஆடமுக்குச் செய்தி வந்தது. அதனால் அவன் சிலகாலம் சென்னையையும், அதன் சுற்றுப்புறத்தையும் விட்டுப் பிரிந்துவாழ நேரிட்டது.

ஆடம் தன் நீண்டதூரப் பயணத்தை மேற்கொண்டு விட்டான். அவன் போனபிறகு, தன்னைக் கட்டுப் படுத்தும் தடை ஒன்று நீங்கிவிட்டதுபோல ரிச்சர்டின் குணம் மாறுபட்ட தோற்றங்களில் வெளிப்படலாயிற்று. இந்தியாவுக்கு வந்த ஒரு சில மாதங்களில் எல்லாரிடத்திலும் நன்றாகப் பழகும் தன்மை பெற்றிருந்த ரிச்சர்டு பிறகு எல்லாரும் வெறுக்கத்தக்க, செருக்குமிக்க செயல்களையே மேற்கொள்ள முயன்றான். புகழ்பெற்ற 'ரிச்சர்டு' என்ற தன் பெயருக்கு மேலும் திரேசாம் என்ற தந்தையின் பெயரையும் சேர்த்து வைத்துக்கொண்டான். சென்ட்ஜியார்ஜ் கோட்டையில் உள்ளவர்கள் இப் பெயரை அவன் வாளா வைத்துக்

கொண்டதாகவே கருதினர். ஆனால் அப்புதிய பெயராலேயே எல்லாரும் தன்னை அழைக்கவேண்டு மென அவன் வற்புறுத்தினான். இது அவனது குண வியல்பைக் காட்டிலும், அவனது செருக்கினையே எடுத்துக்காட்டுவதாக இருந்தது. கப்பல் படைத் தலைமை யதிகாரிக்குக் கேப்டன் ரிச்சர்டு இம்மாதிரி யான பிடிவாதத்தில் இறங்கி நிற்பது கட்டோடு பிடிக்க வில்லை. "வேலையில் சேரும்போது எந்தப் பெயர் இருந்ததோ, அப்பெயருக்கு மாறான பெயரில் யாரையும் அழைக்கும் வழக்கம்இல்லை" என்று கூறினார் அவர்.

ஒருநாள் மாலையில், "என் சொந்தப் பெயர் எனக்கு நன்றாகத் தெரியும்" என்று கோபமாக மேலதி காரியிடம் கூறினான் ரிச்சர்டு. அதிகாரி அவனைப் பார்த்து, "கேப்டன் மிடில்மசு, ஒவ்வொரு குழந்தைக் கும் தன் தந்தை யாரென்று தெரியாது. அதனால் ஒவ் வொருவரும் தன் சொந்தப் பேரைப் பற்றி எப்படி உறுதியாக இருக்கமுடியும் ?" என்று கேட்டார்.

அச்சமின்றி வில் வளைக்கப்பட்டு விட்டது. ஆனால் அம்போ கலசத்தின் துளையில் பாய்ந்துவிட்டது. நடுநிலையாளராய்ப் பலர் வந்து தடுத்தாலும், மிடில்மசு மேலதிகாரியை எதிர்க்கத் துணிந்துவிட்டான். அவன் பேசியதை மன்னிக்கும்படி மேலதிகாரியிடம் யாரும் கேட்டுக் கொள்ளவும் முடியவில்லை. "கேப்டன் மிடில்மசு அந்தக் குல்லாய் தனக்குச் சரியாக இருக்கு மென்று கருதினால், அணிந்து கொள்ளட்டும்" என்றார் அதிகாரி.

இதற்குப் பின் எல்லாரும் ஒரு கூட்டங்கூடி இதைப்பற்றிக் கார்சாரமாகப் பேசினர். ஒரு சிலர்



இருவரையும் சந்து செய்விக்க முயன்றனர். ஆனால் மிடில்மசு அவர்களை விலக்கிவிட்டுத் துப்பாக்கியை எடுத்து அந்த அதிகாரியைச் சுட்டுக் கொன்றான். இதனால் அவன் பிரிட்டிசாரிடமிருந்து தப்பியோட நேர்ந்தது. ஏனெனில் இந்தச் சண்டையை அதன் கடைசி எல்லைவரை இழுத்துச் சென்றதாக ரிச்சர்டையே எல்லாரும் பழிப்பர். மேலும் போர்ப் படை ஒழுங்குச் சட்டங்கள் எல்லாம் இக் குற்றவாளி யைப் பொறுத்த வரை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படும். அதனால் செண்ட் ஜியார்ஜ் கோட்டை யினின்றும் ரிச்சர்டு மறைந்தான். அந்தச் சமயத்தில் இச்செய்தி மிக்க சலசலப்பை உண்டு பண்ணினாலும், விரைவிலேயே அது மறக்கப் பட்டு விட்டது. அவன் பிரிட்டிசாரிடம் என்றும் பெறமுடியாத சிறப்பை ஓர் இந்திய அரசனிடம் பெறுவதற்காகப் போய்விட்டான் என்று பொதுவாக எல்லாரும் நினைத்தனர்.

---

# 10. இந்தியாவில் ஆடமும் மருத்துவர் மகளும்

சென்ற அதிகாரத்தில் குறிப்பிட்ட கொலை நிகழ்ச்சி நடந்து மூன்றாண்டுகள் ஓடிவிட்டன. அதற்குள் தற்காலிகவேலை முடிந்து டாக்டர் ஆடம் சென்னைக்கே திரும்பி வந்துவிட்டான். மருத்துவத்துறை மேலதிகாரியாகச் சென்னையிலேயே தங்கியிருக்கும்படி பலரும் அவனை வேண்டிக் கொண்டனர். ஆடமும் அவ்வாறே அப்பணியை மேற்கொண்டு மருத்துவத்துறையிலேயே புகழையும் செல்வத்தையும் ஈட்டலாம் என நினைத்தான். தன்நாட்டு மக்களிடையே மட்டும் உலவாது இந்தியர்களுடைய நோய்களையும் கவனிக்கத் தொடங்கினான். மற்ற செய்திகளில் ஐரோப்பியர்களின் திறமையைப் பற்றி நல்லெண்ணங் கொண்டிராது போயினும், இந்தியர்கள் மருத்துவத்துறையில் ஐரோப்பியர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள் என்று கருதினர். பொருள்வருவாயை மிகுத்துத் தரும் இம் மருத்துவக்கலை, இந்திய மொழிகளை ஆடம் கற்றுக்கொள்ளவேண்டிய இன்றியமையாமையை அளித்தது. மொழி பெயர்ப்பாளரின் உதவியின்றி நேரடியாக நோயாளிகளைப் பற்றிய செய்திகளையறிந்து கொள்ளப் பிறமொழியறிவு தேவையாயிருந்தது. எனவே பல மொழிகளையும் கற்றுக்கொள்ள ஆடமுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. செல்வம் மிக்க முசுலீம்கள், இந்துக்கள் இவர்களிடம் பெரும்பணம் பெற்றுக் கொண்டான். ஆனால் யாராயிருப்பினும் ஏழைகளாயின் அவர்கள் அழைக்கும்போது சென்று இலவசமாகவே அவர்களைக் கவனித்து வந்தான்.

ஒருநாள் ஒரு நோயாளியை உடனடியாகக் கவனிக்கும்படி அரசாங்கத்துச் செயலாளர் ஒருவரிட



மிருந்து அவசரமாகச் செய்தி வந்தது. "அந்நோயாளி ஒரு பக்கிரிதான். முகமதிய சாதுவும் மருத்துவருமான காரா ராஜியின் கல்லறைக்கருகே அவர் இருக்கிறார். பராக் எல் அட்கி என்ற பெயரில் விசாரிக்கவும். அவர் பணம் கொடுப்பார் என்று எதிர்பார்க்கக்கூடாது. இப்போது உமக்கு அரசாங்கமே பணம் கொடுக்கிறதே" என்று அக்கடிதம் கூறியது.

"அப்படியானால் பணத்தைப் பற்றி நினைத்துக் கூடப் பார்ப்பதற்கில்லை", என்று சொல்லிக் கொண்டு ஆடம் கடிதம் குறிப்பிட்ட இடத்திற்குப் பல்லக்கில் சென்றான்.

காரா ராஜியின் கல்லறை எல்லா முகமதியராலும் மிகவும் போற்றப்பட்டு வரும் இடமாகும். அது சிவப்புக் கல்லால் கட்டப்பட்ட மூன்று கல்லறைக் கோபுரங்களை யுடையதாய், மா, புளிய மரங்கள் நிறைந்த ஒரு சோலையின் நடுவே அமைந்திருந்தது. வழக்கம்போல அதற்குமுன் ஒரு பெரிய முற்றம் இருந்தது. அதில் பக்கிரிகள் குடியிருப்பதற் கேற்ற சிறு குடில்கள் அமைந்திருந்தன. பக்தி நோக்கமே கொண்டு ஆங்கு வருவோர், சில சமயங்களில் சில நாட்களோ பல நாட்களோ தாங்கள் விரும்பியவாறு அங்கேயே தங்கி வழிபடுவர். அவர்களின் இடையறாப் பிரார்த்தனைகட்குச் செவிசாய்க்கும் இறைவன் திருவருளால் கிடைக்கும் பிச்சையுணவை உண்டு வாழ்வர். கல்லறைக்கு முன்பு அப் பக்தர்கள் அமர்ந்து இரவும் பகலும் குரானிலிருந்து கவிதைகளைப் படித்துக் கொண்டிருப்பர். முழு முதற்பொருளைப் பற்றிக் குரான் கூறியருளிய திருப்பெயர்களும் நபி நாயகத்தின் அருள் மொழிகளும்

அடங்கிய சலவைக் கற்களால் ஆன கல்லறை முன்பு வழிபாடு செய்வர். அக்கல்லறையையும் சுற்றுப்புறத்தையும் தூய்தாய் வைத்திருப்பதற்கெனச் சிலர் அங்கிருந்தனர். போர்க்காலங்களிலும், கிளர்ச்சிக் காலங்களிலும் முகமதியர்களைப் போலவே இந்துக்களும் பறங்கியர்களும் அக்கல்லறைகளைப் போற்றி வழிபடுவர். பக்கிரிகளில் பலர் அரசாங்க ஒற்றர்களாக இருந்தனர். முக்கிய இரகசியப் பொருள்களை ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்கு எளிதாக எடுத்துச் சென்றனர்.

முகமதியர்களின் வழக்கத்தை ஒட்டியே நம் நண்பன் ஆடமும், புனித மசூதியின் முன்புறத்திலேயே தன் காற்செருப்புக்களைக் கழற்றி வைத்தான். யாருக்கும் வெறுப்புத் தோன்ருதபடி கல்லறைக்கருகே சென்று, முக்கியமான பூசாரியாகிய மௌல்லாவின் முன்பு அமர்ந்தான். பிரார்த்தனைக்குக் கிறித்துவர்கள் பயன்படுத்தும் உருத்திராக்க மாலைபோன்றே, முகமதியர்களும் மரப்பொருளால் ஆன ஒரு பெரிய உருத்திராக்க மாலையை வைத்திருந்தனர். மௌல்லா மிக நீண்டதாடி வைத்திருந்தமையின் மற்றை எல்லோரினின்றும் எளிதில் பிரித்தறியக் கூடியவராய் இருந்தார். வயது மூத்தமையால் மதிப்பும், ஒழுக்கத்தால் புனிதமும், உலகப் பொருள்களும் இன்பங்களும் நிலையாமையுடையன அல்ல என்றிகழ்ந்து ஒதுக்குவதால் பற்றின்மையும் உடைய அத்தகைய மௌல்லாக்கள், கல்லறைகளைப் பாதுகாக்கும் மடங்களின் தலைவர்களாக விளங்கினர்.

மௌல்லாவே எல்லாரினும் மேம்பட்டவராதலின், புதிதாக வந்தோரிடம் பேசும் உரிமை அவருக்கே



இருந்தது. ஆடம் வந்த சமயத்தில் மற்றவர் எல்லாம் குரானில் தங்கள் கருத்தைப் பதித்துவைத்துக் கொண்டிருந்தனர். ஐரோப்பியன் வந்ததைக் கவனிக்காமலும் பாட்டுக்களை மெதுவாகப் பாடிக்கொண்டிருந்தனர். ஒரு சிலர் தங்கள் தலைவரான பராக் எல் அட்கிக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

மௌல்லா நிலத்தின்மீது அமர்ந்திருந்தார். இருந்த இடத்தினின்றும் அவர் எழுந்திருப்பதில்லை. தம்மை வணங்கும் எவருக்கும் அவர் பதில் வணக்கம் செலுத்துவதுமில்லை. உருத்திராக்க மாலை உருட்டு வந்த அவர் நிறுத்துவதில்லை. ஆடம் பேசிக்கொண்டிருந்த போதும் அதை உருட்டிக்கொண்டே இருந்தார். ஆடம் பேச்சை நிறுத்தியதும் வயது முதிர்ந்த அவர் தலையை நிமிர்த்திப் பார்த்தார். தம் கவனத்தைத் திருப்பிய ஆடமைச் சலித்துக்கொள்வது போன்ற பார்வையுடன், அவன் இதுவரை சொன்னதையெல்லாம் காதில் போட்டுக்கொண்டவரைப்போல ஒரு குடிலைச் சுட்டிக்காட்டி அங்கே சென்று தங்குமாறு சைகை செய்தார். தம் பக்திப் பணியிலிருந்து ஒரு கணமேனும் கவனத்தை வேறுபக்கம் திருப்ப நேரின் பொறுமையிழந்து விடும் பண்புடையவரைப்போல மீண்டும் பக்திப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டார்.

குறிப்பிட்ட குடிலை அடைந்து வழக்கம்போலச் 'சலாம் ஆலேகும்' என்ற வணக்கச் சொல்லைக் கூறினன் ஆடம். அவன் தேடிவந்த நோயாளி வெள்ளை யடிக்கப்பட்ட அக் குடிலின் ஒரு மூலையில் சிறுபாய் ஒன்றில் படுத்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு வயது நாற்பதிருக்கும். கிழிந்து ஒட்டுப் போட்ட, பூசாரிக்குரிய கருப்புநிற உடைகளை அணிந்திருந்தார். டார்டாரியன் கம்பளத்தாலான உயரமான கூம்புவடிவக் குல்லாயை அணிந்திருந்தார். அவர் கண்களும், இருந்த இருப்பும், அவர் படுகின்ற துன்பத்தைத் தெரிவித்தன. தவம் செய்வாரைப் போல மிக்க வலிமையுடன் அத்துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தார்.

"சலாம் ஆலேகும். சாமி, உங்களுக்கு வலி இருக்கிறதா?" என்று கேட்டான் ஆடம். பூசாரி என்பதற்காக அல்லாமல் அவர் வயதைக் குறித்தே சாமி என்று அழைத்தான்.

"சலாம் ஆலேகும்" என்று பதிலளித்தார் பக்கிரி. "மேலுலகம் புகுவாரைத் தேவர்கள் வரவேற்கும் போது இப்படித்தான் கூறி வரவேற்பார்கள்" என்றார்.

இவ்வாறு உரையாடல் தொடங்கிய பிறகு, மருத்துவன் ஆடம் நோயாளியின் குறைபாடுகளை விசாரித்தறிந்து ஏற்ற மருந்துகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தான். மருந்து கொடுத்து முடிந்தபின் வெளியே போகப் புறப்பட்டான். அப்போது ஒரு விலையுயர்ந்த மோதிரத்தை அந்தப்பக்கிரி அவனிடம் கொடுத்தார்.

அந்தப் பரிசை வேண்டாமென மறுத்த ஆடம் அப்போது அப்பக்கிரியின் குல்லாயையும், உடையையும் சிறப்பித்துக் கூறத் தொடங்கினான். "ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அறிவாளர்கள் எல்லாம் சகோதரர்களே. என் வலதுகை செய்வதற்காக எப்பரிசையும் என் இடதுகை பெற்றுக்கொள்வதில்லை" என்றான்.



"பறங்கியுமா பொன்னை வேண்டாமென்று மறுக்கிறார்? பசிமிக்க நாயொன்று தானுண்ணும் இறைச்சி சலேத் என்ற தீர்க்கதரிசியின் ஒட்டகத்தினுடையதா அன்றி டேகியல் என்பானின் கழுதையினுடையதா என்று கூடச் சிறிதும் நினையாது தின்பதுபோல, புனிதமுடையவராயினும், குட்டநோயுடையவராயினும் எவரிடமும் சென்று பணம் வாங்கிக் கொள்ளும் இயல்பினர் பறங்கியர் என்றல்லவா நினைத்தேன்!" என்றார் பக்கிரி.

"அல்லா'வே ஒருவர் மனத்தைச் சுருக்கவும் செய்கிறார், விரிக்கவும் செய்கிறார் என்று குரான் கூறுகிறது. அவருடைய திருவுள்ளப் படியே பறங்கியரும் முகமதியரும் உருவாக்கப் படுகின்றனர்" என்றான் ஆடம்.

"என் சகோதரர் நன்றாகப் பேசுகிறீர். அறிவுடைய மருத்துவரின் தொடர்பு கிடைக்குமாயின் அதற்காக நோயும் வேண்டற்பாலதே. ஏனெனில் கவிஞர் சொல்லுவதுபோல, நிலத்தில் வீழ்ந்து தடுமாறும்போது வைரம் கிடைக்குமாயின், நிலத்தில் வீழ்வதும் நன்றேயன்றோ?" என்றார் பக்கிரி.

ஆடம் பலமுறை நோயாளியைப் பார்க்க வந்தான். எல் அட்கியின் உடல் முற்றிலும் குணமாகிவிட்டபோதும் அவரிடம் வந்துகொண்டேயிருந்தான், ஆசியநாட்டு அரசர்கள் விரும்பும் தூதுவர் பண்பு அவரிடம் இருப்பதை எளிதில் கண்டுணர்ந்தான் ஆடம்.

அவர்தம் அறிவுடைமையும் கல்வியறிவும், எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய பரந்த மனப்பான்மை

யும், விருப்பு வெறுப்பற்ற நிலையும் ஆடமின் உள்ளத்தைக் கவர்ந்தன. மற்றப் பக்கிரிகளைப் போலன்றி அவருடைய மன அடக்கப் பழக்கமும், தொழில் முறையும் ஒரோ வழி காண்பவர்க்கு நகைச்சுவையைத் தோற்றுவித்தன.

சொந்தச் செய்திகளுக்கிடையே பராக் எல் அட்கி அடிக்கடி மைசூர் நவாபின் ஆற்றலைப்பற்றிக் கூறினார். அதனால் மறைமுகக் குறிக்கோள் ஒன்றிற்காக அவர் ஹைதர் அலியின் அரண்மனையிலிருந்து இங்கே வந்திருக்கவேண்டும் என்று ஆடம் நிச்சயித்தான். ஏனெனில் திறமையும், அறிவுக் கூர்மையுமுள்ள திப்புவுக்கும், கிழக்கிந்தியக் கம்பெனி அரசாங்கத்திற்கும் அப்போது கொஞ்சம் உள்ளீடற்ற, முழு நம்பிக்கையில்லாத உடன்படிக்கையே இருந்தது. அந்த நிலையை நீக்கி முற்றிய நட்புறவு நீடித்திருக்க வழி செய்வதற்காகவே இப்பக்கிரி இங்கு வந்துள்ளார் எனக் கருதினான். இந்தியாவில் மிகச் சிறந்த அறிவுடையவருள் திப்புவும் ஒருவன் என்பது எவரும் மறுக்கமுடியாதது தான். இப்பக்கிரி அவரைப்பற்றிப் பல கதைகளைக் கூறினார். அவருடைய பேராசைகளை நிறைவேற்றிக் கொள்ளச் செய்த மாபெருங் குற்றங்கள் ஒருபுறம் இருக்க, அவன் அரசப் பெருந்தன்மையும், மிகவும் வியக்கத்தக்க நடுவுநிலை திறம்பாமையும் உடையவனாயிருப்பதை எடுத்துக்காட்டிப் பக்கிரி வியந்துரைத்தார்.

ஒருநாள் பராக் எல் அட்கி சென்னையை விட்டுப் புறப்படும் நேரத்திற்குச் சிறிது முன்பு ஆடமைச் சந்தித்தார். அவருக்கு ஆடம் தன் கையாலேயே தயாரித்த சர்பத் சுவைநீரைக் கொடுத்தான். தாமே



தயார் செய்யும் அக்குளிர் நீரினும், டாக்டரால் தயாரிக்கப்பட்டது பிராந்தி அல்லது ரம் கலக்கப்படுவதால் இனிமையுடைத்து என அதை நனிவிரும்பினார் பக்கிரி. பன்முறை இக்குடிநீரைப் பருகியதாலோ என்னவோ, அப்பக்கிரி முன்னைவிட இப்போது மிகவும் மனந்திறந்து பேசலானார். நவாபை உயர்வு நவிற்சியில் புகழ்ந்து கூறியதுடன் அமைந்துவிடாது, தாம் கடவுளருளால் நவாபிடம் பெறும் சிறப்புக்களைப் பற்றியும், நபி நாயகத்தின் நம்பிக்கையான கேடயத்தின் பெருமைபற்றியும் புகழ்ந்து கூறினார்.

"என்னுயிர்ச் சகோதர, எல்லாம் வல்ல ஹைதர் அலிகான் பகதூரிடம் ஏதேனும் உனக்கு ஆகவேண்டியதுண்டா என்று நினைத்துப்பார். மாடமாளிகைகளில் வாழ்வோரும், ஒளிமணிகள் பதித்த தலைப்பாகைகளை யுடையோருமாகிய செல்வர்களின் துணையை நாடாதே. ஆனால் பெருநகரமாகிய சீரங்கப்பட்டணத்திலுள்ள உன் சகோதரனின் சிறிய குடிலையே நாடு. கிழிந்த ஆடையுடன் உள்ள இந்த ஏழைப் பக்கிரி, திவானுகச் சிறப்புடன் வீற்றிருப்போரைக் காட்டிலும், நவாப்பிடம் (ஹைதர், சுல்தான் என்ற பட்டத்தைப் பெற்றிருக்கவில்லை) உன் குறையைத் திறம்பட எடுத்துக் கூறுவார் என்று நம்புக" என்றார்.

இவையும், இவைபோன்ற பிற அன்பு நிரம்பிய சொற்களையும் கூறி மைசூருக்கு வருமாறு ஆடமை வற்புறுத்தி வேண்டிக்கொண்டார் பக்கிரி. அங்கேயுள்ள சிறப்புமிகு சிற்றரசனாகிய திப்புவின் அறிவொளி ததும்பும் திருமுகத்தைக் கண்டால், அறியாமையோ வறுமையோ எதிரில் நில்லாது போய்விடும். அவன் தலை அசைந்தால் செல்வம் குவியும் என்றார்.

தம்மிடம் ஆடம் காட்டிய அன்புக்குப் பதிலாக, மைசூர் நாட்டில் ஒரு சாதுவுக்குக் கிடைப்பனவற்றை எல்லாம் அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

பக்கிரியின் வேண்டுகோள்படி மைசூர்ப் பயணத்தை மேற்கொள்ளத் தயார் என்று உறுதிகூற ஆடம் தயங்கவில்லை. தங்கள் அரசாங்கங்களுக் கிடையே நல்லெண்ணம் நீடித்து நிலவினால் தன் காரியம் எளிதில் முடியும் என்று கருதினான் ஆடம். உண்மையில் மிக்க ஆர்வத்துடன் அத்தகைய வாய்ப்பு நேரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர், அறிவுடைமையே செல்வத்தினும் சிறந்தது என மதிக்கும் இயல்புடைய சாதுக்களைப்போல இருவரும் கீழைநாட்டு முறைப்படி தங்களுக்குள் பரிசுகளைப் பரிமாறிக் கொண்டனர். நண்பர்களைப்போல ஒருவர்க்கொருவர் நன்மொழி பகர்ந்துகொண்டு பிரிந்தனர்.

பராக் எல் அட்கி ஆடமுக்கு மெக்காவிலிருந்து கொண்டுவந்த ஒரு மருந்தினைக் கொடுத்தார். கலப்படமில்லாத அம்மருந்தை வேறெங்கிருந்தும் வாங்க முடியாது. மேலும் அதை வைத்துக் கொண்டிருந்தால் நவாபின் அதிகாரிகள் எல்லாம் சிறந்த மரியாதை செலுத்துவர். மைசூர்ப் பயணம் நற்பயனளிப்பதற்கு அது பயன்படும். அம் மருந்தை அவமதிப்பாரின் தலைக்கு ஆபத்து வருவது திண்ணம். அறுவாள் ஏந்திய சோளத்தட்டறுப்போர் கையில் அகப்பட்ட சோளத்தட்டுப்போல அவர்கள் தலை ஆபத்திற்குட்படாமல் போகாது" என்று கூறினார்.



ஆடம் இந்த அன்புச் சிறப்புக்களுக்குப் பதிலாகக் கீழைநாடுகளில் கிடைக்காத சில அரிய மருந்துகளை அறிவுமிக்க அந்த இசுலாம் நண்பருக்கு அளித்து, அவற்றைப் பயன்படுத்தும் முறைகளைப்பற்றியும் கூறினான்.

பராக் இந்தியாவின் உள்நாட்டுப் பகுதிக்குப் போய்ப் பல மாதங்கள் கழிந்த பின்னரே ஆடம் தற்செயலாய் அவரை வியப்புடன் ஒருநாள் சந்திக்க நேர்ந்தது.

ஐரோப்பாவிலிருந்து கப்பல்கள் காலங்கழித்தே வந்தன.

வழக்கம்போல அக்கப்பல்களில் படையதிகாரிகளாக அமர விரும்பிய இளைஞரும், திருமண நோக்கமின்றி இந்தியாவில் வாழும் தம் சகோதரன், மாமன் அல்லது வேறு நெருங்கிய உறவினரின் வீடுகளை நன்கு வைத்துக் கொள்ளுவதற்காக முன் வந்த இளம் பெண்களும் அங்கிருந்து கொண்டுவரப்பட்டனர். அப்போது ஊழியத்திலிருக்கும் ஒரு பெரிய அதிகாரி அளித்த பொதுவிருந்தில் மருத்துவன் ஆடம் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. அதிகாரியின் நண்பர் ஒருவர் வீட்டில் மூன்று இளம் பெண்கள் இருந்தனர். அவர் எப்போதும் ஹுக்கா குடிப்பதிலேயே தம் மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். அம்மூவரில் நிற அழகுபெற்ற ஒருத்தியிடம் மட்டும் சிறிது அன்பு பூண்டிருந்தார் என்று சிலர் கூறினர். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் இப் பெண்களை வேண்டுவார்க்குக் கொடுத்துவிட அவர் விருப்பம் தெரிவித்தார். ஆடமும் இந்தத் துறையில்

மீன்பிடிக்க விரும்பினன். நண்பர் கூட்டத்திலிருந்து ஒருவர் மெல்லிய குரலில் கூறியது ஆடம் காதில் விழுந்தது.

"இவர்கள் அரம்பையர்கள் அல்லது தேவதைகளே! விற்பனையாகாது நம் கைக்கே திரும்பிவரும் பொருளைப்போல இவர்கள் இங்கே நம் பழைய நட்புடைய ஷீபா அரசிபோல் இருக்கின்றனரே!''

பேசிக் கொண்டிருக்கும் இருவர் பக்கமும் தன் பார்வையைத் திருப்பினன் ஆடம். இயற்கையல்லாத தோற்றமுடைய ஒருத்தியைக் கண்டான். அவள் ஆடை பகட்டுச் சிவப்புப் பட்டாக இருந்தது. அதில் பொன்மலர் பொறித்த பூவேலைப்பாடுகள் இருந்தன. அவள் பெரிய மென்னீலப் பட்டுப் பாவாடையும், இடுப்பைச்சுற்றி அழகிய ஆழ்சிவப்பு நிறத்துண்டும் கட்டியிருந்தாள். அவளுடைய கழுத்திலும், கைகளிலும் தங்கச்சங்கிலியும், வளைகளும் இருந்தன. இடுப்பிலிருந்த பட்டுத்துண்டு போன்ற தலைப்பாகையை அழகான ஒளி மணிகள் அலங்கரித்துக் கொண்டிருந்தன.

ஆஸ்டிரிக் கோழியின் அணிநிற இறகுகளில் நீல நிற இறகு ஒருபுறமும், சிவப்புநிற இறகு ஒருபுறமும் தலைப்பாகையில் செருகப்பட்டுத் திகழ்ந்தன. அவள் ஐரோப்பிய நிறத்தினளாயிருந்தாள். நெற்றியில் முப்பிரிவுடைய மணிமுடி ஒன்றை அணிந்திருந்த அவள் அழகுச் செல்வத்தைக் காட்டிலும், அதிகாரம் செலுத்தும் வன்மையினையே மிகுதியாய்ப் பெற்றிருந்தாள் என முகம் காட்டிற்று. அலகு வளைந்த கிளியைப் போன்று அழகான மூக்கைப் பெற்றிருந்தாள். ஆனல் கன்னங்கள் சிறிது குழிந்திருந்தன. அவளுடைய நிறம் மிகவும் பொலிவு பெற்றிருந்தமையின் அவள் முகம் முழுவதும் வண்டியை விட்டிறங்கிய பிறகு முற்றிலும் மாறுபாடு உற்றதோ என்று எண்ணும்படி இருந்தது. பகட்டுடை அணிந்த ஒரு கறுப்புநிற அடிமைப்பெண், வெள்ளிப் பிடிபூண்ட கவரி ஒன்றைக் கையிலேந்திக்கொண்டு அவள் பின்புறம் நின்று அதை வீசிக்கொண்டிருந்தாள். அவளைக் கண்டு பேசியவர்கள் எல்லாரும் மிகவும் உயர்வாக அவளை விளித்ததினின்று அவள் முக்கியமானவள் என்பது அறியப்படும். ஆனல் அந்தச் சமயத்தில் விளித்துக் கூறியது போலப் பிற சமயங்களில் அப்படி உயர்த்துக் கூறும் தகுதியை அவள் பெற்றிருக்கவில்லை.



எனினும் பிரிட்டனிலிருந்து அண்மையில் வந்த கிழக்கிந்தியக் கம்பெனிக் கப்பலின் தலைவன் ஒருவன் மிகவும் கவனமாகவும், மரியாதையாகவும் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தான். ஆடமுக்குத் தெரிந்த இரண்டு மூன்று வணிகர் ஒரு செல்வவளமுடைய கப்பலைப் பாதுகாப்பதைப்போல அவளைச் சுற்றிப் பாதுகாப்புச் செய்து கொண்டிருந்தனர்.

ஆடம் அருகிலிருந்தவனைப் பார்த்து "இவளுக்கு இதெல்லாம் எதற்காக?'' என்று கேட்டான்.

அருகிலிருந்தவன் ஆடமுக்குப் பதில் கூறினன்: "ஷீபா அரசியைப்பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாதா? அப்படியானல் தெரிந்துகொள். அவள் ஸ்காட்லாந்து நாட்டிலிருந்து பாண்டிச்சேரிக்குக் குடியேறிப் பின் இறந்துபோன ஒருவர் மகள். மாந்திரவில்லி என்ற பிரெஞ்சுக்காரனை அவள் மணந்து கொண்டாள். பாண்டிச்சேரி சரணடைந்த பிறகு அவளும் அவள்

கணவனும்............ஓய்! நீ என்ன பித்துப்பிடித்தவன் போல் அவளேயே பார்த்துக் கொண்டிருக்கிறுய்? ஒரேயடியாக அவளைப் பார்த்தால் அவள் பின்னர் உன்னை எல்லோர் முன்னிலையிலும் இகழ்ந்து கூறுவாள்.''

நண்பனின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது ஆடம் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து விருட்டென எழுந்து கூட்டத்தில் பழகவேண்டிய முறைகளின் நெறியினின்று சிறிது பிறழ்ந்து, கூட்டத்தை விலக்கிக்கொண்டு, அவள் இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தான்.

'' இன்று டாக்டருக்குப் பித்துப் பிடித்துவிட்டது '' என்றுன் முன்பு பேசிய நண்பன்.

உண்மையில் ஆடம் தன்னுணர்வில் இருக்கவில்லை. ஏனெனில் ஷீபா ராணியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவளுக்குப் பின்னுலிருந்த ஒரு பெண்மேல் அவன் கண்பார்வை விழுந்தது. அவள் ராணியின் பருத்த உருவம், பரந்துநீண்ட ஆடை இவற்றுக்குப் பின்னுல் நின்று தன்னை மறைத்துக் கொள்ள விரும்பியவளைப்போல் இருந்தாள். அவள் தன் இளமைக்காலத்துத் தோழி—வாலிபக் காலத்துக் காதலி—மெனிகிரேதான் என்பதை ஆடம் அறிந்து கொண்டான்.

இந்தியாவில் மெனியைப் பார்ப்பதே அவனுக்கு வியப்பாயிருந்தது. அவள் அரசியின் பாதுகாப்பிலிருப்பதுபோலக் காணப்பட்டது இன்னும் மிக்க வியப்பாயிருந்தது. அவனுக்கு வியப்புணர்ச்சியைத் தோற்றுவித்த மெனியிடமே சென்று கேட்டுப்பார்ப்பது தான் நேரிய, சிறந்த வழி என்று எண்ணினுன்.



ஆனுல் மெனியை அணுகும் போது அவனுடைய ஆர்வத்துடிப்பு அடங்கிவிட வேண்டியதாயிற்று. ஏனெனில் ஆடம் தன்னை நோக்கி வருவதைப் பார்த்தாலும் அவள் அவனை அடையாளம் புரிந்து கொண்டதாகக் காணப்படவில்லை. இன்னுன் எனத் தானே அறிவுறுத்தினு லன்றி அறிந்து கொள்ளாதவள் போல் இருந்தாள். அவள் தன் ஆட்காட்டி விரலை மேலுதட்டின்மேல் வைத்தாள். அதை அவள் குறிப்பின்றித் தற்செயலாகச் செய்தாள் என்று கொண்டாலன்றி, 'இப்போது என்னிடம் 'பேசாதே' என்று பொருள்படும்படி அது இருந்தது. அப்படிப் பொருள்படுவதாகவே எண்ணி ஆடம் அப்படியே அசைவற்று நின்றுன். அவமானம் உற்றவன் போல் காணப்பட்டான். ஏனெனில் அந்தச் சமயத்தில் எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்த அவமான உணர்ச்சி வலுப்படும்படியாக ஒருத்தி அவனைப்பார்த்து அதிகாரக்குரலில் கேட்டாள்: "ஏன் ஐயா, நீங்கள் எங்களையே நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தீர்கள்; ஆனுல் அப்படியே நின்றுவிட்டீர்களே! அதற்குள் வாயடைத்து விட்டதா?''

"அந்த அம்மா என் பழைய தோழி என்று நினைத்து வந்தேன். ஆனுல் அருகில் வந்ததும்தான் நான் தவறுதலாக எண்ணிவிட்டது " தெரிந்தது'' என்றுன் ஆடம்.

"எல்லோரும் டாக்டர் ஆடம் என்று கூறுவது உங்களைத் தானு? ஆனுல் உங்களைப்பற்றி எனக்கோ, என் தோழிக்கோ ஒன்றும் தெரியாது" என்று பதிலளித்தாள் முன்பு பேசியவள்.

"என்னை உங்களுக்குத் தெரியும் என்று நான் பாவனை செய்யவில்லையே......." என்று ஆடம் கூறும் போது மெனி மீண்டும் முன்பு காட்டிய சைகையினையே காட்டினாள். அதன்பொருள் இப்போது ஆடமுக்குத் தெளிவாகவே பட்டது. அதனால் தான் எண்ணியிருந் தபடி கூறுது வாக்கியத்தை மாற்றி முடித்தான்; "ஆனால் என் அறியாமைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

ஆடம் பழைய இடத்திற்கே திரும்பிவிட்டான். அந்த அறையைவிட்டு வெளியே போக முடியவில்லை. ஆனால் செய்திவிரும்பிகள் என்று தான் கருதிய சிலரை நோக்கி, "அதோ அழகி போலத் தோன்றுகி றாளே, அந்தப் பெண்மணி யார் ?" என்று கேட்டான்.

"ஓ, அவள்தான் ஷீபா ராணி" என்று கூறினான் பட்லர் என்பவன்.

"அவளுக்கருகே அமர்ந்திருக்கும் அந்தப் பெண்?"

"ராணிக்குப் பின்னாலிருப்பவளா! அவளைப் பற்றி எனக்குத் தெரியாது. ராணியை அழகி என்று சொன் னீர்கள்? ஆம். உண்மையில் அழகிதான். பெண்கள் கூட்டத்திலிருந்து கொண்டே கண்வீச்சு வீசும் அந்த நங்கை மிக்க அழகுடையவள்தான்" என்றான்.

"ஆனால், அவள் யாரென்று எனக்குச் சொல்ல முடியுமா ?" என்று கேட்டான் ஆடம்.

"மாந்தர் வில்லியைப் பற்றிக் கேள்விப்பட்ட தில்லையா ?" என்று கேட்டான் பட்லர்.

"இல்லை. நான் சென்னையை விட்டுப் போய் வெகு காலமாகி விட்டது" என்றான் ஆடம்.



பட்லர், "சரி, சொல்லுகிறேன். இந்த அம்மா பிரெஞ்சு அரசாங்க ஊழியத்திலிருந்த ஒரு சுவிஸ் அலுவலரின் மனைவி. பிறகு கைம்பெண் ஆகிவிட்டாள். அவர் ஒரு சிற்றரசனுக்காக வைத்திருப்பதாகச் சொல்லி ஒரு கோட்டையை வாங்கி வைத்திருந்தார். பிறகு தமக்குரிய நிலப்பரப்பைப் பெருக்கி ஒரு சிறிய நாட்டிற்குத் தலைவராகித் தனியுரிமையுடைய அரசர் என்று தம்மைப் பற்றி அறிவித்துக் கொண்டார். ஆனால் ஹைதர் அலி இதையெல்லாம் அறியாது படைஎடுத்து வந்து கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் இதே பெண்தான் அந்தக் கோட்டையைக் காட்டிக் கொடுத்ததாகச் சிலர் கூறுகின்றனர். அது எப்படியோ போகட்டும். அந்த சுவிஸ் நாட்டார் போர்க் களத்திலேயே இறந்து காணப்பட்டார். சரணடைந்த படைகளுக்காக அவள் நிறையப் பணம் பெற்றாள். மேலும் அவளுக்கு என்னென்ன கிடைத் தன என்பது தெரியவில்லை. அரசுரிமைச் சின்னங் கள் சிலவற்றையும் அவள் வைத்துக் கொள்ளலாம் என்ற உரிமையும் தரப்பட்டது. ஹைதரைக் கீழ் நாட்டுச் சாலமன் என்று அவள் கூறிவந்ததால் அவளும் ஷீபா ராணி என்ற பெயரைப் பெற்றாள். எப்பொழுது வேண்டுமானாலும் அவள் அரண்மனையை விட்டு வெளிவருவாள். அண்மையில் அவள் செண்ட் ஜியார்ஜ் கோட்டை வரை சென்றுவந்தாள். சுருங்கக் கூறின் அவள் தன் விருப்பம்போல் எதையும் செய்கி றாள். இங்குள்ள பெரிய மனிதர்கள் எல்லாம் அவ ளுக்கு மதிப்புச் செய்கின்றனர். ஆனால் பெரும் பாலோர் அவளை ஓர் ஒற்றாளாகவே கருதுகின்றனர். அவளுடைய செல்வத்திற் பெரும்பாலானவற்றை

ஹைதர் கடன் வாங்கியிருப்பதால், அவருடைய நட்பை விட்டுவிட முடியாது. மேலும் இதுபோன்ற வேறு காரணங்களுமுள்ளன'' என்முன்.

''வியப்பான கதைதான்'' என்று கூறினுன் ஆடம். இப்படிப்பட்ட துணிகரச் செயலும் குணமும் உடைய ராணியிடம் எப்படி மென்மையும் சால்பும் உடைய மெனிகிரே பழகிச் சேர்ந்தாள் என்ற கேள்வி அவன் மனத்தில் எழுந்தது.

''ஆனுல் பட்லர் முக்கியமான எல்லாவற்றையும் சொல்லிவிடவில்லை'' என்முன் அப்போது அங்கு வந்த மேஜர் மெர்சர் என்பவன். ''உன் பழைய நண்பன் திரேசாம் என்ற ரிச்சர்டு இந்த ராணியின் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ளான் என்று நம்பத்தகுந்த செய்தி ஒன்று கூறுகிறது. உண்மையில் ரிச்சர்டு தனக்கென ஒரு படையை வைத்திருந்தான். ஆனுல் பிறகு அதை நவாபின் படைக்குத் துணையாகும்படி செய்தான். நவாபும் அப்படையை ரிச்சர்டின் நாட்டு மக்களுக்கெதிராக வேலைசெய்யும்படி தந்திரமாகப் பயன்படுத்தினுன். கொடுமை என்பதைப் பேயும் இன்னதென அறிந்து கொள்ளச் செய்யும் ரிச்சர்டிடம்தான் பிரிட்டிசுக் கைதிகள் ஒப்படைக்கப்படுவர்'' என்முன்.

''இந்தப் பெண்ணேடு அவனுக்கு ஏதாவது தொடர்புண்டா?'' என்று கேட்டான் ஆடம்.

''அப்படித்தான் வதந்தி உலவுகிறது'' என்முன் மேஜர்.

ஆடம் மேற்கொண்டு வேறென்றும் கேட்க விரும்பவில்லை. அத்தகைய ராணியிடமும் அப்படிப்



பட்ட மனிதனிடமும் அகப்பட்டுக் கொண்ட மெனியின் விதியை எண்ணிய அவனுடைய மனத்தில் மிகவும் பயங்கரமான எண்ணங்களே தோன்றின. அவனுடைய பாதுகாப்பைப் பற்றித் திட்டமிடுவதற்காகத் தன் மனக்கருத்துக்களை எல்லாம் ஒன்றுதிரட்டிய அவன் உள்ளத்தில் ஒரு போராட்டமே எழுந்தது. அப்போது ஒரு கறுப்புச் சேவகன் அவன் கையைப் பற்றி அதில் ஒரு கடிதத்தை வைத்துவிட்டுச் சென்முன். அதில் 'குமாரி கிரே, திருமதி மாந்தர்வில்லி, கறுப்புநகரத்தில் ராம்சிங் கோட்டாவின் வீட்டில்' என்று ஒரு பக்கத்திலும், 'காலை எட்டுமணிக்கு' என்று அடுத்த பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தன.

அவள் இப்போது இருக்கும் இடத்தின் முகவரியைக் குறித்த இக்கடிதம் குறிப்பிட்ட நேரத்தில் அவளைச் சென்று காண்பதற்கு ஓர் அனுமதிச் சீட்டாகவும் பயன்பட்டது. அவளை மீண்டும் பார்க்கப் போவதை எண்ணியதும் அவன் இதயம் படபடத்தது. அவளுக்கு உதவி செய்யப் போகிறேம் என்று நினைத்த போது இன்னும் அதிகமாக அவன் இதயம் துடித்தது. துன்பம் வரும் சமயத்தில் அவளுக்கு உற்ற துணை அல்லது பாதுகாவலன் இனி வேறு யாரும் வேண்டியதில்லை என்று அவன் தனக்குள் நினைத்துக்கொண்டான். எனினும் அதே சமயத்தில் அவளுடைய சூழ்நிலையைப் பற்றியும் அவளோடு தொடர்புடையவர்களைப் பற்றியும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாதது எனக் கருதினுன். பட்லரும், மெர்சரும் சரியாக ஒன்றும் கூறவில்லை. பட்லர் ஒரு ஆடம்பரப்பித்தன். மெர்சர் ஒரு வதந்தி விரும்பி.

இவர்கள் இருவருடைய வார்த்தைகளிலும் எவ்வளவு தூரம் உண்மையிருக்கும் என்று ஆடம் சிந்தித்துக் கொண்டிருக்கையில், ஹைதரின் சிறையில் அண்மைக் காலம்வரை கைதியாக இருந்த ஒருவர், முன்பு போர்ப் படை மருத்துவராயிருந்தவர் அங்கு வந்தார். எஸ்டேல் என்ற பெயருடைய அவர் முன்னேறக்கூடிய ஓர் இளைஞர் என்றும், ஆழ்ந்த அமைதியுடையவர் என்றும், நல்லறிவுடையவர் என்றும் பெயர்வாங்கி யிருந்தார். அவரிடம் ஷீபா ராணியைப் பற்றிப் பேசி அவள் துணிகரச் செயல் புரிபவள் தானா என்பதை அறிந்து கொள்ள முயன்றான் ஆடம்.

ஆனால் எஸ்டேல் புன்முறுவல் செய்து கொண்டே, தமக்கு ஒன்றும் தெரியாது என்றுகூறினார். "நாங்கள் எல்லாம் இந்தியாவில் துணிகரச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் பேகம் மாந்தர் வில்லி மற்றவர்களைப் போல அப்படித் துணிகரமாக நடப்பவள் அல்லள்" என்றார்.

"அப்படியானால் எதற்கு அவளுக்கு இப்படிப்பட்ட பகட்டான உடை?"

"படைக்குத் தலைமையாயிருந்த ஒரு பெண் சாதாரண உடையில் காணப்படுவாள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இந்தச் சமயத்தில் நினைத்தால் கூட அவளைத் திருமணம் செய்து கொள்ள மிகவும் சிறந்த ஆடவர்கள் முன்வருவர்" என்றார் எஸ்டேல்.

"அவள் தன் கணவனின் கோட்டையை ஹைதருக்குக் காட்டிக் கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்களே?" என்று வினவினான் ஆடம்.



"அதுவா? அது மதருசு வதந்திக்கு ஒரு மாதிரி. உண்மை என்னவென்றால் கணவன் மடிந்த பிறகும் அவள் நெடுநாள் தன் கோட்டையைப் பாதுகாத்து வந்தாள். பிறகு சில ஒப்பந்தங்களுக்குட்பட்டுச் சரணடைந்தாள். இந்தியாவில் நீதி வழங்குவதில் நிகரில்லாதவன் எனத் தற்பெருமை பாராட்டிக் கொள்ளும் ஹைதர் அப்படிப்பட்ட நட்புறவுக்குச் சம்மதித்திருக்க மாட்டார்."

"நானும் அவர்களுடைய நட்புறவு மிகவும் இறுக்கமானது என்றுதான் கேள்விப்பட்டேன்" என்றான் ஆடம்.

"அவமானம் என்று கூறினாலும் இன்னொரு பழிச்சொல்லும் இருப்பதை அறிகிறேன்" என்று தொடங்கினார் எஸ்டேல். "ஒரு கிறித்துவப் பெண்ணை வைத்துக் கொள்ள விரும்பாத ஒரு தீவிர முகம்மதியர் ஹைதர். எனவே அவள் நிலைமையில் எதிர்பார்க்க முடியாத உயர்மதிப்புக் கொடுக்கப்பட்டிருப்பதை எண்ணி அவள் தோற்றத்திலாவது அரசச் சிறப்பினைச் சிறிது குறைத்துக் கொள்ள வேண்டும். இப்படித்தான் அந்தப் பெண் மிடில்மசுடன் தொடர்பு கொண்டுள்ளாள் என்ற வதந்தியும்" என்றார்.

"அப்படியானால் அதுவும் பொய் வதந்திதானா?" என்று மூச்சு நின்று போகும் ஆர்வத்துடன் கேட்டான் ஆடம்.

"பொய் என்றுதான் நான் மனமார நம்புகிறேன்' என்றார் எஸ்டேல். "இந்திய நீதி மன்றத்திலிருந்த அந்த ஐரோப்பியர்கள் எல்லாம் என் நண்பர்களே; எனக்கு மிகவும் தெரிந்தவர்களே. மற்றவற்றை எல்

லாம் நான் நம்பவில்லை. ஆனால் அவர்களிடமிருந்து மிடில்மசுக்கும் உனக்கும் ஏதோ சண்டை என்றும் கேள்விப்பட்டேன். அவருடைய பகைமை இனிமேல் இருக்காது என்ற செய்தி உனக்கு மனநிறைவைக் கொடுக்கும் என நம்புகிறேன்.''

''ஆனால் அவன் அவளைக் கைவிட்டுப்போனது- ஹைதரின் கீழ் இருந்துகொண்டு அதிகாரம் செலுத்த ஒப்புக்கொண்டது-கைதிகளைக் கொடுமைப்படுத்தியது- இவற்றை யெல்லாம் எப்படித் தள்ளிவிடுவது?'' என்று கேட்டான் ஆடம்.

''ஏன், அது முடியக்கூடியதே. உன்னிடம் மிகவும் இரகசியமாகவும் எச்சரிக்கையாகவுமே பேசுகிறேன். அவன் தனியே தன்படைக்குத் தலைவனாய் இருப்பதைக் காட்டிலும் ஹைதர் அல்லது திப்புவின் படையில் மிக நன்கு பணியாற்ற முடியும். கைதிகளை நடத்தும் முறையைப் பொறுத்தவரை நான் அவரைச் சார்ந்தே பேசவேண்டும். ஹைதர் படையில் சேர்ந்தவர்கள் அவர் சொல்படி நடக்கவேண்டும், அல்லது சாகத் தயாரா யிருக்கவேண்டும். ரிச்சர்டு கைதிகளை அப்படிக் கொடுமைப் படுத்தும்படி செய்தவர் ஹைதரே. ரிச்சர்டு என்னிடமே சொல்லியிருக்கிறார். அதை நம்புகிறேன். கறுப்பு மனிதர்களுக்கு முன்னிலையில் நம்மவர்களைக் கொடுமைப் படுத்துவது போல் தோன்றினாலும், உண்மையில் நம்மவர்க்கு உதவி புரியலாம் என்றே இப் பதவியை ஏற்றுக் கொண்டதாக என்னிடம் சொல்லி யுள்ளார். சில முட்டாள்கள் இதை உணர்ந்துகொள்ள முடியாமல் அவருக்குப் பழியையும் இகழ்ச்சியையும் கொடுக்கின்றனர். ஐயத்திற்கு இடமேற்படக்கூடாது



என்றுதான் ரிச்சர்டு அவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறார். அவருக்கு விடுதலை கொடுத்தால், அவர் உண்மையில் அன்பாய் இருக்கவே விரும்புகிறார் என்பதை நானும் என் நண்பர்களும் நிரூபிக்க முடியும். விரைவில் ஒரு நாள் அவருக்குச் சென்னையில் நன்றி கூறலாம்என நினைக்கிறேன். இவை யெல்லாம் இரகசியம். விடைபெறுகிறேன்'' என்றார் எஸ்டேல்.

மாறுபட்ட செய்திகளால் மனங் குழம்பிய ஆடம், பேதம் மாந்தர் வில்லியைக் கவனித்து வந்த கேப்டன் காப்சுடரனைச் சந்திப்பதுதான் இனித் தான் அடுத்துச் செய்யவேண்டிய செயல் என்று நினைத்தான். ஆணை யாளரிடமிருந்து பெண் பயணிகளின் பெயர் வரிசை யைக் கேட்டுவாங்கிப் பார்த்த போது, நீளமான அப் பட்டியலில் தான் பார்க்க விரும்பிய பெண்ணின் பெயர் காணப்படவில்லை. மீண்டும் தீர விசாரித்தபோது, மெனிகிரே தன் மேலதிகாரியின் மனைவியின் பாது காப்பில் புறப்பட்டு வந்திருப்பதை அறிந்தான். ''அவள் நல்ல, ஒழுங்கான பெண். மாந்தர் வில்லிக்குத் துணை யாக வந்தது அவளே என்று அறிகிறேன்'' என்றான் கேப்டன்.

கேப்டனிடமிருந்து அறிந்துகொள்ள முடிந்தவை இவ்வளவுதான். இதனால் ஆடம் மெனியைப் பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையிலேயே இருந்தான். மெனிகிரேவிடமே நாளை நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று காத்திருந்தான்.

---

## 11. மருத்துவர் மகளைச் சந்திக்கும் ஆடம்

குறித்த நேரத்தில் ஆடம் செல்வம் மிக்க ராம்சிங் கோட்டாவின் வீட்டில் வந்து இருந்தான். அவ் வணிகன் பேகம் மாந்தர் வில்லிக்குச் சில காரணங் களுக்காக உதவிகள் செய்யவேண்டு மென்ற விருப் பினனாய், அவளுடைய இருப்பிடத்திற்காகவும், அவளுடைய எண்ணற்ற படையினர்க்காகவும் தன் பெரிய மாளிகையின் பெரும்பாலான பகுதியை விட் டிருந்தான். அம்மாளிகை சென்னையின் ஒரு பகுதி யான கறுப்புநகர் என்ற இடத்தில் அமைந்திருந்தது. ஒரு வேலைக்காரன் வந்து ஆடமை வேறோர் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே மெனிகிரேவைச் சந்திக்க முடியும் என்று ஆடம் எண்ணினான். அந்த அறையின் ஒரு பக்கம் கதவு திறந்தது. அதன் வழியே பார்த்த போது ஒரு தோட்டம் காணப்பட்டது. இந்திய நாட்டுப் பூக்களின் அழகு வண்ணங்கள் எல்லாம் அதில் ஒருங்கிருந்தன. அத்தோட்டத்தின் நடுவே ஒரு சிறு குழாய்வழியே ஊற்றுநீர் மேனோக்கி எழுந்து மீண்டும் அடியிலிருக்கும் தொட்டியிலேயே விழுந்துகொண் டிருந்தது.

மயக்கம் கொடுக்கத் தக்க எண்ணங்கள் பல அவன் மனத்தில் தோன்றின. தூர நாட்டிலிருப்பதாலும், வாழ்க்கையில் அவ்வப்போது இடர்ப்பாடுகள் ஏற்பட்டு வந்ததாலும், நீண்ட காலமாகத் தன் இளமைக் காலத்துத் தோழியைப் பற்றிய எண்ணங்களை மறந் திருந்த அவன் இப்போது அவளுக்கருகில் வந்திருப்ப தாலும், எதிர்பாராத-புரிந்துகொள்ள முடியாத-சூழ்



நிலையில் இருப்பதாலும், அவன் உள்ளத்தில் உறங்கிக் கொண்டிருந்த எண்ணங்கள் எல்லாம் தலைதூக்கி எழுந்தன. அப்போது ஒரு காலடிச் சத்தம் கேட்டது. கதவு திறந்தது. ஒரு பெண் அங்கே தோன்றினாள். அவள் பருத்த உருவங்கொண்ட மாந்தர்வில்லிதான்.

"யாரைப் பார்க்க வேண்டும், ஐயா? அதாவது, நேற்றுப் பேச மறந்துவிட்ட உங்கள் நாக்கு இன்று பேச ஆரம்பித்திருந்தால் பதில் சொல்லலாம்" என்றாள்.

"நேற்றுமாலை உங்கள் கூட்டத்திலிருந்த இளநங் கையை இங்குக் காண்பதற்காக நான் காத்திருக்கிறேன். ஐரோப்பாவில் அவ்வம்மையை நான் நெடுநாளாய் அறிவேன். இப்போது இந்தியாவில் அவருக்குச் சில உதவிகள் செய்ய விரும்புகிறேன்" என்றான் ஆடம்.

"நல்லது, ஆனால் மெனிகிரே வெளியே போய்விட் டாள்; வருவதற்கு இன்னும் ஓரிரு நாட்கள் ஆகும். அவளிடம் சொல்ல வேண்டியதையெல்லாம் என்னிடம் சொல்லிவிட்டுப் போகலாம்" என்றாள்.

"மன்னிக்கவேண்டும், அம்மா. நீங்கள் தவறாகச் சொல்லிவிட்டீர்கள் என நினைக்கிறேன். அதோ அவ் வம்மையே இங்கு வருகின்றார்" என்றான் ஆடம்.

மெனி வருவதை அறிந்த மாந்தர் வில்லி அவளைப் பார்த்துச் சினக்குறிப்புடன், "என்ன இது? நான் இவரிடம் சொல்லியதுபோல் இரண்டுமூன்று நாட்கள் நீ வெளியே போகவில்லையா? சரி. நம்முடைய உடல் நலத்தை விசாரிக்க வந்த இவருடைய உடல் நலத்தை விசாரித்துவிடு.. நாம் நல்ல உடல் நலத்துடன் இருப்

பதை நேரில் பார்த்துவிட்டதும் அவர் போகட்டும்'' என்றாள்.

''அம்மா, தனியாக இவரிடம் ஒரு சில மணித்துளி பேச வேண்டுமென்று விரும்புகிறேன்; நீங்கள் அனுமதித்தால்....'' என்றாள் மெனி.

''அதாவது நீ இங்கிருந்து போய்விடு என்கிறாயா? அதுதான் முடியாது. ஓர் இளவயதுடைய ஆணும் அழகிய இளம் பெண்ணும் தனியே உரையாடல் நிகழ்த்துவதை நான் விரும்பவில்லை. என் மாளிகையில் அது நடக்காது'' என்றாள்.

''நாங்கள் கண்மறைவாக இருந்து பேசவேண்டியதில்லை'' என்று சொல்லை மென்று விழுங்கிக்கொண்டே கூறினாள் மெனி. '' ஆடம், இந்தத் தோட்டத்திற்குள் வருவீர்களா? அம்மா, நீங்கள் போய் மேல் சன்னலிலிருந்து எங்களைக் கவனிக்கலாம். அவ்வாறு நெருங்கிக் கவனிப்பது இந்நாட்டின் வழக்கமாயிருந்தால் அப்படியே செய்யுங்கள்'' என்றாள்.

இவ்வாறு சொல்லிவிட்டுக் கதவு வழியாகத் தோட்டத்திற்குள்ளே சென்றாள். மாந்தர் வில்லிக்கு வியப்பாகத் தோன்றினாலும், அவளுடைய மன விருப்பப்படி நடந்துகொள்வது போல் அமைதியாய் இருந்தாள். ஆனால் மெனி கிரேவின் நடப்பைக்கண்டு வெறுப்புக்கொண்டவளாய் அமைதியை மீறிக் கோபமாக அவ்வறையை விட்டேகினாள். தோட்டத்தில் திறந்த கதவைத் திரும்பிப் பார்த்த மெனி முன்போலவே மெல்லிய குரலில், ''பிறநாட்டுப் பழக்க விதிகளை நான் வேண்டுமென்றே மீற மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன். ஆனால் மிகவும் பழைய தன்பரிடம் பேசும்



ஆடமும் மெனியும் அளவளாவுதல்

மகிழ்ச்சியை இழக்க என்னல் முடியாது. எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறதோ அதுபோல அவருக்கும் மகிழ்ச்சி உண்டாவதாளுல்......." என்று ஆடமைப் பார்த்துப் பேச்சை நிறுத்தினுள். என்ன சொல்கிறோம் என்று அறியாதே ஆடம், "மகிழ்ச்சியா யிருந்திருக்கும். எல்லாவிதத்திலும் எனக்கு மகிழ்ச்சி யாகவே இருந்திருக்கும்-ஆனுல் உன் தந்தை—"

மெனியின் கைக்குட்டை அவள் கண்களில் இருந்தது. "அவர் போய்விட்டார். அவருக்கும் யாரும் உதவியில்லாது போய்விடவே, அவருடைய வேலை மிகுதியாயிற்று. அவருக்கு இருமல் பிடித்தது; அது நீண்ட நாளாய்த் தொடர்ந்தது. உங்களுக்குத் தான் தெரியுமே, அவர் தம்முடைய நோயைமட்டும் அவ்வளவாகக் கவனித்துக்கொள்ள மாட்டார் என்று. கடைசியில் நோய் பெரிதாகி அது அவருடைய உயிருக்கே உலைவைத்துவிட்டது. நான் உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்குகிறேன். எனினும் உங்களை அவ்வளவு அன்புடன் நேசித்த அவருக்காக நீங்கள் வருந்துவது முறைதான்" என்ருள்.

"ஓ மெனிகிரே, என் அரிய நண்பனின் பயனுடைய ஒழுங்கான படிப்பின் முடிவில் இப்படி நிகழ்ந்திருக்கக்கூடாது! ஐயோ! ஏன்-இக்கேள்வி என்னை யறியாமல் எழுகிறது-ஏன் அவருடைய ஆசைகளுக்கு ஒப்புதல் அளித்திருக்கக் கூடாது? ஏன்?" என்று கேட்டான்.

அக் கேள்வியை அவன் உதட்டிலேயே நிற்கும்படி வைத்துவிட்டு, "என்னைக் கேட்காதீர்கள்—நாம் நம் விதியை நாமே நிர்ணயிக்கக் கூடியவர்கள் அல்லர்



அப்படிப்பட்ட செய்தியைப் பற்றிப் பேசுவதால் மன வேதனைதான் ஏற்படும். என் தந்தைக்கு உதவியாய் இருப்பதற்காக அவருடைய காதலை ஏற்றுக்கொண் டிருந்தால் நான் உங்களுக்குத் துரோகம் செய்தவள் ஆவேன். என் கட்டுக்கடங்கா உணர்ச்சிகள் அச்செய லுக்குத் துணை செய்யவில்லை" என்ருள்.

"ஆனுல், நீ ஏன் இங்கே இருக்கிருய், மெனி? என்னை மன்னித்துவிடு. என் நாவும், மனமும் மறந்து விட்ட பழங்கால நிகழ்ச்சிகளுக்குத் திரும்பிச் செல் கின்றன. ஆனுல் ஏன் இங்கே நீ? ஏனிந்த மடந்தை யுடன்?"

"நான் எதிர்பார்த்தது போல அவள் அமைய வில்லை. ஆனுல் வெளிநாட்டுக்கு வந்த பிறகு அந் நாட்டு வழக்கங்களை வெறுக்கக்கூடாது. மேலும் அவள் தாராள மனதுடையவள். எதிலும் கருத்தா யிருக்கிருள். நானும் விரைவில்....(ஒரு கணம் நின்ருள். பிறகு) இதைவிடச் சிறந்த பாதுகாப்பில் இருப்பேன்."

"ரிச்சர்டின் பாதுகாப்பிலா?" என்று நடுங்கும் குரலில் கேட்டான் ஆடம்.

"இந்தக் கேள்விக்கு நான் விடை கூறக்கூடாது. ஆனுல் நான் கெட்ட ஏமாற்றுக்காரியாய்விட்டேன். என்னை நம்புகிறவர்களை நான் முழுமையாக நம்பிவிடு கிறேன். ஆடம், நீங்கள் ஊகித்தது சரிதான். உங்கள் பழைய நண்பனுடன் என் எதிர்காலத் தலை விதியைக் காணவே இங்கு வந்தேன்" என்ருள் மெனி. அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

"அப்படியானால் அது நான் அஞ்சிக்கொண்டு எதிர்பார்த்ததுதான்" என்று வியப்புடன் கூறினான் ஆடம்.

"இதற்கு ஏன் நீங்கள் அஞ்சவேண்டும்?" என்று கேட்டாள் மெனி; "உங்களையும் நான் நல்ல மனமுடையவர் என்றே கருதி வந்திருக்கிறேன். வெகு நாட்களுக்கு முன்பு நடந்த சண்டை என்றைக்கும் உங்கள் ஐயத்துக்கும் வெறுப்புக்கும் இடமாய் இருக்கக் கூடாது" என்றாள்.

"என் மனத்தில் வெறுப்புணர்ச்சி இருந்தால்கூட உங்கள் காரியத்தில் என்றுமே தலையிட மாட்டேன். ஆனால் உனக்காக—உனக்காகவே கவனமாயிருக்கிறேன். அந்த ஆள்-உன்னுடைய இன்பத்தைக் காப்பான் என்று நம்பிய உன்னைக் கைவிட்ட அந்த ஆள்-எங்கே இருக்கிறான், என்ன வேலையிலிருக்கிறான் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான் ஆடம்.

"இரண்டும் எனக்குத் தெரியும்; உங்களைக் காட்டிலும் தெளிவாகத் தெரியும். மிடில்மசு பெரிய தவறு இழைத்தார். அதற்காகக் கடுந்தண்டனை அனுபவித்தார். தன் நம்பிக்கையை அவர்மேல் வைத்த மெனி அவர் தனித்துத் துன்புற்று வாழும் காலத்தில் அவரைத் தேடி வரவில்லை. மேலும் பழைய வேலையுடன் அவர் தம் நாட்டிற்கு உறுதியாய்த் திரும்பி வருவதாகச் சொன்னதை நீங்கள் கேள்விப்படவில்லையா?" என்று கேட்டாள்.

"கேள்விப்பட்டேன். ஆனால் அவ்வேலையைப் பெறுவதற்கு அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. தன் புதிய தலைவருக்கே துரோகம் செய்பவனாய், அவர் நம்பிக்கைக்கு மேலும் தகுதியற்றவனாயிருக்கும் அவனுக்கு வேலைக்கு எப்படித் தகுதியிருக்கும்?" என்றான் ஆடம்.

தன் காதலனைப்பற்றிய பழிப்புரையைக் கேட்டதும் வெறுப்புக் கொண்டவளாய் மெனி, "நீங்கள் பேசியதை அவர் கேட்காமல் இருந்ததே நல்லதாயிற்று" என்றாள். உடனே தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "என் பேச்சு உங்கள் சண்டையை வளர விடக் கூடாது; குறைக்க வேண்டும் என விரும்புகிறேன். ஆடம், நான் நிச்சயமாய்ச் சொல்கிறேன். நீங்கள் ரிச்சர்டைக் குறைகூறுகிறீர்கள்" என்றாள்.

காதலனை இகழ்ந்து கூறியது கண்டு உணர்ச்சியுற்ற அவள் தன் உணர்ச்சிகளையெல்லாம் அடக்கிக் கொண்டு வெளிக்கு அமைதியுடையவள் போலவே தோன்றும்படி சமாளித்துக்கொண்டு இச் சொற்களைக் கூறினாள்.

ஆடமும் அதே தாழ்ந்த குரலில் பேசவேண்டியதாயிற்று.

"மெனிகிரே, உன் செயல்களும், எண்ணங்களும் ஒருதேவதையினுடையன போன்றே எப்போதும் இருக்கும். ஆனால் இந்த மிக முக்கியமான செய்தியை உலக அனுபவ அறிவுக் கண்கொண்டு பார்க்கும்படி உன்னை வேண்டிக் கொள்கிறேன். மீண்டும் உன் மனத்தை வருந்தச் செய்யமாட்டேன். உன் அன்பைப் பெற்றாலும் பெறக்கூடிய ஒருவனுக்காக நீ மேற்கொள்ளும் செயல்கள் எவ்வளவு இடர்ப்பாடுகள் உடையவை

என்று நன்ருக ஆராய்ந்து பார்த்திருக்கிருயா?'' என்று கேட்டான் ஆடம்.

''தாராளமாகப் பேச அதிக வாய்ப்பில்லாத, பல பேர் கூடிய கூட்டத்தில் நீங்கள் என்னைப் பார்க்க வந்தபோது நான் ஒன்றும் கூருதிருந்தது இப்படிப் பட்ட சமயம் பிறகு வாய்க்குமென்று கருதித்தான். இங்கே நான் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்ல முடியும். பழைய நினைவுகள் எல்லாம் கொஞ்சம் மனத்துன்பத்தைக் கொடுக்கக் கூடியவையே என்று நினைத்தேன். ஆனுல் அவை கணத்தில் மறையக் கூடியவையே. உங்கள் நட்பை நீடித்து வைத்திருக்க நான் விரும்புவதால், அதற்கு இன்னும் தகுதியுள்ள வளைப்போல நான் நடந்துகொள்ள வேண்டும். அதற்கு நான் முதலில் என் தந்தை இறந்த பிறகு நேர்ந்த என் நிலையைப் பற்றிச் சொல்லவேண்டும்.

உங்களுக்குத் தெரியும், உலகத்தின் கண்களில் நாங்கள் எப்போதும் ஏழைகளே. ஆனுல் உண்மையாக ஏழ்மை என்ருல் என்ன என்றே எனக்குத் தெரியா திருந்தது. என் எளிய தந்தைக்குத் தூரத்து உற வினரான ஒருத்தியின் பாதுகாப்பில் நான் வைக்கப் படும் வரை வறுமையை அறியாதிருந்தேன். அவள் தன் வீட்டு வேலைகளை எல்லாம் என் தலைமேல் சுமத்தி விட்டாள். அவளிடம் அன்போ, முகமலர்ச்சியோ என்றும் காணமுடியாது.

இந்தச் சமயத்தில் மிடில்மசிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் உங்கள் இருவருக்கும் விதி வலியால் நடந்த சண்டையைப்பற்றியும் அதன் விளைவு களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். தம் பெருந் துயரத்தைப் பகிர்ந்துகொள்ளுமாறு அவர் எழுத வில்லை. இப்போது அவர் செல்வங் கொழித்துத்தரும் வேலையிலிருப்பதாகவும், தம்மிடம் வேலைபார்க்கும் ஐரோப்பியர்களைத் தக்கவாறு மதித்துக் காக்கக்கூடிய அறிவுடைய ஒரு பலமிக்க அரசனுல் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் எழுதியிருந்தார்.



ஹைதர் அலியுடன் கொண்டிருக்கும் நட்பினுல் நம் அரசாங்கத்திற்குச் சிறந்த தொண்டாற்றும் வாய்ப் புப் பெற்றிருப்பதாலும், நாளடைவில் திரும்பிச் சென்று இறந்துபோன மேலதிகாரியின் இடத்தை நிரப்பக்கூடிய வாய்ப்பினைப் பெறலாம் என்ற நம்பிக் கையை வளர்த்துக் கொண்டிருப்பதாலும் இப்போது இந்தியாவுக்கு வருவது நல்லது என்று கூறி என்னை வரும்படி வற்புறுத்தி யழைத்தார். தம்முடைய பெருகி வரும் செல்வத்தின் பயனைப் பகிர்ந்துகொண்டு, வெகு காலத்திற்கு முன்பே மேற்கொண்ட கூட்டுறவின் பத்தை யடையலாம் என்று கருதினூர். திருமதி டப்பர் ஒரு நல்ல பெண்மணி என்றும், கப்பல் பயணத்தின் போது நல்ல துணையாவாள் என்றும் குறிப்பிட் டிருந்தார். சீர்மிக்க திருமதி மாந்தர்வில்லி மைசூரில் பெரிய செல்வங்களும் சிறப்பும் பெற்றிருப்பதால் என்னைச் சென்னை சென்ட் ஜியார்ஜ் கோட்டைக்கு வந்து பாதுகாப்பாக ஹைதர் மண்டபத்துக்கு அழைத் துச் செல்வார் என்றும் எழுதியிருந்தார். தாம் இப் போதிருக்கும் சூழ்நிலையில் தம் பெயரை வெளிப்படுத்தக் கூடாது என்றும், அந்த மடந்தையின் குடும்பத்தில் ஒரு வேலை செய்ய வந்ததாக மற்றவர்களிடம் ஒரு பொய்க் காரணம் சொல்ல வேண்டுமென்றும் அறி வுறுத்தியிருந்தார்.

நான் என்ன செய்வேன்? என் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமை முடிந்துவிட்டது. என் மற்ற நண்பர்கள் எல்லாம் இந்த நல்வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்று கருதினர். இவற்றை யெல்லாம் என் சொந்தக்காரியிடம் கூறியபோது அவளும் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தினாள். இதை மறுத்தால், இனி முன்பு போல உணவும் இடமும் கொடுத்து நல்ல நிலையில் இருக்கும்படி என்னை வைத்துக் கொண்டிருக்க முடியாது என்றுங் கூறினாள்" என்றாள் மெனி.

"கெட்டெண்ணக்காரி!" என்றான் ஆடம்.

"இன்னொரு செய்தியையும் கேள், ஆடம். பிறகு என் சொந்தக்காரியைப் பற்றி இவ்வாறு பழித்துக் கூறமாட்டீர்கள். உண்மையில் எல்லாருடைய தூண்டுதல்களும், அவளுடைய பயமுறுத்தலும் என்னை இந்தியாவில் அடியெடுத்துவைக்கத் தூண்டியிருக்க முடியாது. ஆனால் அந்த அழைப்பை மறுக்க எனக்கே மனம் வரவில்லை. நான் மிடில்மசைக் காதலித்திருந்தேன். இன்னும் காதலிக்கிறேன். அதை நான் ஏன் மறக்கவேண்டும்? அவரை நான் நம்புவதற்கும் தயங்கவில்லை. பழைய கூட்டுறவினைப்பற்றிய எண்ணங்கள் என் மனத்துள் எழுந்துகொண்டிருந்தன. அதனால் பெண்மைக்குரிய கற்பை நான் காத்து வந்தேன். என் காதலருக்கு நான் வேண்டுமென்றால், அவர் நேரில் வந்து கூட்டிச் செல்ல வேண்டும் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நீங்களும் அப்படிச் செய்வதே முறையானது என்பதை ஒப்புக்கொள்வீர்கள்" என்றாள்.



"இப்போதுகூட நீ உன் காதலரைப் பற்றி நல்லெண்ணம் கொண்டிருப்பது போல் உனக்கும் நீ நடுநிலையாய் இருக்கவேண்டும். தயவுசெய்து கோபம் கொள்ள வேண்டாம். நான் சொல்வதைக் கேள். ஐரோப்பியப்பெண் என்று சொல்லமுடியாத இப்படிப் பெண்ணின் பாதுகாப்பில் இருப்பது எனக்கென்னவோ ஐயமாகத்தான் இருக்கிறது. மிகவும் சிறந்த நிலையிலிருக்கும் பல மகளிரை எனக்குத் தெரியும். இந்நாட்டுத் தட்பவெட்பம் விருந்தோம்பலுக்கும் பெருந்தன்மைக்கும் மிகவும் ஏற்றதாயுள்ளது. உன் கதையையும், உன் நல்ல குணத்தையும் கேட்டால் அவர்களுள் எவரும், உன் காதலன் தன்னை அறிமுகப் படுத்தி உலகமறிய உன்னைத் திருமணம் செய்து கொள்ளும்வரை, உன்னைத் தக்க பாதுகாப்பிலேயே இருக்கும்படி வைத்துக் கொள்ள மறுக்கமாட்டார். நானும் அவனுக்கு ஐயமுண்டாக்கும் வகையில் நடந்து கொள்ள மாட்டேன். மெனி, உனக்கும் தொல்லையாயிருக்கமாட்டேன். நான் செய்திருக்கும் ஏற்பாட்டை நீ ஒப்புக் கொள்வாயாக. மதிப்புமிக்க, ஐயப்பாடில்லாத பாதுகாப்பில் உன்னை வைத்துவிட்ட பிறகு அடுத்த கணமே நான் சென்னையை விட்டுப் போய்விடுகிறேன். உன் விதி ஏதாவது ஒரு வழியில் நிலையாக அமையும் வரை நான் திரும்பி வரமாட்டேன்" என்றான் ஆடம்.

"இல்லை, ஆடம். இவ்வாறு நட்பின் பான்மையால் அறிவுரை கூறுகின்றீர்கள். ஆனால் என் சொந்தக் காரியங்களை உங்கள் ஏற்பாடுகள் மூலம் செய்து கொள்வது மிகவும் இழிபுடைத்து. அப்படிச் செய்வது வழியில் வந்த நன்மைகளை வாரிக் கொள்வதைத் தவிர வேறென்ன? பாவம் மிடில்மசு. செல்வ

மிக்க நிலையில் இருந்தால் அவர் செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளவும், இல்லாவிடில் அவரை விட்டுத் துறக்கவும் செய்யும் ஏற்பாடல்லவா இது? மிகவும் இளம்பெண்ணை எனக்குத் தகுதியில்லாத துணையாய் இம்மாது இருக்கின்றாள் என்றுதான் நீங்கள் மனமார நம்புகின்றீர்களா என்பதை மட்டும் கூறுங்கள்'' என்று கேட்டாள்.

“நானாக ஒன்றும் சொல்வதற்கில்லை. மாந்தர் வில்லியின் குணத்தைப் பற்றிக் கூடத் தவறான செய்திகள் கேள்விப்படுகிறேன். ஆனால் வெறும் ஐயம்கூட...''

''ஆடம், வெறும் ஐயத்தை நான் நம்பமுடியாது. என் எதிர்காலத்தைப் பகிர்ந்து கொள்ளப் போகும் அவருடைய நற்சான்றைக் கருதும்போது இவ் வையத்தை நான் எதிர்த்து நிற்க முடியும். இது ஐயப் பாட்டிற்கு உரியது என நீங்களே ஒப்புக்கொள்கின்றீர்கள். நான் உயர்வாக மதித்திருக்கும் அவருடைய உறுதிமொழி இந்த ஐயத்தைப் போக்குவதாக நான் ஏன் நம்பக் கூடாது? அவர் குறிப்பிட்டபடி இந்த மாந்தர் வில்லி இருக்காவிடில், அவர் என்ன மனிதர்?'' என்றாள்.

''அவர் என்ன மனிதர்!'' என்று ஆடம் தன் மனதுக்குள் எண்ணிக் கொண்டான். ஆனால் அவனுடைய நா அசைந்து சொற்களை வெளிப்படுத்த வில்லை. ஆழ்ந்த யோசனையிலிருப்பது போலக் கீழே நோக்கினான். கடைசியில் மெனி கிரே சொன்ன சொற்களைக் கேட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

“ஆடம், நாமிருவரும் பிரிய வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை நினைவூட்டுகிறேன். கடவுள் உங்களை வாழ்த்திக் காப்பாற்றட்டும்!'' என்றாள்.



ஒரு காலை மண்டியிட்டு உட்கார்ந்து அவளுடைய கையைப் பற்றி முத்தமிட்ட ஆடம், "அன்புமிக்க மெனி, உன்னைக் கடவுள் காப்பாற்றட்டும்! கடவுளின் ஆசியைப் பெறும் தகுதியை நீ அடைவாயாக! நீ எதிர் பார்ப்பதற்கு மாறாக ஏதேனும் நிகழுமானால் உடனே எனக்குச் சொல்லியனுப்பு. மனிதனால் உனக்கு உதவி செய்ய முடியுமானால் அதை ஆடம் கட்டாயம் செய்வான்” என்றான்.

அவன் தன் முகவரி அடங்கிய ஒரு கடிதத்தை அவள் கையில் வைத்தான். பிறகு அவ்வறையினின்று விரைவாக வெளியேறினான். பெரிய அறையில் மாந்தர் வில்லியைப் பார்த்தான். அவள் ஆடமைப் பார்த்து வேண்டா வெறுப்பாக விடைகொடுக்கும் சைகையைச் செய்தாள். அவளுடனிருந்த உயர் குலத்து வேலைக்காரன் ஒருவன் தாழ்ந்து ஒரு சலாம் செய்தான்.

கறுப்பு நகரிலிருந்து ஆடம் விரைவாய்ச் சென்றான். மெனிகிரேவுக்கு ஏதோ ஆபத்து நிகழப் போகிறது என்பதை முன்னினும் நன்றாக அறிந்து கொண்டான். எனினும் அவளுக்கு வரும் ஆபத்து எப்படிப் பட்டதாயிருக்கும் என்று அறியாததாலும், அதை எதிர்பார்ப்பதற்கு அவளுக்குப் போதிய பாதுகாப்பு இல்லையே என்று கருதியதாலும் அவனுக்கு மிக்க குழப்பமே மேலிட்டது.

# 12. காதலியைக் கைவிட்ட காதகனின் சூழ்ச்சிகள்

ராம்சிங் கோட்டாவின் வீட்டைவிட்டு ஆடம் வெளி வந்தபோது மெனி கிரே வேருெரு கதவு வழியாகத் தன் சொந்த அறைக்குச் சென்ருள். அவளும் ஆழ்ந்த இரகசியமான சிந்தனையில் ஆழ்ந்தாள். ஏனெனில், மிடில்மசின்மேல் மிக்க காதலும், நம்பிக்கையும் கொண் டிருந்தாலும், தனக்காக அவன் நியமித்த—தற்காலிகக் கண்காணிப்புச் செய்யும் அவளது குணத்தைப்பற்றிய ஐயப்பாடுகள் நீங்கப்பெருமல் இருந்தாள். எனினும் இந்த ஐயங்களைப்பற்றித் தீர்மானமாக எந்த முடிவுக்கும் வரமுடியாதவளா யிருந்தாள். தன்னைக் கண்காணிப் பவளின் பொதுவான பண்புகளையும், அவள் ஆண் களைப்போலப் பேசுவதையும் கண்டு வெறுப்புக் கொண்ட மெனிக்கு அவளைக் கண்டாற் பிடிக்காத நிலையே ஏற்பட்டது.

இதற்குள் ஆடமும் மெனியும் பேசிவிட்டுச் சென்ற அதே இடத்திற்கு மாந்தர்வில்லி ஒரு கறுப்பு வேலைக்காரனுடன் வந்தாள். கீழ்வரும் உரையாடல் களிலிருந்து அவர்கள் மறைவான இடத்திலிருந்து மெனியும் ஆடமும் பேசுவதைக் கேட்டிருக்கின்றனர் என்பது தெரியவரும்.

மாந்தர்வில்லி, "சாடாக், இந்த வுலகத்தில் அப்ப டிப்பட்ட பெரிய முட்டாள் இருப்பது நமக்கு நல்லது தான்" என்ருள்.

'பெரிய வில்லன்கூடத்தான்' என்று கம்மிய குரலில் பேசினுன் சாடாக்.



"தேவதை என்று எல்லாரும் கூறிய பெண் இவள்தானே!" என்று கேட்டாள் அவள்.

"ஆம். இந்தியாவில் சிலரைப் பார்த்திருக்கிறேன்; அவர்களைப் பேய் என்றுதான் அழைக்கலாம்" என்ருன் சாடாக்.

"இந்த ஆடமும் ஒரு பேய்தான். அவனுக் கென்ன அக்கறை? அவளே அவனை விரும்பவில்லை. யார் அவளை அடையப் போகிருர் என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? மீண்டும் கணவாய்க்கே சென்றிருப்பின் நன்ரு யிருந் திருக்கும், சாடாக்" என்ருள்.

அப்போது வேலைக்காரன் கூறினுன்: "என்னுல் இனிமேல் கணவாய்களின் மேல் ஏறிப்போதல் முடி யாது, அம்மா. நாம் செய்ய நினைத்த திட்டம் எனக்கு வெறுப்பையே தருகிறது. அந்தப் பெண்ணைக் கொடுமைப்படுத்துவது என் மனதுக்கே பிடிக்க வில்லை. இந்தத் தகாத வழியில் உங்களுடன் செல்வ தற்கு எனக்குத் தகுதியில்லை என்று நினைக்கிறேன். அதனுல் உங்களிடம் நண்பனுகவே விடைபெற்றுச் செல்கிறேன்."

"சரி, கோழை. ஆனுல் அந்தப்பெண் என்னிட மேதான் இருக்கவேண்டும்" என்ருள் ஷீபா ராணி.

"உன்னிடமா! முடியாது. அவள் பிரிட்டிசுக் கொடியின் நிழலில்தான் இருக்கிருள். அதனுல் அதன் பாதுகாப்பைப் பெறுவாள்" என்ருன் வேலை யாள்.

"அஃதிருக்கட்டும். உனக்கு என்ன பாதுகாப்பை அது தந்துவிட்டது?" என்று கேட்டாள்; "கைகளைத் தட்டி என் கறுப்பு வேலையாட்கள் இருபது பேரை அழைத்து உன்னை ஆடுமாடுகளைக் கட்டுவதுபோலக் கட்டிவைத்துவிட்டுப் பிறகு கவர்னருக்கு, ரிச்சர்டு மிடில்மசு என்பவன் கலகம், கொலை முதலியவைகளைச் செய்துவிட்டுத் தன்னுட்டுப் பகைவர் பக்கம் சேர்ந்திருப்பவன்-இப்போது ராம்சிங் கோட்டாவின் வீட்டில் கறுப்பு வேலைக்காரனைப் போல மறைந்திருக்கிறான் என்று சொல்லி ஆளனுப்பினால் என்ன நேரும் தெரியுமா?" என்று கேட்டாள்.

உடனே மிடில்மசு தன் கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டான். மாந்தர்வில்லி அவன்மேல் வசைமாரி பொழிய ஆரம்பித்துவிட்டாள்.

"ஆமாம். நீ ஓர் அடிமை. அடிமையின் மகன். என்வீட்டு ஆடையை உடுத்திருப்பதால், மற்றவர்களைப்போலவே நீயும் என் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லாவிடில் சவுக்கடி - விலங்கு - தூக்கு மேடை இவைதான் உனக்குப் பரிசாகக் கிடைக்கும்! துரோகி! கொலைகாரனே! உனக்குக் கழுவே உரிய இடம்! துன்பக் குழியினின்று உன்னைக் கரையேற்றி என் செல்வத்தையும் அன்பையும் பங்கிட்டுக் கொள்ளும்படி செய்த நன்றியை நினைத்துப் பார்த்தாயா? இந்த எளிய–உணர்ச்சியில்லாத இளம் பெண் உன்னை அலட்சியப்படுத்திக் கொண்டே யிருக்கிறாள். அவளை உனக்கு விடுதலையளித்தவளிடம், உன்னிடம் அன்பு பாராட்டி வந்தவளிடம் கப்பமாகத் தந்துவிட்டதையும் மறந்துவிட்டாயா?" என்றாள்.



"ஆமாம், துரோகிப் பெண்ணே! நானா அந்தப் பெண்ணின்மேல் அடங்கா வெறி கொள்ளுமாறு அந்த அரக்கனைத் தூண்டினேன்? நானா அவனுடைய கைப்பிடியில் அவள் அகப்படுமாறு வெறுக்கத்தக்க சூழ்ச்சிகளைச் செய்தேன்?" என்று அலறினான் மிடில்மசு.

"இல்லை. அப்படிச் செய்வதற்கு மூளையும் சமயோசித அறிவும் வேண்டும். ஆனால் துணிவான மேதை கருதியதை நிறைவேற்றியது வில்லனான உன் வேலைதான். காதல் என்ற பெயரால் அவளை இவ்வளவு தூரம் வெளிநாட்டிற்கு வரத் தூண்டியதும் நீதான். உன்னிடமோ காதல் என்பது கடுகளவும் இருந்ததில்லை, பாவி" என்றாள்.

"கோட்டானே, பேசாதிரு. நீ ஒரு பெண்பிள்ளை என்பதை மறந்துவிட்டு நான் பைத்தியமாக நடக்கும்படி செய்துவிடாதே!" என்று பதிலளித்தான் ரிச்சர்டு.

"பெண்ணா, பரத்தை மகனே! என்னைத் துன்புறுத்தாது விட்டுவிடுவதற்கு நீ கூறும் பொய்க் காரணம் இதுதானா? என்ன, அப்படியானால், ஒரு பெண்ணின் பார்வையில், ஒரு பெண்ணின் வார்த்தையில் நடுங்குவதுதான் உன்னியல்பா? ஏமாற்றுக்காரனே, நான் ஒரு பெண்தான். ஆனால் கட்டாரி தாங்கிய பெண். உன் பலத்தையும் துணிவையும் இகழ்ந்து கூறுபவள் நான். நீ கொன்ற மான்களைக் காட்டிலும் அதிகமான மனிதர்களைச் சாகடித்தவள் நான். உன் பெருமைக்கா நீ வழி தேடுகிறாய்? ஐந்து வயதுக் குழந்தைபோல வீரர்களின் விளையாட்டுப் பிடியில் சிக்கியிருக்கிறாய். உன்னைத் தூக்கிக்கொண்டுபோய் அப்படியே நசுக்கி

விடமுடியும். நீ ஓர் இரட்டைத் துரோகி. உன்னுட்டவரின் மன்னிப்பைப் பெறுவதற்காக முனைந்து இந்நாட்டு அரசனை ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுப்பதற்காக உன் காதலியைக் காட்டிக் கொடுத்திருக்கிறாய். ஆனால் என்னை உன்னால் காட்டிக்கொடுக்க முடியாது. உன் பேராசைக்கு என்னை இலக்காகச் செய்யமுடியாது. என் வீரர்களையும் பணத்தையும் கொடுத்து உன்னால் பலியிடப்படுவதற்கு நான் என்ன முட்டாளா? சூனியக்காரியைப் பேய் சுற்றிக்கொண்டிருப்பதுபோல உன்னை எப்போதும் கண்காணித்து வருவேன். நாங்கள் இங்கே இருக்கும்போது காட்டிக் கொடுக்கும் அறிகுறி உன்னிடம் தென்பட்டால் உன்னை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிடுவேன். அவர்கள் வெற்றியுள்ள வில்லனையேனும் மன்னித்து விடுவர். ஆனால் பயனுள்ள காரியம் செய்வேன் என்று கூறி உயிருக்குப் பயந்து மன்றாடும் கோழையின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நாங்கள் கணவாய்களைத் தாண்டிச் செல்லும்போது நீ ஓடிவிடு. நீ நைசாமிடமும் மகாராட்டிரர்களுடனும் சேர்ந்துகொண்டு செய்யும் சூழ்ச்சியை நவாபு அறிந்துகொள்ளுவார். பெங்களூரை ஆங்கிலேயருக்குச் சேரும்படி செய்யும் உன் சூழ்ச்சியும் அம்பலமாகும். நீ அங்கே போனாலும் உன் தலைவியாக நானே இருப்பேன் என்பதை மறவாதே'' என்றாள்.

மறைவேடந் தாங்கிய சாடாக் உடனே விரைவில் தன் குரலை மாற்றிக்கொண்டு அன்பு கனியுமாறு பேசுவது போல, "அழகாய் ஆனால் அன்புக் குறைவாய் இருக்கிறீர்கள். இந்தத் துயரமிக்க பெண்ணுக்காக நான் இரக்கப்படுவது உண்மை. என்னால் முடிந்தால் அவளைக் காப்பாற்றுவேன். ஆனால் நான் என் உலகத்தொளியை—நூர்ஜஹானை—அரண்மனை மாணிக்கத்தை-மோதி மகலைவிட எந்தச் சூழ்நிலையிலும் அவளை மேலாக மதிக்கமாட்டேன்'' என்றான்.



"எல்லாம் செல்லாக்காசும் வெற்றுப் பேச்சும் தான். சரி. இந்தப் பெண்ணை என்னிடமே விட்டுவிடுவதாக எங்கே இரண்டே வார்த்தையில் உறுதிகொடு பார்க்கலாம்'' என்று கேட்டாள்.

நடுங்கிக்கொண்டே சாடாக், "ஆனால் உயிரோடு உன் இருக்கையின் கீழ்ப் புதைக்கப்படச் சம்மதியேன்'' என்றான்.

"இல்லை, முட்டாள்! ஓர் இளவரசனின் அன்பிற்குரியவளாவதைத் தவிர வேறு குறைந்த மதிப்பை அவள் பெறப்போவதில்லை. தப்பியோடப் பார்க்கும் குற்றவாளியே, இதைவிட அவளுக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும்படி உன்னால் என்ன செய்ய முடியும்?'' என்றாள்.

தன் இழிந்த நடக்கை பற்றி உணர்ந்தவனாய் உடல் முழுதும் சிலிர்ப்பையடைந்த மிடில்மசு, "ஆனால் அவள் விருப்பத்திற்கெதிராக நான் வற்புறுத்தமாட்டேன்'' என்றான்.

"அதையெல்லாம் நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்றாள் அந்தப் பெண்ணரக்கி; "அரசனாயும், தாராள மனப்பான்மையுடையவனாயுமுள்ள காதலனை அடைவதற்கு விரும்புகிறாளா என்று தீர்மானித்துக் கூறுவதற்கு அவளுக்கு ஒரு வாரம் போதும்.''

"ஆம். அந்த வாரம் முடிவதற்குள்..." —திடீரென நிறுத்தினான் சாடாக்.

"அந்தவாரம் முடிவதற்குள் என்ன நேர்ந்துவிடுமாம்?" என்று கேட்டாள் பேகம் மாந்தர்வில்லி.

"ஒன்றுமில்லை. ஒன்றும் நடக்காது. இந்தப் பெண்ணின் தலைவிதியை உன்னிடமே ஒப்படைத்துவிடுகிறேன்."

"நல்லது. இன்றிரவு திங்கள் தோன்றியதும் படையுடன் திரும்பிச் செல்வோம். நம் படைக்கும் இதைத் தெரிவித்துவிடு" என்றாள்.

பேகம் அவன் சென்ற கதவுப் பக்கமாகவே தன் கண்பார்வையைச் செலுத்தினாள். "வில்லன் இரட்டை வில்லன்! உன் சூழ்ச்சி எனக்குப் புரிகிறது. திப்புவின் காதலையும், அரசையும் காட்டிக்கொடுக்க நினைக்கிறாய். ஆனால் என்னைக் காட்டிக்கொடுக்க முடியாது. ஓய், யாரது அங்கே? நான் எழுதிக்கொடுக்கும் கடிதங்களை எடுத்துப்போவதற்குத் தயாராய் ஒரு தூதன் இருக்கட்டும். அவன் புறப்பட்டுப்போவது எவருக்கும் தெரியாத இரகசியமாய் இருக்கட்டும். விரைவில் இந்த வெள்ளைக்காரப் பேய் தன் தலைவிதியை அறிந்து கொள்வான். மாந்தர்வில்லிக்குப் போட்டியாக வருவதால் என்ன நடக்கும் என்பதை அவளும் அறிந்து கொள்வாள்" என்றாள்.

இவ்வாறு இவள் குற்றமற்ற மெனரியைத் தன் போட்டிக்காரியாக எண்ணிப் பழிவாங்கத் தீர்மானித்ததுடன் அவள் காதலனையும் பழிவாங்கத் திட்டமிட்டாள். அவள் காதலனோ தன்னுடைய திட்டங்களைத் தீவிரமாகத் தீட்டிக் கொண்டிருந்தான். தன் புறவேடத்திற்கு உதவும் அந்திமாலை வரும் வரை அவன் காத்திருந்தான். பிறகு ஐரோப்பியர்கள் மிகுதியாகக் குடியேறியிருக்கும் பகுதிக்கு—செண்ட் ஜியார்ஜ் கோட்டைக்கு விரைவாகப் புறப்பட்டான்.



"அவளைத் திப்பு கைதொடு முன்பு எப்படியும் காப்பாற்றுவேன்" என்று உறுதிகொண்டான். "அழகுத் தேவதையின் பிடியிலிருந்து அவனை விலக்கி அவனிடமிருந்து போர்க் கடவுளைப் புறப்படச் செய்யலாம். அவன் காதுகளில் ஓதி ஒரு போர்ப் புயலை எழுப்பலாம். அவனுக்கு விரிக்கப்பட்ட வலையில் சிக்கிய இரையை அவன் விழுங்குமுன்பு அந்த இந்தியப் புலியின் நகங்களை யழித்துவிட முனையலாம்" என்று தனக்குள் எண்ணினான்.

இப்படி நம்பிக்கைகளை வளர்த்துக்கொண்டே அவன் சென்னையை நெருங்கிவிட்டான். காவல் பாராக்காரன் அவனைத் தடுத்து நிறுத்தினான். ஆனால் அடையாளச் சீட்டைக் காட்டிவிட்டு உள்ளே தடையின்றி நுழைந்தான். அரசுக்குழுத் தலைவன் இருக்குமிடத்தை அடைந்தான். திறமையும் சுறுசுறுப்புமுடைய அத்தலைவன் தன் சொந்தக் காரியங்களிலோ, கம்பெனியின் காரியங்களிலோ தம் நோக்கத்தை நிறைவேற்றுவதில் கைக் கொள்ளும் முறைகளைப் பற்றி கவலைப்படாதவனா யிருந்தான். வெளிக் கதவைத் தட்டியதும் ஒரு கறுப்பு வேலையாள் வந்து கதவைத் திறந்துவிட்டான். பேட்டிகாண வருவார்க்குரிய தனியறையில் மிடில்மசு அனுமதிக்கப்பட்டான். அங்கிருந்து மாடிப்படி வழியாகத் துபாஷி பாப்பையா இருக்கும்

அறைக்குச்சென்ருன். பாப்பையாவிடமே தன் சூழ்ச்சி களை எல்லாம் சொல்லி இரகசியமாக ஏற்பாடுகளைச் செய்துவந்தான்.

பிரிட்டிசு அதிகாரியின் துணையை மேற்கொண்டால் அவ்வதிகாரியின் கருணையைப் பெறலாம் என்றும், திப்புவிடம் தான் கொண்டிருக்கும் தீய ஒப்பந்தத்தைப் பற்றி விளக்கலாம் என்றும், பேராசைகளை எல்லாம் விடுத்து மெனி கிரேயைக் காப்பாற்றுவதிலேயே முழுக் கருத்தையும் செலுத்தலா மென்றும், அவள் பிரிட்டிசுப் பாதுகாப்புக்கு அகப்படாமல் போய்விடு முன்பு அவளைக் கடத்திவிட வேண்டு மென்றும், குற்றமுள்ளவனும் துயரமுடையவனுமான ரிச்சர்டு எண்ணியது இயல்பே. ஆனல் அவனுக்கு முன்னல் பொன்னல் பூவேலைப்பாடுகள் செய்த மென்பட்டுத் துணிகளை அணிந்துகொண்டு அந்தியிருட்டைப் போல் அருகில் வந்து நின்றவன்தான் பாப்பையா—வஞ்சச் செயல்களுக்கு வழிவகுத்துத் தரும் சூழ்ச்சி வல்லான்-கீழ்நாட்டு மாக்கியவெல்லி-வஞ்சச் சூழ்ச்சிகள் செய்து கொண்டிருந்ததால்தான் அவன் முகத்தில் முதுமைக்கு முன்பே திரைகள் தோன்றிவிட்டன. சில சொந்த அல்லது அரசியல் நன்மைகளைப் பெறுவதற்காக அவன் செய்த சூழ்ச்சிகளால் ஏழைகளின் வாழ்வும், செல்வர்களின் மகிழ்ச்சியும், ஆண்களின் மதிப்பும், பெண்களின் கற்பும் கருணையின்றி அழிக்கப்பட்டன. ஏமாற்றுக்காரனுகிய மிடில்மசு எந்த வகையில் திப்புவின் செல்வத்தைப் பெறப் போகிருன் என்பதையும், எப்படித் திப்புவைக் காட்டிக் கொடுக்கப் போகிருன் என்பதையும் கூட அறிந்து கொள்ளாமல்,



அப்படிச் செய்யப் போவது உண்மையா என்பதை மட்டும் உறுதியாக அறிந்துகொள்ள விரும்பினன்.

“பாப்பையாவை ஏமாற்றினல் அல்லது பாப்பையா மூலம் அவனது தலைவரை ஏமாற்றினல் உன் தலை போய்விடும். ஹைதர் புதிதாகப் படையெடுத்து வென்று தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்ட பெங்களூர்க்குத் தன் இளமை மகனை திப்புவைப் பிரதிநிதியாக்கியிருக்கிருன் என்று நானறிவேன்; சென்னையில் உள்ள எல்லாருமறிவர். ஆனல் அவ்வளவு சிறந்த நகரத்தின் அரசாங்கப் பொறுப்பை மதம் மாறி வந்த ஒரு பறங்கிக்குக் கொடுப்பான் என்பது மிகவும் ஐயப்பாட்டிற்குரியதே” என்ருன் பாப்பையா.

“அதைப் பற்றிய ஐயம் வேண்டாம். மாந்தர் வில்லி என்று ஐரோப்பியர்கள் அழைக்கும் பேகம் மோதிமகலின் படை என்படையைக் காட்டிலும் சிறியதுதான். நானே அவளுக்குப் படைத்தலைவனுயிருக்கிறேன். அவளுடைய சர்தார்கள் எல்லாம் எனக்குத் தலைவணங்குபவர்களே. இவர்களைக்கொண்டு நான் பெங்களூரை இரண்டு மாதங்கள் வரை வைத்திருக்க முடியும். பிரிட்டிசுப் படைகள் அதற்குள் அங்கு வந்துவிடும். தளபதி சுமித்தின் படையை அதன் எல்லைவரை அனுப்பி வைத்திருப்பதால் உங்களுக்கு என்ன கவலை?” என்ருன் ரிச்சர்டு.

“ஹைதரிடம் கொண்டிருக்கும் அமைதி ஒப்பந்தம் சிறிது சீர்குலையும். அந்த அமைதி ஒப்பந்தத்திற்காகப் பெரும் பொருள் அளித்திருக்கிருன் ஹைதர். எனினும், உன் திட்டம் மிகச் சிறந்த பயனளிக்கக்கூடியதே என்பதை ஒப்புக்கொள்கிறேன். திப்புவின் செல்வ

மெல்லாம் கோட்டைக் குள்ளேயே இருக்கின்றன என்று சொல்கிருயா?''

"அவனுடைய கருவூலத்தையும்-வேண்டுமாஞல் அவனையும் கூட என்ஞல் பிடித்துத்தர முடியும்'' என்ருன் ரிச்சர்டு.

"இது நல்ல சபதம்தான்'' என்ருன் இந்திய மந்திரி. ''ஒப்பந்தப்படி கடைசி ரூபாவரை அந்தச் செல்வம் பிரிக்கப்பட வேண்டுமென்பது உங்களுக்குச் சம்மதம்தானே?'' என்று கேட்டான் ரிச்சர்டு.

"என் தலைவருக்குக் கிடைக்கும் பங்கு மிகச் சிறிதே; என் பேரே அதில் காணப்படவில்லை'' என்ருன் அந்தப் பிராமணன் பாப்பையா. மேலும், "ஆனுல் பேகம் தன் பங்கை எதிர்பார்ப்பாள்" என்ருன்.

"அதையெல்லாம் நான் கவனித்துக் கொள் கிறேன். நம் காரியம் முடியும்வரை அவளுக்கு நம் முடைய தனி ஒப்பந்தத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது; பிறகு அவள் ஏமாற்றமுற்ருல் அதஞல் நமக்கு ஒன்றும் பயமில்லை. இப்போது என் கோரிக்கைகள் இவைதாம்: என் வேலை திரும்பக் கொடுக்கப்பெற வேண்டும்; எனக்கு முழு மன்னிப்பும் கொடுக்கப்பெற வேண்டும்'' என்ருன் ரிச்சர்டு.

"நீ வெற்றி பெறமுடியும். ஆஞல் இங்கு நடந் துள்ளதை நீ காட்டிக் கொடுப்பதாயிருந்தால்—நவாப் பின் உடையில் ஒளிந்துகொண்டிருப்பதாக அறிந்தால்-உன்னை இவ்வாளுக்கு இரையாக்கிவிடுவேன். இதற் குள் இந்தக்கடிதத்தை வைத்துக்கொள். நீ பெங்களூரை நன்கு கைப்பற்றியபின் இதைத் தளபதி சுமித்துக்கு



அனுப்புக. அவனுடைய படையும் பிறர்க்குச் சிறிதும் ஐயமெழாத வகையில் மைசூரின் எல்லையை எவ்வளவு தூரம் அணுகிச் செல்ல முடியுமோ, அவ்வளவு தூரம் செல்லட்டும்'' என்று எச்சரிக்கையுடன் கூறினுன் பாப்பையா.

இதற்குப்பின் இருவரும் பிரிந்தனர். பாப்பையா இந்தக் கருப்புத் திட்டங்களைத் தன் மேலாளர்க்கு அறிவிக்கச் சென்ருன்; மிடில்மசு மைசூருக்குத் திரும்பி வரும் பேகத்தைப் பார்க்கச் சென்ருன். திப்புவின் தங்கமும் வைரங்களும்-தானடையப் போகும் உயர்வு-வெறுக்கத்தக்க திப்புவின் வன்மையான அதிகாரத்தி லிருந்து அதே சமயத்தில் பெறும் விடுதலை-பேகத்தின் தொந்தரவு மிக்க உரிமைகள்-இவைகளைப் பற்றிய எண்ணங்களே ரிச்சர்டின் உள்ளத்தில் நடமாடிக் கொண்டிருந்தன. அதஞல் தனது காதலியின் விதி யைப் பற்றி நினைக்கக்கூட அவனுக்கு நேரமில்லை. அவள் அடையப் போகும் தீங்கெல்லாம் கொஞ்ச நாள் பயம்கொண்டிருக்க வேண்டியதுதான் என்றும் அச்சில நாட்களுக்குள், அவளை விடுவிக்கும் வழிகளைக் கண்டறிந்துவிடலாமென்றும் அவன் தன் மனச்சாட் சிக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தான். அதே சமயத்தில், பேகத்தின் பொருமை மீண்டும் எழுப்பு வதால் தன் திட்டங்களுக்கு எல்லாம் ஏதேனும் ஆபத்து நேரக்கூடுமா என்பதைக் கருதிப் பார்த்துக்கொண்டு, மெனி கிரேவுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நிலையை அடையும் வரை அவளைப் பார்க்கக் கூடாதெனத் தீர்மானித்தான். பேகமின் பொருமை இப்போது உறங்கிக்கொண்டிருப்பதாக நம்பினுன். பெங்களூருக்

கருகில் திப்புவின் கூடாரத்தில் தான் பெற்ற வெற்றியினால், பேராசையும் தந்திரமும் மிக்க பேகத்திடம், செல்வமும் அதிகாரமும் இருவர்க்கும் நிறையக் கிடைக்கப் போவதாக ஆசையுரை கூறி அவளைச் சமாதானப் படுத்தினான்.

---

## 13. மெனியைத் தப்புவிக்க ஆடமின் முயற்சிகள்

பொறாமையும் கொடுமையும் மிக்க பேகம் தன் புகழுக் கெதிராகத் தோன்றியவளைத் துன்புறுத்திக் கெடுக்கவேண்டி மனத்துட் கொண்டிருந்த சூழ்ச்சிகளைக் கைவிடுவதாகத் தோன்றவில்லை. இரந்து வேண்டியோ அல்லது பணம் கொடுத்தோ மெனி கிரே கீழ்க்கண்ட குறைக் கடிதமொன்றை ரீம்சிங் கோட்டாவின் வேலைக்காரன் ஒருவனிடம் கொடுத்து அதை ஆடமிடம் கொடுத்துவிடும்படி சொன்னாள்.

"நீங்கள் எதிர்பார்த்துக் கூறியன எல்லாம் உண்மையே. அவர் என்னை ஒரு கொடிய அரக்கியிடம் சேர்த்துவிட்டார். அவளோ கொடுங்கோலன் திப்புவுக்கு என்னை விற்றுவிடப் போவதாகப் பயமுறுத்துகிறாள். உங்களால் முடியுமானால் என்னைக் காப்பாற்றுங்கள். நீங்கள் இரக்கப்பட்டு உதவிபுரியாவிடில் இவ்வுலகில் எனக்கு வேறு கதி யாருமில்லை-மெனிகிரே."

இதுவே அக்கடிதம்.

பாப்பையா வந்ததனால் ஏற்பட்ட தாமதத்தால், கவர்னரிடம் பேட்டியை வற்புறுத்திக் கூறுவதற்காகக் கோட்டைக்கு விரைந்து சென்ற ஆடமின் அவசரம் பயனின்றிப் போயிற்று.

பேகமும் அவள் விருப்பிற்கு உரியவனும் புறப்பட்டுப் போவதற்கு எந்தத் தடையும் குறுக்கே நிற்கக் கூடாது என்பதுதான் இந்தத் தந்திரமிக்க இந்தியனின் திட்டமாகும். பேகத்தின் திட்டத்தோடு தன் திட்டம்

ஒத்துவர வேண்டுமெனக் கவனமாயிருந்தான். ஓர் ஆங்கிலமாதை அவளுடைய விருப்பத்திற்கு மாருகத் தன் இரயிலில் நிறுத்தி வைத்துக் கொண்டதாக ஆடம் செய்த புகாரில் உண்மையில்லை என்று அவன் கூறினுன். மெனி கிரேவின் புகாரைக்கூட அது பெண்கள் சண்டையாதலின் கவனத்திற் குரியதன்று என்று கூறித் தள்ளிவிட்டான். கடைசியில் மேலும் இதைப்பற்றி அவன் ஆராயத் தொடங்கியபோது, எக்காரணத்திற்காகவும் பேகமும் அவள் படையும் இடையீட்டுக்கு இலக்காகக் கூடாதென விரும்பினுன்.

ஆடமின் சினம் பொங்கிவழிந்து பாப்பையாவின் மேல் குற்றச் சொல்மாரியைப் பொழியத் தொடங்கி விட்டது. அப்போது பாப்பையாவின் கொள்கையும் இகழப்பட்டது. ஆனுல் இது அந்தச் சூடுசுரணை யில்லாத பிராமணனுக்கு, இம்மாநிலத்திலிருந்து ஆடமை வெளியேற்றுவதற்கான காரணமொன்றை அளித்துவிட்டது. ஆடமின் பேச்சு இன்னும் காரசார மாகவே இருந்தால், சென்னையைவிட்டு மலைப்பாங்கான கிராமத்திலோ, மலைக்கோட்டை ஒன்றிலோ சேர்க்கப் படுவான் என்றும், அங்கே வெப்ப தட்பத்தின் கொடு மையிலிருந்து தன்னையும் பிறரையும் காப்பாற்றிக் கொள்ள அவன் கற்ற மருத்துவத்தின் முழு அறிவையும் பயன்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்றும் குறிப்பித்தான்.

பயனில்லாத எரிச்சலைக் கொட்டிவிட்டுச் சென்ற ஆடம் திரும்பிச் சென்றபோது முதன் முதலில் எஸ்டேல் என்பவரைச் சந்தித்தான். அவரிடம் கவர் னரின் துபாஷியின் தகாத நடத்தையைப் பற்றிப்



பொறுமையின்றித் துடிப்புடன் அறிவித்தான். அவன் இப்படிச் செய்வதற்குக் கவர்னரின் உதவியையும் பெற்றிருக்கலாம் என்று கூடத் தோன்றுகிறது என்றும் கூறினுன். கொள்கை இல்லாதவரிடத்தில் ஒரு கொடுங்கோலனின் கொடுமைக்கு ஒரு பிரிட்டிசுப் பெண்மகள் ஆட்படுத்தப்பட்டதை அவர்களின் மரியாதையற்ற செயல் காட்டிக்கொடுக்கிறது என்றும் புகன்ருன்.

முன்னறிவில்லாத அந்நண்பன் மூலம் தமக்கும் கெடுதி வரும் என்று உணர்ந்துகொண்டவரைப் போலவே கவனமாக எஸ்டேல் ஆடம் கூறியவற்றைச் செவிமடுத்தார். கடைசியில் எஸ்டேல், "இந்தக் காரியத்தில் நல்லது விளைய வேண்டுமென விரும் பினுல் நீ லெடன்ஹால் தெருவிலுள்ள அலுவலகத் திற்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். அங்கே தான் (இது நமக்குள் இருக்கட்டும்) பாப்பையாவுக்கும் அவன் மேலதிகாரிக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகள் பற்றிய செய்திகள் குவிந்து கொண்டிருக்கின்றன" என்ருர்.

அதற்கு ஆடம், "அவர்கள் இருவரையும் பற்றி எனக்குக் கவலையில்லை. என் சொந்தத் துன்பத்தைக் குறைத்துக் கொள்ளும் விருப்பம் எனக்கில்லை. நான் எப்படியாவது மெனிகிரேவுக்கு உதவி செய்யவே விரும்புகிறேன்" என்ருன்.

"அப்படியானுல் அதற்கு ஒரே வழிதான் உண்டு. நீ ஹைதரிடமே விண்ணப்பம் செய்யவேண்டும்" என்ருர் எஸ்டேல்.

"ஹைதரிடமா? அக் கொடுங்கோலரக்கனிடமா?"

"ஆம், அக் கொடுங்கோலரக்கனிடம்தான். அவனிடம் விண்ணப்பிப்பதில் நீ மன நிறைவு கொள்ள வேண்டும். நீதி வழங்குவதில் நெறி தவருதவன் என்றே தன்னைப்பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்ருன். அதனுல், மற்றச் சமயங்களில் போலவே, இச்சமயத்திலும் அவன் நடுவுநிலைத் தீர்ப்பாளனுக நடந்துகொள்ளலாம்" என்ருர் எஸ்டேல்.

"அப்படியானுல் நான் அவன் காலடியில் அமர்ந்தாவது நீதியை வற்புறுத்திக் கேட்கப் போகிறேன்" என்ருன் ஆடம்.

"அவசரம் வேண்டாம், ஆடம். முதலில் அதில் வரும் ஆபத்தை எண்ணிப்பார். அரசியல் செய்திகளைச் சிந்தித்துப் பார்ப்பதில் ஹைதர் நேர்மையானவன் தான். ஆனுல் இயல்பு உணர்ச்சியில் கறுப்பர்கள் எல்லாரினும் கொடுமையான குருதியுடையவன். அவன் நீதி வழங்கும் நிலையில் இருப்பான், அல்லது கொல்லும் நிலையில்தான் பெரும்பாலும் இருப்பான். கொடுந்தடியும், வளைவில்லுமே நீதி வழங்குவதற்கு அவனுக்குப் பயன்படும் கருவிகளாய் இருக்கின்றன."

"அதைப் பற்றிக் கவலையில்லை. நான் உடனே அவன் தர்பாருக்குச் செல்வேன். மானமுள்ள கவர்னர் எனக்கு நற்சான்றுக் கடிதம் தர மறுக்கமாட்டார்."

"கவர்னரிடம் கடிதம் பெறுவதைப் பற்றிக் கனவிலும் கருதாதே. மனத்திலுள்ளதை அப்படியே பேசிவிடும் உன்னை உடனே காரணங் காட்டி நீக்கிவிடுவதற்குரிய முறையில், ஹைதரைத் தூண்டிப் பலம் நிறைந்த பாப்பையா அக்கடிதத்தை எழுதிவிடவும் கூடும். ஒரு வக்கீல்—அரசாங்கத் தூதுவர்—ஒருவர் நாளைச் சீரங்கப்பட்டணத்துக்குப் புறப்படுகிருர். அவருடன் சேர்ந்துபோக முயற்சி செய். அவருடைய பயணச்சீட்டே இருவருக்கும் போதும். ஹைதரின் ஆட்களில் முக்கியமானவருள் யாரையேனும் உனக்குத் தெரியுமா?" என்று அனுபவமிக்க அவன் நண்பர் கேட்டார்.

"யாரையும் தெரியாது; பராக் எல் அட்கி என்ற தூதுவரைத் தவிர வேறு யாரையும் எனக்குத் தெரியாது" என்ருன்.

"ஒரு பக்கிரியாயிருப்பினும் அவருடைய உதவி மிகவும் முக்கியமான ஆட்களின் உதவியைப்போலவே நன்மை பயப்பதாயிருக்கும். உண்மையாகக் கூறினுல், அக்கொடுங்கோலனின் வஞ்சனை என்ன வடிவை எடுக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது. என் அறிவுரையைக் கேள். இந்த எளிய பெண்ணை அவளுடைய தலைவிதிக்கே விட்டுவிடு. ஏனெனில் அவளைக் காப்பாற்றும் முயற்சியில் உன்னை ஈடுபடுத்திக் கொள்வது உன்னையே அழித்துக்கொள்வதற்கு உறுதி செய்துகொள்வது போலாகும்" என்ருர் எஸ்டேல்.

ஆடம் தலையை அசைத்தான். எஸ்டேலிடமிருந்து விரைவில் விடைபெற்ருன். ஒரு நண்பனுக்குக் கொடுக்கக்கூடிய மிகச் சிறந்த அறிவுரையைக் கூறிவிட்டு அதனுல் ஏற்படப்போகும் பலன்களைப் பற்றிக் கவலைப்படாது கைகழுவி விடுவதைப் போன்ற இன்ப மனநிலையில்—தன்னைத் தானே புகழ்ந்து கூறும் மன நிலையில்—எஸ்டேல் நிற்குமாறு செய்துவிட்டுப் புறப்பட்டான் ஆடம்.

போதிய பணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு நம்பிக்கையுள்ள இந்திய நாட்டு வேலைக்காரர் மூவரைப் பிடித்து, அரபுக் குதிரைகளின்மேல் தன்னைப் போலவே அவர்களையும் ஏறச்செய்து கூட்டிச் சென்றான். கூடாரத் துணிகளோ மூட்டை முடிச்சுக்களோ அவன் எடுத்துப்போகவில்லை. மைசூருக்குச் செல்லும் வழியை அடைவதில் உள்ள ஆர்வத் துடிப்பில் ஆடம் ஒரு கணத்தையேனும் வீணாக்கவில்லை. இதற்கிடையே தான் ஆடம் ஹைதரின் நீதியையும் பொறுமையையும் பற்றித் தான் கேட்ட எல்லாக் கதைகளையும் நினைவு படுத்திக்கொண்டான். அந்த நவாபு தன் வாரிசுக்கு எதிராக ஓர் ஆதரவில்லாப் பெண்ணைக் காப்பாற்றவும் செய்வான் என்று தனக்குள் நம்பிக்கையை எழுப்பிக் கொள்ளவே அவற்றை நினைவு படுத்தி எண்ணிப் பார்த்தான்.

சென்னையின் எல்லையைத் தாண்டுவதற்குள் எஸ்டேல் கூறிய வக்கீலை—பிரிட்டிசு அரசாங்கத் தூதுவரை—அடைந்துவிட்டான் ஆடம். துணிவுச் செயல் புரியும் ஐரோப்பிய வணிகர்களையும், ஹைதர் அலியின் தலைநகரைப் பார்க்க விரும்புவோரையும் பணத்திற்காகத் தம்முடன் அழைத்துக்கொண்டு தம் பாதுகாவலையும், பயணச்சீட்டு, உடன்துணை இவற்றையும் அளிக்கும் பழக்கமுடைய அவர், சென்னையில் புகழ் பெற்ற நம் ஆடமுக்குத் தம் உதவியைச் செய்வதில் தயக்கங் கொள்ளவில்லை. ஆடம் வழக்கத்திற்கும் மிகுதியாகவே பணம் கொடுத்ததால் எவ்வளவு விரைவாகச் செல்லமுடியுமோ அவ்வளவு விரைவாகச் செல்ல முற்பட்டனர். மிக்க சோர்வினையும், ஆபத்துக்களையும் கொடுக்கத் தக்க வழியே அவர்கள் செல்லவேண்டிய



வழி. அடிக்கடி நேர்ந்துவந்த போர்களின் கொடுமைக்கு இலக்கான நாட்டுப்பகுதியைக் கடக்கும்போது—குறிப்பாக மலைக்கணவாய்களைக் கடக்கும்போது அவர்கள் பல இடர்ப்பாடுகளை உற்றனர். மைசூர்ப் பீடபூமியை விட்டுக்கீழிறங்கும் கணவாய்களின் வழியே ஓடிக் கடலில் கலக்கும் காட்டாறுகளை அவர்கள் கடக்கவும் நேரிட்டது.

சீரங்கப்பட்டணம் செல்லும் வழியைக் கொண்டுள்ள ஒரு மலையின் அடிவாரத்தில் உள்ள ஆபத்தான கணவாயை அடைவதற்குள் இருட்டிவிட்டது. கோடையில் ஓடிய ஒரு சிறு கால்வாய்வழி போல் இருந்த குறுவழி ஒன்றில் நடந்தனர். பெரிய மலைப் பாறைகளினூடேயும் அவ் வழி சென்றுகொண்டு இருந்தது. ஓரிடத்தில் தேக்கு மரங்களின் செறிந்த சோலையின் நிழலால் வழி இருட்டாயிருந்தது. மற்றோரிடத்தில் நரிகளும், புலிகளும் வாழும் கடத்தற்கரிய காடு இருந்தது.

ஆள் வழங்காத அத்தத்திடை இப் பயணத்தை மேற்கொண்ட அவர்கள் அமைதியாகச் சென்று கொண்டு இருந்தனர். ஆனால் ஆடமால் வக்கீலைப் போலப் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. சூரியன் மறைந்த பிறகு அவர்களைக் கவ்விக்கொண்ட இருட்குலத்தை நீக்குவதற்கு எப்போது திங்கள் உதயமாகிச் செல்வழிக்கு ஒளிகாட்டும் என்று ஆர்வத்துடன் கேட்டான் ஆடம்.

உடன் வந்த இந்தியர் வழக்கம்போலத் தங்கள் மொழியில் விடைகூறினர். இருட்டுக்காலப் பருவ மாதலின் மேகம் வழியே திங்கள் தோன்றிச் செறிந்த

புதர்களையும், கரிய மலைக்குன்றுகளையும், அவற்றி னூடே செல்லும் வழியையும் வெளிச்சமாக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது என்றனர். எனவே முன்னே செல்லும் குதிரையாளின் தீப்பந்தத்திலேயே தன் பார்வையை வைத்திருப்பதைத் தவிர வேறு வழி ஆடமுக்குத் தோன்றவில்லை. வழியில் உள்ள சிற்றூரி லிருந்து வந்து சேர்ந்த அரசாங்க ஊழியரான ஒரு வழிகாட்டியும் இவர்களிடமிருந்து எப்படித் தப்பித்துக் கொண்டு செல்வது என்று யோசித்துக்கொண்டிருந் தான்.

முன்னால் செல்லும் தீப்பந்தத்தையும், பின்னால் வரும் குண்டு அடைத்த துப்பாக்கியும் கண்ட வழிகாட்டி தான் கடமையைச் செய்வதாகக் காட்டவேண்டியும் குதிரைகளின்மேல் செல்லுவோரை விரைவாகச் செலுத்தவேண்டியும் அடிக்கடி குரல் எழுப்பினான். பின்னால் வந்த இந்தியர்கள் வழக்கம்போலப் பதி லுக்கு ஒரு விதமான உசுப்புக் குரலை எழுப்பினர். இதற்கு முன்பு வழித்துணையாக வந்த இந்தியர்கள் சில வணிகரை நடுவழியிற் கொள்ளையிட்டோ, வேறு வகையில் துன்புறுத்தியோ பணம் பறிக்க முயன்றிருக் கின்றனர்.

கதிரவன் அவர்களைவிட்டு எப்படித் திடீரென மறைந்தானோ, அவ்வாறே காலையில் திடீரெனத் தோன்றினான். அவர்கள் மீதமுள்ள மலைப்பகுதியைக் கடப்பதற்கு ஒளி காட்டினான். அவர்களுடன் வந்தவ ருள் இசுலாமியரும் ஒருவர். 'அவர் அல்லாகு அக்பர்' என்று தொடங்கும் காலை வழிபாட்டுப் பாட்டைப் பாடினார். அப்பாட்டொலி பாறைகளிலும் குகைகளி



ஆடம் வக்கீலுடன் கணவாயைக் கடத்தல்

லும் நீண்டொலிக்கும் எதிரொலிகளை உண்டாக்கியது" அவர்கள் தங்களது கடும் பயணத்தைத் தொடர்ந்தனர். அக்கணவாயின்வழி ஒரு பரந்த காட்டிலே சென்று முடிந்தது. அக்காட்டின் நடுவிலே மண்ணாலாகிய கோட்டை ஒன்றிருந்தது. கொள்ளையும் போரும் இந்தச் சமவெளியை மக்கள் வாழ்வதற்குத் தகுதியுற்றனவாக ஆக்கிவிட்டன. வளமான பயிர்கள் விளையும் பகுதிகள் ஆள் உட்புகமுடியாத அடர்ந்த புதர்களாகக் காட்சியளித்தன. அதனால் ஓடை அல்லது சிற்றாறுகளின் கரைகளில் புலிபோன்ற இரைதேடி வாழும் விலங்குகளின் காலடிப் பதிவுகள் காணப்பட்டன.

இங்கே அவர்கள் நீர் குடிப்பதற்காகவும், இளைப்பாறிக் கொள்வதற்காகவும், குதிரைகளை இளைப்பாற்றுவதற்காகவும் நின்றனர். இங்கேதான் வேறொரு சமயத்தில் ஒருவர்க்கு நிகழ்ந்த துன்பத்தைப் பற்றி ஆடம் அறிந்துகொள்ள நேர்ந்தது.

ஓடையினருகேயுள்ள ஓரிடத்தில் மிகவும் அருவருக்கத்தக்க ஒரு மனிதர் சடைமுடிகளுடையவராய்ப் புலியின் தோல்மேல் உட்கார்ந்திருப்பதை வழிகாட்டி மற்றவர்க்குக் காட்டினான். அவர் உடல் எல்லாம் சேறும் சாம்பலும் பூசப்பட்டிருந்தது. உடம்பு சூரிய வெப்பத்தால் காய்ந்திருந்தது. அவர் உடை கிழிந்த கந்தைத் துணியா யிருந்தது. வழிப்போக்கரின் வருகையை அவர் கவனிப்பதாகத் தோன்றவில்லை. அசையாமலும் வாய் பேசாதும் எதிரே யிருந்த ஒரு சிறிய கல்லறையை நோக்கி அதில் தம் கண் பார்வையைப் பதித்து வைத்திருந்தார். கறுப்புச்



சிலேட்டுக் கற்களால் கட்டப்பட்ட அக் கல்லறையில் விளக்கு வைப்பதற்கென ஓர் இடமும் இருந்தது. இந்தியர்கள் அவரை அணுகி, அவருக்கு முன்பு அரிசியும், ஓரிரு ரூபாய்களும் வைத்தனர். அவர் அருகே புலியின் எலும்புக் கூடுகளும், மண்டை ஓடும், மழுங்கிய துருப்பிடித்த ஒரு வாளும் கிடந்தன.

இரங்கத் தக்க அவ்வுருவத்தை ஆடம் உற்று நோக்கியபோது வழிகாட்டி அவருடைய சோகக் கதையைக் கூறலானான். சாதுசிங்கு என்பவர் ஒரு சிப்பாயாக—படை வீரராக இருந்தார். அவர் ஓர் இந்தியர். முதலில் அவர்கள் கடந்துவந்த பாதி யழிந்த சிற்றூரின் பெருமைக்குரிய வீரராகத் திகழ்ந்தார். தூரத்திலே காட்டினிடையே காட்சியளிக்கும் மண்கோட்டையில் வேலை செய்துவந்த ஒரு வீரன் மகளை அவருக்குத் திருமணம் செய்துகொடுப்பதாக உறுதி ஆகியிருந்தது. சிறிது காலம் கழித்துச் சாது தம் நண்பர்களுடன் மணப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு ஊருக்குக் கூட்டிச் செல்வதற்காக வந்திருந்தார். மணப்பெண் அவ்வூர்க்குரிய ஒரு குதிரையின்மேல் ஏற்றப்பட்டாள். சாதுவும் அவர் நண்பர்களும் அக்குதிரைக்கு முன் களியாட்டத்துடனும் செருக்குடனும் நடந்துசென்றனர். இப்போது தாங்கள் இளைப்பாறிய ஓடைக்கருகே அவர்கள் வந்ததும், ஒரு பயங்கர உறுமல் சத்தம் கேட்டது; அத்துடன் துன்பக் கூக்குரலும் கேட்டது. சாதுசிங்கு திரும்பிப் பார்த்தார்; தம் மணமகளின் அடையாளத்தைக் காணவில்லை. குதிரை மட்டும் ஒரு திசையில் கண்மூடிக் கொண்டு ஓடியது. அடுத்த திசையில் நீளமான புல்லும், காட்டு நாணலும், மேல்தளத்தில் வந்து சென்ற சுரு

மீளுல் அலைக்கப்பட்ட கடலலைபோல அசைந்துகொண்டிருந்தன. சாது தம் வாளை உருவிக்கொண்டு அந்தத் திசை நோக்கி விரைந்தோடினுர். மீண்டும் ஒரு துன்ப இடிக்குரல் கேட்கும் வரை மற்றவர்கள் அசைவற்று நின்றிருந்தனர்.

பிறகு அவர்கள் உருவிய வாள்களுடன் காட்டிற்குள் பாய்ந்து நுழைந்தனர். அங்கே அவர்கள் சாது சிங்கு உயிரில்லாத தம் மணமகளின் பிணத்தைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவருக்குச் சிறிது தூரத்தில் ஒரு புலியின் உடல் உயிரற்றுக் கிடந்தது. அப்புலியின் கழுத்தில் வாள் எறியப்பட்டிருந்ததால், அது கடுந்துயர் எய்தித்தான் இறந்திருக்க வேண்டும் என்பது தெரிந்தது.

மணமகளை யிழந்த மணமகனை யாராலும் தேற்ற முடியவில்லை. தம் காதலிக்காக அவர் ஒரு குழி தோண்டினுர். அதன்மேலே இந்த முரட்டுக் கல்லறையைக் கட்டினுர். அதற்குப் பிறகு அவர் அவ்விடத்தை விட்டு நகரவேயில்லை. கொடிய காட்டு விலங்குகளும் அவருடைய தனிமைக் கொடுமையைக் கண்டு மதிப்புச் செய்தன; அல்லது அஞ்சி அகன்றன.

அவர் நண்பர்கள் அவருக்காக ஓடையிலிருந்து நீரும், உணவும் கொண்டுவந்தனர். ஆளுல் அவர்கள் தம் காதலி மோராவின் கல்லறையில் பூக்களைக்கொண்டு வந்து இட்டு அதை அலங்கரிக்கும் போதன்றிப் பிற நேரங்களில் அவர் புன்முறுவல் செய்யவோ, அவர்கள் உதவியை ஏற்றுக்கொள்ளும் அறிகுறியைக் காட்டவோ இல்லை. வழிகாட்டியின் கூற்றுப்படி, இவ்வாறு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கழிந்தன. சாது



சிங்கு மட்டும் அவருக்கு நேர்ந்த துன்பத்திற்கும் தீங்கிற்கும் அடையாளமாகிய அக் கல்லறைக்கு அருகிலேயே இருந்து வருகிருர். இன்னும் இளமைச் செவ்வி கழியாதவராயினும் வயது முதிர்ந்தவரைப் போலத் தோற்றமளிக்கிருர். வழிகாட்டி கூறிய இக் கதை பயணம் செல்வோர்களைத் தங்குமிடத்திலிருந்து விரைவாய் அப்பால் செல்லும்படி செய்தது. காட்டு வழியின் ஆபத்துக்களை நினைத்து வக்கீலும், தன்னுடைய காதலியின் கதியும் அப்படிப் போலாகுமோ என்று நினைத்து ஆடமும் அஞ்சினர். சாது சிங்கின் அருகே கிடக்கும் எலும்புக் கூட்டைப் பெற்றிருந்த புலியினும் மிகவும் வலிமையுடைய புலிபோன்றவனின் பிடியில் தன் காதலி சிக்கிக்கொண்டிருப்பதாக எண்ணி எண்ணி அஞ்சினுன் ஆடம்.

இந்த மண் கோட்டைக் கருகேதான் பேகத்தைப் பற்றியும், அவளுடைய படையைப் பற்றியும் வழிச் செல்வோர் முதன் முதலாகக் கேள்விப்பட்டனர். அச் செய்திகளை உணர்த்திய வேலையாள் அப்படையிலிருந்து நீங்கி வந்தவன். அவன் கூற்றுப்படி, பேகமும் படையினரும் கணவாயை அடையும் வரை வேகமாகச் சென்றனர். அங்கே பேகத்தின் மற்றொரு படையினர் வந்து சேர்ந்தனர். அதனுல் இவ்வேலையாளும், சென்னையிலிருந்து அவனுக்குத் துணையாய் வந்த மற்றுஞ் சிலரும், பணம் வாங்கிக் கொண்டு போகும்படி செய்யப்பட்டனர். இதற்குப் பிறகு பேகம் மெதுவாக ஆங்காங்கே தங்கிச் சென்று பெங்களூரை அடையக் கருதினுள். வாண்டிக்கோட்டாவின் மேல் படையெடுத்துச் சென்ற திப்புவைப் பார்ப்பதற்கு விருப்பங் கொண்டிருந்தமையின் அவன் திரும்பிவரும்

வரை அவன் நகரத்திற்குச் செல்லக் கூடாதென்றுங் கருதியிருந்தாள்.

சீரங்கப் பட்டணம் பெங்களூரிலிருந்து கிழக்கே எழுபதுமைல் தூரத்தில் இருந்தாலும், திப்புவும் பேகமும் சந்தித்து மெனிகிரேயின் தலைவிதியை நிர்ணயிக்கு முன்பு, விரைவாகச் சென்று, ஹைதரின் காலில் வீழ்ந்து, நீதி கேட்கலாமென்று, ஆவலுடன் பலரிடம் விசாரித்த ஆடம் நம்பியிருந்தான். ஆனால் பேகத்துடன் மறைமுகமாகச் சென்னைக்குப் புறப்பட்டு வந்த அவளுடைய தளபதி இப்போது தன் பதவிக்கேற்ற உடையும், கம்பீரமும் பெற்றிருப்பதாகக் கேள்விப்பட்டு நடுங்கினான். அவன் திப்புவால் நன்கு சிறப்பிக்கப்பட்டு வரவேற்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதையும் அறிந்தான். மேலும்பேகம் இங்கிலாந்திலிருந்து கொண்டுவந்த ஓர் அழகிய பறங்கிய மடந்தையைத் திப்புவுக்குப் பரிசாகக் கொடுப்பதற்காகப் பல்லக்கில் வைத்துக் கீழை நாட்டு அடிமைகள் சிலரை மிகவும் சிறந்த கவனத்துடன் கொண்டுவரச் செய்தாள் என்று கேள்விப்பட்டதும் அவனுக்குக் கவலை இன்னும் மிகுதிப் பட்டது. எனவே கொடுமைச் செயல் இன்னும் நிகழவிருக்கிறது எனலாம். எனவே ஆடமின் முயற்சியால் அதன் போக்கில் மாற்றம் ஏற்படுகிறதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

குற்றமற்ற ஒரு பெண்ணுக்கு நேர்ந்த கொடுமைக்காகப் பழிவாங்க எண்ணிய ஆடம் ஹைதரின் தலைநகரை வந்தடைந்தான். ஹைதரின் பெருமைச் சின்னங்களையும், இப்போது ஹைதரின் கல்லறையையும் பெற்றிருக்கும் கவின் மிக்க லால்பாக் தோட்டங்



களையும், புகழ் பெற்ற விட்டுணு கோயிலையும் காலந் தாழ்த்தாது பார்க்கச் சென்றிருப்பான் என்றுதான் யாரும் நினைப்பர். ஆனால் நகருக்குள் வந்தானோ இல்லையோ, அவன் பெரிய மசூதியிருக்கும் இடத்திற்கே நேராகச் சென்றான். பராக் எல் அட்கியைப் பார்த்துச் சில செய்திகளை அறிந்துகொள்ளலாம் என்றே அங்குச் சென்றான். அந்தப் புனிதமான கோயிலுக்குள் பறங்கி நுழைவது உயிருக்கே ஆபத்தாகு மாதலின், ஒரு முகமதியனின் உதவியைக் கொண்டே அவ்விடத்தை அடைந்தான். எதிர்பார்த்தது போலவே பராக் பக்கிரி மசூதிக்குள்ளேயே இருந்தார். குரானிலிருந்து சில பகுதிகளையும், அவற்றின் சிறந்த சில உரைகளையும் பக்தியுடன் படித்துக் கொண்டிருப்பதில் கருத்தாயிருந்தார். இந்தப் பக்திப் பணியின் இடையே சென்று அவரைக் காண்பது மிகவும் இயலாத காரியம். அதனால் முதலில் தன்னைக் கூட்டி வந்த முகமதியனிடமே, மிக அதிகமான கையூட்டுக் கொடுத்துத்தான் தன் பெயரும், வக்கீல் இருக்குமிடத்திற் குரியவனான கானின் பெயரும் எழுதிய ஒரு சிறு துண்டுக் காகிதத்தை அப் பக்தரின் ஆடைக்குள் சொருகிவிட ஏற்பாடு செய்தான். அந்த ஆள் திரும்பி வந்து, கோயில் பணியில் ஆழ்ந்து ஈடுபட்ட அவர் பறங்கி சாயபு (ஐரோப்பியப் பெருமகன்)கொடுத்த அறிவிப்படையாளத்தைப் பற்றிச் சிறிதும் கவனம் கொண்டதாகத் தெரியவில்லை என்று பதில் கூறினான். ஒவ்வொரு மணித்துளியும் விலையுயர்ந்ததாய் இருத்தலின், இவ்வளவு காலம் வீணாயிற்றே என்று விதிர்ப்புற்ற ஆடம், அடுத்துப் பக்கிரியை வாயால் கூப்பிட்டு அக் காரியத்தைப் பற்றிச் சொல்லுமாறு அந்த முகமதி

யனை ஏவ முயன்றான். ஆனால் அப்படிச் சொன்ன வுடனே அவனுக்குக் கோபம் பெருகி வந்தது.

"கிறித்துவ நாயே! நீயும் உன் கிறித்துவர்களும் என்ன மனிதர்கள்! பராக்எல் அட்கி பரசமயத்தவனை உன்போன்றவர்க்காகப் பக்திப் பணியை விட்டுவிட்டு வருவாரா?" என்று கடிந்து பேசினான்.

அளவுக்கு மீறிய ஏமாற்றமடைந்த துன்பம் மிக்க ஆடம் பிறகு மசூதியை நடந்து சுற்றிவரத் தொடங்கினான். குரான் பாடம் ஓதுதலைத் தடுக்கும் நோக்கத்துடன் சென்றான். அப்போது ஒரு கிழவர் அவன் தோள்மேல் கையை வைத்துத் தடுத்து நிறுத்தி, "நீங்கள் அங்கிரேஜி சாயபு (ஆங்கிலேயர்). நான் கம்பெனி வேலையில் படையாளனாக இருந்து வேலை செய்து அவர்கள் உப்பைத் தின்றவன். அதனால் பக்கிரி பராக்எல் அட்கியிடம் உங்களுக்கு ஆக வேண்டிய காரியத்தைப் பற்றிக் கவனிப்பது என் கடமை" என்றார்.

இவ்வாறு சொல்லிக் கொண்டே மசூதிக்குள் நுழைந்தார். அப்போது பக்கிரியின் ஒலிக் குரல் கேட்டது. "சூரியன் உதிப்பதைப் பார்க்க விரும்புகிறவர்கள் விடியும் நேரம் வரையில் காத்திருக்கவேண்டும்".

இந்த ஆறுதலைக்கொண்டு ஆடம் தன் சத்திரத்திற்குத் திரும்பிச் சென்றான். இந்தியர்கள் செய்யும் அற்பமான வேலைகளைப் பற்றிச் சிந்தித்தான். ஹைதரை அடைவதற்கு இதுவரை நம்பிக்கையுடன் முயன்ற வழியைக் காட்டிலும் வேறொரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென முயன்றான். எனினும் இந்தச் சமயத்தில் அவனிடம் வந்து சேர்ந்தவர்,



நவாபை இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குப் பார்க்க முடியாது, மறைமுகமாக வெளியூர் சென்றிருக்கிறார் என்ற செய்தியைக் கூறியதும் நம்பிக்கை எல்லாம் இழந்தான். திவானிடமிருந்து வக்கீலும் இதே செய்தியைத்தான் பெற்றார். மேலும் பத்திரங்களை எல்லாம் தேவையானால் நவாபிடம் கொடுப்பதற்குப் பதிலாகத் திப்புவிடமே கொடுக்க நேரிடும் என்றும் வக்கீலுக்குத் தெரிவிக்கப்பட்டது. திப்புவைச் குறிப்பிட்டதனால் தாம் வந்த காரியம் வெற்றியடையாமல் போய்விடுமோ என வக்கீல் அஞ்சினார்.

ஆடமுக்கு இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லை. நவாபிடம் மிகவும் பழக்கமான ஒரு சில அதிகாரிகளை அணுகினான். ஆனால் தன் காரியத்தின் ஒரு பகுதியைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர்களுக்குத் திகில் பிறந்தது. ஆடம் அணுகிய ஒருவர் இது குறித்துத் தலையிட முடியாதென வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டார். அவன் கூறுவதை முழுவதும் கேட்பதற்குக்கூட அவர் தயாராயில்லை. திப்புவின் விருப்பங்களுக் கெதிராகப் பேசுவது அழிவுக்கே வழியாகுமென்று திவான் தெளிவாகக் கூறி, வந்த இடத்திற்கே திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார். பலவிதத் தோல்விகளாலும் மன முடைந்த ஆடம் கானிடம் சென்றான். மசூதியிலிருந்து பிரார்த்தனைக் குரல் எழுந்தது. அது பிரார்த்தனையில் நம்பிக்கை உடையோரை யெல்லாம் அழைத்தது. அப்போது பதினைந்து வயதுடைய சிறுவன் ஒருவன் ஆடமுக்கு முன்னால் நின்று தெளிவாக இவற்றை இருமுறை சொன்னான் :

"மசூதியின் காவலராகிய பராக் எல் அட்கி இவ்வாறு கூறுகிறர்: சூரியன் தோன்றுவதைப் பார்க்க விரும்புபவர் கிழக்குப்பக்கமாகத் திரும்பி நிற்கட்டும்".

பிறகு ஆடம் சத்திரத்தை விட்டகன்றுன். தான் படுப்பதற்காக விரிக்கப்பட்ட படுக்கையிலிருந்து எழுந்து, புதிய சக்தியுடனும், நம்பிக்கை துடிக்கும் உள்ளத்துடனும் இளைஞனுகிய வழிகாட்டியைப் பின் தொடர்ந்தான்.

---

## 14. கெடுவான் கேடு நினைப்பான்

அந்தி நேரம் விரைந்து இருளாக மாறிக்கொண்டிருந்தது. அவ்விருட்டில் இளைஞனின் வெள்ளை உடையினுல்தான் அவன் முன்னுல் போய்க்கொண்டிருப்பதை ஆடம் உணர முடிந்தது. இருவரும் நகரத்துக் கடைத்தெரு வழியே சென்றுகொண்டிருந்தனர். அந்த இருட்டு அவர்களுக்குத் துணையாகவே இருந்தது. ஏனெனில் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் ஐரோப்பிய உடையுடன் நடமாடுபவரை அக்காலத்தில் காண்டலரிது. அவ்வுடையணிந்த ஆடமை ஊரினர் நன்றாக உற்றுக் கவனிப்பதை இருட்டுத் தடை செய்தது.

பல வளைவுகள் வழியாகவும், திருப்பங்கள் வழியாகவும் அழைத்துச் செல்லப்பட்ட ஆடம் கடைசியில் ஒரு கதவின் முன்பு நிறுத்தப்பட்டான். அக்கதவின் மேல் கிளைகள் கவிந்துகொண்டிருந்ததால் அவ்வறையைச் சுற்றித் தோட்டம் ஒன்றிருக்கவேண்டும் என்று அறிந்தான்.

வழிகாட்டி தட்டியதும் கதவு திறந்தது. அவ்வடிமை உள்ளே நுழைந்தபின் ஆடம் அவனைப் பின் தொடர்ந்தான். ஆனுல் பருத்த ஆப்பிரிக்கன் ஒருவன் மூன்று விரற்கிடை அகலமான அரிவாள் ஒன்றைக் கையில் ஏந்தி அதைத் தலையின் மேல் வைத்திருந்ததைக் கண்டு ஆடம் பின்னிட்டான்.

இளைஞன் தன் நாட்டைச்சேர்ந்த அவன் கையிலிருந்த கோலைத் தொட்டான். உடனே அவ்வரக்கனிடமிருந்த கொலைக்கருவி கீழே விழுந்தது; கையும்

தணிந்தது. வேறு தடையின்றி ஆடம் உள்ளே நுழைந்தான். இப்போது ஒரு மாந்தோட்டத்தை அடைந்துவிட்டான். அதன்வழியே பார்க்கும்போது, இளம் பிறைத் திங்கள் நீர்ச் சலசலப்புக்கிடையே மெல்லிதாய் மினு மினுத்துக்கொண்டு காணப்பட்டது. ரோசாவின் நறுமணம் வீசியது; குயில் கூவியது. இருவாட்சியும், மல்லிகையும், ஆரஞ்சு மலர்களும் நறுமணம் பரப்பின. அசையும் வெளிச்சத்தில் பெரிய கல்லறைகளும் வளைவுகளும் தெளிவின்றிக் காணப்பட்டன. அவையெல்லாம் பக்கிரி தங்கியிருக்கும் புனித இடம் இதுவாகத்தான் இருக்கும் என்று எண்ணும்படி செய்தன.

ஆடம் எவ்வளவு விரைந்து செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாகச் செல்லும்படி இளைஞனைத் தூண்டினான். ஒரு சிறு கதவினுள் நுழைந்து குறுகிய வழியே சென்று இன்னொரு கதவை அடைந்தனர். அங்கே அவ்விளைஞன் நின்றான். ஆடம் அவ்வழியே செல்ல வேண்டுமென்று கையால் சைகை காட்டிக் குறிப்பிட்டான். ஆடமும் உள்ளே சென்றான்; ஒரு சிறிய அறையை அடைந்தான். அங்கே இன்னொரு பக்கிரியுடன் பராக்எல் அட்கி அமர்ந்திருந்தார். இரண்டு கண்கள் வரையிலும் பரந்திருந்த வெண்மை மிக்க தாடியைப் பார்த்தபோது, உடனிருந்த பக்கிரியும் மிகவும் புனிதமும் பெருமையும் உடையவரே என்று ஆடம் எண்ணினான்.

மிகவும் பணிவுடனும் மரியாதையுடனும் வழக்கம் போலச் சலாமாலேகும் என்று கூறினான் ஆடம். முன்பு பழக்கமானவராததால் பராக் அவ்வணக்கத்திற்குப் பதில் கூருது தம் நண்பனின் முகத்தை நோக்கிய பிறகு இன்னொரு கம்பளத்தைச் சுட்டிக் காட்டினார். அங்கே இந்தியர்களைப் போலவே ஆடம் சப்பணமிட்டு உட்கார்ந்தான். இரண்டு மணித்துளிகள் ஆழ்ந்த அமைதியில் கழிந்தன. இந்தியரின் வழக்கங்களை மிக நன்ருக அறிந்து வைத்திருந்ததால் தான் அவசரப்பட்டு, வந்தவேலையைக் கெடுத்துக்கொள்ளக் கூடாதென ஆடம் கருதி, அவரிடமிருந்து பேசும்படி குறிப்பு வரும்வரை பேசாது காத்திருந்தான். கடைசியில் பராக்கிடமிருந்து பேசும்படி உணர்த்தும் குறிப்பு ஒன்று வந்தது. பராக் கூறினார்: "சென்னையிலிருக்கும் போது பராக்கிற்குக் கண்களும் ஒரு நாக்கும் இருந்தன. ஆனால் இப்போது அவருக்கு வழிகாட்டியாகத் தந்தை ஷேக் ஹாலி பென் காலே தான் இருக்கிருர்."

சென்னையிலிருக்கும்போது பராக் தாம் மிகவும் செல்வாக்குள்ளவரென்று சொல்லிக் கொண்டதற்கும் இப்போது இவ்வாறு அடக்கமாக்க் கூறுவதற்கும் முரண்பாடுளதென்று கருதினன் ஆடம். ஆனால் அயலார் நாட்டில் தம் பெருமையைப் பற்றி அளவுக் கதிகமாய்ப் பேசிக்கொள்வது யாருக்கும் இயல்புதான். உடனிருந்த பக்கிரியைப் பார்த்து ஆடம் மிகவும் சுருக்கமாக, இளவரசன் திப்புவிடம் மெனிகிரேவை ஒப்படைப்பதற்காக நடக்கும் சூழ்ச்சியைப் பற்றிக் கூறினன். திப்புவினிடமும், அவன் தந்தை நவாபிடமும் கூறிப் பக்கிரி இதை எப்படியாவது தடுக்க வேண்டுமென்று கருதியே நயமான சொற்களில் பேசினன் ஆடம். ஆனல் மரத்தினல் செய்யப்பட்டுக் கோயிலில் வைத்திருக்கும் முனிவர் உருவங்கள் தம்பால் வந்து குறையிரக்கும் அடியார்க்கு இரங்காதது,

போல அப்பக்கிரியும் சிறிதும் ஆடாமல் அசையாமல் அதைக் கேட்டுவிட்டு நின்று விட்டார். மீண்டும் மீண் டும் ஆடம் தன் வேண்டுகோளைக் கூறினன். ஆனல் அங்கு அமைதியே நிலவியது. மேலும் என்ன சொல்வ தென்று அறியாது ஆடம் பேசுவதை நிறுத்தினன். கடைசியில் தம் தலையையோ உடலையோ சிறிதும் ஆட்டாது பராக்கை ஒரு முறை பார்த்துவிட்டு மூத்த பக்கிரி பேசத்தொடங்கினர் :

"இந்த நம்பிக்கையற்றவன் ஒரு கவிஞனைப் போலப் பேசுகிருன். ஆனல் நவாப்கான் ஹைதர் அலி பகதூர் தம் வெற்றி மைந்தனுகிய திப்புவிடம் ஓர் அடிமைப் பெண்ணிற்காகச் சண்டையிடுவார் என்று இவன் நம்புகிருனு?" என்ருர்.

வந்த காரியத்தைப்பற்றிச்சொல்லி அவரை வேண்டிக்கொள் என்று கூறுவதுபோலப் பராக் ஆடமைப் பார்த்து ஒரு கண்ணைச் சிமிட்டினர்.

ஒரு மணித்துளி கழித்து ஆடம் பதிலளித்தான் : "நவாப்பு, நபிநாயகத்தின் நிலையிலிருந்து தாழ்ந்தோ ருக்கும் உயர்ந்தோருக்கும் நீதி வழங்குவதற்காக இருக்கிருர். ஒரு நெல்லைப்பற்றிச் சண்டையிட்ட இரு குருவிகளுக்கு நபிநாயகம் நீதி வழங்கியதாக எழுதப் பட்டிருக்கிறது. அப்போது நபிகளின் மனைவியார் பாதிமா அவரைப் பார்த்து, "அல்லாவின் தூதரான தாங்கள் இவ்வளவு அற்பமான செய்திக்காக— மிகவும் அற்பமாகச் சண்டையிடும் உயிர்களுக்காகத் தமது அரிய காலத்தைச் செலவிடலாமா?" என்று கேட்டார். அப்போது நபிகள், "பெண்ணே! குருவி களும் நெல்லும் அல்லாவினுல் படைக்கப்பட்டவை



என்று அறிவாயாக. அவை அற்பமானவையாக இருக்கலாம். ஆனல் நீதி என்பது விலைமதிக்க முடி யாத ஒரு மாணிக்கம். அந்நீதி பலம் உடையவரால் பலம் இல்லாதவர்க்கு வழங்கப்படவேண்டும்" என் ருர். அரசரும், அல்லாவின் விருப்பத்தை நிறை வேற்றுபவரே. சிறிய செய்தியாயினும், பெரிய செய்தி யாயினும், ஏழைகளுக்காயினும், வலிவுள்ளவர்களுக்கா யினும், அல்லா நீதி வழங்குவார், பசிமிக்க ஒரு பற வைக்கு அரசனிடமுள்ள முத்தாரத்தைப் போலவே ஒரு நெல் மணியும் விலைமதிப்புடையது" என்ருன்.

"பிஸ்மில்லா—கடவுளே போற்றி! ஒரு மௌல் லாவைப் போலவே பேசி விட்டானே" என்ருர் மூத்த பக்கிரி. ஆடமைச் சிறிதும் பார்க்க விரும்பாது பராக் கைப் பார்த்து உணர்ச்சியுடன் இவ்வாறு கூறினர் அவர்.

'பொய் பேசாத நாவே அதைப் பேசியிருக்கிறது' என்று பராக் பதில் கூறினர். மீண்டும் அமைதி நில வியது. ஷேக் ஹாலியே மறுபடியும் அமைதியைக் குலைத்து நேரடியாக ஆடமைப் பார்த்துக் கேட்டார் : "பறங்கியே, நவாப் பகதூரைப்பற்றி ஏதாவது சதி செய்ய நினைத்திருக்கிருயா?"

"சதிகாரனிடமிருந்தே சதி தோன்றும். என் அறிவு சாட்சியாக நான் அப்படிப்பட்ட சூழ்ச்சி எது வும் அறியேன்" என்ருன் ஆடம்.

"தன் அறிவைத் தவிரப் பகைவனைப் பழிக்காத இவனது வார்த்தைகளில் உண்மை இருக்கிறது" என்ருர் மூத்த பக்கிரி. ஆடமைப் பார்த்து, "நீ சொல்லியதெல்லாம் நவாப்பிடம் கூறப்படும்; அல்

லாவும் அவரும் எப்படி நினைக்கின்றனரோ அப்படியே எல்லாம் முடியும். இதற்குள் உன் இடத்திற்குத் திரும்பிப்போய் உன் அரசாங்கத்து வக்கீலைக் கவனி. அவர் விடியற்காலத்திலே பெரிய, இனிய, புனித நகரமான பெங்களூர்க்குப் புறப்படவேண்டும். அமைதி உன்னிடத்தில் உண்டாகட்டும்! இல்லையா மகனே'' என்றார்.

கடைசியில் மகனே என்று கூறியது பராக்கைப் பார்த்துத்தான். பராக்கும் "என் தந்தை கூறியது போலத்தான்' என்று கூறினார்.

சலாம் என்று வழக்கம்போல் சொல்லிவிட்டு எழுந்து அவர்களிடமிருந்து விடைபெற்றுச் செல்வதைத் தவிர ஆடமுக்கு வேறு வழியில்லை.

வெளியே நின்றுகொண்டிருந்த இளைய வழிகாட்டி, மீண்டும் அவனைப் பழைய இடத்திற்கே இட்டுச் சென்றான். முன்வழி காட்டுவோரின்மையால் கடக்க முடியாத குறுக்கு வழிகளினூடே அழைத்துச் சென்றான். கடைசியாகக் கேட்ட உரையாடலைப் பற்றியே ஆடமின் மனம் வழியெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தது. இசுலாம் மதத்தினரை அப்படியே முழுதும் நம்பமுடியாது என்று அறிந்திருந்தான்.

ஒரு ஐரோப்பியனை ஆதரிக்கும் தொல்லையிலிருந்து விடுபடுவதற்காகப் பராக் செய்த சூழ்ச்சிகளாக இவையெல்லாம் இருக்குமோ என்று ஐயுற்றான். தான் கேட்ட செய்திகள் உண்மையானவையா அல்லது பொய்யானவையா என்று அறிந்துகொண்டே மேலும் இதில் ஈடுபடவேண்டுமென்று துணிந்தான்.



பழைய இடத்தை அடைந்தவுடனே பிரிட்டிசு அரசாங்கத்து வக்கீல் தாம் புறப்படுவதற்கான ஏற்பாட்டை மிக விரைவாகச் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தான். நவாப்பின் திவான் மறுநாள் விடியற்காலையிலேயே பெங்களூருக்குப் புறப்பட்டுப் போக வேண்டுமென்று விதித்த கட்டளைக்குப் பணிந்து புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

இந்தக் கட்டளையைக் கண்டு தம் வெறுப்பைத் தெரிவித்தார் வக்கீல். தானும் கூடப் புறப்படுவதாக ஆடம் கூறியபோது, இவ்வளவு முயற்சியெடுத்தும் வறிதே திரும்ப எண்ணிய அவனை முட்டாள் எனக் கருதியவர்போல் பேசினார். தக்க துணையில்லாமல் ஓரிரு இந்தியர்களைக் கூட்டிக்கொண்டே இங்கு வந்துவிட்ட நம்மிருவரையும் துரத்திவிட வேண்டுமென்பதே ஹைதரின் விருப்பமாயிருக்கலாம் என்ற குறிப்பையும் தெரிவித்தார்.

வக்கீல் புறப்படும் அந்தச் சமயத்தில் இன்னோர் அச்சமும் ஏற்பட்டது. அப்போது நவாபின் குதிரைப் படை வீரர்கள் இருநூறு பேர்கள் அங்கே வந்தனர். இப்படையை நடத்திவந்த சர்தார் இவர்களிடம் மரியாதையாகவே நடந்துகொண்டார். அவர்கள் இருவருடைய பாதுகாப்புக்கும் நலத்துக்கும் இடையூறு ஒன்றும் வராதபடி பார்த்துக் கொள்ளுவதற்காக உடன்செல்லுமாறு தங்களை அனுப்பியிருப்பதாகக் கூறினார். ஆனால் அவர் அருகே நெருங்காமல் தூர இருந்தே பழகினார். அந்தப் படை தங்கள் பாதுகாப்புக்காகவன்று; தப்பிப் போகாமல் பார்த்துக்கொள்வதற்காகவே என்று வக்கீல் உறுதியாகக் கூறினார். இவ்

வாறான மகிழ்ச்சியற்ற சூழ்நிலையில் சீரங்கப்பட்டணத்தி லிருந்து எண்பதுமைல் தூரமுள்ள பெங்களூரை இரண்டரை நாட்களில் கடந்தனர்.

அழகிய, மக்கட் கூட்டமுள்ள இந்த நகரை நெருங்குவதற்கு முன்பே, நகரின் எல்லைக்கு ஒரு மைலுக்குள்ளேயே ஒருபடை கூடாரமடித்து ஏற் கெனவே தங்கியிருந்ததைக் கண்டனர். நகரத்தின் ஒரு மூலையில் திப்பு உண்டாக்கியிருந்த தோட்டங் களையும் மரங்களையும் கொண்ட ஒரு தோப்பில் அக் கூடாரம் இருந்தது. முக்கியமான ஆட்கள் பட்டா லும் பொன் சரிகைகளாலுமான பகட்டாடைகளை அணிந்திருந்தனர். பொன் முலாம் பூசிய பளபளக் கும் வாள்களை ஏந்தி நின்றனர். நபிநாயகத்தின் பெயர் பொறித்த பல்வகைக் கொடிகளைப் பிடித்துக் கொண்டிருந்தனர். இதுதான் மோதி மகலின் கூடார மாகும். அவள் தனது இருநூறு வீரர் கொண்ட படையுடன் திப்புவின் வருகைக்காகப் பெங்களூருக் கருகில் காத்துக்கொண்டிருந்தாள். பொது மக்களுக்கு, இது பேரரசர்களைச் சிற்றரசர்கள் அடிக்கடி பார்த்து வணங்கிச் செல்லும் மரியாதைச் செயலாகவே தோற்றியது.

நகரத்திலிருந்து அரைமைல் தூரத்தில், பேகத் தின் கூடாரத்திற்குள்ளாகவே நவாபின் சர்தார் தம் கூடாரத்தை அமைத்தார். திப்பு வந்ததும் உடனே ஆங்கில வக்கீலுடன் தாம் அங்கே வந்திருப்பதாக அவரிடம் அறிவிக்கும்படி ஒரு தூதனை நகரத்திற்கு அனுப்பி வைத்தார்.



கூடாரம் அடிக்கும் ஒலிக் கூச்சல் ஓய்ந்தது; ஆடம் தன்னந்தனியாகத், துயரமே துணையாக, இரண்டு மூன்று. மாமரங்களின் நிழலில் உலாவிக் கொண் டிருந்தான். இசுலாமியச் சின்னங்களுடன் பட்டொளி வீசிப் பறக்கும் பேகத்தின் கூடாரத்து வண்ணக் கொடிகளைக் கண்டான். அவை காட்டிக்கொடுக்கும் துரோகிக் காதலன் ஒருவனது சூழ்ச்சியால் ஏழைப் பெண் ஒருத்தி அயல் நாட்டரக்கன் ஒருவனுக்குப் பலியாகப் போவதை அவனுக்கு நினைவூட்டிற்று.

மெனி தன்னருகிலேயே இருப்பதாக எண்ணிக் கொண்ட ஆடமுக்கு உள்ளத்தில் தாங்கமுடியாத வேதனை உண்டாயிற்று. தன் பேச்சு வன்மையாலும், நீதி கேட்கும் முறையாலும் அவ்வைக் காப்பாற்றுவது இயலாத காரியமாயிருக்கின்றதே என எண்ணி நைந்த அவன் காமவெறி பிடித்த அரக்கனிடமிருந்து அவளைத் தப்புவிக்க வேறுவழி உண்டா என்று சிந்தித்தான். பெண்களைக் காப்பாற்றும் வீர உணர்ச்சியாளனா யிருந் திருந்தால், வன்முறையால் அவளைத் தப்புவிக்க வழி செய்திருப்பான். ஆனால், அஞ்சாமை யுடையவனாயி னும், துணிகரச் செயல் செய்யும் ஊக்கம் அவனிடம் இருக்கவில்லை. அவ்வகைச் செயல் ஆபத்தான பயனில் முயற்சியே எனக் கருதும் இயல்புடையவனா யிருந்தான்.

மூத்த பக்கிரியிடம் தான் முறையிட்ட முறையை நினைத்து அது சிறிதேனும் பயனளிக்காமல் போகாது என்று சிறு துளி நம்பிக்கை கொண்டிருந்தான். ஆனால் ஒரு குன்றிமணியளவேனும் நம்பிக்கை இருக்கும்வரை எடுத்த காரியத்தைத் தளரவிடக் கூடாது என்பதில்

மட்டும் மிக உறுதிப்பாட்டுடன் இருந்தான். அவன் தொழில் செய்து கொண்டிருக்குங்கால், சில சமயம் நோயாளிகளைக் காலன் கை பிடித்திழுக்கும் காலத்திலும் அவர்களுக்குத் திடீரெனப் புத்துயிர் தோன்றுவதைக் கண்ணால் கண்டிருக்கிறான். எனவே வெளிப்படையாகத் தோன்றும் தீங்கினை நீக்கி வெற்றி கண்ட போது 'நன்மைதரும் தீமை'யைப் பற்றி ஒரு வகையான நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

இவ்வாறு ஆடம் சிந்தித்துக்கொண்டிருக்கும் போது, உயர்ந்த கோட்டைச் சுவரிலிருந்து ஒரு பெரிய வெடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். சத்தம் வந்த திசையை நோக்கிய போது, பெங்களூரின் வடபுறமிருந்து, பல நிலைகளில் வாளைச் சுழற்றிக்கொண்டு குதிரைப் படையினர் குதிரைகளை விரைவாகத் தாண்டிக் குதித்தோடும்படி செய்துகொண்டே முன்னேறி வருவதை அறிந்தான். இந்தக் குதிரைப் படையினைத் துகள் மேகம் சூழ்ந்திருந்ததனாலும், துப்பாக்கிகளின் வெடிப்புகையும் பரவியிருந்ததினாலும், வருவோர்களை நன்கு அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் தூசுப் படலத்தூடே சிறிது அறியப்பட்ட அரசுக்கொடிகளாலும், அம்பாரி யானைகளாலும், திப்பு பெங்களூருக்குத் திரும்பி வருகிறான் என்பதைத் தெளிவாக ஊகித்தான். உரத்த ஒலிகளும், கைத் துப்பாக்கிகளிலிருந்து வெளிவந்த ஒழுங்கற்ற குண்டு வீச்சுக்களும், மக்களின் உண்மையான அல்லது பொய்யான மகிழ்ச்சியார வாரத்தை அறிவித்தன. நகரத்து வாயிற் கதவுகள் தம்மை நோக்கி ஓடிவந்த மக்கள்வெள்ளத்தை ஏற்றுக் கொண்டன. தூசு, புகை மேகங்களும் விரைவில்



அகன்றன. வானம் பழைய தெளிவையும் அமைதியையும் பெற்றது.

இந்தியாவில் முக்கியமான மனிதர்கள்-குறிப்பாக அரசபரம்பரையினர்-சந்திப்பது என்றால் அது மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். பொதுவாக அரசர்கள் வருவோரை வரவேற்பதற்காக எவ்வளவு தூரம் முன் சென்று அழைக்க முடியுமோ அவ்வளவு தூரம் முன் வந்து விருந்தினரை அழைத்துச் செல்வர். விருந்தினர் எழுந்திருப்பது முதல் படுக்கப் போகும்வரை-அரண்மனைக் கதவுக்கருகே செல்வது, நகருக்குள் செல்வது, சாலையில் ஒன்றிரண்டு மைல்கள் செல்வது-இவையெல்லாம் முன்கூட்டி ஆலோசித்து முடிவு செய்யப்பட்டனவாயிருக்கும். ஆனால் இந்தச் சமயத்தில் ஐரோப்பியன் ஒருவன் இருப்பதைக் கண்டு பொறுமை யிழந்த திப்பு, பேகம் எதிர்பார்த்த அளவுக்கு மேல் அவளுக்கு மதிப்புக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். நகரத்துக் கோட்டைக்குள்ளே இருந்த தோட்டத்தில் தங்கள் சந்திப்பு நிகழ்வதற்கு ஏற்பாடு செய்தான். சந்திப்பு நேரம்: அவன் வந்து சேர்ந்த மறுநாள் நண்பகல். ஏனெனில் இந்தியர்கள் அதிகாலை நேரத்திலோ அல்லது காலையுணவிற்கு முன்போ வெளியே வந்து நடமாடுவது இல்லை. இச் செய்தி திப்புவாலேயே பேகத்தின் தூதனுக்கு நேரடியாகச் சொல்லப்பட்டது. அத்தூதனும் ஒன்பது தங்க மொகராக்களடங்கிய திறையைத் திப்புவின் காலடியில் வைத்து வணங்கினான். திறைக்குப் பதிலாகத் திப்பு மதிப்புமிக்க ஓராடையை நல்கினான். பேகத்தின் தூதுவனும் தன் தலைவியின் பெருமையைப் பலபடியாகப் புகழ்ந்து கூறினான். இளவரசன்மேல் அவள் கொண்

டிருக்கும் நன்மதிப்பைப் பற்றியும், சந்திப்பு நிகழ்வத னால் அவனுக்கேற்பட்ட மகிழ்ச்சியைப் பற்றியும் கூறித் தன் ஆற்றல்களையும் சிறிதே அடக்கமாக நவின்று, பேகம் தன்மேல் கொண்டிருக்கும் நன்னம்பிக்கையை யும் அறிவித்து முடித்தான். பிறகு அவ்விடம் விட்டகன் றான். திப்பு மறுநாள் தன் தோட்டத்தின் இன்ப இல்லத்தில் பேகத்தை மதிப்புக்குரிய விருந்தினராக வரவேற்பதாக அறிவித்து, அதற்காக ஊர்வலம் செல்லப் படை அணிவகுத்து நிற்கவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான்.

குறித்த நேரத்திற்கு மிகமுன்பே, பக்கிரிகளும், இரவலர்களும், சோம்பேறிகளும், அரண்மனை வாயி லருகே கூடிவிட்டனர். இக்கூட்டம் ஊர்வலத்தில் வழக்கம் போலக் கலந்துகொள்வாரின் உணர்ச்சி மிக்க மனப்பாங்குக்கு ஓர் அறிகுறியாகத் திகழ்ந்தது. பிச்சைக் காரர்கள் அங்கு மிங்கும் அலைந்தனர். அரண்மனை யாட்கள் குதிரை மேலும் யானைமேலும் அமர்ந்து கொண்டு தங்கள் ஆர்வத்தைக் காட்டுவதற்காக அங்கு மிங்கும் ஊடாடிக் கொண்டிருந்தனர்.

சரியாக நண்பகல் நேரத்தில் அரண்மனைக்கு வெளியே வைக்கப்பட்ட துப்பாக்கிகள் முழங்கின. ஒட்டகங்களின்மேல் அமைக்கப்பட்டிருந்த சிறு துப்பாக் கிகளும் தங்கள் ஒலியை எழுப்பின. (அவ்வாறு பலத்த ஒலி எழும்போது ஒவ்வொரு முறையும் பாவம் ஒட்ட கங்கள் தங்கள் நீண்ட காதுகளை ஆட்டின). திப்பு யானை மீதேறி யமர்ந்துவிட்டான் என்பதையே அவ் வொலிகள் உணர்த்தின. யானைமேல்ஏற்றப்பட்ட அரச முரசும் மிகவும் பலமாக அதிர்ந்தது. அம்முரசொலி,



தூரத்திலே நிகழ்ந்த துப்பாக்கிச் சத்தத்தை யடுத்துச் சிறு துப்பாக்கிகளின் வேட்டுக்கள் தொடர்ந்து கேட்ப தைப் போலிருந்தது. மேலும் பலவிதப் பறைகளும் இசைக் கருவிகளும் கேட்போர் காதுகள் செவிடாகும் படி முழங்கின. அம்முழக்கம் படையின் புறப்பாட்டு ஆரவாரமாக இருந்தது. ஊர்வலம் அணியணியாக அரண்மனையைவிட்டு வெளியே வந்தபோது ஆரவாரம் இன்னும் மிக்கது. வாயிலைத் தாண்டிய பிறகு திப்புவின் சிறப்புக்களையும், பட்டங்களையும் சோப்தார் எனப்பட்ட கட்டியக்காரன் உரத்துக் கூவிக்கொண்டு பராக்குக்கூறி வந்தான். பெருமையும், பெருந்தன்மையும், அசைவில் லாளுமையு முடைய திப்புவைக் கடவுள் காப்பாற்றுவாராக என்று ஒரு சிறு பிரார்த்தனையும் சேர்த்துச் செய்தான்.

இதற்குப் பிறகு ஈட்டிகளும், வாள்களும், கொடி களும் தாங்கிய காலாட்படையினர், குதிரைப்படையின ருடன் கலந்து ஒன்றாய் ஈண்டினர். அவர்களுள் சிலர் தற்காப்புப் படைகளை வைத்துக் கொண்டிருந்தனர்; சிலர் உருமால்களுக் குள்ளே இருப்புத் தொப்பிகளை அணிந்திருந்தனர். சிலர் பருத்தியாலும் பட்டாலும் இணைந்த அழகிய ஆடைகளை அணிந்திருந்தனர். திப்புவின் மெய்காப்பாளர்களாக வந்த இவ்வீரர்கள் திப்புவுக்கு முன்னர்ச் சென்றனர். ஐரோப்பிய முறைப் படி பயிற்சி பெற்ற ஆயுதந் தாங்கிய புலிப்படையை இச்சமயத்தில்தான் திப்பு முன்னேகச் செய்தான்.

அரசன் வருவதற்குச் சிறிது முன்னே ஒரு சிறிய யானைமீது கடுமுகமும் கடிய நோக்கும்கொண்ட ஒருவன் எல்லார்க்கும் பிச்சை வழங்குவானாய்ப், பக்கிரிகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் செப்பு நாணயங்களை வாரிவாரி

இறைத்துக் கொண்டிருந்தான். அவற்றை வாங்கு வோரும், கீழே விழுந்தவற்றைப் பொறுக்குவோரும் முண்டியடித்துக் கொண்டு கூட்டத்தின் அளவைப் பெரிதாக்கினர். அப்போது இரக்கமற்ற பார்வையுடையவனை இசுலாமிய அறக்கொடை வழங்குபவனும், பாதிச் சினங்கொண்ட கண்களையும், முறுக்கிய துதிக் கையையும் உடைய அவன் யானையும், வறுமை மிகுதியால் மீண்டும் மீண்டும் பொருள் பெறவருவோரைச் சினந்து தாக்க முற்படுபவராய்க் காணப்பட்டனர்.

அடுத்துத் தோன்றிய திப்புவோ விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தான். அவனைச் சுமந்து சென்ற யானையோ தனிச்சிறப்புப் பெற்றிருக்கும் பெருமித உணர்வுடன் இறுமாந்து தன் தலையைத் தூக்கி நடைபோட்டுச் சென்றது. திப்பு அமர்ந்திருந்த அம்பாரி வெள்ளியால் செய்யப்பட்டுத் தங்கத்தால் இழைக்கப்பட்டிருந்தது. அவனுக்குப் பின்னால் நம்பிக் கைக் குரிய ஒரு சேவகன் நின்றுகொண்டு ஈக்களைத் துரத்தும் கவரியை வீசிக்கொண்டிருந்தான். அச் சேவகன் சில சமயம் புகழ்மொழியும், முகத்துதியும் கூற வல்லவனாய் அரசத் தூதுவன்போல் நடந்து கொள்வான். அரச யானையின்மேல் போடப்பட்டிருந்த ஆடைகள் யாவும் தங்கத்தால் பூவேலைப்பாடுகள் செய்யப்பட்ட விலையுயர்ந்த சிவப்பாடைகளாக விளங்கின. திப்புவுக்குப் பின்னால் அரசாங்க அரண்மனை யலுவலர்கள் பெரும்பாலும் யானை மீது இவர்ந்து மினுப் பகட்டான ஆடையுடுத்திக்கொண்டு தங்கள் சிறப்புப் பெருமை துலங்கும்படி வரிசையாக உலாவந்தனர்.



இவ்வாறு ஊர்வலம் நகரின் முக்கியமான தெரு வழியாக அரசத் தோட்டத்தின் வாயிலை அடைந்தது. வழியிலுள்ள வீடுகள் யாவும் அகலமான துணியாலும், பட்டுச் சால்வைகளாலும், பூவேலைப்பாடமைந்த வண்ணச் செவ்வி மிக்க கம்பளங்களாலும் அலங்கரிக் கப்பட்ட வாயில், சன்னல்கள் முதலியவற்றால் பொலிவு பெற்றிருந்தன. மிகவும் எளிய குடிசைகூட ஏதேனு மொரு துணியால் அணிசெய்யப்பட்டிருந்ததால் தெரு முழுதும் சிறப்பான அலங்காரச் செல்வத் தோற் றத்தைப் பெற்று விளங்கியது.

இவ்வழகு பொலியும் ஊர்வலம் அரச மலர் வனத்துள் நுழைந்து, வரிசையான் நெடுமரங்களின் வழியே சென்று, சோலையின் நடுவிடத்தே யுள்ளதும், பளிங்கினாலான அலங்கார வளைவை யுடையதுமான ஒரு மேடையை அடைந்தது அம்மேடை தரை மட்டத்திலிருந்து நான்கு அல்லது ஐந்தடி உயரத்தில் கட்டப்பட்டிருந்தது. அதை முழுதும் வெண்துகிலும், பெர்சியன் கம்பளங்களும் மூடியிருந்தன. மேடையின் நடுவிடத்தே இளவரசனின் அரச இருக்கை அமைந் திருந்தது. அது சிவப்பு மென்பட்டினால் செய்யப் பட்டு மிகச் சிறந்த பூ வேலைப்பாடுகளையுடையதாய்ப் பொலிந்தது. தனி அன்புகொண்ட இளவரசனின் வலப்பக்கத்தே பேகம் அமர்வதாகச் சிறிது தாழ்ந்த இருக்கை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. இந்த மேடைக்கு முன்புறம் ஒரு சதுரமான பளிங்கினாலான குளமிருந்தது. நான்கடி ஆழமான அச் செய்குளம் பளிங்குபோல் தெளிந்த நீரைப் பெற்றிருந்தது. அதன் நடுவேயிருந்த ஊற்றானது இருபதடி உயரத்திற்கு மேலே நீரை எழும்பச் செய்துகொண்டிருந்தது.

இளவரசன் திப்பு குதிரையினின்று இறங்கி மேடை மீதுள்ள அரியாசனத்தில் அமரக்கூடவில்லை; அதற்குள் அரசத் தோற்ற முடைய பேகம் அவ் விடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவள் ஏறிவந்த குதிரையைத் திப்புவின் ஊர்வலம் நுழைந்த வாயிலுக்கு நேர் எதிராக உள்ள சோலைவாயிலில் நிறுத்திவிட்டு ஆறு கறுப்பு அடிமைகள் தங்கள் தோளில் சுமந்துவந்த வெள்ளியாலான, நன்கு அலங் கரிக்கப்பட்ட பல்லக்கில் வந்தாள். பட்டாலும் பல வகை ஒளிநகைகளாலும் வனப்புற அலங்கரிக்கப்பட் டிருந்தது அவள் மேனி.

பேகத்தின் தளபதியாக ரிச்சர்டு மிடில்மசு பல்லக் கோடு நெருங்கி நடந்து வந்துகொண்டிருந்தான். ஐரோப்பிய ஆடைமுறைக்கு முற்றிலும் வேருன- இந்திய அரண்மனையிலுள்ளார் போன்று கம்பீரமான ஆடையை அணிந்து கொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த தலைப்பாகை பகட்டான பட்டாலும், பொன்னாலும் செய்யப்பட்டிருந்தது. அது முறையே முறுக்கப்பட்டுத் தலையின் ஒரு பக்கத்தில் அதன் ஈற்றுப் பகுதி தோள்பட்டையில் தொங்கிக்கொண்டிருக்குமாறு அணியப்பட்டிருந்தது. அவனது மீசை நன்ருகத் திருகி முறுக்கப்பட்டிருந்தது. கண்ணிமைகளில் ஒரு வகை மை இடப்பட்டிருந்தது.

அவனுடைய ஆடை பொன்னிழைகளாலானது. தலைப்பாகைக் கேற்றவாறு இடுப்பிலும் சரிகை அமையு மாறு அணியப்பட்டிருந்தது. அவனது இடுப்பைச் சுற்றி அகலமாய், வேலைப்பாடமைந்த ஒரு வாள் கச்சை இருந்தது. அதில் சிவப்பு மென்பட்டினுலான



வாளுறை பொருத்தப்பட்டிருந்தது. வாளுறையி லிருந்து எடுத்த வாளை அவன் கையில் ஏந்தியிருந் தான். இவ்வாறு சிறப்பு மிக்க பகட்டுடையும், அதற் கேற்ற தோற்றச் சால்பும் கொண்டிருந்த அவனுள்ளத் தில் பிறந்த எண்ணங்களை வெளிப்படுத்திஞல் பயங் கரமாயிருக்கும்.

தன்னை நம்பியிருக்கப் போகும் இளவரசனையும், அந்நம்பிக்கையை இளவரசனிடத்தில் உண்டாகும்படி செய்த பேகத்தையும் காட்டிக் கொடுத்துவிட்டு மெனி கிரேவைக் காப்பாற்றி விடவேண்டு மென்பதுதான் வெறுக்கத்தக்க அவனுள்ளத்திலிருந்த நம்பிக்கை யாகும்.

செய்குளத்தை நெருங்கியதும் மெல்லிய இருக் கையில் அமர்ந்திருக்கும் இளவரசனுக்கு நேராகப் பல்லக்கு நின்றது. பேகம் பல்லக்கிலிருந்து இறங்கு வதற்குக் கைகொடுத்து உதவினுன் மிடில்மசு. வெள்ளி மென்பட்டுத் துணியால் தன்னை முற்றிலும் மறைத்துக் கொண்டிருந்த பேகத்தைப் பளிங்கு மேடையை நோக்கி அழைத்துச் சென்ருன். முழுதும் ஆண்களாயிருந்த பேகத்தின் படையினரும், செழுமையும் பகட்டும் மிக்க ஆடைகள் அணிந்தவராய்ப் பின்வந்தனர். அவளு டைய படையில் பெண்வாடையே வீசவில்லை. எனினும் சிறிது தூரத்தில் மலர்ப்புதர்களுக்கு அருகே ஒரு மூடிய பல்லக்கை வாளேந்திய கையினராய்க் காத்துவந்த இருபது கறுப்பு அடிமைகள் பெண்களாய் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பேகத்தின் எழில்படை தன்னை நோக்கி வருவதை நீரூற்றுச்சாரல் வழியே அறிந்த திப்பு தான் அமர்ந்



ஷீபாராணியைத் திப்பு நல்வரவேற்றல்



திருக்கும் இருக்கையிலிருந்து அவனை வரவேற்பதற்காக எழுந்தான். சந்திப்பு ஏற்பட்டதற்காக இருவரும் மகிழ்ச்சி யுரைகளைப் பரிமாறிக் கொண்டனர். ஒருவர்க்கொருவர் உடல் நலங்களைப் பற்றி விசாரித்துக் கொண்டனர். பிறகு தன் இருக்கைக் கருகேயுள்ள இடத்திற்கு அவனை அழைத்துச் சென்றான். சுற்றியுள்ள விரிப்புக்களின் மேல் பேகத்தின் அரண்மனையலுவலரும் அமர்ந்து கொள்ள இடங்கொடுத்துத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர் திப்புவின் அரண்மனையாளர். எல்லாரும் அங்கே கால்மடக்கி அமர்ந்திருந்தனர். ரிச்சர்டு மிடில்மசு எல்லார்க்கும் தெரியும் ஒரு சிறப்பிடத்தில் அமர்ந்திருந்தான்.

சிறிது குறைந்த நிலையுடைய மக்கள் பின்னால் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுள் ஹைதர் அலியின் சர்தாரும் ஒருவர். அவர் ஆடத்துடனும் சென்னை வக்கீலுடனும் சேர்ந்து நின்று கொண்டிருந்தார். கொள்கை மாறிய மிடில்மசையும், மர்ந்தர் வில்லியையும் கண்ட ஆடத்தின் உள்ளத்தில் எழுந்த எண்ண அலைகளை எடுத்துக்கூற முடியாது. பிறர்க்குற்ற தீங்குகளை யெல்லாம் கேட்டு அவற்றைப் போக்கும் இயல்புடைய திப்புவிடம், அத்தர்பாரிலேயே அவர்களுக்கு எதிராக முறையிட வேண்டுமென்ற முடிவு அவனுள்ளத்திலே துடித்துக்கொண்டிருக்கும் படி செய்தது அக்காட்சி.

இதற்குள், இதுவரை பேகத்தின் பணிவு வணக்கங்களையும், நன்னம்பிக்கையையும் பாராட்டு முகத்தான் மென் குரலில் பேசிக்கொண்டிருந்த இளவரசன் திப்பு

இப்போது ஒரு சேவகனைப் பார்த்துச் சைகை செய்தான். உடனே அவன் குரல் எழுப்பினான்:

"ஆற்றலும், திங்களைப் போன்ற அழகும் மிக்க பேகம் மோதிமகல் அம்மையாரின் வேண்டுகோளின்படி, அவரின் நன்றிச் செயல்களுக்குச் செய்யும் பரிசாக, அவரது படைகளுக்குத் தளபதியாகிய இவரை (ரிச்சர்டை) ஆற்றல் மிக்க இளவரசனார் அவர்கள் தம்முடைய அரசாங்கத்தில் ஏற்றுக்கொண்டு, எல்லா நம்பிக்கைக்கும் உரியவராகக் கொண்டு, தம் கருத்துக்கினிய பெங்களூர்த் தலைநகரை அவரிடம் ஒப்படைக்கின்றார்." இவ்வாறு இளவரசனின் கருத்தை எல்லாரு மறிய முழங்கினான் சேவகன்.

முழங்கியவனின் குரல்ஒலி அடங்குவதற்கு முன்பே கூட்டத்திலிருந்த ஒருவரிடமிருந்து பலமான எதிர்க் குரல் ஒன்று கேட்டது: "கொள்ளைக் காரனைக் கருவூலக் காப்பாளனாகச் செய்பவனும், கொள்கையில் லாத அறிவிலியை நம்பி அவனுக்கு முசுலீம்களின் வாழ்க்கைமீது ஆணைசெலுத்தும் அதிகாரம் தருபவனும் தீங்கெய்தட்டும்!".

அளவில்லாத மன நிறைவுடனும்-ஆனால் ஐயத்துடன் கவலையுடனும் ஆடம் எதிர்க்குரல் எழுப்பியவர் பராக்கின் நண்பரான பக்கிரியே என்பதை உணர்ந்தான். இதைத் திப்பு காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு பித்துடைய முசுலீம் பக்கிரி உளறுகின்றார் என்றே கருதினான். அவரைப் போன்ற பக்கிரிகளுக்கு முசுலீம் அரசர்கள் அக் காலத்தில் மிக்க உரிமை கொடுத்திருந்தனர். அதனால் இளவரசன் இதைக்கேட்டு வியப்படையவில்லை.



அரசனின் அறிவிப்புக்குப் பிறகு வழக்கம் போல ஏற்படும் பெரிய கைதட்டல் ஆரவாரம் அப்போது எழுந்தது.

இந்த ஆரவாரம் அடங்குவதற்கு முன்பே, மிடில்மசு எழுந்து இளவரசனுக்கு முன்பு தலைவணங்கிப் பேசத் தொடங்கினான். தனக்குக் கொடுக்கப்பட்ட இப் பெரிய மதிப்புக்குத் தான் உண்மையில் தகுதியில்லாதவனே என்றும், அரசருக்கு ஊழியம் செய்வதில் தனக்கு அளவிலா விருப்பமுண்டு என்றும் தெரிவித்தான். இன்னும் ஏதோ சிறிது சொல்ல வாயெடுத்தான். ஆனால் அவன் நாக்குழறியது; கைகால்கள் நடுங்கின; பேச்சுத் தடுமாறியது.

பெண்ணியல்புக்கு மாறாகப் பேகம் தன் இருக்கையைவிட்டு எழுந்து, மிடில்மசு பேசாது விட்டதை நிறைவு செய்வது போலப் பேசத் தொடங்கினாள்: "என் தளபதிக்கு அளித்த இவ்வுயர்ந்த சிறப்பிற்குக் கைம்மாறு கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை. ஆனால் மேன்மை தங்கிய அரசர் அவர்கள் யான் அளிக்கும் இந்தச் சிறு தாமரையைப் பெற்று அதைத் தங்கள் இன்பச் சோலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இறைஞ்சுகின்றேன்" என்றாள்.

திப்புவின் சைகையை ஒட்டி அவன் அரண்மனைச் சேவகர்கள் பேகத்தின் சேவகர்களிடமிருந்து ஒரு பல்லக்குக் கூண்டைப் பெற்றபோது, அதிலிருந்த ஒரு பெண்ணின் கிரீச்சுக் குரல் வெளிக் கேட்டது. பக்கிரியின் குரலும் முன்னைவிடப் பலமாகவும், உறைப்பாகவும் இருந்தது: "நீதியைக் காமத்திற்காகப் பலிகொடுக்கும் அரசனுக்குக் கேடு வருவ

தாக! புதியவனின் வாளில்பட்டு இத்தோட்டத்தின் வாயிலிலேயே அவன் மடிவான்!'' என்றார்.

"இப்படித் தீங்கு பேசுவதைக் கேட்டு 'இனியும் பொறுமையோடிருக்க முடியாது. அந்தப் பக்கிரியை இழுத்துவந்து சவுக்காலடித்து அவன் துணிகளைக் கிழிசல் கந்தைகளாகச் செய்யுங்கள்" என்றான் திப்பு.

'சைது' என்பவன் அறையில் அப்படியே சவுக்கடிக் காட்சி நடந்தது. வெறிகொண்ட கொடுங்கோலனின் ஆணைக்குக் கீழ்ப்படிய முனைந்தவர்கள், யமதூதரின் பிடியிலிருந்து நழுவியவரைப் போலப் பக்கிரியின் பின்னால் சென்றனர். பக்கிரி தம் குல்லாயினையும், பொய்த் தாடியினையும் நிலத்தில் வீசி எறிந்தார். அங்கே தறுகண்மையும் பயங்கரமும் உடைய தந்தையைக் கண்டதும் கடுமை மிக்க திப்புவின் முகத்துச் சினக்குறி உடனே தணிந்தது. ஹைதரின் ஒரு சைகை திப்புவை அரியாசனத்திலிருந்து இறக்கியது. ஹைதரே அவ்விருக்கையின்மேல் ஏறியமர்ந்தார். அப்போது அவசரமாக அரசப் பணியாளர் சவுக்கடியால் கிழிந்துபோன அவன் உடைகளைக் கழற்றிவிட்டு அரச ஒளி வீசும் ஆடைகளை அணிந்தனர். அவர் தலையில் மணிகள் பதித்த தலைப்பாகையை வைத்தனர். ஹைதர் அலிகான் பகதூரை அந்தத் தர்பார் வாழ்த்திப் பரவியது. "அறிவிற் சிறந்தவர் - நன்மையாளர் - மறைந்திருக்கும் பொருள்களைக் கண்டுபிடிக்கும் உரவோர் - முகில்களைக் கிழித்து வெளிப்படும் கதிரவன் போல் திவானாக வந்தமர்ந்துள்ளார்'' என்று முழக்கமிட்டனர்.

கடைசியில் அமைதியாயிருக்கும்படி நவாப் சைகை செய்தார்; எல்லோரும் உடனே அடங்கினர். அவர்



தம்மைச் சுற்றி அரசப்பார்வை ஒன்றைச் செலுத்தினார். கடைசியாகத் திப்புவையும் நோக்கினார். திப்பு குனிந்த தலையுடன் மார்பில் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான். ஒரு கணத்துக்கு முன் திப்பு கொண்டிருந்த அதிகாரச் செருக்கிற்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் எத்துணை வேறுபாடு! திப்புவை நோக்கி, "ஒரு வெள்ளைக்கார அடிமையைப் பெறுவதற்காகத் தலைநகரத்தின் பாதுகாப்பைப் பண்டமாற்றுச் செய்யவும் விரும்பியிருக்கிறாய். ஆனால் ஒரு நலஞ்சான்ற பெண்ணின் அழகுதான் சாலமன் பென்டேவிட் என்பவனை அவன் வழியிலிருந்து இழுக்குமாறு செய்தது. அப்படியிருக்க, ஹைதர் நாய்க்கின் மகன் எவ்வளவு கவனமாகக் காம மயக்கத்தில் வீழாமல் விழிப்புடனிருக்க வேண்டும்! மக்கள் தெளிவாகப் பார்க்க வேண்டுமென்றால், கண்ணைப் பறிக்கும் விளக்கை அகற்றிவிட வேண்டும். என் விருப்பப்படி செய்வதற்கு அவளை இங்கே கொண்டு வாருங்கள்". என்றார்.

"தாங்கள் சொல்வதெல்லாம் பணிவுடன் செய்யப்படும்'' என்று பதிலளித்தான் திப்பு. அப்போது அவன் புருவத்தில் காணப்பட்ட ஆழ்ந்த துன்பச் சாயல் அவனது செருக்கும், உணர்ச்சிப் பெருக்கும் மிக்க உணர்வைத் தன் வன்மையால் வணங்குறச் செய்த தந்தையின் திறனைக் காட்டியது. அங்கே குழுமியிருந்தவர்களின் இதயங்களில் எல்லாம் அக் காட்சியின் முடிவைப் பார்க்கும் ஆர்வத்துடிப்பு ஏற்பட்டது. ஆனால் அகத்துணர்ச்சிகளை யெல்லாம் வெளிக்காட்டாது மறைத்து வைக்கும் திறமுடைய

திப்புவினிடத்தில் அவ்வார்வத்தின் சிறு சாயல் கூடக் காணப்படவில்லை.

பேகத்தின் உணர்ச்சிகள் எல்லாம் முகத்திரையால் மறைக்கப்பட்டன. அப்போது தன் பயத்தை மறைத்து வைக்க அருமுயற்சி செய்தானாயினும், ரிச்சர்டின் நெற்றியிலிருந்து வியர்வைத் துளிகள் கொட்டிக் கொண்டிருந்தன. அதற்குப் பிறகு நவாப்பின் வாயிலிருந்து வந்த சொற்கள் ஆடமின் காதில் இன்னிசையாக ஒலித்தன.

"இந்தப் பறங்கிப் பெண்ணைச் சர்தார் வலாஷ் காசிமின் (ஆடமுடன் நெருங்கித் தொடர்பு கொண்டுள்ள படைத் தலைவர்) கூடாரத்திற்கு இட்டுச் செல்லுங்கள்! அவளை எல்லா மரியாதையுடனும் பாதுகாத்து வாருங்கள். வக்கீலையும் ஆடத்தையும் தளபதி பயீன் கணவாய் வரை சென்று கொண்டு போய் விட்டுவிட்டு வரட்டும். அவர்களுக்கு ஆபத்து நேரின் அவர் தலைக்கும் ஆபத்து நேரும்" என்றார் ஹைதர்.

நவாப் பேசி முடிப்பதற்குள் சர்தாரின் சாலையோரத்தை நோக்கிச் செல்லும் பாதையில் ஒரு பல்லக்கு வந்து நின்றது. திப்புவைப் பார்த்து ஹைதர், "உன்னைத்தான் திப்பு. உன் அதிகாரத்தைப் போக்குவதற்காக நான் இங்கு வரவில்லை. தர்பாருக்கு முன்பு உன்னை அவமானப் படுத்துவதற்காகவும் இங்கு வரவில்லை. இந்தப் பறங்கிக்கு நீ கொடுத்த வாக்குறுதி போன்றவைகளுக்கு இவையெல்லாம் சரி செய்வதாகும். திங்களுக்குக் கொடுக்கும் ஒளியைக் கதிரவன் திருப்பிப் பெறுவதில்லை. தந்தையும் தன் தனயனுக்குக் கொடுத்து விட்ட பெருமையைக் குலைக்கமாட்டார். சரி நீ கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முற்படு" என்றார்.



எனவே ஆட்சியதிகாரம் கொடுக்கும் சடங்கு மீண்டும் தொடங்கியது. பெங்களூர் நகரின் முக்கியமான ஆட்சியை நடத்தும் அதிகாரத்தைத் திப்பு மிடில்மசுக்கு அளித்தான். தன்னிடமிருந்தே ஐரோப்பிய மாது அகற்றப்பட்டதால் புதிதாக வந்த ஐரோப்பிய கவர்னரையும் (ரிச்சர்டையும்) தந்தை தம் பொறுப்பிலிருந்து பின்னர் விரைவிலகற்றிவிடுவார் என்று திப்பு மனதுக்குள் எண்ணியிருந்தான். ரிச்சர்டோ தந்தையையும் தனயனையும் ஒருங்கே போக்கிவிடலாமென்ற நப்பாசையுடன் அவ்வதிகாரத்தை ஏற்றுக் கொண்டான். ஆட்சியதிகாரம் கொடுக்கும் ஆணை உரக்கப் படிக்கப்பட்டது. புதிதாக நியமிக்கப்பட்ட கவர்னர் மீது மரியாதைக்குரிய ஆடை அணியப்பட்டது. அப்போது நூறு குரல்கள் திப்புவின் அறிவுடைமைச் செயலை வாழ்த்தியதுடன், கவர்னருக்கு நல்ல செல்வமும், பகைவரை எதிர்த்துப் பெறும் வெற்றியும் உண்டாகட்டும் என ஆசியும் வழங்கின.

இளவரசனின் நன்கொடையாக முதன்முதலில் ஒரு குதிரை கொண்டுவரப்பட்டது. அது கத்தியவாரில் வளர்க்கப்பட்ட ஒரு சிறந்த குதிரை. உயர்ந்த குளம்புகளும், பெரிய பின்னங்கால்களும் உடையது. வெண்ணிறமுடைய அக்குதிரையின் வாலும் பிடரி மயிரும் சிவப்பு நிறம் பெறும்படி செய்யப்பட்டிருந்தன. சேணமும் சிவப்பு மென்பட்டாலானது. கடிவாளம் பொன் முடிச்சுக்களைப் பெற்றிருந்தது. இந்தப் பெரு

மிதக் குதிரையை இருவர், இதனினும் மட்டமான குதிரைகளின் மீதேறி நடத்திச் சென்றனர். அவர்களுடைய தலைவரின் வாளை ஒருவனும், ஈட்டியை மற்றவனும் ஏந்திக்கொண்டிருந்தனர். ஆரவாரிக்கும் அரண்மனையிலுள்ளார்க்கு அக்குதிரை காட்சியாகக் காட்டப்பட்டது. பிறகு தெருக்கள்வழியே ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டது. அக்குதிரையை அடுத்துப் புதிய கவர்னர் ஒரு யானை மீதேறி ஊர்வலம் வருவார். இளவரசனின் வள்ளன்மையை உலகம் அறிந்து வியப்பதற்காக இந்த யானையும் அச்சமயத்தில் பரிசாகக் கொடுக்கப்பெறும்.

பருமைமிக்க அரசயானை மேடையை நெருங்கியது. பெரிய அணிபடைத்த தன் தலையை ஆட்டிக்கொண்டு, பொறுமையிழந்ததுபோலத் தலையை அடிக்கடி உயர எழுப்பியும் தாழ்த்தியும் நின்றுகொண்டிருந்தது. தன் நாக்கில்லா வாயின் அகலத்தைக் காட்டுவதுபோல அடிக்கடி தடக்கையை உயரத் தூக்கி மடித்தது. ஆழ்ந்த பணிவுடன் அழகுற நடந்துவந்த கவர்னர் கூட்டத்தினரின் ஆரவாரம் அடங்கிய பின்னர்—யானையின் முகத்தருகே வந்து நின்றான். யானை மேலுள்ள பொன்முலாம் பூசிய அம்பாரியில் தான் ஏறி அமர்வதற்காக யானையின் தலையைத் தாழ்த்தித் தன்னை ஏறும்படி யானைப்பாகன் செய்வான் என்று எதிர்பார்த்தான்.

"நில், பறங்கி" என்றார் ஹைதர்; "திப்புவின் கொடைவன்மை வாக்களித்தவற்றையெல்லாம் நீ பெற்றுவிட்டாய். இப்போது ஹைதரின் நீதிப்பயனை ஒப்புக்கொள்வாயாக" என்றார்.



இவ்வாறு பேசும்போது தன் விரலால் ஒரு சைகை செய்தார். உடனே நவாபின் விருப்பத்தைப் பாகன் யானைக்குத் தெரிவித்தான். தீவினையாளனாகிய ஐரோப்பியனின் கழுத்தைச் சுற்றித் தன் நீள்கையைச் சுற்றிக்கொண்ட யானை திடீரென்று தூக்கித் தனக்கு முன்னால் பணிந்து விழுமாறு எறிந்தது. வட்டமான தன் பெரிய அடியால் அவன் மார்பை மிதித்து அவனுயிருக்கும், அவன் செய்த குற்றங்களுக்கும் முடிவினைச் செய்தது. குற்றவாளி எழுப்பிய துன்பக்குரலை எதிரொலித்துப் பிளிறியது. கிரீச்சுக்குரலாக ஒரு பலத்த துன்ப ஒலி முகத்திரையுடைய பேகத்தினிடமிருந்து வந்தது. மீண்டும் யானை தன் கையைப் பலமாக உயரத் தூக்கியது; பயங்கரமாக வாயைப் பிளந்தது.

அரண்மனையில் உள்ளவர்கள் ஆழ்ந்த அமைதியுடன் இருந்தனர். ஆனால் திப்பு தான் அணிந்திருந்த மென்பட்டுத் துணியின்மேல் கவர்னரின் குருதி சிதறியிருப்பதை நவாபிடம் காட்டி, வருத்தம் நிரம்பிய ஆனால் இன்னும் சினம் தணியாத குரலில், "தந்தையே, இப்படித்தான் என் வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டுமா?" என்றான்.

"முட்டாள் மகனே, அறிந்துகொள். இங்கே இறந்து கிடக்கும் பிணம் பெங்களூரைப் பறங்கியருக்கும் மராட்டியருக்கும் காட்டிக்கொடுத்துவிடும் சதியில் இறங்கியிருந்தான். இந்தப் பேகம் (தன் பெயரைக் கேட்டதும் அவள் துணுக்குற்றாள்) அந்தச் சதியைப்பற்றி எச்சரிக்கை செய்தாள். அதனால் முதன் முதலாக அச்சதியில் பங்கெடுத்துக் கொண்டதற்காக



பட்டம் பெற்ற ரிச்சர்டு பட்டத்து யானையால் கொல்லப்படல்

மன்னிப்பைப் பெறுகிறாள்; நம்மீதுள்ள அன்பினால் அவ்வாறு செய்தாளா என்பதைப்பற்றி நாம் தீர ஆலோசிக்கப் போவதில்லை. குருதி நிரம்பிய அக் களிமண்ணை அகற்றி விடுங்கள். ஆடமும் ஆங்கில வக்கீலும் என் முன்னாலேயே வரட்டும்'' என்றான்.

அவர்கள் ஹைதரின் முன்னிலையில் கொண்டு வரப்பட்டனர்; அப்போது சில பணியாளர் குருதி படிந்த வழியில் மணலைத் தூவினர்; சிலர் நசுக்குண்ட பிணத்தை அப்புறப்படுத்தினர்.

ஹைதர், ''ஆடம், பறங்கிப் பெண்ணுடன் நீ திரும்பிச் செல்க. அவளுற்ற தீங்குகளுக்கு ஈடாகப் பொன்னைப் பெற்றுக்கொள்க. பேகமும் தனக்கேற்ற வகையில் ஈடுகட்டும் பொன்னிற்குத் தன் பங்கினை யளிப்பாள். ஹைதர் அலி நேர்மையாக நடப்பவன் என்று உன் நாட்டுக்கு எடுத்துச் சொல்லுக" என்றார். நவாப் ஆடமை அருளோடு நோக்கினார். பிறகு பயம் நிரம்பிய வக்கீலிடம் திரும்பி, ''உம் தலைவர்கள் என்னைக் காட்டிக் கொடுக்கும் வஞ்சகச் செயலில் முனைந்தபோது எனக்கு அமைதியுண்டாக்கும் செய்தி கொண்டு வந்தீர்கள். உம்மைப் போன்றவரை நான் பழிவாங்கக்கூடாது. ஆனால் ஹைதர் அலி போர்செய்து பெற்ற நன்மைகளையெல்லாம் எதிரிகளின் துரோகச் செயல்களால் இழக்க நேரிடுவதை நன்றாக அறிகிறார் என்று கொள்கையில்லாத பாப்பையாவிடமும், அவனுடைய தகுதியற்ற தலைவனிடமும் சொல்லுக. கருநாடகத்தில் இதுவரை நான் மென்மையான அரசனாயிருந்தேன். இனி அழிக்கும் புயலாக மாறுவேன். இரக்கமும், தயவுமுடைய வெற்றியாளனை

இதுவரை சில சலுகைகளை யளித்தேன். இனிமேல் அல்லா தன் தீர்ப்புக்காலத்தில் பார்வையிடக்கூடிய நாடுகளுக்கனுப்பும் தூதுவனாகவே யிருப்பேன்'' என்றார்.

எவ்வளவு பயங்கரமாக நவாபு தம் கூற்றை மெய்ப்பித்தார் என்பதை எல்லோரும் நன்கறிவர். ஆனால் அவரும் அவர் மகனும் ஐரோப்பியர்களின் கட்டுப்பாட்டிற்கும் வீரத்திற்கும் ஆற்றாது எவ்வாறு தாழ்ந்தனர் என்பதையும் எல்லாருமறிவர். உண்மையாகத் தமது நேர்மையான தண்டனைத் திறத்தை வெளிப்படுத்திய காட்சி அவரது கொள்கையின் பாற்பட்டதாயிருக்கலாம்; அவருடைய மனச் சாட்சிக்குகந்ததாயிருக்கலாம்; அல்லது அறிவும், புத்திக் கூர்மையுமுடைய ஓர் ஆங்கிலேயன் முன்னால் வெளிக்காட்டிய புறப்பெருமைச் செயலாகவும் இருக்கலாம். அல்லது இவையெல்லாம் கலந்ததாயும் இருக்கலாம். ஆனால் இவை எந்த அளவில் கலந்திருந்தன என்பதை நம்மால் தெளிவாகக் கூறமுடியாது.

நம்பிக்கையை இழந்துவிட்ட காலத்தில் பயங்கர விதிக்கு ஆட்படக்கூடிய விலைமதிப்பற்ற தன் பொருளைப் பாதுகாப்பாக மீட்ட ஆடம் சென்னைக் கடற்கரையை அடைந்தான். ஆனால் மெனிகிரே தன் நரம்புகளும், முழு உடம்பும் எய்திய அதிர்ச்சியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டாள். அந்த அதிர்ச்சியிலிருந்து அவள் பிறகு என்றும் முற்றிலும் மீள முடியவில்லை. சென்னையிலுள்ள சில மகளிர் அவளுடைய தனித் துயரத்தின் இயல்பைக் கேட்டு இரங்கிப் பேராதரவுடன் அவளை வரவேற்றனர். அவளிடம் மிகவும்



சிறப்பான, அன்பான கவனிப்பைச் செலுத்தினர். நவாபும் தம் வாக்குறுதிப்படியே பத்தாயிரம் தங்க மொகராக்களுக்குக் குறையாமல் அவளுக்கு அனுப்பி வைத்தார். நாம் எதிர்பார்ப்பதுபோலப் பெரும்பாலும் மோதிமகல் என்ற மாந்தர் வில்லியிடமிருந்தே பெற்று அனுப்பினார். மாந்தர் வில்லியின் கதி என்னவாயிற்று என்று திண்ணமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அவளுடைய கோட்டைகளும் அரசாங்கமும் ஹைதரின் கைக்கு வந்தன. அவளுடைய அதிகாரம் ஒடுக்கப்பட்டதால் மதிப்பிழந்த அவள்—தானாகவோ, பிறர் கொடுத்தோ நஞ்சுண்டு மாண்டாள் என்று பிறகு செய்தி வந்தது.

தன்னை வீரத்துடன் முயன்று காப்பாற்றிய ஆடமுக்குக் கடமைப்பட்ட மெனிகிரே ஆடமையே மணந்து கொண்டிருப்பாள் என எவரும் எதிர்பார்ப்பது இயல்பே. ஆனால் அவளுடைய உணர்ச்சிகள் கையிகந்திருந்தன. துன்பம் அளவின்றிப் பரந்திருந்தது. உடல்நலம் மிகவும் சீர் கெட்டுப் போயிற்று. அதனால் திருமணத்தைப் பற்றிய எண்ணமே அவள் மனத்தில் எழவில்லை; இளமைத் தோழனும் விடுதலை நல்கிய வீரனுமான ஆடமைக் கூடத் திருமணம் செய்துகொள்ள விழையவில்லை; காலம் இக்குறைகளைக் களைந்திருக்கும். ஆனால் நலங்கெழுமியிருந்த ஆடம் தான் தொழில் செய்யும்போது பெற்ற ஒரு தொத்து நோயை விரட்டியடிக்க முனைந்து முடியாமல் கடைசியில் அதற்குப் பலியானான். அவன் தான் சேர்த்து வைத்த செல்வம் முழுவதையும் மெனிகிரேவுக்கே எழுதிவைத்து விட்டிருந்தான். அவளோ சீதனம் போல் கிடைத்த இச்செல்வத்தை விரும்பியதாகத்

தெரியவில்லை. ஆனால் அவள் ஆடமின் நினைவை எஞ்ஞான்றும் போற்றி வந்தாள். தகுதிமிக்க அவனை மணக்க மறுத்துவிட்ட அவள் பிறகு வேறு யாரையும் மணக்க ஒருப்படவில்லை.

அவள் பிரிட்டனுக்குத் திரும்பிச் சென்றாள். செல்வம் மிக்கவளாயினும், கன்னியாகவே காலங் கழித்தாள். தான் பிறந்த ஊருக்குச் சென்று தான் பெற்றிருந்த செல்வத்தின் எல்லையை மீறுமளவுக்கு அறச்செய்கைகள் புரிந்தாள். அவளுடன் நெருங்கிப் பழகிய இரண்டு மூன்றுபேர் அவளிடம் காணப்பட்ட, அவள் குணநலத்திற்கடிப்படையான, பற்றில்லாத எளிமையும் அன்பும் அவள் பிறவிப் பண்பிலேயே அமைந்திருப்பதை உணர்ந்தனர். அவளுடைய வாழ்க்கை தன்னலமின்றி உலகத்திற்கே நன்மை புரிவதாக அமைந்திருந்தது.

O111, 3L50, 8
N62

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110770
MADRAS


கழகவழி வெளிவந்துள்ள

## பிறமொழிபெயர்ப்பு நூல்கள்

பன்மொழிப்புலவர், கா. அப்பாத்துரை, M.A., L.T.

| | | |
|---|---|---|
| பேரின்பச் சோலை (James Allen's Byways of Blessedness) | 6 | 00 |
| இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு (Gilbert Slater's 'The Dravidian Element in Indian Culture') | 3 | 50 |
| திருநிறை ஆற்றல் (James Allen's 'From Poverty to Power') | 3 | 00 |
| மக்களும் அமைப்புக்களும் (Jemes Allen's 'Men & System') | 1 | 75 |
| டாம்பிரௌணின் பள்ளி வாழ்க்கை ('School days of Tom Brown') | 2 | 00 |
| ஜேன் அயர் (Jane Iyre) | 1 | 25 |

திரு. கு. பரமசிவன், எம். ஏ.,

| | | |
|---|---|---|
| ஆலிவர் டுவிஸ்ட் (Oliver Twist) | 3 | 00 |
| ஐவன்கோ (Ivenhoe) | 3 | 00 |
| பவளத் தீவு (Coral Island) | 2 | 50 |
| குவெண்டின் டர்வர்டு (Quentin Durward) | 4 | 50 |
| டேவிட் காப்பர்பீல்ட் (David Copperfield) | 5 | 00 |
| கைமேனரிங் (Guy Mannering) | 3 | 00 |
| கெனில்வொர்த் (Kenilworth) | 4 | 00 |
| இராபின்சன் குரூசோ (Robinson Crusoe) | 6 | 25 |

(திரு. முருகேச முதலியார், துணை ஆசிரியர்)